துரோகி

*

தில்லை-வில்லாளன்

*

கிடைக்குமிடம்:

திராவிடன் பதிப்பகம்

P. B. No. 18, வேலூர். N.A.

43677

முதற் பதிப்பு: நவம்பர்-'51

பதிப்புரிமை பெற்றது

விலை ரூ. 2-0-0

Publishers:
THENRAL PATHIPPAGAM
VELLORE. N. A.

Vinodan Press, 33, Jones St, G. T., Madras.

முன்னுரை

"துரோகி" சரித்திர அடிப்படையை வைத்து எழுப்பப்பட்ட கற்பனைக் கோட்டை!

ஆங்கிய ஏகாதிபத்திய ஆட்சி உதயத்தைப் பற்றிய படப்பிடிப்பு இந்நூல்!

"பொன்னி" இதழில், தொடர்ந்து ஓராண்டுக்கு மேலாக வெளிவந்து கொண்டிருந்தது.

இன்று அதனைப் புத்தக வடிவாக்கத் திராவிடன் பதிப்பகத்தார் முன் வந்துள்ளனர்.

தொடர்கதையாக வெளியிட்ட **"பொன்னி"** யாருக்கும், இப்பொழுது நூலாக்கிடும் **திராவிடன் பதிப்பகத்தாருக்கும்** என் உளங்கனிந்த நன்றி!

காஞ்சி
15-11-'51

அன்பன்,
தில்லை - வில்லாளன்

முதற் பாகம்

துரோகி

●

காமக் களியாட்டம்

இரண்டு குதிரைகள்......அந்திப்பொழுது. மஞ்சள் வெயில் வீசிக்கொண்டிருந்தது. தனியான பாதை. இரண்டு பக்கங்களிலும் அடர்த்தியான மரங்கள். அந்தப் பாதை யில்தான் அந்தக் குதிரைகள் மிக மெதுவாக வந்து கொண்டிருந்தன.

குதிரைகளின் மீது ஊர்ந்துவந்த வீரர்களோ வெகு கம்பீரமாக அமர்ந்திருந்தார்கள். அவர்களின் அலங்கார மான ஆடைகள், அவர்கள் அரசாங்கத்தைச் சேர்ந்த பெரும் பதவியாளர்கள் என்று விளம்பரப் படுத்திக் கொண்டிருந்தன. அவர்கள் ஏதோ வேடிக்கையாக உரையாடிக்கொண்டு வந்தனர்.

அவர்கள் பேச்சு இடையே சட்டென்று நின்றுவிட் டது. ஆம்; அவர்கள் சிந்தனையைக் கவர்ந்துவிட்டது ஒரு காட்சி............கண்களின் பார்வைக் கோணத்தைத் தாக் கிற்று. அந்த வழியே ஒரு சுந்தரி வந்தாள்.

ஒரு மின்னல்......பூங்கொம்பு!

"முடீன், அதோ பார் ஒரு குட்டி"

"ஸுராஜ், நமக்குத் தெரிந்த சிட்டுத்தான் அது"

"யாரது?"

"ஏன் அது உங்களுக்கு?"

"விளையாடத்தான்!"

"போதுமே உங்கள் விளையாட்டு... அவள் ஊர்மிளா. நமது அமீன்சந்தின் ஆசை மகள்"

—வீரர்களின் பேச்சு இப்படி நீண்டது.

பேசியவர்கள் வங்க சுபேதாரின் அன்பிற்குரிய பேரன் ஸுராஜ்-உத்-தெளலாவும் அவனது அருமை நண்பன் முடீன்கானும்தான்! அவர்கள் வழக்கம் போல உலாவச் சென்றிருந்தார்கள். அங்கேதான் வங்கத்தின் பிரபல கப்பல் வியாபாரி அமீன்சந்தின் ஒரே மகள் ஊர்மிளாவைப் பார்த்தனர். வழக்கமாகவே சற்று நெகிழ்ந்த மனம் படைத்த ஸுராஜ் பேரழகி ஊர்மிளா விடம் மனம் விட்டது ஆச்சரியமில்லை!

ஊர்மிளா இடையிலே குடமேந்தி மயில்போல வந்து கொண்டிருந்தாள். அவளது விழிகளின் அடித் தளத்தில் குறுகுறுப்பு எட்டிப் பார்த்துக்கொண் டிருந் தது! ஒரு விழி வெட்டு உலகையே விலைக்கு வாங்கிவிடும் போலிருந்தது. அவளது விழிகள் இங்கும் அங்கும் பாய்ந்து 'கண்ணும்பூச்சி' ஆட்டம் ஆடிக்கொண்டிருந் தன! திரும்பினாள். திடுக்கிட்டாள். இரண்டு குதிரை வீரர்கள் வந்து கொண்டிருப்பதைப் பார்த்துச் சற்று பயந் தாள். எனினும் அந்த அலட்சியப் பார்வையும், எதையும் எடுத்தெறிந்து பேசும் துடிப்பான உதடுகளும் பழைய படியே தன் போக்கில் இருந்தன!

குதிரைகள் விரைந்தன. அவள் ஒதுங்கினாள்!

வீரர்களோ வேகமாகச் செல்லாமல் வேண்டு மென்றே மெதுவாக நடத்திச் சென்றனர். அவளால் அவர்களை முந்தவிடவும் முடியவில்லை. பின்னே வரவும் செய்ய இயலவில்லை. சங்கடமான நிலைமை அவளுக்கு! என்ன செய்வாள்? யாரேனும் வருகிறார்களா என்று திரும்பிப் பார்த்தாள். இருட்டரசன்தான் வெகு விரை வாக ஓடிவந்தான்! இதுவரை ஏறிட்டுப் பார்க்காமலே வந்த அவள் திருட்டுத்தனமாகத் தன் பார்வையை அவர் கள் மீது பாய்ச்சினாள். அவர்களது பொல்லாத விழி களோ அந்தக் கணப்பொழுதையும் விடாமல் வேவு பார்த்தன!

அந்த இடத்தில் மரங்கள் அடர்த்தியாக இருந்தன. இருட்டும் அங்கு விருந்துண்டு கொண்டிருந்தது! ஸுராஜ் திடீரென்று கீழே குதித்தான். குதிரைக்குக்கூட ஆச்சரி யமாக இருந்தது அவனது செயல்! அடுத்த கணத்தில் குடம் உருண்டது. அந்தக் 'குடமேந்தி' அவனது அமுத சுரபியானாள்! ஊர்மிளாவைத் தாவித் தன் கரங்களில் ஏந்திக்கொண்டான். கண்ணிமைப் பொழுதில் அந்தக் காரியம் நடந்துவிட்டதால் அவளால் அதனைத் தடுக்கவும் முடியவில்லை. கூவ நாவைத் தூக்கினாள். அதுவோ 'சட்ட மறுப்பியக்கம்' ஆரம்பித்து விட்டது! பயமோ, பாதுகாப் புச் சட்டப்படி அதனைக் கைது செய்து விட்டது! கால் களும் கரங்களும் உதறின. ஆனால் விடுவிக்கும் முயற்சி யில் இறங்கமுடியவில்லை!

ஸுராஜ் காட்டினுள் புகுந்து ஓடினான். அவனது நரம்புகள் காமத்தால் தாக்கப்பட்டு, என்ன செய்கிறோம் என்று புரியாமல் புரட்சி செய்துகொண் டிருந்தன! ஓடி னான், ஓடினான், தக்கதோர் இடம் கிடைக்கிற வரையில்!

எதிரில் ஒரு காளிகோயில்......அதில் மங்கலான ஒளி தெரிந்தது! நுழைந்தான். அவனது பொறுமை பட்

டென்று அறுந்து இற்று விழுந்தது. அவனது ஆசைப் புரு மனக் கூண்டையுடைத்துக் கொண்டு வெளியில் வந்து வட்டமிட ஆரம்பித்துவிட்டது! ஊர்மிளாவோ பதுமைபோல அவனது கரங்களில் சிறைப்பட்டுக் கிடந்தாள். அவளும் வாடாத மலர்! அதுமட்டுமல்ல, இன்னும் எவராலும் நுகரப்படாத மலர்!

'அலை மோதுதே, அலை மோதுதே என் மனம், ஆடவர் கரம் என் மேல் பட்டதுமில்லை' என்று ஆடிப்பாட வேண்டிய வன்மோகினி அவள்! ஆம்; அவளுக்கு உண்மையில் அந்த 'சிருங்கார ரசம்' புதிதுதான். ஸுராஜுவின் கரங்களின் அணைப்பு அவளது உடலிலே இன்ப மணத்தைத் தடவி விட்டது; அவளது உறங்கிய உணர்ச்சி நரம்புகளைத் தட்டி எழுப்பி விட்டது. ஆகவே அவளுக்கு இன்ப மயக்கம்! பசித்த புலி, புசிக்கத் தொடங்கிவிட்டது! மானுக்கோ மயக்கம்! ஆகவே எதிர்ப்பு இல்லை!

ஸுராஜ் காமவெறியால் கண்ணிழந்தான். கண் மழுங்காவிட்டால் எதிரில் நின்றுகொண்டிருந்த இரு உருவங்களை அவ்வளவு நேரம் பார்க்காமல் இருப்பானா? அமீன் சந்த்தின் கண்களில் அனல் வீசியது. அடுத்த கணத்தில் புனல் வழிந்தது! பக்கத்தில் நின்றிருந்த சோணிசந்த் சிலைபோலானான்! அந்தக் காமக் களியாட்டத்தைக் கலைப்பது எப்படி யென்று சிந்திக்கக்கூட முடிய அவனால் முடியவில்லை. அந்தக் காட்சி உணர்ச்சியை வாரியிறைத்தது! அமீன்சந்த் நெருங்கினான். ஆத்திரத்தால் தாக்கப்பட்டு, கோபத்தால் உள்ளம் வீங்கி, கொந்தளிப்பால் கண்கள் சிவப்பேறிக் காளிகோயில் சிலையைவிடப் பார்க்கப் பயமாகக் காட்சியளித்தான் அவன்.

"அடேய்........"

ஸுராஜ் இன்பபுரியிலிருந்து தலைகுப்புற வீழ்ந்தான். ஆடலிலிருந்து எழுந்து ஓடலாமா என்று எண்ணி அவனைப் பார்த்தான். பிறகு ஊர்மிளாவை ஒரு முறை

பார்த்தான். இரத்த வெறி — ஆம், 'தசையாசை' அவனைப் பம்பரமாக ஆட்டியது! ஆகவே காமத் தடாகத்தில் தடுக்கி விழுந்தான். அப்பன் உள்ளம் வெடித்து விடும் போலாகி விட்டது. மகளின் இன்பம், காளி கோயிலிலே கொள்ளை! கொள்ளை!

அவர்கள் இருவரும் அவன் மீது பாய்ந்தனர். காமக் களியாட்டம் கலைந்தது. எழுந்தான். போர் மூண்டது. இந்தக் கலவரத்தில்தான் கண் திறந்தாள் ஊர்மிளா. இன்ப மயக்கம் மறைந்தது. தன் தந்தையும், தன்னைக் கவர்ந்து வந்த முரடனும் போரிடுவதைப் பார்த்துத் திடுக்கிட்டாள். அப்பொழுது குதிரைகள் வரும் குளம்படியோசை கேட்டது. ஆம்; முடீன்கான் வந்தான். சண்டையில் தானும் ஈடுபட்டான்! பிறகு.....காளிகோயில் தூண்களிலே அந்த இருவரையும் கட்டிப்போட்டனர்.

தகப்பன் கூவினன்:

" அடேய், நீ அரசாளலாம்; அதற்காக என் மகள் இப்படி அவமானப்படலாமா? அதுவும் காளிகோயிலிலா இந்த அக்ரமம்......? ஆனால் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன்"

ஸுராஜ் ஊர்மிளாவின் இன்பக் கோட்டையிலே மீண்டும் கொள்ளையிடத் தொடங்கி விட்டான். இராமனும் சீதையும் இப்படி அமர்க்களப் படுத்தும்போது இலட்சுமணனானன், முடீன்கான்! ஆனால் அமீன் சந்தோஷமாகச் சிரித்தான்.

வெறிச் சிரிப்பு

சிரித்தான்!

யார்?............

நல்ல உயரம், அதற்கேற்ற தசை வளர்ச்சி! பார்க்க நல்ல தோற்றம் அந்தப் பரங்கிப் பழம்! அவன் நிறம் நல்ல சிவப்பு.........

அவன் கால்கள் நீண்டு இருந்தன. கரங்களும் அத்துடன் போட்டி போட்டன. அவன் தொந்தி, வாடாது, வதங்காது, வாழ்வு பெற்ற உல்லாசி என்று பார்ப்பவர்களுக்குப் பராக்குக் கூறிக்கொண்டிருந்தது. அப்பா... ......அவன் முகம் மட்டும்......சொல்ல முடியவில்லையே! பயம் நாக்கை அழுத்துகிறது; ஒரே கோரம்! கோரம் என்றால் விகாரம் மட்டுமல்ல, சீறிப்படமாடும் நாகம் போலப் பயத்தையும் கொடுக்கும் பான்மை கொண்டது. பரந்து விரிந்த நெற்றி, அதில் சந்தனக் கோடுகள் மூன்று. நல்ல உயர்ந்து விரிந்த மூக்கு, அதில் பருத்து விரிந்த மூக்குத் துளைகள். அப்பாடா......அதில் புகுந்து வருங் காற்று விடும் சத்தம்-உஸ்.உஸ்-'சாட்சாத்' நாகதேவனே தான்! கன்னங்கள் ஊதி உப்பிப்போயிருந்தன. இருந்தாலும் அதில் சுருக்கங்கள், கோடுகள் அங்கொன்று, இங்கொன்றும் இருந்தன. ஆண்டுகள் கிழித்த அனுபவக் 'காலண்டர்' போலும் அவை!

அவனைப் பார்த்தாலே குழந்தைகள் அழும். சிரித்தால் குமரருக்கும் குலை நடுக்கம் எடுக்கும். அத்தகைய கோர சொரூபி எங்கு உலவுகிறான்? ஆம்; கல்கத்தாவில்! அவன் தான் அமீன்சந்த்.

அவன் வெள்ளையனா? இல்லை. இல்லவே இல்லை. பின் முகமதியனா? வழுக்கை மண்டையைத் தவிர வேறொன்

றும் அத்தாட்சியில்லை. ஆனாலும் அதில் பறந்துகொண்டிருந்த இரண்டொரு மயிர்கள் அந்த அத்தாட்சியைப் பொய்யாக்கிவிட்டன. ஒரு வேளை சீக்கியனாக இருக்கலாமா? இருந்தாலும் இருக்கலாம். அவன் அணிந்திருந்த உடை அப்படிச் சொல்கிறது. அவன் இந்துவா? 'சந்தனக் கோடுகளும்' பேச்சும் செயலும் சாட்சி சொல்கின்றன. அவன் இந்துவானால், என்ன இனத்தான்? ஆரியனாக இருந்தால் மறுப்பது யார்? அவன் யாராக இருந்தால் என்ன? அவன் உள்நாட்டான். வெளியிலிருந்து வந்தவனல்லன்! கல்கத்தாவில் பெரிய வியாபாரி. ஏராளமான கப்பல் போக்குவரத்து உண்டு.

அமீன்சந்த் சிரித்தான்!

ஏன்?.........

ஆம்; அவன் சிரிப்பான். எப்பொழுதும் சிரிப்பான், எதைச் சொன்னாலும் சிரிப்பான். அவன் சீறும் நேரங்கள் தவிரப் பிற நேரங்களில் சிரிப்பான். ஆகவே வெறியன் என்கிறீர்களா? இல்லை.

சிரிப்பு-எவ்வளவு அழகான சொல்! அது இரு பக்கத்திலும் கூர்மை தீட்டப்பெற்ற கத்தி-சிரிப்பு சீர்பெறவுஞ் செய்யும்; சீரழிக்கவும் முடியும். சிரிப்பு, ஒரு வகையான மயக்கும் மருந்து; வசிய மருந்து! சிறப்பாக இது பெண்களுக்கே உரியது! அதைப் பயன் படுத்திக் காரியம் சாதிப்பதில் கைதேர்ந்தவன். சிரித்துச் சிரித்துக் குடிகெடுக்குப் பரம்பரையின் ஆதித் தலைவன் அவன் என்றால் யாரும் மறுக்க முடியாது.

எப்பொழுது சிரித்தான்?

எதிரில் எவருமில்லை. தானாகவே சிரித்தான். பேசும் பொழுது பேச்சுக்குப் பேச்சுக் காட்டும் சிரிப்பிற்கு அர்த்தம் அவ்வளவு அதிகமில்லை. தனித்துச் சிரிக்கும் ஒவ்வொரு

சிரிப்பிற்கும் ஓராயிரம் அர்த்தங்கள் உண்டு. சிரிப்பின் ஒலி குறைவானல், ஏதோ ஒரு குடிகெடுகிறது—சற்று அதிகமானல், ஒரு கொலை நடக்கப்போகிறது—நீண்டால், சித்திரவதை உருவாகிறது—இப்படிக் கூறிக்கொண்டே இருக்கலாம்.

இப்பொழுது சிரித்தானே, இதற்கும் அர்த்தம் ஏதாவது இல்லாமல் போகுமா? அவன் மனத்தில் பெரிய திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது. ஒவ்வொன்றும் அவன் மனத்திரையில் பட்டுப்பட்டு மறைந்தது!

......அவனது அருமை மகள் ஊர்மிளா அலங்கோலமான ஆடைகளுடன் எதிரில் ஏக்கமே வடிவாக நின்று கொண்டிருந்தாள். அவளது கண்கள் பரிதாபத்தைக் கக்கிக்கொண்டிருந்தன. மீர்ஸா மகமத்-அவன்தான், எதிர்கால சுபேதார். ஸுராஜ்-உத்-தெளலா அவளது இன்பத் தேனை மொண்டு மாந்தி மகிழ்கிருன். முடீன்கான் காவல் இருக்கிருன்! காளியோ கடுங்கோபமாக நிற்கிருள்!

அமீன்சந்த் உள்ளத்தில் கோபம் கொழுந்து விட்டு எழுந்தது! அவனுக்கு ஆத்திரம் அளவுக்கு மீறிவந்தது. தன் மகளின் கற்பு பறிபோனதைப்பற்றிக் கூடக் கவலை இல்லை. ஆனல் அது ஒரு முரட்டு முகமதியனல் கொள்ளையிடப்பட்ட அநியாயத்தை அவனல் சகிக்க முடியவில்லை.

எப்படியும் அவனைப் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று அவனது இதயத்தின் அடித்தளத்தில் ஒரு குரல் தானே எழுந்தது!

ஆனல் அந்த முடீன்கான் பொல்லாதவன்; முரடன். அவனது துணையினல்தான் ஸுராஜ் எந்தப் பயங்கர விளையாட்டுகளிலும் இறங்கிவிடுகிருன். ஆகவே அவனை எப்படி மடக்குவது என்று அவனுக்குப் புரியவில்லை. அதற்காகவே அவன் அவ்வளவு நேரம் யோசனை செய்தான். அவன் சிந்தனையில் ஒரு திடீர் மின்னல் பாய்ச்சல்! ஆம்;

ஒரு அருமையான திட்டம் பட்டென்று வெடித்தது. ஊர்மிளா அழகிதான். பழுத்துக் கனிந்த கனிதான்! ஆனால் ஊர்மிளா எச்சிலாக்கப்பட்டு விட்டாள், தேன் குடத்திலே துளி நஞ்சு கலந்து விட்டது. இனி அதனைத் தூய்மையாக்க முடியாது! ஆகவே, அவளைக் கருவியாக்கி இந்த விரோதிகள் இருவரையும் வீழ்த்தி விடவேண்டும். வேல் விழிக்கு விழாத வீரர்களும் உண்டோ உலகில்? அப்படி விழாவிட்டால் அவன் வீரனா? பேடியன்றோ அவனுக்குரிய பட்டப்பெயர்!

அவன் கண்முன்பு பெரிய வியாபரத்தைத் தொடங்கச் செய்து பிறகு ஏமாற்றிவிட்ட வெள்ளையர்கள் தெரிந்தனர். ஆரம்பத்தில் அமோகமான ஆதரவும், உதவியும் செய்துவிட்டு இடையில் பண்டங்கள் தராது ஏமாற்றி விட்ட டிரேக் பரம்பரையினர் கோரச் சிரிப்புச் சிரித்தனர்......ஆம்; அவர்களுக்குத் தக்கதோர் பாடங் கற்பிக்க வேண்டும் என்று துடியாய்த் துடித்தது அவனது உள்ளம். இப்படி அவன் எண்ணங்கள் ஓடின. ஞானக் கண்களில் சுயநலக் கண்ணாடி இப்போது!

கண்ணாடியை மாற்றுவோமானால்......?

......டில்லியில் பாதுஷா—தலையில் குல்லாய், கையில் குரான், இடையில் கைலி......

......யாகக் குண்டங்கள் அவிந்து விட்டன. கோயில்களில் பரமசிவன், மகாவிஷ்ணு உபவாசம் இருந்தனர். மணியடிக்கவும் பக்த சிரோன்மணிகளுக்குப் பயம்!

பிராமணர்கள் உச்சிக்குடுமியைத் தட்டினர்! பூணூலைச் சுற்றும் முற்றும் பார்த்து உருவினர். குசுகுசு வெனக் குரலைத் தாழ்த்திக் குசலம் விசாரித்தனர். போர் முனைத்திட்டம் போட்டனர் முப்புரியில் அழுக்குத் திரண்டது. ஆக்ஞை பிறக்கவில்லை.

பஞ்சமர் குல்லாயை மாட்டிக் கொண்டு 'மாஜி எஜமானர்களை'ப் பார்த்துக் கேலி பேசினர். குரானிலே வத்திப்புகை! ஜதையிலே செல்! பயந்துகொண்டு வீட்டுத் தோட்டத்து மாட்டுக் கொட்டிலில் பசு பூஜை! ஆனால் பகிரங்கமாகப் பசுவின் கழுத்தில் பட்டாக்கத்தி!

பாதிரிப் பிரசாரம், சட்டர்ஜி சாமுவேலாகிறான்! இந்து யாத்திரிகர்கள் கப்பல்களில் வெள்ளையர் கொள்ளையிடுகின்றனர்.........

கண்ணாடி மாறிற்று. காட்சியும் மாறிவிட்டது!

இவை அத்தனையும் அவர் மனம் எடைபோட்டுக் கொண்டிருந்தது. முஸ்லீம் ஆட்சி அடியோடு ஒழிக்கப் பட்டாகவேண்டும். வெள்ளையன் வந்தாலும் பரவாயில்லை! யார் வந்தாலும் தனது பரம்பரை வாழவேண்டும் உழைக்காமல், இளைக்காமல்!—இதற்குத் திட்டம் வேண்டும். பாதுஷா, சுபேதார், அவனுக்கு அடுத்துவர இருக்கும் ஸுராஜ்—உத்—தௌலா இவர்கள் ஒருபக்கம்! டிரேக் வழிவந்தோர் பிறிதொரு பக்கம்! இவர்கள் மோதிக் கொள்ள வேண்டும், கட்டாயம் சண்டையிடவேண்டும். அமீன்சந்த் இரண்டு பக்கங்களிலும் நம்பிக்கையுள்ள செல்லப் பிள்ளையாக வேண்டும்.

அமீன்சந்த் மீண்டும் சிரித்தான். திட்டம் இப்பொழுது உருவாகி விட்டது என்று பொருள்!

அமீன்சந்த் இங்கும் அங்கும் உலவினான். அவன் கூடவே யாரோ நடப்பது போன்ற ஓசைகேட்டுத் திரும்பினான். சோணிசந்த் நின்றுகொண்டிருந்தான்.

"சோணிசந்த்"

"நீ வந்து வெகுநேரமாயிற்றோ?"

"ஆமாம்......"

"எனக்குத் தெரியாதே!"

"பலமான யோசனை போலிருக்கிறது. அதனுல்தான் ஆள் வந்ததுகூடத் தெரியவில்லை"

'ஏதாவது செய்திகள் உண்டா?"

"டிரேக் உங்களைப் பார்க்க வரப்போகிருர்"

"பிறகு......"

"முடீன்கானின் மோப்பம் நின்றபாடில்லை. எப்பொழுதும் நம்மைப் பற்றிய ஆராய்ச்சிதான் அவனுக்கு"

"போதும், நிறுத்து"

சோணிசந்த் வெளியேறுகிருன். அமீன்சந்த் வெளியிட்ட வெறிச் சிரிப்பு அந்த அகண்ட மண்டபம் எங்கும் பட்டு எதிரொலித்தது; கேட்கப் பயங்கரமாக இருந்தது. அந்தச் சிரிப்புக் கிடையே வந்து சேர்ந்தாள் ஊர்மிளா!

சந்தேகம்

"ஸூராஜ், நாம் செய்தது மகாத் தவறு"

"ஏன்?......"

"அமீன்சந்த், சாமான்யனல்ல! பக்கா பேர்வழி! எப்படியும் நம்மை வீழ்த்த வேலை செய்வான்"

"அவன் பெரு வீரனு? வாளெடுக்கவும் வலுவற்றவன்!"

"சொல்லாலேயே வெல்லும் வழிகண்ட வித்தகன் அவன். அவனுக்கு வில் தேவையில்லை. புல்லே போதுமே நம்மைப் புறங்காட்டி ஓடும்படி விரட்ட"

"முடீன், நீ ஒரு பைத்தியம்"

"எல்லாம் போகப் போகத் தெரியும்!"

வீரர்கள் இருவரும் பேசிக்கொண்டனர். அமீன்சந்த் தின் ஆத்திரம் எப்படி மாறும் என்று தெரியாது விழித் தனர்.

ஊர்மிளாவின் இன்பம் பறிபோன அன்று அமீன் சந்துக்கு அவமானம் மட்டுமல்ல, அடி, உதை, குத்து, வெட்டு அத்தனையையும் பரிசாக்கினர். கடைசியிலே தூணிலே கட்டிவைத்தனர். பிறகு மகளை அப்பன் கண் களுக்கு முன்னாலேயே......அப்புறம் அவளை, அப்பனையே வீட்டிற்கு அழைத்துப்போகும்படிக் கட்டளையிட்டனர். அவன் எதையும் தடுத்துரையாடாமல் தன் மகளை அழைத்துக்கொண்டு இல்லம் நோக்கி ஏகினான். சோணி சந்த் உடன் தொடர்ந்தான்.

அமீன்சந்த் பெரும் பணக்காரன். கப்பல் வியாபாரி. வங்கத்திலேயே பேர் வாங்கிய வணிகன். அதிகார வர்க்கத்தாரிடம் ஆதரவு அதிகம், குறிப்பாக ஸுராஜு வின் பாட்டன், வங்கத்தின் அப்பொழுதைய சுபேதார், அலிவர்திகானுக்கு மிகவும் நெருங்கிய நண்பன். வெளி நாட்டு வெள்ளை வணிகர்களிடன் அதிகத் தொடர்பு கொண்டவன். மேலும் மூகம்மதியனல்லாதவன். அவன் நினைத்தால் எதையும் செய்யலாம்!

ஊர்மிளாவோ அன்று எதிர்ப்பு எதையும் செய்ய வில்லை. காரணம் விளங்கவில்லை!

காட்டிலே நடந்த அந்தக் காதல் நாடகம் இன்றுவரை நாட்டில் தெரிந்ததாகத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் ஸுராஜுவைக் கேட்டிருப்பாரே அலிவர்திகான்! கேட்காமலிருப்பதி லிருந்தே இந்தச் செய்தியின் விஷ வாடை இன்னும் அரண்மனைக்குள் புகவில்லை என்று தான் முடிவு செய்துகொள்ளவேண்டும்.

வீரர்கள் இப்படிச் சிந்தனையைச் செலவிட்டுக்கொண்டிருக்கையில் ஒரு பணிமகன் நுழைந்தான் !

"உங்கள் இருவரையும் சுபேதார் அழைக்கிறார்" என்றான். திடுக்கிட்டனர் இருவரும். பயம் வந்து சூழ்ந்து கொண்டது !

வங்கத்தின் சுபேதார் அலிவர்திகான். அவனைக் கண்டு மக்கள் நடுங்குவர். அதே நேரத்தில் வாயார வாழ்த்துவர். ஏனெனில் அவன் காரியமாற்றுவதில் கொடியவனாகக் காட்சியளிப்பான். அவன் குணத்திலே தங்கக் கம்பிதான். அவன் வங்கத்தை மட்டும் கட்டியாளவில்லை. வங்கம், பீஹார், ஒரிஸா ஆகிய நாடுகளைத் தன் ஆளுகைக்குள் கொண்டுவந்தான். அவனது சிங்கநோக்கு நாட்டின் எப்பக்கமும் தாக்கிக்கொண்டிருந்தது. ஆகவேதான் அலிவர்திகானின் ஆட்சியில் அமைதி தாண்டவமாடிற்று. அங்கு ஏக்கம் இல்லை. ஆகவே ஆட்சிக்கு எதிர்ப்பும் இல்லை. இருக்கவேண்டிய தேவையும் இல்லை! சுபேதார் தனது உழைப்பால், ஊக்கத்தால் எழுச்சியால் உயர்ந்தவன். உன்னத பதவிக்கு உயர்ந்தவன்! குமுறல் உலவுங் குடிசையிலிருந்து, 'மதனா மதிவதனா', என்று மனமோகன இராகம் பாடி மகிழும் மாளிகைக்குக் குடியேறியவன் ! ஆகவே, அவனுக்குக் குமுறல், ஆனந்த கீதம்—இவையிரண்டும் பழக்கமானவை ! இரண்டும் எதிரிடையானவை என்பதைப் புரிந்து அதற்கேற்பத் தன்னாட்சியை நடத்தினான்.

சிறு சிப்பாய், பிறகு பெரிய சுபேதார் ! வாழ்க்கையின் காலைப் பகுதியிலே காட்டிய உழைப்பு, வாழ்வின் மாலைப்பொழுதில் சுபேதார் மாளிகைக்குக் கூட்டிச் சென்றது. அவனது உயர்விற்கு அவனே காரணம் ! அவனது செயல்களில் சூறாவளி வீசினாலும், அவன் மனத்தில் தென்றல் மறைவதில்லை. கடுமையிருந்ததால் தான் கட்டுக்கடங்கினர் மக்கள். ஆனால் அவன் மட்டும்

கண்டதை நம்பும் வெள்ளை மனம் படைத்தவன். ஆகவே தான் தன் கீழிருந்து பணியாற்றிடுபவர்களில் சுபேதார் அலிவர்திகான் போன்ற சிறந்த செம்மல்கள் கிடைப்பது அரிது என்று பாதுஷா ஷாஆலம் எண்ணி மகிழ்ந்திருந்தார்.

அலிவர்திகானின் அடுத்த வாரிசு ஸுராஜ். அவனோ இன்பக் கேளிக்கைகளிலே மூழ்கிக் கிடந்தான்! கொஞ்சமும் நாட்டைப்பற்றியோ தனது பொறுப்பைப்பற்றியோ கவலைப்பட்டவனாகத் தெரியவில்லை. அவனது உயிர்த் தோழன் முடீன்கான்.

தங்களைச் சுபேதார் அழைக்கிறார் என்ற செய்தியைக் கேட்டவுடனேயே அவர்களுக்குக் காளிகோயிலின் காமக் களியாட்டம் நினைவில் எழுந்தது. அந்தப் பயங்கர நிகழ்ச்சி பயத்தை அள்ளித் தெளித்தது. இருந்தாலும் இருவரும் ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு சென்றனர். சற்று நடையில் தளர்ச்சி தென்பட்டாலும், கொஞ்சம் முகத்தில் விகாரம் பரவியிருந்தாலும் அவற்றை மறைத்துக்கொண்டு உள் நுழைந்தனர்.

அலிவர்திகான் இவர்களைக் கண்டதும் பக்கத்தில் நின்ற காவற்காரனை நோக்கினான்.

"போய், அமீன்சந்த்தை அழைத்து வா" என்று கட்டளையிட்டான். வந்தவர் இருவருடைய இதயங்களும் பலூன்போல உப்பி வெடித்துவிடும் போலத் தெரிந்தன! அவர்கள் மனத்திலே எழுந்த சந்தேகம் வளர்ந்தது.

அப்பனும் மகளும்

ஊர்மிளாவைக் கண்ட அமீன்சந்த் தனது ஆத்திரத்தை மறைத்துக்கொண்டு அன்பு வெள்ளம் பெருக்கிடுவதுபோலத் தன் முகத்தைத் தோற்றுவிக்க வேண்டித் தனது வஞ்சனைச் சிரிப்பைத் துணைக்கிழுத்தான்! அவளோ அழவில்லை. தானும் சிரித்தாள். அப்பனுக்கு ஆச்சரியமாக இருந்தது. பலவந்தத்தால் கற்பிழந்தும் கண் கலங்க வில்லையே அவள்! ஒருவேளை இருவரிடையேயும் ஏற்கனவே, காதல் பரவியிருந்ததோ என்றும் அவன் மனம் எண்ணமிடலாயிற்று. ஊர்மிளா அருகில் வந்தாள். தந்தை மகளை ஆதரவோடு அணைத்துக் கொண்டான்.

"மகளே, மனங் கலங்காதே!"

"மனக்கலக்கம் எனக்கில்லை அப்பா."

"அவமானத்தால் அழுது முகம் வீங்கிவிட்டதே அம்மா."

"அவமானத்தால் இல்லை, அது தங்களுக்கே இல்லாதபோது எனக்கெதற்கு?"

"ஆத்திரத்தில் உதிர்க்கிறாயா, இந்த வார்த்தைகளை?"

"இல்லை, இல்லை, எனக்கேது ஆத்திரம்?"

"அந்தக் காலிகளின் தொல்லை இன்னும் தொடருமோ என்று பயமா? அதற்கு ஏற்ற திட்டம் செய்து விடுகிறேன், நீ அஞ்சற்க!"

"பயமில்லை. அந்தத் தொல்லை என்னைவிட்டு நீங்காமல் என்றும் இருக்கவேண்டும் என்றுதான் தவங்கிடக்கிறேன். ஏங்கி ஏங்கி முகம் வீங்கிக் கிடக்கிறேன்."

"என்ன?"

"ஆனால் ஒரு திருத்தம்........."

"நிறுத்தி விடு, நாணமற்றவளே"

"தந்தையரே, இத்தோடு முடித்துக்கொள்கிறேன். வந்த இருவரில் என்னை வாரியணைத்தானே அவனை விட்டுப் பிரித்துக், கூடவந்த வீரனோடு என்னைச் சேர்த்து விடவேண்டும்"

"முடீடன்கானையா சொல்கிறாய்!"

தன் மகளின் உள்ளத்தைப் படம் பிடித்துக்கொண்டான். சிறிது நேரம் அப்படியே திகைத்து நின்றான். பிறகு வழக்கம்போலச் சிரித்தான்.

"மட்டற்ற மகிழ்ச்சி. மகளே, உன் மனங்கவர்ந்தவன் கட்டாயம் கிடைப்பான்" என்றான். அவளது ஏக்கம் பறந்தது. புதியதோர் ஊக்கம் பிறந்தது!

அமீன்சந்த் தன் பழையநாள் வாழ்வை எண்ணினான். தான் நாடோடியாக ஓடியாடிக் கடைசியில் காளிகோயிலுக்கு வந்து சேர்ந்தது, அங்கிருந்து பூசை செய்தது, பிறகு பூசைக்கு வழக்கமாக வந்துகொண்டிருந்த கனகமாலாவைக் கற்பழித்தது, அவளைப் பிறகு கோயிலிலேயே வைத்துக்கொண்டு வெறியாட்டம் ஆடியது, கடைசியில் ஊர்மிளா பிறந்தது...... இப்படிக் கழிந்த கால நிகழ்ச்சிகள் நினைவில் எழுந்தன!

கொஞ்ச நாட்களிலேயே அமீன்சந்த் பெரிய வைர வியாபாரியாகி விட்டான். கனகமாலா அவனது பட்டத்தரசியாகி விட்டாள். ஊர்மிளா அவனது செல்வக் குழந்தையாக வளர்ந்துவந்தாள்! அமீன்சந்துக்குச்செல்வம் வளர்ந்ததுபோல அவனது காதற்கிழத்திக்குத் தீராத நோய் வளர்ந்தது! கடைசியில் நோய் தீர்க்கப்படாமலேயே இறந்து விட்டாள்.

அவள் இறப்பதற்கு முன்னுல் தனது மகளை அழைத்து, தன் கணவனின் கைகளில் ஒப்படைத்துக் கூறிய வார்த்தைகள் இன்னும் அவனது காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தன !

"நாதா, நான் உங்களைச் சேர்ந்தவள். இக்குழந்தையையும் அப்படிப் பழிவாங்க விட்டுவிடாதீர்கள். தக்கதோரிடத்தில் மணம் முடித்துவிடுங்கள். இந்த உலகம் வஞ்சகம் நிறைந்தது. இளம் பெண்களைப் பழிவாங்கி விடும் !"

இந்த வார்த்தைகளைச் சொல்லி முடிப்பதற்குள் அவள் படாதபாடுபட்டாள். பிறகு மடிந்தாள் !......

அமீன்சந்த் இவைகளையெல்லாம் கணப்பொழுதிற்குள் எண்ணினுன். அவன் கண்கள் ஒளி மழுங்கிப் போயிருந்தன ! ஆனுல் அவன் வஞ்சனையுள்ளம் வாடி விடவில்லை !

ஊர்மிளா கெட்டுவிட்டாள். இனி அவளின் தூய்மையைத் தேடுவதைக் காட்டிலும், அவளது வதங்கிய கற்பைப் பணயம் வைத்து இந்த முகம்மதிய வம்சத்தையே ஒழித்துவிட வேண்டும். ஆம்; நிச்சயமாக இதை முடித்து விடவேண்டும். பெற்ற மகளிடம் இதை எப்படிச் சொல்வது என்று ஏங்கிக் கிடந்தான். ஆனுல் அவளோ ஸுராஜுவைத் தள்ளிவிட்டு, முடீன்கானைச் சேர்த்து வைக்கத் தந்தையிடம் உதவி கேட்கிற அளவு துணிந்துவிட்டாள் ! நரிக்குப் பிறந்தது நத்தையாகுமா ? ஊர்மிளாவைக் கொண்டு இரு வீரர்களிடையேயும் பகைமை யுணர்ச்சியைப் பரப்பி விடலாம். இருவரையும் பிரித்துமட்டும் விடக்கூடாது. பிரித்த பிறகு மோத விட வேண்டும். ஊர்மிளாவின் ஓரவிழிப் பார்வை யொன்றுல்தான் இந்த ஒப்பற்ற காரியம் முடியும் ! பிரித்தாலும் சூழ்ச்சிதான் அரசியல் தந்திரத்தின் அரிச்சுவடி !

இந்த நேரத்தில் சோணிசந்த் உள்நுழைந்தான். அவன் முக்கிய செய்தியுடன் வந்திருப்பதாகத் தெரிந்தது. ஆகவே, ஊர்மிளா உள்ளே சென்றுவிட்டாள்!

"சுபேதார் அலிவர்திகான் உங்களைப் பார்க்க விழைகிறுன். ஆள் அனுப்பியுள்ளான்"

"அந்த முரடன் என்னை ஏன் தேடுகிறுன்?"

"விபரம் விபரீதமானதல்ல, வியாபார சம்பந்தமானது!"

"அவ்வளவுதானே!"

"அது மட்டும் இப்பொழுது தெரிகிறது. நேரில் சென்ருல் நிலைமை புரியும். ஆனுல்........."

"என்னடா........"

"அன்று நடந்ததைச் சுபேதார் காதில் போட்டு வையுங்களேன்"

"போட்டென்னடா, மாட்டியே வைக்கிறேன்"

அமீன்சந்த் சுபேதார் அலிவர்திகானைப் பார்க்கக் கிளம்பினுன். அவன் போகும் திசை நோக்கியே நின்று கொண்டிருந்தான் சோணிசந்த். சிறிது நேரங்கழித்து தன் உடல்மேல் ஏதோ பட்டதுபோன்றிருந்தது. திரும்பினுன். ஊர்மிளாவின் மலர்க்கரம் அவனது தோளைத் தொட்டிருக்கிறது!

வாரும்! வாரும்!

அமீன்சந்த் உள் நுழைந்ததைக் கண்ட ஸுராஜு வின் உள்ளத்தில் பயம் படமெடுத்தாடிற்று. மூடீன்கா னின் இதயத்தினுள் ஒரு இடிவிழுந்தது போன்ற அதிர்ச்சி ......! அலிவர்திகான் அவனை அன்போடு வரவேற்ருன்.

"என்னை அழைத்ததின் காரணம் யாதோ?"

"வெள்ளையரின் வியாபார நிலவரம் எப்படி?"

"பணப்புழக்கம் அதிகம்"

"அதிக மென்ருல்......?"

"அளவிற்கு மீறியது என்றுதான் சொல்ல வேண்டும்"

அலிவர்திகான் சிரித்தான். மற்ற இருவரும் அப் பொழுதுதான் பெரும்பாரங் கழிந்தது போன்ற உணர்ச்சி கொண்டனர்.

"இப்பொழுது இங்கு டிரேக் வருவான். வந்தால் ஐந்து இலட்சம் கேட்கப் போகிறேன். கேட்டால் அவர் கள் தர இயலுமல்லவா?"

"தாராளமாக!"

"சரி, தங்களைப் பிறகு சந்திக்கிறேன்"

"ஆமாம், யானும் தங்களைச் சந்திக்கவேண்டி யிருக் கிறது. அப்படி யொன்றும் அவசரமில்லை நிதானமாகச் சொல்கிறேன்"

அமீன்சந்த் வெளியேறினுன்.

"ஸுராஜ், நீ அடுத்தபடி சுபேதாராக வேண்டியவன். கண்டபடி திரிதலும், காலித்தனங்கள் புரிவதும் உன்னி

டம் வங்கம் எதிர்பார்க்கவில்லை. கண்ணியத்தை, கடமையுணர்வைத்தான் காண ஆசைப்படுகிறது. மூடன், நீ அவனது தோழன். உண்மைத் தோழனாக இரு"

"சரி, தாதா"

"நீங்கள் போகலாம்!"

இருவரும் பெருமூச்செறிந்தனர்.

அமீன்சந்த் சுபேதாரின் மாளிகை வெளிவாயிற்படியை அடைந்தான். அப்பொழுதுதான் டிரேக்கும் மின்சினும் வந்து கொண்டிருந்தனர். சுபேதாரின் அழைப்பின்பேரில் வந்த வெள்ளைய வணிகத் தலைவர்கள் அவர்கள்! அவர்கள் ஏற்கனவே அமீன்சந்த்தைச் சந்திக்கவேண்டும் என்று சோணிசந்த் மூலம் செய்தி தெரிவித்திருந்தனர். ஆனால் வரவில்லை!

"ஐயா, வணக்கம்"

"வணக்கம் கிடக்கட்டும். உங்கள் வாழ்வு பறிபோகப் போகிறது. சுபேதார் ஐந்து இலட்சம் கேட்கப்போகிறான். ஏமாந்து கொடுத்து விடாதீர்கள்! தந்திரமாகப் பேசித் தட்டிக் கழித்துவிடுங்கள்"

அமீன்சந்த் காதோடு காதாக இந்த மந்திரத்தை ஓதிவிட்டான்! பிறகு அவர்கள் உள்ளே சென்றனர்.

"வெள்ளைய வணிகரே! வாரும், வாரும். இப்படி அமரும்."

"கனம் சுபேதார் அவர்களுக்கு வணக்கம்......"

"நாம் உங்களை இப்பொழுது அழைத்தது வணக்கமோ, வாழ்த்தோ பெற அல்ல. அதற்கு ஏராளமான மக்கள் உண்டு நம் நாட்டில்!"

"எங்களை வரும்படி பணித்ததின் காரணம்......?"

"நோக்கம் ஆக்கத்தின்மீதுதான்"

"அப்படி யென்ருல்?"

"நமது பொற்களஞ்சியத்தில் பஞ்சம் தலைவிரித்தாடு கிறது"

"அதற்கு எங்களவர் செய்யவேண்டி தொண்டு யாதோ?"

"வழக்கம்போல்......"

"காணிக்கை தானே? தவருது செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். உங்கள் எல்லையில் எங்கள் வயிறு வளர் கிறது. வாழ்வும், தாழ்வும் வங்கத்தின் புன்சிரிப்பில் தான் இருக்கிறது. ஆனுலும்......"

"ஆனுலும்......என்று இழுப்பானேன்? தவக்கம் வேண்டாம். ஐந்து இலட்சம் அவசியம் எதிர்பார்க் கிரும். அதுவும் இன்றே, இப்பொழுதே!"

"ஐயோ அவ்வளவு தொகை, இவ்வளவு விரைவிலா?"

"வாதாட நேரமில்லை. வங்கத்தின் அரசாங்கம் கேட் கிறது. விருப்பமிருந்தால் வரட்டும் தொகை. இல்லா விட்டால் சுபேதாரின் கட்டளையைத் தாங்கட்டும்!"

"வயிற்றைக் கழுவக் கடல் கடந்து ஓடிவந்திருக்கும் சிறுவர்களிடம் சினங்கூடாது"

"உபதேசம் போதும், உடன் விடை"

அலிவர்திகான் தொடக்கத்திலிருந்தே சூடாகவே வார்த்தைகளை வீசிக் கொண்டிருந்தான். ஆனுல் வந்தவர் களோ பணிவாகவும் கனிவாகவும் விடையளித்து வந்தார் கள். டிரேக்கும், மின்சினும் எப்படியும் தணிவாகப் பேசித் தப்பித்துக் கொள்ள முயற்சி செய்கிருர்கள் என் பது அவர்களது முக பாவங்களிலிருந்து பளிச்சென்று புரிந்தது.

"சென்ற வாரம் மூன்று இலட்சம்......"

"காணிக்கை செலுத்தினீர்கள்"

"சுபேதார் அவர்களுக்கு நினைவு படுத்தினோம்"

"அந்தப் பணியையும், சிரமத்தையும் வெளிநாட்டு வெள்ளையர்களுக்குக் கொடுக்க மூகலாயன் துணியமாட்டான். சுபேதார் ஞாபகசக்தி உள்ளவர்"

"மீண்டும் பணிவாகச் சொல்கிறோம் சீற்றம் ஆற்றல் குறைவின் அறிகுறி"

"நீங்கள் செவிடர்களல்லவே! உங்கள் விடையைப் பணமாக எதிர்பார்க்கிறேன், பேச்சால் அல்ல!"

அலிவர்திகான் காலத்தில்தான் கல்கத்தாவில் வெள்ளையர் பரம்பரையினர் தங்கள் கடைகளை விரித்தனர். மெதுவாக நுழைந்தனர். சுபேதார் ஆதரவு கிடைத்தது. ஆதரவு பெறப் பணத்தை அள்ளிக் கொட்டினர். ஆம்; அலிவர்திகானுக்கும் அந்த முறையில்தான் பணங்கொடுத்தனர். சுபேதார் எவ்வப்பொழுது கஜானாவில் இடுக்கு விழுகிறதோ அவ்வப்பொழுதெல்லாம் இந்த அந்நிய வியாபாரிகளுக்கு அழைப்பு விடுவான். அழைப்பு என்றாலே அவர்களுக்குத் தெரியும். கையுடனேயே பையைக் கொண்டு செல்வர் வெள்ளைய வணிகர்கள். அது அவர்களுக்கு வாடிக்கை.

அலிவர்திகான் திடீரென்று கல்கத்தாக் கோட்டைக்குக் கட்டளையை அனுப்பினான். டிரேக்கும், மின்சினும் ஓடோடி வந்தனர். அவர்களுக்கு இது ஆச்சரியமாயிருந்தது. சென்ற வாரந்தான் மூன்று இலட்சத்தைக் கட்டிச் சென்றார்கள். அதற்குள்ளாகவா பணம் கேட்பர்? இருக்காது! பின் ஏன் அழைக்கிறார் சுபேதார் என்று புரியவில்லை. இத்தகைய குழப்பத்துடன் இரு பெரும் வணிகத் தலைவர்களும் வந்தார்கள். அமீன்சந்தின் வார்த்தைக

ளால் விபரந் தெரிந்து கொண்டனர். பிறகு பேச்சும் நடந்தது!

கோபத்துடன் திரும்பி நின்று கொண்டிருந்த சுபே தார் பார்வைக்காகக் காத்து நின்றனர்.

"மன்னிக்க வேண்டும், ஒரு விண்ணப்பம்" என்ருன் டிரேக். அவன் குரல் நடுங்கிற்று. அவ்வளவு பயம்! இதைக்கேட்ட அலிவர்திகான் திரும்பினுன். அவனது இயல்பான அதிகாரக் குரல் மீண்டும் ஒலித்தது!

"என்ன அது?"

"தொகையைத் தருகிருேம். ஆனுல்......" என்ருன் வணிகன்.

"சுருங்கச் சொல்லும்" என்ருன் சுபேதார்.

"கொஞ்சம் குறையுங்கள் எண்ணிக்கையை............ ஐந்தை மூன்ருக்க வேண்டும்!"—இது டிரேக்கின் விண் ணப்பம்.

"தொகையைக் குறைப்பதோடு நாளைக் கூட்டவேண் டும்."—இதுவரை பயந்து நடுங்கிக் கொண்டு பேசவுந் துணிவில்லாமல் நின்றுகொண்டிருந்த மின்சினின் இடைச் செருகல் இது!

"ஹா......ஹா......"

கோபச் சிரிப்பு அந்த மண்டபம் எங்கும் எதிரொலித் தது.

"வெகுஜோர் உங்கள் பஞ்சப் பாட்டு. ஆனுல் ஏமாந்து இதனை இரசிக்க அலிவர்திகான் ஆளல்லன். நமது நாட்டு மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கிற உங்களுக்கு ஐந்து இலட்சம் ஒரு பெரிய தொகை! அதைச் சேர்க்க ஒரு திங்கள் தவணை! யாரிடம் இந்த எத்தல் விளை

யாட்டு!"—இத்துடன் முடியவில்லை அவனது கோபப் பேச்சு; மேலும் தொடர்ந்தது!

"எனது கடைசிக் கட்டளை—ஐந்து இலட்சம் நமது கஜானாவில் கட்டப்படவேண்டும். இல்லாவிட்டால் வர்த்தக உரிமை பறிக்கப்படும்"

"ஐயோ! கருணை காட்டவேண்டும். உங்களை நம்பி எத்தனை வயிறுகள் அந்தக் கோட்டையில் உலவுகின்றன. உண்மையில் சொல்லுகிறோம். எங்களிடம் பணமுடை இப்பொழுது. இன்னொரு முறை..........." என்றார்கள் இருவரும்.

"பன்னிப் பன்னிப் பேசுவதில் பலனில்லை. இன்னல் வரும். இது என் கடைசிக் கட்டளை; எச்சரிக்கை!"

சுபேதாரின் ஆணையை மீற நாட்டில் ஆள் ஏது? இருந்தால் அவன் தலை தப்புமா? வணிகர்கள் வாய்மூடி மௌனிகளாகி விட்டனர். என்றாலும்..............

"மன்னிக்க வேண்டும். பணம் இல்லை கையில். இது பிடிவாதமல்ல! கடைசியாகச் சொல்ல வைத்திருப்பது இவ்வளவுதான்"—அத்துடன் ஓய்ந்தனர்.

"சரி. நீங்கள் போகலாம்"

சுபேதார் உரையாடலை முடித்துவிட்டான்.

இம்மாதிரி நடப்பது அந்தக் காலத்தில் ஆச்சர்யமான செயலல்ல; அடிக்கடி நடைபெறும் செயல்! அலிவர்த்கான் அழைப்பான். வருவர். பணந்தருவர் பல சமயங்களில்! இல்லையென்பதும் உண்டு. அப்பொழுது வணிக உரிமையைப் பறிப்பான். பிறகு வேண்டுவர். மீண்டுந் தருவான். ஆகவே புதுமை வழியும் செயல் இல்லைதான் அது. என்றாலும் இம்முறை நடந்ததுபோல வேறெம்முறையும் நடந்ததில்லை. சுபேதார் இவ்வளவு தூரம் யாரிடமும் வாதாடியதில்லை. வாதாடியும் வழிக்கு வரவில்லை!

ஆகவே சினம் வழக்கம்போல் சிறு பொறியாகப் போக வில்லை. பெரு நெருப்பாயிற்று.

வெள்ளையர் கோட்டைக் கதவைத் தாண்டினர். அலி வர்திகானின் ஆத்திரமும் ஆணையைக் கடந்தது.

பயங்கரத் திட்டம்

அமீன்சந்த் சிரித்தான்!

"உம்.........என்ன பலமான யோசனை?" என்றான் பின்னாலிருந்து வந்த ஆள்.

அமீன்சந்த் பின்பக்கம் நோக்கினான். மீண்டும் சிரித்தான்!

"டிரேக் துரையவர்களே, வாருங்கள்" என்றான்.

"மிகவும் நன்றி" என்றான், டிரேக்.

"அது சரி, மூர்ஷிடாபாத் மிருகம் மிகவும் உறுமிற்றோ?"

"பன்றி சிங்கமென்று தன்னை நினைத்துக் கொண்டால் உறுமாதா? பலமாக உறுமிற்று! ஆனால் இந்தச் சல சலப்புக்கு அஞ்சுவனவா வெள்ளை நரிகள்?"

"பார்த்தீர்களா, நான் அப்பொழுதே சொல்லவில்லையா?"

"சொன்னது நடந்தது. தங்கள் உபதேசப்படியே மிக அழகாக நடித்தோம். சுபேதார் துள்ளினான்"

மீண்டும் இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

அமீன்சந்த் இப்பொழுது சற்றுக் குரலைத் தாழ்த்தி, "இனிமேல்தான் நமக்கு ஆபத்து ஆரம்பிக்கிறது, ஞாபக மிருக்கட்டும்'' என்ருன்.

"அதற்காகத்தானே தங்களை நாடி வந்திருக்கிறேன்'' என்ருன் டிரேக், மிக மெல்லிய குரலில்.

"பழைய நினைவுகள்—கொஞ்சநேரம் சிந்தியுங்கள்'' —அமீன்சந்த் பேச்சை இப்பொழுது நிறுத்திவிட்டான். சுற்றும்முற்றும் பார்த்தான்.

"என்ன, தங்கள் ஒத்துழைப்பால்தான் கல்கத்தாவில் காலடி எடுத்து வைத்தோம். அதற்கு என்றென்றைக் கும் கடமைப் பட்டிருக்கிருேம்'' என்ருன் டிரேக் மீண்டும்.

"நன்றியுரை, பேச்சில்! நடத்தையில் நாணயமில்லை. நான் உங்களிடம் ஒப்பந்தம் பேசி வியாபாரத்தைத் தொடங்கினேன். ஆனால்......?''

"தக்க உதவிகள் முடிந்த அளவு செய்தோம்''

"செய்தீர்கள் தொடக்கத்தில்! நடுவில் விட்டீர்கள் நட்டாற்றில்........இல்லையா?''

"மன்னிக்க வேண்டும். ஆத்திரத்திற்கு இது நேர மில்லை. ஆபத்து, ஆம்; தலைக்கே வந்துவிட்டது!''

இப்பொழுது அமீன்சந்த் மனத்திற்குள்ளேயே சிரித் துக் கொண்டான்.

"ஆபத்து.........! ஆபத்து எங்கிருந்து பிறக்குமோ அந்த இடத்திற்கே ஆபத்துவர ஏற்பாடு செய்துவிட்டால் ....?''

"என்ன?''

"புரியவில்லையா?''

"புரிகிறது—சிறு சந்தேகம்!''

"ஏன்? வார்த்தைகளை வளர்த்துவது வணிகத் தொழிலுக்கு அழகு. இப்பொழுது சுருக்கம்—ஏனெனில் நமது வேலை வெகு நெருக்கத்தில் முடிந்தாக வேண்டும்"

"விளங்கச் சொல்லும், வித்தகரே"

எதிரில் கிடந்த மேஜையின்மீது ஆப்பிள் பழம் ஒன்று இருந்தது. சட்டென்று அப்பழம் எடுக்கப்பட்டது. அதன்மீது சிறு கத்தி வீச்சு—வெட்டு ஒன்று, துண்டு இரண்டு. அமீன்சந்த் இதைக் காட்டினான். டிரேக் வாயடைத்துவிட்டான்.

"அலிவர்திகானைக் கொல்லவேண்டும்—அதுதானே?"

"ஆம்; அது என் ஆசை. ஆசைப் பெருவெள்ளத்தின் ஒரு துளி! அலிவர்திகானை மட்டும் என்ன, அவன் பரம்பரையையே அழிக்க வேண்டும். இந்தியாவில் மொட்டைக் குல்லாயையே விடக்கூடாது. சக்தியும், சந்தர்ப்பமு மிருந்தால்........?"

அமீன்சந்த் சட்டென்று விழிகளை நாலா பக்கங்களிலும் ஓட்டினான். அவன் முகத்தில் பிணக்களை வழிந்தது அப்பொழுது! ஆனால் அப்பொழுது டிரேக்.....? மின்வெட்டுப் போன்ற ஒரு எண்ணம் தோன்றி மறைந்தது—அலிவர்திகானின் கழுத்தில் பாயுங் கத்தி நாளை டிரேக்கின் இதயத்திலும் பாய்ச்சப்படுமே?......என்று எண்ணினான். அவன் மெதுவாக எச்சிலை விழுங்கினான். எச்சில் விழுங்கிய சத்தங்கூடக் கடக்கென்று கேட்டது. அவ்வளவு நிசப்தம் அங்கு!

"சுபேதார்.........அவரது மாளிகையிலே கொலை! சுலபமல்ல இந்தச் செயல், காரியத்தில் இறங்கி மாட்டிக் கொண்டால்"—டிரேக் மௌனத்தைக் கலைத்தான்.

"கோழையாகாதீர்"

"நாங்கள் கோழைகளல்லர். குழைந்து கொடுத்துக் கொல்லுங் குணம் கொண்டவர்கள். பதுங்கிப் பாய்வது எங்கள் பரம்பரைப் பண்பு"

"எங்கள் பரம்பரை மட்டும் என்ன? உங்கள் இனத்திற்குக் கொஞ்சமும் இளைத்ததல்ல. சிரித்துச் சிரித்துப் பெரிய அரியாசனங்களை உருட்டிவிட்டுவிடுவோம். பெரிய மண்டலங்களையெல்லாம் மண் வெளிகளாக்கிவிடுவோம். வெள்ளைத் தோலால் பளபளப்பும், மினுமினுப்பும் துணை கொண்டு வீழ்த்திவிடுவோம் வீரர்களை!"

"ஆம்; பண்பில் ஒருவரே, இனம் மட்டுமென்ன? நீங்கள் தவிட்டு நிறம், நாங்கள் மஞ்சள் நிறம்"

"பெருமையடிக்க நேரமில்லை. ஒவ்வொரு வினாடியையும் ஆயிரம் சவரன்களாகக் கருதவேண்டும்"

"அது சரி, இப்பொழுது வாள் எடுக்கமுடியாது. நாங்கள் வந்தவர்கள். நீங்களோ வாள் எடுக்கும் பழக்கமே இல்லாத பரம்பரை. எங்களிடமோ படை யில்லை. காரியமோ பெரியது; நினைக்கவே பயங்கரமானது"

"அலெக்சாந்தரைவிட அலிவர்திகான் வீரனோ?"

"ஏன் இப்போது அந்தப் பிரச்னை?"

"அவசியத்திலும் அவசியம். இந்தியாவில் ஏற்றிக் கொண்ட நஞ்சு பாபிலோனியாவில் வேலை செய்தது"

"பாவையரும், மருத்துவரும் நஞ்சையூட்டி விட்டனராமே அலெக்ஸாந்தருக்கு! கேள்விப் பட்டுள்ளோம். நஞ்சு பாலேந்திய பருவமிக்க பாவை—புரிந்தது, புரிந்தே விட்டது!"

"புரியாமல் என்ன? இது உங்களுக்குப் பழகிய பாடந்தானே?"

"சரி. காரியம் விரைவில்!"

"நாளையே, நாளையே!"

அவர்கள் விட்ட பயங்கரச் சிரிப்பை அந்த மண்டபம் ஒலி பரப்பியது!

தாபமும் தூபமும்

காலை வெயிலில் தனது இளஞ்சிரிப்பைக் காட்டிக் கொண்டிருந்தது அந்த மாளிகை. அது சுபேதாரின் சொந்த 'வாசஸ்தலம்'! சுபேதார் தனது தலைநகரமாகிய மூர்ஷிடாபாத்தில்தான் அந்த அழகிய பளிங்கு மண்டபத்தை ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருந்தான். சாதாரணமாகத் திவான் முதலிய பெரிய அரசாங்க அலுவலாளர்களுக்குப் பேட்டி கொடுப்பதும் இங்குதான். நண்பர்கள் அநேகமாகச் சுபேதாரை இங்குதான் சந்திப்பார்கள்.

அந்தப் பளிங்கு மண்டபத்தின் கதவுகள் திறந்திருந்தன. சேவகர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். சற்று உள்ளே நுழைந்தால்...? அந்தப் படிகள், அப்பப்பா எவ்வளவு வழுவழுப்பு! அதன்மீது கம்பளம், அதைத் தாண்டினால் இரத்தினக் கம்பளம் விரித்த தரைகள், சுவரெங்கும் ஒரே சித்திரங்கள்! பதுமைகள் உயிர்பெற்ற பாவையர் போன்று வருபவரைக் கையேந்தி வரவேற்றுக் கொண்டிருந்தன. இவற்றையே நாள் முழுவதும் பார்த்துக்கொண்டிருக்கலாம்.

இப்பொழுது சுபேதார்.........?

சுபேதார் அலிவர்திகான் ஒரு அலங்காரமான ஆசனத்தில் அமர்ந்திருந்தான். அவனுக்கு எதிரில் ஒரு

பெரிய உருவம் உட்கார்ந்திருந்தது. பக்கத்தில் ஒரு பூங்கொடி நின்றுகொண்டிருந்தாள்!

"அமீன்சந்த், தங்கள் வரவு நல்வரவாகுக"

"கனம் சுபேதார் அவர்களுக்கு நமஸ்காரம். தங்கள் வாழ்வு பெருகட்டும்."

"அருகில் நிற்கும் ஆரணங்கு யாரோ?"

"என் மகள் போலத்தான்."

"என்னிடம் அவள் எதிர்பார்ப்பது என்ன?"

"சுபேதார் அவர்களே, இவள் என் வளர்ப்புப் பெண். பெயர் நளினி. அரசாங்கத்தில் பணியாற்ற அவாவுகிறாள். அதுவும் தங்களிடம் சேவகம் பார்க்க ஏங்கித் தவிக்கிறாள்."

அலிவர்திகானின் சுருங்கிய முகத்தில் ஒரு தெளிவு, ஒளி வீசியது. அவனது நரைத்த உள்ளத்திலும் ஒரு நச்சு எண்ணம் உச்சிக் கிளையேறிக் கொண்டது! அவளை ஒருமுறை பார்த்தான். அவளோ கண்ணொடிப்பால் அவனது விலா எலும்புகளை நோகச் செய்தாள். பவள இதழ்க் கடைகளில் முத்துக்கள் சிதறின. அலிவர்திகான் தன் வறண்ட வாழ்வில் புதியதோர் பூந்தோட்டம் ஏற்பட்டதாகக் கனவு கண்டான்.

"ஏன், என்னிடமே இருக்கட்டும் நீர் விரும்பினால்!"

"சரி, தங்கள் விருப்பம்"

இத்துடன் அந்த உரையாடல் முடிந்ததுபோலச் சற்று அமைதி நிலவியது. அதற்குள் நளினி தானாகவே அங்கிருந்த மயில் தோகை விசிறியைக்கொண்டு அலிவர்திகானுக்கு வீசிற ஆரம்பித்தாள்! அலிவர்திகான் மீண்டும் பேச்சைத் தொடங்கினான்:

"அந்த வெள்ளை வெறிநாய்கள் தங்களை அனுப்பினவோ?"

"என்னையா, எதற்காக? அவர்களுக்கு நானு தூது? தங்கள் உப்பைத் தின்று வளரும் இராஜபக்தியுள்ள பிரஜை."

"சபாஷ், அப்படிச் சொல்லும். ஆனாலும், ஏதேனும் சமரசம் செய்ய அனுப்பியிருப்பார்கள் என்று எண்ணினேன்"

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே, சமரசமா? அப்படியானால் ஏதாவது மனத்தாங்கல், உள் வீக்கம், ஊமைக் காயம் உண்டோ?"

"ஊமைக்காயமல்ல, வெட்டி அகற்றவேண்டிய பெரியகட்டிதான்"

"அப்படி யென்றால்?"

"சுபேதார் கட்டளையை அல்ல, வேண்டுகோளை நிறைவேற்றத் தவறி விட்டார்கள். முடியாமையாலல்ல ஆணவத்தால், அகங்காரத்தால்!"

"என்னைக் கேட்டபோதே நான் சொன்னேனே! என்ன ஆச்சரியம்? சுபேதார் கேட்டுமா, மறுத்துவிட்டார்கள்! நாய்கள் சுடுகாட்டில் நாட்டியமாடுகின்றன"

"அது கிடக்கட்டும், நீர் வந்த காரியம்?"

"ஒன்றும் பிரமாதமில்லை. தங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன். சரி வருகிறேன்"

"அமீன்சந் எமது நெடுநாள் நண்பர் நீர்! என்னிடம் எதையும் எப்பொழுதும் சொல்லலாம். எதையோ சொல்ல வந்தவர் மறைக்கிறீர். ஒளிக்காதீர்! சொல்லும். அச்சந் தேவையில்லை"

"தாங்கள் முன்னமேயே கோபமாக இருக்கிறீர்கள். அத்துடன் இதையும் சொன்னால்......எரிகிற நெருப்பில் எண்ணெய் விட்ட மாதிரிதான் !"

"அவையடக்கம் அளவிற்கு மீறுகிறது......போதும்"

"இல்லை......ஒன்றும் பிரமாதமில்லை.........எல்லாம் உங்கள் பேரன்......"

"ஸுராஜுவையா சொல்கிறீர். அதுதான் தெரிந்த தாயிற்றே! வாலிப விளையாட்டில் பல திருவிளையாடல் கள் செய்கிறான். கேள்விப் படுகிறோம். எல்லாம் திருந்தி விடுவான்"

"சில தினங்களுக்கு முன்னால் என் மகள் ஊர்மிளா வைக் காளிகோயிலில்......"

"அநியாயம், மன்னிக்க முடியாத குற்றம்"

"ஐயோ, அதைக்கூடப் பெரிதாக நான் நினைக்கவில்லை, அதனை மறந்துவிட்டேன், மன்னித்தும் விட்டேன் நாட்டின் பேரால் ! ஆனால்......"

"பின்னர்?"

"சுருங்கச் சொல்லி விடுகிறேன். அவர் இளமை யிலேயே சற்றுத் தடித்தனத்துடன் திரிந்ததால் கல்வி போதவில்லை. அவர் பழக்க வழக்கங்கள் யாவும் கீழ்த்தர மானவை. குழந்தையிலிருந்து கொடிய பழக்கங்களை வளர்த்து வருகிறார்கள். சேர்க்கையோ சேற்று நாற்றந் தான். குறிப்பாக முடீன்கானின் நட்பு கூடவே கூடாது"

"போதும், போதும்"

அவர்களின் நீண்ட உரையாடல் கடைசிக் கட்டத்தை யடைந்தது. அலிவர்திகானது வயதேறிய முகத்தில் கவலை

படர்ந்தது. அமீன்சந்த் இருப்புக் குழாயில் வெடியைக் கிட்டித்து விட்டுக் காத்திருக்கும்—திருவிழாவில் வரும்—வாண வேடிக்கைக்காரன் போன்றிருந்தான். அவன் முகம் அதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தது. வலையை விரித்து விட்டுக் காட்டு விலங்குகள் வந்து விழுமா என்று ஏங்கிடும் வேடன் போலானான் அமீன்சந்த்.

''இவைகளை எல்லாம்...'' என்றார் சுபேதார் ஆழ்ந்த பெருமூச்சுக்கிடையே!

''மக்கள் அப்படிப் பேசிக்கொள்கிறார்கள், தேவா! எனது சொந்தக் கற்பனையல்ல. ஒற்றர்களின் தலைவர் தாங்கள், தங்களிடம் பொய்யா?''

''நல்லது, ஏற்ற நேரத்தில் உண்மையைச் சாற்றினீர் இந்த நாட்டின் எதிர்காலத் திருவிளக்கு இப்படியா உலவுகிறது?''

''நமஸ்காரம்''

அமீன்சந்த் அலிவர்திகானிடம் விடைபெற்றான். நளினி தானாகவே முந்திக்கொண்டு விடை தந்தாள். திரும்பி வரும் வழியெங்கும் ஒரே வாசனை மூக்கைத் துளைத்தது. நல்ல சாம்பிராணி, அல்லது வத்தியின் மணம்! எங்கும் ஒரே புகை, தூபம். அமீன்சந்த் அந்தப் புகை மணத்தை நுகர்ந்தான். சிரித்தான். 'தூபம் பெருகி விட்டது' என்று தனக்குள்ளாகவே எண்ணினான்.

சுபேதாரும் இனி வரும் சுபேதாரும்

அலிவர்திகான் குகையில் புலி நடமாடுவது போல இங்கும் அங்கும் நடந்துகொண்டிருந்தான். சுபேதாரின் பக்கத்தில் சத்தங்காட்டாமல் மெல்ல நடந்து வந்து ஸூராஜ் நின்று கொண்டிருந்தான். ஆனால் சுபேதார் இன்னும் அவனைப் பார்க்கவில்லை. சட்டென்று சுபேதார் நின்றான்.

"என்ன, அமீன்சந்த் ஏன் வந்தீர்?"

"தாதா! நான்வந்தது உங்களுக்குத் தெரியவில்லையே?"

"ஆ ஸூராஜ்! நீயா, நீ எப்போது இங்கு வந்தாய்?"

"இப்பொழுதுதான்........."

"உன்னைப்பற்றித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன்?"

"என்னையா?"

"ஆம்; உனது துடுக்குத்தனம் வளர்கிறது. என்னால் சகிக்க முடியவில்லை"

அலிவர்திகான் மிகவும் கோபமாகப் பேசினான். ஸூராஜ் மெதுவாக நிதானத்தை வரவழைத்துக் கொண்டான்.

"தாதா..........."

"போதும், உனக்கு ஊர்மிளாவைத் தெரியுமா?"

"யாரது?"

ஸூராஜ் ஒன்றுந் தெரியாதவன் போல விழித்தான். அருகில் நின்றுகொண்டிருந்த நளினி 'களுக்' கென்று சிரித்து விட்டாள்.

"நளினி, நீ உள்ளே போ"

அலிவர் திகானின் அதிகாரக்குரலின் தொனி இது!

"காளி கோவிலில் நீ நடத்திய அக்கிரமத்தை அப் பெண்ணின் அப்பனே வந்து கூறிவிட்டான். என் மனம் நொந்து சொல்கிறேன். உனது விபரீதமான போக்குக்கு ஒரு முடிவுதான் எப்போது?"

"மன்னித்து விடுங்கள் தாதா! நடந்தது நடந்து விட்டது. இனிமேல் இப்படி நடக்க மாட்டேன்"

சிறிது நேரம் அங்கு அமைதி அரசோச்சியது. பிறகு அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு ஸுராஜுவின் குரல் புரட்சி செய்தது!

"இந்த வெள்ளைப் பேய்களை விரட்ட வழியே இல்லையா?"

"ஏன்?"

"அவர்கள் செய்கிற தொல்லை பொறுக்க முடியவில்லை"

அந்தக் காலத்தில் வெள்ளையர்களின் போக்கு உண்மையில் வெறுக்கத் தக்கதாகவே இருந்தது. அவர்களின் நாவாய் வலிமையினால் எதையும் செய்து விடலாம் என்று தவறுதலாக நினைத்துக்கொண் டிருந்தார்கள். அதனால்தான் இந்தியக் கப்பல்கள் வியாபார சம்பந்தமாகக் கடலில் சென்றால் வெள்ளையரது கப்பல்கள் அவைகளை வளைத்துக் கொள்ளும்; வழிப்போக்கை மாற்றித் தொல்லை தரும். முடிந்தால் கப்பல்களைச் சூறையிட்டு விடுவார்கள். எதிர்ப்புச் செய்தால் அந்த வணிகர்களையே கொன்று விடுவார்கள். பிரயாணிகள் கப்பல்கள் செல்லுமேயானால் வளைத்துக் கொண்டு, அழகிகள் கிடைத்தால் அபகரித்துச் செல்வார்கள். இப்படி நடந்து வந்தார்கள் ஆங்கிலேயர்கள். இதனை ஸுராஜ் கேள்விப்பட்டு உள்ளங் குமுறினான்.

மேலும் இரண்டு திடுக்கிடும் செய்திகள் அவனை உண்மையில் ஒரு குலுக்குக் குலுக்கி விட்டன! ஏனெனில் அவனது நெருங்கிய உறவினர் இபுராகீம் என்பவர் கப்பல் பிரயாணம் செல்கையில் கொல்லப்பட்டார். அவரது பிணம் மிதந்து வந்து ஹூக்ளியில் ஒதுங்கியிருந்தது. பீகம் என்ற பேரழகியை அவர்கள் தூக்கிச் சென்று விட்டார்கள். இதனைக் கேட்டதும்தான் ஸூராஜ் தன் தாதாவைச் சந்திக்க ஓடோடியும் வந்தான். ஆனால் அவரோ அவனது பழைய செயல்களை நினைப்பூட்டி ஆத்திரத்தைக் கொட்டியளந்தார். ஸூராஜ் மூச்சுவிடாமல் இந்த வெள்ளையரின் குரங்காட்டங்களை எடுத்துக் காட்டினான்.

"இதற்கெல்லாம் காரணம்—?" என்று கேட்டான் சுபேதார் கடைசியாக.

"அந்த வெள்ளைக் குண்டர்கள்தான் காரணம். அவர்களைக் கூண்டோடு பொசுக்க வேண்டும்"

"இருக்கட்டும். விசாரிப்போம். பொறு. பொறுத்திருந்து பார்ப்போம்"

"தாதா! இது ஆலோசனைக் குரியதல்ல. இப்பொழுதே கட்டளையிடுங்கள். அவர்களின் பண்டகசாலைகளைக் கொளுத்திப் படுசூரணமாக்குகிறேன்"

"ஆத்திரக்காரா, எத்தனை முறைகள்தான் நான் அவர்களின் வியாபார அவசியத்தை எடுத்துச் சொல்வது! மீண்டும் பழைய பல்லவியைப் பாடவா? ஓய்வில் அக்கிரமம், காரியத்தில் ஆத்திரம்—இதுதானா நீ கற்றுக் கொண்ட பாடம்?"

"சரி, தாதா நான் வருகிறேன்"

ஸூராஜ் - உத் - தௌலா இவ்வளவு சீக்கிரம் பணிந்து விடுவான் என்று அவன் தாதா எண்ணிவிட

வில்லை. ஏனெனில் அவன் வெள்ளையரிடம் அளவு கடந்த வெறுப்படைந்திருந்தான் என்பது சுபேதார் அறியாத செய்தியில்லை. ஆனாலும் ஸுராஜ் திடீரென்று பேச்சை முடித்துக்கொண்டான். அதைப்பற்றித் தவறுதலாக எதையும் சுபேதார் நினைக்கவில்லை, ஆனால் ஸுராஜ் வேறொரு பெரிய திட்டம் போட்டிருந்தாலொழிய இப்படி நடந்து கொண்டிருக்கமாட்டான். ஆகவே, இனி இவரிடம் பேசிப் பயனில்லை என்று வார்த்தைகளை வழக்கத்திற்கு மாறாகச் சுருக்கிக் கொண்டான்.

அவன் வெளியில் வந்தான். அவனுக்குக் கல்கத்தா எரிவதாக ஒரு பெரிய எண்ணம்—அதன் புகை வங்கம், ஒரிஸா, பீஹார் எல்லாப் பகுதிகளிலும் சுற்றி வளைத்துக் கொண்டது. ஏன் இந்தியாவிலே அந்தப் புகை நிரந்தரமாகிவிட்டது. மக்கள் "புகை, புகை......" என்று கூவினர்!......... சாம்பிராணித் தூபத்தின் நறுமணம் அவனுக்குச் சுயவுணர்ச்சியைத் தந்தது! .

கூட்டல் தொழில்

சோணிசந்த் ஊர்மிளாவின் கரம்பட்டதும் திரும்பிப் பார்த்தான். அவள் புன்னகை வழியும் வதனத்துடன் அவன் இரண்டு கரங்களைப் பற்றி இழுத்துக்கொண்டு பக்கத்து அறையினுள் நுழைந்தாள். அங்கு அழகாக அமர்ந்திருந்த பஞ்சணையில் உட்காரவைத்தாள். சோணிசந்த் விபரந் தெரியாமல் விழித்தான்.

"மாமா........."

"என்ன ஊர்மிளா, இன்று உனது செய்கைகள் புதிதாக இருக்கின்றன!"

"ஆமாம், ஆமாம்"

மெதுவாக அவன் கன்னத்தைத் தட்டினாள். பிறகு ஆசையோடு கிள்ளினாள். அவன் மரக்கட்டையல்லவே, கொஞ்சம் உணர்வு கட்டுத் தளர்ந்தது! இருந்தாலும் நிலைமையைப் புரிந்துகொள்ளவேண்டி நிதானமாகவே நடந்து கொண்டான். ஊர்மிளாவைச் சின்னஞ் சிறு வயதிலிருந்து பார்த்திருக்கிறான். தூக்கி வளர்த்த பாக்கியம் அவன் கரங்களுக்கு உண்டு! சுமந்து கிடந்த பெருமை அவன் தோள்களுக்கு உரிமை! ஆகவே அவள் எப்பொழுதுமே அவனோடு பழகுவாள். சிரித்து விளையாடுவாள். கேலியாகப் பேசுவாள். 'மாமா' என்று ஆசை ததும்ப அழைப்பாள். ஆனால் தொட்டுவிளையாடும் பழக்கம் அவளுக்கு வயது ஏற ஏறக் குறைந்து கொண்டே வந்து இப்பொழுது அறவே ஒழிந்து விட்டது. மேலும் அவளின் விளையாட்டு கன்னத்தைக் கிள்ளிக் கட்டிலுக் கிழுத்துத் தாம்பூலம் தரும் வரை வரும் என்று அவன் எதிர்பார்க்கவும் இல்லை. அதுவரை அப்படி நடந்ததும் கிடையாது. அந்த அனுபவம் புதிது அவனுக்கு!

"மாமா, உனக்குப் பாடஞ் சொல்லித் தரேன் இப்போது"

"என்ன பாடம்?"

"உனக்குக் கூட்டல் தெரியுமா?"

"தெரியும்"

"கூட்டல் மிகவும் கடினமா?"

"இல்லையே!"

"இரண்டும், இரண்டும் எவ்வளவு?"

"நான்கு"

சோணிசந்துக்கு ஆச்சரியம் அளவிற்கு மீறிவிட்டது. அவளது செயலும், பேச்சும் விபரீதமாகிக் கொண்டே

இருந்தன. அவனால் சமாளிக்க முடியாத அளவு போய்க் கொண்டிருந்தன! அவள் மேலுந் தனது கேள்விகளை வீசினாள்.

"கூட்டல் தொழில் கேவலமானதா?"

"தெருக் கூட்டலா, வீடு கூட்டலா?"

"இரண்டுமில்லை. ஒன்றையும் ஒன்றையும் சேர்த்து வைத்தல்"

"நல்ல தொழில்தான்"

"அப்பொழுது பெண்ணையும், ஆணையும் கூட்டிவைத்தல்"

"புண்ணியமான காரியம்!"

"முறைப்படி திருமணம் செய்யாவிட்டால்......?"

"அது அபசாரம்!"

சோணிசந்துக்கு இப்பொழுது விபரம் கொஞ்சம் தெரிந்தது. இருந்தாலும் முழுவதும் அவனால் கண்டு கொள்ள முடியவில்லை.

"மாமா, அன்று காளிகோயிலில் நீயுந்தானே இருந்தாய். கடைசியில் குதிரையில் வந்தானே அவனை உனக்குத் தெரியுமல்லவா? அவன்தான் மூடீன்கான்! அவனை எப்படியும் நான் சந்திக்க வேண்டும். உன் உதவிதான் எனக்கிருக்கிறது. எங்கள் இருவரையும் கூட்டிவைக்கும் புண்ணிய கைங்கரியத்தை உன்னிடத்தில்தான் ஒப்படைக்கிறேன் மாமா"

ஊர்மிளா இந்த வார்த்தைகளைக் கூறிக் கொண்டே அவன் அருகில் அமர்ந்தாள். தனது தங்கக் கரங்களால் அவனது இடையைச் சுற்றி வளைத்தாள். சோணிசந்த் இனியும் தயங்குவானா? ஆர்வந் ததும்பும் கண்களால் அவளை நோக்கினான்.

"ஊர்மிளா, உன் விருப்பப்படி நான் செய்கிறேன். ஆனால் நீ ஒரு உதவி செய்யவேண்டும். அங்கு நடக்கும் செய்திகளை—உரையாடல்களை—எனக்கு அவ்வப்பொழுது தெரிவிக்க வேண்டும். ஆமாம், என்னை மறந்து விடக் கூடாது!"

"ஆகட்டும், என் செல்ல மாமா!"

சோணிசந்த் ஏற்றுக்கொண்ட பெருங் காரியத்திற்காக அவனது கன்னத்தில் ஒரு முத்தம் அச்சாரமாகக் கிடைத்தது! அச்சாரந் தந்த அந்த மாடப் புரு அத்தோடு பறந்து விட்டது! சோணிசந்த்தின் கனவு கலைந்து விட்டது.

அவன் அந்த அனுபவத்தில் கண்ட அரைகுறை இன்பத்தோடு, 'காத்திருப்போம், காலம் மாறும்' என்று கவிதை பாடிக் காலங் கடத்த முடிவு செய்தான்.

டில்லி செல்வோம்!

மூடீன்கான் அந்தக் கடிதத்தை ஆர்வத்தோடு பிரித்தான். சோணிசந்த் யாரென்று தெரிந்திருந்தால் அவனுக்குக் கடிதத்தைப் பிரிப்பதற்குள் விபரந் தெரிந்திருக்கும். ஆனால் அவன் யாரென்று தெரியாது. மேலும் அவன் எதையும் சொல்லாமல், இந்தக் கடிதத்தைத் தங்களிடம் ஒரு அழகிய பெண் சேர்க்கச் சொன்னாள் என்று மட்டும் கூறிவிட்டு விடையைக்கூட எதிர்பார்க்காமல் வெளியேறி விட்டான்.

அவன் பிரித்தான்......

ஆசைக் காதலரே!

தங்கள் அன்பு முத்தங்களுக்கு ஏங்கித் தவிக்கிறேன். என்னை உங்கள் நண்பர் மிருகமாக்கினர். நீங்கள் என்னை ஒருவன தேவதையாக்க வேண்டும்! ஆம்; அதே க்ாளிகோயிலில் ஈஸ்வரியின் முன்னிலையில் நம் காதற் பொங்கலைப் படைத்து எடுத்துப் பயபக்தியோடு உண்ண வேண்டும். என் உள்ளந் துடிக்கிறது. மறுக்காமல் நாளை மாலை ஆறு மணிக்குக் காளி கோயிலில் என்னைச் சந்தியுங்கள்.

தங்கள் காதலை நாடிநிற்கும்
ஊர்மிளா.

இதனைப் படித்து முடித்ததும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. விபரீதமாகக்கூடப் பட்டது! ஒருவேளை இதில் ஏதேனும் சூழ்ச்சி இருக்குமோ, அமீன்சந்தின் நரித்தனம் இதிலும் புகுந்து மறைந்திருக்குமோ என்று கருதினன். எதற்கும் ஸுராஜுவைக் கலந்தே இதில் இறங்கவேண்டும் என்றுமட்டும் உறுதியாக முடிவு செய்து கொண்டான்.

அதே நேரத்தில் ஸுராஜ் வந்தான்!

''மூடன், காரியம் காய்தான்''

''தாத்தா என்னதான் சொன்னர்?''

''யோசிக்கிருராம், பொறுத்திருந்து பார்க்க வேண்டுமாம்''

''இந்த வெளிநாட்டு வெள்ளையரிடம் அவருக்கு ஏன் அவ்வளவு காதல்?''

"அதுதான் எனக்கும் விளங்கவில்லை"

மூடீன்கானுக்கு உடனே அந்தக் காதல் குழப்பத்தைச் சொல்லிவிடவேண்டும் என்ற ஆசை! அதற்காகவே அவன் தக்க சமயம் பார்த்தான். ஆகவே உடனே சொல்லிவைத்தான் இந்த வார்த்தைகளை—

"எனக்கு இதுவே விளங்கவில்லை!"

"எதுவே புரியவில்லை?"

மூடீன் அந்தக் கடிதத்தை அவனிடம் காட்டினுன். ஸுராஜ் அதைப் படித்துப் பார்த்து விட்டுச் சிரித்தான்.

"இதிலே ஒரு பெரிய படுகுழி தயாரிக்கப்படுகிறது. நம்மிருவரையும் பிரிக்க அமீன்சந்த் தன் மகளையே பணயம் வைக்கிருன். தெரிகிறதா? பாலம் போடமுடியாத அளவு நம்மிடையே பிளவை உண்டுபண்ண முயற்சி செய்கிருன்"

"அவன் கிடக்கிருன் பைத்தியக்காரன்! ஊர்மிளாவைப்போல ஆயிரம் பேர் எனக்குண்டு. நீ அவசியம் போய் அவளைத் தேவதையாக்கு, நீயும் தேவனுகு! ஆனல் பறந்துமட்டும் சென்று விடாதே. இங்கு வந்து சேர்ந்து விடு"

ஸுராஜ் கேலியோடு பேசினுன். ஆம்; அரசமாளிகையில் காளிகோயில் நிகழ்ச்சிகள் ஆயிரமாயிரம் நடக்கும். அவை அங்கு வேடிக்கையாக நடைபெறும் விளையாட்டுப் பந்தயங்கள்! ஸுராஜ் இந்த விளையாடல்களில் எத்தனையோ முறைகள் கலந்துகொண்டிருக்கிருன். வெற்றிதான் அவனுக்கு! வீழ்ச்சியென்ற பேச்சே கிடையாது! ஆகவே ஊர்மிளாவை அன்றைய விருந்திலே கிடைத்த மதுக்கிண்ணமாகவே மதிப்பிட்டான். அடுத்த நாள் வேறு கிண்ணந்தான் அவன் தேடுவான். அமீன்சந்தின் எண்ணம் மூடீன் கூறியதுபோல இருந்

தால் அவனுக்கு நிச்சயம் ஏமாற்றந்தான் பரிசிலாகக் கிடைக்கும்.

ஸூராஜூவுக்கு மனைவி யில்லையா? இருக்கிறாள் தங்க விக்கிரகம்போல! அந்தப்புரத்திலே அழகு தேவதைபோல இருக்கிறாள்! அவள் இல்லாமல்தான் இத்தனை திருவிளையாடல்களும்!

"ஸூராஜ், அடுத்தபடி நாம் செய்யவேண்டியது என்ன?"

"ஆம், நாம் டில்லி செல்ல வேண்டியதுதான்"

"போய்...........?"

"பாதுஷாவின் உத்தரவுபெற்று இந்த வெள்ளைய வெறி நாய்களை மண்டையிலடிக்க வேண்டியதுதான்"

"சரி செல்வோம், தாதா தடைசெய்தால்......?"

"அவருக்கு நமது பிரயாணத் திட்டமே தெரியக் கூடாது. வங்கத்தின் எல்லையைத் தாண்டிய பிறகே இந்தச் செய்தி அவரது செவிகளுக்கு எட்டவேண்டும்"

"அங்குச் சென்றால் அவர் மட்டும் எப்படி ஒப்புவார் நமது படையெடுப்புத் திட்டத்திற்கு?"

"நிலைமையை நேர்மையாக விளக்கிடுவோம்"

"தாதாவே மறுத்துவிட்ட பிறகு......"

"தாதாவின் ஆணையின் பேரில்தான் வந்திருக்கிறோம் என்று பச்சையாகப் புளுகுவோம்"

நண்பர்கள் டில்லி செல்லத் திட்டமிட்டு விட்டார்கள். அவர்கள் எண்ணியதை முடிக்காது விட்டுவிடுகிற பழக்கம் இல்லை. ஆனால் இதுவரை அவர்கள் திட்டத்திற்கு அடிப்படை அநேகமாக வேல்விழிகளாகத்தான் இருப்பது பழக்கம்! ஆனால் இப்பொழுதோ ஒரு பெரிய

அரசியல் சூறுவளியே அடிப்படையாக இருந்தது. அவர்கள் வெள்ளையர்களின் கொட்டத்தை எப்படியும் அடக்கிவிட வேண்டும் என்று திட்டமிட்டார்கள். காரணம் அவர்களின் செயல்கள் மட்டுமல்ல, ஏதோ ஒரு வகையான வெறுப்பு அவர்கள் மனத்திலே வேரூன்றி விட்டது! அதனை அகற்ற அவர்களால் முடியவில்லை. ஆகவேதான் எந்த முறையிலாவது எதிர்த்துப் போராடிப் பார்த்து விடுவது என்று முடிவுசெய்து அலிவர்திகானிடம் சென்றதில் முயற்சி தோல்வியடைந்தது. இப்பொழுது டில்லி சென்று பாதுஷாஆலத்தின் துணைபெறலாம் என்ற நம்பிக்கையில் இருவரும் மறுநாளே தங்கள் பயணத்தை இரகசியமாகத் தொடங்க முடிவு செய்துவிட்டார்கள்.

மூடன் டில்லியை நினைப்பதற்கு முன்னுலே காளி கோயில் நினைவிற்கு வந்தது. காளிகோயில் அவனுக்கு ஏதோ ஒரு இன்பக் களரியாகவே தோன்றியது!

காளி கோயிலில்!

அந்த உடைந்த காளிகோயிலில் ஒரு அகல்விளக்கு மட்டும் எரிந்துகொண்டிருந்தது! அந்த விளக்கு மிக மங்கலாகத்தான் ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்தது! அந்த ஒளியில் காளி மட்டும் காட்சியளித்தாள்; பக்தர்கள் இருந்து தரிசிக்கவேண்டிய இடங்களோ இருண்டு கிடந்தன.

அந்த இருட்டில் இரண்டு பெண்கள் மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தனர். அவர்கள் முகம் நன்ருகத் தெரியவில்லை. இருந்தாலும் பழகிய குரல்கள்தாம்!

"நளி, அவர் வருவாராடி?"

"போடி உலகந் தெரியாதவளே, தேன் குடிக்க ஈ வருமா என்று கேளேன்!"

"தேனில் நஞ்சிருக்கிறது என்று எண்ணிக்கொண்டால்......?"

"நக்கிப் பார்த்தாவது மடிவோம் என்றுதான் வரும்"

அவர்கள் இருவரும் வேறு எவருமில்லை, ஊர்மிளா, நளினி ஆகிய இருவருமேதான். அங்கே முடீன்கானுக்காகக் காத்து நின்றனர்! அவன் வருவானோ, வரமாட்டானோ என்ற ஐயத்தால் ஊர்மிளா ஏங்கிக்கொண்டிருந்தாள்! நளினியோ அவளைக் கேலி பேசிக்கொண்டே உண்மையை எடுத்து ஒலிபரப்பினாள். அந்த நான்கு விழிகளும் இருட்டையும் விழித்துக்கொண்டு துளாவிக்கொண்டிருந்தன. கொஞ்ச நேரத்தில் அந்த விழிகளில் புத்துணர்ச்சி தோன்றியது! காரணம், குதிரையடியோசையைத் துப்பறிந்து கேட்ட செவிகள் தந்தியில் சொல்லிய செய்தியேயாகும்!

ஆம், உண்மையிலேயே முடீன்கான் தன் குதிரை மீதூர்ந்து அங்கு வந்துகொண்டிருந்தான். அந்த இருட்டில் ஏதும் தெரியவில்லை. காளிகோயில் மட்டும் கண்ணில் பட்டது. அங்கு எவர் இருக்கின்றனர் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. குதிரையை விட்டுக் கீழிறங்கிக் கோயிலை நெருங்கினான்.

"வாருங்கள்"

இருட்டில் கேட்ட குரல் அது.

உற்றுப் பார்த்தான். ஊர்மிளா நின்றுகொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் இன்னொரு பெண் நின்றுகொண்டிருப்பதையும் உணர்ந்தான்.

"ஊர்மிளா, இவள் யார்?"

"என் தோழி நளினி, அரசாங்கத்தில்தான் வேலை. இவளை முழுக்க முழுக்க நம்பலாம்"

"அப்படியானால் சரி, என்னை ஏன் அழைத்தாய்?"

"மலரை மங்கை ஏன் பறிக்கிறாள்?"

"சூடிக் கொள்ள!"

"தங்களை ஊர்மிளா அழைத்ததும் கூடிக் களிக்கத் தான்!"

"இது முறையா, தோழனின் காதலை மொண்ட தோகையாள் நீ"

"மன்னிக்க வேண்டும், அது மிருகக் காதல்"

ஊர்மிளா இப்படி உரையாடலை நீட்டிக்கொண்டிருக் கையில் நளினியைப் பார்த்தாள். அவள், பார்வையின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டதைப் போல விலகினாள்.

"நான் இடைஞ்சலாக இருக்கமாட்டேன். இந்த மண்டபத்தினுள்ளிருக்கிறேன். போகும்போது மட்டும் கூப்பிட மறந்து விடாதே!"

ஊர்மிளா இதுவரை எட்டி நின்று பேசினவள் அவனைத் தொட்டிழுத்துப் பேசத் தொடங்கினாள். கோயிலின் வெளித் தாழ்வாரத்தில் அமர்ந்திருந்தனர். ஊர்மிளா இன்பத்தைக் குழைத்து வழித்து உதட்டுப் பாலடையால் அவனுக்கு ஊட்டிவிட்டாள். அவன் உண்டு மயங்கினான். இன்ப வேட்டை! காலம் போனது தெரியவில்லை.

ஆடைகளைத் திருத்திக்கொண்டிருந்த ஊர்மிளாவைத் திரும்பவும் இழுத்துத் தன் மடியில் போட்டுக்கொண்டு கொஞ்சுதலாக முடீன் சொன்னான்.

"இது ரகசியம்: இன்று இரவு பன்னிரண்டு மணிக்கு நானும் ஸுராஜுவும் டில்லி செல்கிறோம். ஒரு முக்கிய மான செய்தி. அது உனக்குத் தேவையில்லை. திரும்பி

வந்துவிட்ட பிறகு உன்னை அரைக்கணமும் பிரிய மாட்டேன்''

முடீன் அவளது மலர்போன்ற முகத்தை உற்றுப் பார்த்தான். பிறகு குங்கும உதடுகளில் தனது ஹூக்காப் புகையால் கருத்த உதடுகளைச் சேர்த்தான். ஒட்டிய உதடுகள் பிரிவதற்கே விரும்பவில்லை போலும்! இந்தக் களியாட்டத்தைப் பற்றிக் கடுகளவும் கவலைப்படாமல் நளினி அவர்கள் பேசிய வார்த்தைகளை மட்டும் மிகவும் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டாள். 'டில்லி செல்கிறோம்' என்ற சேதி கேட்டதும் அவள் மனத்திற்குள்ளாகவே சிரித்துக்கொண்டாள். ஊர்மிளாவோ வானத்திலே பறந்துகொண்டிருந்தாள். முடீன் காலம் ஏன் கருணையில்லாமல் இப்படி வேகமாக ஓடுகிறது என்று சபித்துக்கொண்டிருந்தான். ஆனால் இந்த மூவருக்குந் தெரியாமல் காளியின் சிலைக்குப் பின்னால் ஒருவன் ஒளிந்திருந்தான் என்பது யாருக்குத் தெரியும்!

கொலைகாரக் கூட்டம்

அமீன்சந்த் தனது இருப்பிடத்தில் அமர்ந்தபடி ஒரு வயோதிகப் பெரியவரிடம் ஏதோ இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் சோணிசந்த் வெகு வேகமாக ஓடிவந்தான். அமீன்சந்த்தை நெருங்கி ''ஒரு அவசரமான செய்தி'' யென்றான். உடனே அவன் எழுந்து அடுத்த அறையில் புகுந்தான்.

அப்பொழுது அங்கிருந்த நாழிகை வட்டில் இரவு மணி பத்தென்று சொல்லிக்கொண்டிருந்தது!

''இன்னும் இரண்டே மணி......''

''எதற்கு ?''

"ஸ்வராஜ்யம், முடனும் டில்லி புறப்பட !"

"என்ன உளறுகிறாய் ?"

"நான் உளறவில்லை. காளிகோயிலில் சிலையின் பின்னாலிருந்து கேட்டேன். ஊர்மிளாவுடன் உறவாடு கையில் முடன் உதிர்த்த இரகசியம் இது"

"சரி, அப்படியானால் அவர்களை நீ பின்தொடர்ந்து போ"

"போய்........"

"தக்க சமயத்தில் என் கையொப்பத்துடன் கடிதத்தைப் பாதுஷாவிடம் சேர்ப்பித்துவிட்டுத் திரும்பு"

சோணிசந்த் கிளம்பி விட்டான். அந்தச் சமயத்தில் நளினியும் அங்கு வந்தாள்.

"ஊர்மிளா எங்கே ?"

"இப்பொழுதுதான் உள்ளே போகிறாள். இது தக்க சமயம் நமது திட்டம் வெற்றிபெற"

"ஏன் ?"

"நம் விரோதிகள் இருவரும் டில்லி புறப்படப் போகிறார்கள். அவர்கள் இல்லாத சமயத்தில் காரியத்தை முடித்துவிடலாம்"

"அதற்காகத்தான் வைத்தியர் வரப்பிரசாதருடன் பேசிக்கொண்டிருந்தேன். வா, அவசியம் போகலாம்"

வைத்தியர் வரப்பிரசாதர் மிகவும் வயது முதிர்ந்த கிழவர். அவரது நரைத்த தாடியும் தோல்திரங்கிய தோற்றமும் பார்ப்பவர்களின் உள்ளத்தைக் கிளறும் ; அவரது அனுபவம் பெரிது என்று சொல்லத் தோன்றும். அவர் அரசாங்க வைத்தியர்களிலே வயதானவர், அதே நேரத்

தில் பேர் பெற்றவரும் அவரேதான்! அவர் அமீன்சந்த்துக்கு நெருங்கிய நண்பர். மேலும் மத நம்பிக்கை அதிகம் உள்ளவர். முகம்மதிய மதத்தில் சற்று வெறுப்புக் கொண்டவர்.

"வைத்தியரே, நீங்கள் ஒரு தேசத்தொண்டு செய்ய வேண்டும்"

"என்ன அது?"

"இந்துமதம் செழிக்க வேண்டும்"

"ஆமாம்"

"ஆகவே, அலிவர்திகானின் அடக்குமுறை ஒழிய வேண்டும்"

"கிளர்ச்சி செய்யவா, இந்தக் கிழவனைத் தூண்டுகிறீர்?"

"மன்னிக்க வேண்டும், மனமிருந்தால் மார்க்கம் உண்டு. ஒரு மருந்து, பலநாள் வேலை செய்து மெல்ல மெல்லக் கொல்லும் நஞ்சு தேவை"

"கொலைகாரக் கூட்டத்துடன் என்னைச் சேரவா அழைக்கிறீர். அது முடியாது!"

"உமது ஒப்பற்ற மதம் பாழாகலாம். ஒரு தனி மனிதன் சாகக்கூடாதோ?"

கிழவர் சிந்தனையிலாழ்ந்து விட்டார். அமீன்சந்த் அவரது முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். நளினியின் உணர்ச்சி எப்படிப்பட்டது என்று நம்மால் வருணிக்க முடியவில்லை.

"நான் தருகிறேன்..........."

"உங்கள் பெயர் வெளியில் தெரியாது!" என்று முடித்துவிட்டான் அந்த அவசரக்காரன்!

"காரியம் எப்படி முடியும்?"—கிழவர் கேட்டார்.

"அதற்கு நானிருக்கிறேன்" என்ருள் நளினி.

வைத்தியர் வரப்பிரசாதர் மருந்துப் பெட்டியை எடுத்துப் பிரித்தார். அதற்குள் ஒரு பெரிய ஆராய்ச்சியே செய்து ஒரு சிறு பொட்டலத்தையெடுத்து நளினி கையில் கொடுத்துவிட்டு அவள் காதோடு காதாக எதையோ சொன்னர். அவள் தலையை அசைத்தாள்.

பிறகு வைத்தியர் விடை பெற்ருர். அவருக்கு ஒரு பை பரிசாகத் தரப்பட்டது. நளினியும் அரண்மனையை நோக்கி நடந்துவிட்டாள். அமீன்சந்தின் மனம் குழம்பிக் கொண்டிருந்தது. ஏனென்று அவனுக்குப் புரியவில்லை. கொலேகாரக் கூட்டம் என்று வெளிக்குத் தெரிந்துவிட்டால் அவன் நிலே என்னவாகும் என்று எண்ணியிருப்பான் போலும்! அதனுல்தான் அவன் முகத்தில் சாவுக் களே கணத்திற்குக் கணம் தோன்றி மறைந்தது!

"திருடன், திருடன்............"

ஊர்மிளா உள்ளுக்குள்ளிருந்து கூவினுள். அமீன் சந்த் ஓடினுன். ஆனுல் அந்தத் திருடனேக் கண்டு கொள்ள முடியவில்லே! இந்த நிகழ்ச்சி அவனது பீதியை மேலும் வளர்த்தது! வந்தவன் யாராக இருக்க முடியும் என்று அவனுல் கண்டுகொள்ள முடியவில்லே.

பாலேந்திய பாவை

அலிவர்திகான் பஞ்சணேயில் உட்கார்ந்தபடியே இருந்தான். நளினி அப்பொழுதுதான் உள்ளே நுழைந்தாள்.

"இந்நேரம் வரை என்ன செய்தாய் நளினி?"

"அப்பாவைப் பார்த்துவிட்டு வரலாம் என்று சென்றிருந்தேன். அந்தச் சின்னக் குட்டி ஊர்மிளா என்னைக் கட்டிக்கொண்டுவிட மாட்டேன் என்று தொந்தரவு செய்தாள். அதனுல்தான் இவ்வளவு நேரம் !"

"சரி, அந்தப் பாலை எடு"

"இன்னும் பாலும் அருந்தவில்லையா ?"

நளினி பாலைப்போய் எடுத்தாள். திடுக்கிட்டவள் போல நின்ருள்.

"பால் ஆறிவிட்டதே. சூடாக்கி வருகிறேன்" என்ருள் அவள்.

"வேண்டாம், இப்படிக் கொண்டுவா"

"இல்லை, இல்லை, இதோ அரை நொடியில்" என்று ஓடினுள் நளினி.

உள்ளே சென்ற நளினி பாலைக் கொதிக்கவைத்தாள். அதனை இரண்டு வெள்ளிக் கோப்பைகளில் பகிர்ந்து கொண்டாள். ஒரு கோப்பையில் கொடுத்த பொடியைத் தூவிவிட்டாள். அதனைத் தூவும்போது அவள் முகத்தைப் பார்த்திருக்கவேண்டுமே ! பயம் என்ற உணர்ச்சிக்கு எவ்வளவு வலிவு ? முகத்தையே ஆயிரங்கோணலாகத் திருப்பி விடுகிறதே !

இரண்டு கோப்பைகளையும் வெளியில் கொண்டு வந்தாள்.

"இந்தாருங்கள்..........."

"நீ மட்டும் ஏன் நிற்கிருய் ?"

கிழவனுக்குக் காமவுணர்ச்சி வராது. வரக்கூடாது. வந்துவிட்டால் அதன் விளைவு விபரீதமாகத் தானிருக்கும். அவை அத்தனையையும் எடுத்துச் சொல்வதென்பது

இயலாது, முயற்சி செய்வதும் முட்டாள்தனம்! ஆகவே அளவோடு நிறுத்தி விடுவதுதான் நம் கடமை.

நளினி அவன் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். பிறகு அவள் மடி அவனுக்கு மஞ்சமாகிவிட்டது. கோப்பையைத் தான் வாங்கி அவன் உதட்டில் பதித்தாள். அவன் குழந்தைபோல அடம் பிடித்தான்! பிறகு இருவரும் போட்டிப் பந்தயம் வைத்தனர். யார் கோப்பை முதலில் காலியாகிறது என்று பந்தயம் வைத்தனர். கோப்பைகள் காலியாயின. ஆனால் பந்தயத்தையே அவன் மறந்து விட்டான். அவன் நாக்கில் ஏதோ புண் ஏற்பட்டது போன்ற உணர்ச்சி தென்பட்டது. தொண்டையிலும் ஒருவிதமான வலி ஏற்பட்டது. இவை அத்தனையையும் மறைத்துவிட்டது அவளது அணைப்பு! மறைப்பதென்ன மறந்துவிடவே சொல்லிக்கொண்டிருந்தன அவளது ஆர்வ மிக்க முத்தங்கள்! கிழவனுக்குக் குமரியிடமிருந்து இவ்வளவு ஆர்வமாக இன்ப விருந்து கிடைக்குமா? பணத்திற்காகப் பசப்பலாம், பதவிக்காக மயக்கலாம். ஆனால் நளினிபோல உண்மையாகவே ஆசை நரம்புகளை மீட்டி விட யாரால் முடியும்?

அவன் மயக்கம் வருவதுபோல உணர்ந்தான். உடனே அவன் அவள் மடியில் தலையை வைத்துப் படுத்துவிட்டான். பணிப்பெண்ணாக இருந்தால் எட்டியிருந்து விசிறி விடுவாள். இவள்தான் பட்டத்தரசியை விடப் பன்மடங்கு உரிமையுள்ள பாராளும் பிராட்டியாகிவிட்டாளே! அவனது உடைகளைக் களைந்து விட்டு விசிறிகொண்டு தென்றலைக் கூப்பிட்டாள். வியர்வையால் நனைந்த முகத்தைத் தனது பட்டுக் கைக்குட்டையால் துடைத்தாள். கிழவன் இன்பவெள்ளத்தில் மிதப்பதாக எண்ணிக் கொண்டான். அவன் உடலில் நஞ்சேறி விட்டதை அறியவில்லை. பாவம்!

அவனை எப்படி உறங்கச் செய்வது என்று எண்ணினாள். அவனைத் தழுவிக்கொண்டு தானும் உறங்குவது

போலப் பாசாங்கு செய்தாள். அவனும் அவளை மார்புறத் தழுவிக்கொண்டான். அதற்குமேல் அவனுல் எதையும் செய்யமுடியவில்லை! நஞ்சின் வேலை நாடி நரம்புகளில் அப்பொழுதுதான் தொடக்க விழா செய்துகொண்டிருந்தது!

கொஞ்ச நேரத்தில் இருவரும் தூங்கியேவிட்டனர். பிறகு பால் கிண்ணம் உருண்ட சத்தத்தில் நளினி விழித்துக்கொண்டாள். எதிரில் ஒரு வீரன் நின்றுகொண்டிருந்தான். அவளால் பேசமுடியவில்லை; நாவெழ மறுத்துவிட்டது.

உண்மை ஊழியன்

காளி கோயில் வழியே முடீன்கான் குதிரையைச் செலுத்தியதைக் கண்ட அஜிஸ்கான் வியப்படைந்தான். ஏனெனில் அவ் வழியில் அவன் வெகு நேரமாக நின்றுகொண்டிருந்தான். அந்தக் காளிகோயிலுக்குப் பூசைக்கு யாரும் விரும்பிப் போவதில்லை. எப்போதோ ஒரு சமயம் அங்கு கூட்டமிருக்கும். அதுவும் பகலில் தானிருக்கும். இரவு நேரத்தில் யாரும் இருக்கமாட்டார்கள்.

அன்று சோணிசந்த் சென்ருன் முதலில்; அவனை அஜிஸ்கானுக்கு நன்ருகத் தெரியும். அஜிஸ்கான் ஒரு சாதாரணமான சிப்பாய். அதுவும் முடீன்கானின் சிபார்சினுல் வேலையேற்றவன். ஆகவே முடீன்கானைத் தெய்வமாக வழிபடுவான். அவன் வாடிக்கையாக மாலை வேளைகளில் அந்தக் காட்டிற்குள் வருவது வழக்கம். வேலை நேரமாக இல்லாவிட்டால் வெகு நேரம் அங்கேயே தங்கிவிடுவான். பொழுது போக்குக்கு மட்டுமல்ல, ஏதேனும் திருட்டு, கொலை முதலியவை நடத்தத் திட்டமிட வசதியான இடம் அதுதான். ஆகையால் அவனுக்குத் துப்புக் கண்டுகொள்ளவும் வசதியிருந்தது.

சோணிசந்த் அடிக்கடி காளி கோயிலுக்குப் போவதே அதிக சந்தேகத்திற்குக் காரணமாக அமைந்தது. மேலும் அமீன்சந்த் பற்றிக் கொஞ்சமும் நல்லெண்ணம் கிடையாது அவனுக்கு. அவர்கள் இருவரும் ஏதோ சூது செய்கிறார்கள் அரசாங்கத்திற்கு எதிராக, என்று மீட்டும் உறுதியாக நம்பியதால் அவனைக் கண்டதும் அவனைப் பின் தொடரவேண்டும் என்று ஆசைப்பட்டான். சிறிது நேரத்திற்குள்ளாகவே இரண்டு பெண்கள் வேறு அந்த வழியில் நுழையவே சந்தேகம் வளர்ந்தது. பிறகுதான் மூடன் வந்தான். அங்கு என்ன நடக்கப் போகிறது என்று அறிய ஆவலாக இருந்தாலும் மூடன் கண்டுகொண்டால் ஒரு வேளை கோபிப்பானோ என்று பயந்துகொண்டு அங்கிருந்த மரத்தில் ஏறி ஒளிந்துகொண்டான். இரவு பத்துமணி வரை யாருமே திரும்பவில்லை. பிறகுதான் மூடன் குதிரை வேகமாக வந்தது. அடுத்து அந்தப் பெண்கள் திரும்பி வந்தனர். கடைசியில் சோணிசந்த் வந்தான். அஜிஸ் அவனைத் தொடர்ந்தான். அவன் நேராக அமீன் சந்தின் மாளிகைக்குச் சென்றான். அஜிஸ் அவனுக்குத் தெரியாமல் அவனைத் தொடர்ந்து வந்தான்.

வெளிவாயிலில் இருட்டு சூழ்ந்திருந்ததால் அஜிஸ் நுழைவதற்கு எளிதாக இருந்தது. மெதுவாக உள்ளே நுழைந்து ஒரு கதவிடுக்கில் மறைந்துகொண்டான். அப்பொழுதுதான் முன்னரே திரும்பிவந்த பெண்கள் உள்ளே நுழைந்தனர். நளினி பக்கத்திலிருந்த அறையில் நுழைந்ததும் அஜிஸ் ஊர்மிளாவைப் பின்பற்றி அவள் சென்ற அறைக்குள் நுழைந்துவிட்டான். நல்ல வேளை அவள் திரும்பவே இல்லை!

கூடத்தில் வைத்தியர் வரப்பிரசாதருடன் அமீன்சந்த் பேசிய வார்த்தைகள் தெளிவாகவே அவன் காதுகளில் விழுந்தன. அவனால் அந்தச் சதித் திட்டத்தைக் கேட்கவும் சகிக்கவில்லை! உடனேயே பாய்ந்து கத்தியால் குத்திக் கொன்று விடலாமா என்று ஆத்திரப்பட்டான். சமயம்

சரியில்லை யென்று தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டான். இந்த நேரத்தில் ஊர்மிளா இருட்டிலேயே தன்னுடைகளைக் களைந்துவிட்டு இரவு உடை உடுத்திக் கொண்டே ஒரு மெழுகு வர்த்தியைக் கொளுத்தினுள். அஜிஸின் நிலைமை மிகப் பயங்கரமாகிவிட்டது. அவன் ஒரு கதவோரத்தில் நின்றுகொண்டிருந்தான். அந்த இடமோ அவன் உடல் முழுவதையும் மறைக்க முடியாத அளவு சிறிதாகவே இருந்தது.

எதற்கும் தயாராக இருப்போம் என்று தனது பிச்சுவாவை உருவிக் கையில் பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான். அந்தக் கதவிடுக் கருகே ஒரு மேஜையிருந்தது. அதில் ஒரு பூந்தொட்டியும் நீர்ப்பானையும் இருந்தன. தண்ணீர் முகந்தருந்த வந்த ஊர்மிளா அங்கே அஜிஸைப் பார்த்துவிட்டாள். அப்படியே திகைத்துவிட்டாள். அரைகுறையாக உடுத்திக்கொண்டிருந்த ஆடையைச் சட்டென்று இழுத்து மூடிக்கொண்டே கூவ எத்தனித்தாள்.

"ஒரு துளி சத்தம் வெளியில் கிளம்பினுல் ஆயிரந் துளி இரத்தம் குடித்துவிடும் இந்தக் கத்தி"

"நீ யார்?......"—நெஞ்சுக்குழி விம்மிப் புடைக்க அவள் பயத்தோடு போராடிக் கொண்டே அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தாள்.

"நீ எதையும் என்னிடமிருந்து தெரிந்துகொள்ள முடியாது. ஆனுல் உன்னைப்பற்றி நான் தெரிந்துகொள்ள வேண்டும். கேட்கும் கேள்விகளுக்குப் பதில் உடனுக்குடன் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் பிச்சுவா உன் இதயத்தில் விளையாடும்!"

"சரி, சொல்கிறேன்........." என்று மிரண்ட பார்வையோடு குளறினுள்!

"நீ யார்?"

"நான் அமீன்சந்தின் ஒரே மகள் ஊர்மிளா"

"முடீன்கானுக்கும் உனக்கும் என்ன தொடர்பு ?"

"அவர் எனது ஆசைக் காதலர்"

"உன்னுடன் வந்த பெண் யார் ?"

"அவள் நளினி. சுபேதார் அலிவர்திகானின் அந்தரங்கப் பணிப் பெண்"

"முடீன் உன்னிடம் என்ன சொல்ல இன்று அழைத்தார் ?"

"அவர் என்னை அழைக்கவில்லை. நான்தான் அவரை அழைத்தேன். அவர் வந்தார். இன்று டில்லி செல்வதாக மட்டும் சொன்னார்"

"சரி, உன் படுக்கைக்குப்போய் அசையாமல் உட்கார். நான் இந்த இடத்திலிருந்து வெளியேறுகிற வரை கூவினல் உன்னைக் கொன்றுவிடுவேன்" என்று எச்சரித்துவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரு திறந்த சாளரம் தெரிந்தது. அதன் வழியாகப் பார்த்தான். வெளிமதிலையடைந்துவிடலாம் என்று தெரிந்தது. அதன்மீது ஏறினன்.

"திருடன், திருடன்........." என்று கூவினள் ஊர்மிளா. அமீன்சந்த் வந்தும் ஆள் யாரென்று மட்டும் கண்டுகொள்ள முடியவில்லை !

அஜிஸ் இந்தச் செய்தியை முடீனிடம் தெரிவிக்க வேண்டும் என்ற அவாவுடன் வெகுவேகமாகச் சென்ருன். முடீனைக் காண முடியவில்லை. பிறகு ஸுராஜுவின் மாளிகையை நாடிச் சென்ருன். அவனும் கிடைக்கவில்லை. இந்தச் சங்கடமான நிலைமையில் என்ன செய்வதென்று புரியவில்லை. கடைசியில் தானே அந்தப்புரம் சென்று நஞ்சு கலந்த பாலோ, பானமோ இருந்தால்

ஊற்றிவிடுவது என்று முடிவு செய்துகொண்டு கிளம்பினான்.

அந்தப்புரத்தில் எங்கும் நிசப்தம். மெதுவாக அலிவர்திகானின் பள்ளியறையினுள் நுழைந்தான். அவன் நெஞ்சு 'திக், திக்......' என்று அடித்துக்கொண்டது. அவன் கண்ட காட்சியும் விகாரமாகத் தோன்றியது. அலிவர்திகானும், பணிப் பெண் நளினியும் கட்டித் தழுவியபடியே உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

பால் கிண்ணங்களை மெதுவாக எடுத்தான். ஒன்றில் மட்டும் நஞ்சுவாடை வீசிற்று. ஐயோ.........அது கை தவறிக் கீழே விழுந்துவிட்டது! நளினி விழித்துக்கொண்டாள். எதிரில் அந்த வீரனைக் கண்டதும் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. மிரள, மிரள விழித்தாள்.

"அடி நயவஞ்சகி, நஞ்சு கொடுத்துவிட்டாயே!" என்றான் அழுத்தந் திருத்தமாக!

"இந்நேரத்தில் இங்கு வர நீ யார்?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"நான் ஒரு உண்மை ஊழியனடி, பசப்புக்காரி" —அஜிஸ் ஆத்திரமாகப் பேசினான்.

நளினி எழுந்து வந்தாள். "நீ இங்கு வந்ததே தவறு என்பதை யுணராமல் நின்றுகொண்டிருக்கிறாய். ஓடிவிடுவதே நல்லது" என்று உபதேசம் செய்தாள். அவன் நகரக்கூட இல்லை. "உனது நஞ்சு வேலை செய்துவிட்டதா, சுபேதார் இறந்துவிட்டாரா?" என்று கேட்டான். "நாளைக் காலையிலே வந்து சொல்லு" என்று ஒய்யாரம் பேசினாள். அவளுக்கு உள்ளுக்குள் பயமாக இருந்தது. மேலும் யாருக்கும் தெரியாது என்று எண்ணிக்கொண்டிருந்தது பொய்யாகிவிட்டதே என்ற அதிர்ச்சி வேறு உண்டு. இருந்தாலும் அவனை அனுப்பிவிட முயன்றாள். அவன் கரங்களைப் பற்றி யிழுத்துக்கொண்டு போனாள்.

"நீ நினைப்பது தவறு. சுபேதார் தூங்குகிருர். நான் நினைத்தால் உன்னைத் தூக்கில் தொங்கவைத்துவிட முடியும்"

"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை"

அவன் அடம் செய்தான். நளினியால் அதற்குமேலும் சமாளிக்க முடியவில்லை. உடனே யோசனை செய்தாள்.

"ஐயோ, அக்கிரமம், என்னை இப்படி வதைக்கிருனே" என்று கூவினுள், அவன் கரங்களைத் தான்பற்றிக்கொண்டே. அஜிஸ் திடுக்கிட்டுக் கைகளை உதறினுன். ஆனுல் அவளோ அவன் தோள்களைத் தழுவிக் கொண்டு கூவினுள். சுபேதார் விழித்துக் கொண்டான்!

"என்ன அது......?"

"அர்த்த ராத்திரியில் அந்தப்புரத்தில் வந்து என்னைப் பெண்டாள இழுக்கிருன். தூக்கத்தில் உங்களை எழுப்பக்கூடாது என்று இவ்வளவு நேரம் கடத்திவிட்டேன்"

"அஜிஸ், நன்றி கெட்ட நாயே! நீ ஏன் வந்தாய்?"

"இந்தப் பாதகி பாலிலே நஞ்சு கலந்ததைப் பாதி இரவில் படுக்கையறையில் பணிப் பெண்ணைத் தழுவிக் கொண்டு சொல்ல வந்தாயா?"

"உண்மை இதுதான் சர்க்கார்"

"டப், டப்......"

கைகளைத் தட்டினுன் சுபேதார். சிப்பாய்கள் இருவர் வந்தனர்.

"இந்த நாயைச் சிறையில் தள்ளுங்கள்"

நளினி சுபேதாரிடம் சென்ருள். அவன் அவளை அன்போடு அணைத்துக் கொண்டான். பயந்து நடுங்கியவள் போல அவனது பரந்த மார்பில் தனது முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி யழுதாள். நீலிக் கண்ணீர் வடித்தாள் அந்த நீசத் தொழில்காரி! சுபேதார் ஆதரவுடன் அவளது தலையைத் தடவிக்கொடுத்தான்.

இரண்டாம் பாகம்

இரகசியப் பிரயாணம்

நல்ல கும்மிருட்டு. எங்கும் அமைதி. இரண்டு குதிரைகள் மட்டும் வெகு வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தன.

"ஸுராஜ், நாம் டில்லி போய்த் திரும்புவதற்குள் தாயகத்தில் என்னென்ன விளைவுகள் நேருமோ?"

"ஏன் முடீன், இப்படிக் கோழைபோல மனங் கலங்குகிறாய்?"

"ஆமாம்; என் மனம் அப்படிச் செல்கிறது!"

"ஏன்?"

"எனக்கு இந்த அமீன்சந்த்தின் மீது கொஞ்சமும் நம்பிக்கையில்லை"

"அவன் ஒரு அன்னக்காவடி. அவனால் என்ன செய்ய முடியும்?"

"அன்னக் காவடியா?"

"பணத்தில் சொல்லவில்லை முடீன், போர்முறையில் அவன் ஒரு பிச்சைக்காரன். அவனுக்கு வாள் பிடிக்கத் தெரியுமா?"

"நீ வாளை நம்பியே மோசம் போகப் போகிறாய்"

வழி நெடுக்கிலும் இப்படிப் பலவிதமான செய்திகளைப் பேசிக் கொண்டே சென்றனர். சில சமயங்களில் அவர்களது உரையாடல்களில் முக்கியப் பிரச்சினை வங்கத்தின் அரசாங்க வேலைகளாக இருக்கும். பல சமயங்

களில் உள்ள முருக்கிடும் ஊர்மிளாபோன்ற அழகிகளின் அந்தப்புர இரகசியங்களாக அமையும். கொஞ்ச நேரம் டில்லியைப்பற்றிப் பேசுவார்கள். பிறகு திரும்பி வந்து செய்ய வேண்டிய எதிர்காலத் திட்டங்களைப் பற்றிப் பெரிய ஆராய்ச்சி செய்வார்கள். பெரிய இலட்சியவாதிகள் போல நாளை சுபேதராகிவிட்டால் செய்ய வேண்டிய செயல்களைப் பற்றிப் பரிசிலனை செய்வார்கள். மூடன் அடிக்கடி திருத்தப் பிரேரேபணை கொண்டு செல்வான். அவன் திருத்தங்கள் மறுக்கப்படுவதில்லை. சில சமயங்களில் இணைப்புத் திட்டங்கள் சொல்வான். அவைகளை முழுக்க முழுக்க ஆதரிப்பான் எதிர்கால சுபேதார்.

இவர்களின் பேச்சுக்கிடையே பின்னால் வருங் குதிரையோசை எப்படிக் கேட்க முடியும்? சோணிசந்த் தனது தலைவனின் ஆணைப்படி அவர்களைப் பின்தொடர்ந்து வந்தான். அவர்களின் நடவடிக்கைகளை அணுவுக்கு அணு ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற ஆசையிருந்தாலும் எப்படி அவர்களின் உரையாடலைக் கேட்க முடியும்? அவர்களோ குதிரைகளில் வேகமாகச் சவாரி செய்து கொண்டிருந்தனர். அவர்களின் திட்டம் என்னவென்று அறிந்துகொள்ள எந்த முறையைக் கையாளுவது என்று புரியவில்லை. அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டு தானும் பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

அவன் ஒரு வியாபாரிபோல மாறு வேடங் தரித்திருந்தாலும் எந்த முறையில் அவர்களோடு நட்புக் கொள்வது என்று அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்த நேரத்தில் அமீன்சந்தின் வியாபாரத்தின் போக்கை உண்மையாக விளங்கிக்கொள்ள வேண்டும். அவன் பெரிய திருட்டு வியாபாரத் தலைவன். ஆனால் அவனைப் பார்த்தால் யாரும் அப்படிச் சொல்ல முடியாது! யார்தான் அவனைச் சந்தேகிக்க முடியும்? ஆகவே அவனுக்கு அடங்கிய வியாபாரக் கூட்டம் எல்லா கோயில்

களிலும், சத்திரங்களிலும், சாவடிகளிலும் பண்டாரங்கள் போலவும் பக்கிரிகள் போலவும் மறைந்திருப்பார்கள். பகல் முழுவதும் எவரும் எள்ளளவும் சந்தேகிக்க முடியாத அளவு தங்கள் வேடத்திற்கேற்ப நடிப்பார்கள். இரவானதும் கிடைக்கும் பண்டங்களை உடனுக்குடன் கல்கத்தாவிற்கு அனுப்பிக் கொண்டிருப்பார்கள். அரசாங்கம் என்ன தடையுத்தரவு போட்டுத் தடை செய்திருந்தாலும் அந்தப் பொருள்கள் கப்பல்களில் ஏறிவிடும். அதற்கு ஈடாகக் கோடி கோடியாகப் பொருள்களை வாங்கிவிடுவர்! அதுமட்டுமா, திருடித் திருடிப் பொருள்களைச் சேர்த்துத் தாய்நாட்டு மக்களை இல்லாமையால் வாடவிட்டு அந்நியரிடம் பணத்திற்காக அடிமை வியாபாரம் செய்தனர்!

ஆகவே அமீன்சந்தின் ஆட்கள் எங்கும் இருப்பர். அவனது ஆணை எங்கும் வேலை செய்யும். எந்த நேரத்திலும் அவனால் எதையும் செய்ய முடியும். ஆனால் அதனை அமீன்சந்த் விரும்பவே இல்லை. அதில் வெற்றி கிடைக்கும் என்று நம்ப முடியவில்லை. ஆகவே சூழ்ச்சியைக் கையாண்டான்.

அவர்களுக்குள் குழூஉக்குறியும், அடையாள பில்லைகளும் உண்டு. வணக்க முறைகளிலும் மாற்றங்கள் உண்டு. அவர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும் பொழுது "ஜே ராம் சந்த்" என்பார்கள். உடனே எதிரில் வருபவர் விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகளின் உட்புறத்தில் சிவப்புத் துணியால் நரியுருவம் அமைக்கப்பட்டிருக்கும்! "தந்திரத்திற்கு ஜே! நரி வாழ்க" என்று பொறிக்கப்பட்டிருக்கும். அவர்கள் தலையை மட்டும் குனிவார்கள். வணக்கமுறை அதுதான்!

சோணிசந்த் அடுத்த சாவடியில் எப்படியும் அவர்களுடன் நண்பனாகிவிடவேண்டும் என்று திட்டமிட்டான்.

ஆனால் சந்தர்ப்பம் இன்னும் சற்று முந்திக்கொண்டது. இப்படிச் சிந்தனை உலகில் சஞ்சரித்ததால் கடிவாளங்களைச் சரிவரச் செலுத்தத் தவறிவிடவே, குதிரையின் வேகத்தில் தலைகீழாக விழுந்துவிட்டான்.

"ஐயோ, காப்பாற்றுபவர் யாருமில்லையா?" என்று கதறினன்.

இந்தக் குரல் மிக மெல்லியதாக முன்னே சென்றுகொண்டிருந்த வீரர்களின் செவிகளில் பட்டது. அவர்கள் தங்கள் குதிரைகளை நிறுத்தி உற்றுக் கேட்டனர். யாரோ பரிதாபமாகக் கதறுவது நன்ருகக் கேட்டது. ஆகவே குதிரைகளை வந்த பாதையிலேயே விட்டனர். கொஞ்ச தூரத்தில் ஒருவன் கீழே விழுந்துகிடந்தான். அவனது குதிரையும் அவன் அருகே நின்றுகொண்டிருந்தது. இருவரும் கீழே இறங்கி அவனைத் தூக்கிவிட்டனர். அவனுக்கு ஒன்றும் காயம் ஏற்படவில்லை. அதிர்ச்சி இருக்கலாம். அருகிலிருந்த குளத்திலிருந்து கொஞ்சம் நீர் கொடுத்தவுடன் அவனது நிலை நலப்பட்டது. அவனுகவே தன் குதிரையில் ஏறிக்கொண்டான். பிறகு மூவரும் சேர்ந்தே பயணம் சென்றனர்.

"நீர் எந்த ஊர்?"

"என்னிருப்பிடம் ஹறூக்ளி"

"எங்கே போகிறீர்?"

"டில்லிக்கு"

"அங்கு என்ன வேலை?"

"வியாபார சம்பந்தமாய்......"

பிறகு ஒன்றும் பேசாமலே சென்றனர். அருகிலிருந்த ஒரு சாவடியை அடைந்தனர்.

இருளும் ஓட்டம் ஓட்டமாய் ஓடிமறைந்தது. கதிரவன் தனது வெள்ளிப் பற்கள் வெளியில் தெரியுமாறு சிரித்தான்! அவன் சிரிப்பில் அந்தச் சாவடியும், அதன் சுற்றுப்புறமும் மிக அழகாக இருந்தன!

சாவடியில் நடந்தது!

அந்தச் சாவடியில் நுழைந்தனர் மூவரும். அதன் அதிகாரி உடனே வெளியில்வந்து உபசரித்தான். குதிரைகளைக் கொண்டுபோய்ப் பின்புறமிருந்த கொட்டிலில் கட்டச் செய்தான். பிறகு அவர்களை விசாரித்தான். அவர்கள் இருவரும் தங்களை யாரென்று விளம்பரப் படுத்திக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே தாங்கள் யாரென்று பிறர் புரிந்துகொள்வார்களோ என்ற அச்சத்துடனேயே அந்தச் சாவடித் தலைவனுடன் உரையாடினர்.

"தாங்கள் யாரோ?"

"நாங்கள் மூவரும் டில்லி செல்கிறோம். வைர வியாபாரிகள். தங்க வசதி செய்து தரவேண்டும். நாளைக் காலை மீண்டும் புறப்பட்டு விடுவோம்"

"எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் தங்குங்கள். தக்க வசதிகள் தாராளமாகத் தருகிறேன்"

அவன் அவர்களுக்கு ஒரு தனியறை அமர்த்திக் கொடுத்தான். அவர்கள் மூவரும் தங்களது மூட்டைகளை அங்கே வைத்துவிட்டுக் காலையுணவு அருந்தினர். பிறகு கொஞ்ச நேரம் களைப்பாறலாம் என்று படுத்தனர். கொஞ்ச நேரத்தில் ஸுராஜுவும், முடீனும் உறங்கி விட்டனர். சோணிசந்த் மெதுவாக வெளியேறினான்.

சாவடியைவிட்டு வெளியில் வந்தவுடன் குதிரைவீரன் ஒருவன் வந்திறங்கினான். அவன் வந்தவுடன் சுற்று

முற்றும் பார்த்துவிட்டு அங்கே நின்றுகொண்டிருந்த சோணிசந்த்தை அருகில் அழைத்தான்.

"இங்கு இரண்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த வீரர்களைப் பார்த்தாயா?"

"ஏன்?"

"அவர்களுக்கு முக்கியமான முடங்கல் ஒன்று வந்திருக்கிறது, சேர்க்கவேண்டும்!"

"என்னிடம் வேண்டுமானால் கொடு, அவர்களிடம் நேராகத் தந்து விடுகிறேன்"

"மன்னிக்கவேண்டும், இதனை நானே நேரில் தரவேண்டும்"

"சரி. இரு, வருகிறேன்!"

சாவடிக்குள் மீண்டும் நுழைந்தான். அவர்கள் இன்னும் உறங்கிக்கொண்டிருந்தனர். பிறகு வெளியில் வந்தான். அந்தச் சாவடித் திண்ணையில் ஒரு பண்டாரம் கொட்டை விழி விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் அருகில் சென்றான். "ஜே, ராம் சந்த்......"...... என்றான். அவனும் அதையே திருப்பிச் சொன்னான். பிறகு இருவரும் வணக்கம் தெரிவித்துக்கொண்டனர்.

"பண்டாரம், இன்று இரவு உள்ளே இருக்கும் இருவரிடம் என்ன பொருள்களிருக்கின்றனவென்று பார்க்கவேண்டும். முக்கிய கடிதங்களிருந்தால் திருடிக் கொள்ளவேண்டும்"

"ஜே, ராம் சந்த்........"—சோணிசந்த் வெளியில் வந்து அந்தக் குதிரைவீரனை அழைத்துக்கொண்டு அவர்கள் தங்கியிருந்த அறைக்குள் சென்றான். அவர்கள் வரும் ஓசை கேட்டு விழித்துக்கொண்டான் முடீன். அந்த வீரனைப் பார்த்துத் திடுக்கிட்டான். அவனுக்கு

ஏதோ சைகை செய்தான்! அவன் புரிந்துகொண்டவன் போலவே காணப்பட்டான். உடனே ஸூராஜூவை எழுப்பிவிட்டான். இருவருக்கும் இரண்டு கடிதங்களைத் தந்தான். சோணிசந்த் மிகவும் ஒழுக்கமுள்ளவன்போல வெளியேறி விட்டான்.

ஸூராஜ் கடிதத்தைப் பிரித்தான்.........

எதிர்கால சுபேதாரே!

சலாம். தங்கள் திடீர் மறைவு விரும்பத் தக்கதல்ல. தாங்கள் கிளம்பியது எவருக்கும் தெரியாது என்று எண்ணிவிட்டீர்கள். இங்கு அது ஊரறிந்த இரகசியமாகிவிட்டது! ஆனால் எதற்காகச் செல்கிறீர்கள் என்று மட்டும் தெரிய வில்லை.

நேற்று இரவு நீங்கள் கிளம்பினீர்கள். இங்கு அன்றிரவே ஏதோ சூது நடந்திருக்கிறது. காலையிலிருந்து சுபேதார் எழுந்திருக்கவில்லை. காரணம் விளங்கவில்லை. படுத்திருக்கிறார். மெது வாகப் பேசுகிறார். எழ முடியவில்லை.

இங்கே தங்களுக்கு எதிராகச் சூழ்ச்சிக் குழு வேலைசெய்து வருவதாகத் தெரிகிறது. ஆகவே நீங்கள் திரும்பிவிடுவது நல்லது.

தங்கள் ஊழியன்,

மோஹன்லால்,

பிரதம திவான்.

முடீனுக்கு ஊர்மிளா எழுதியிருந்தாள்! காதல் மயக்கத்தில், காமக் குழப்பத்தில் வார்த்தைகளை வாரியிறைத்திருந்தாள். முடீன்கானின்மீது கொண்டிருந்த மோகம் தனது தந்தை செய்யும் சதிகளைக்கூட வெளிப்படுத்தத் தூண்டிவிட்டது. அமீன்சந்த் டிரேக் முதலிய வெள்ளை வியாபாரிகளுடன் சேர்ந்துகொண்டு அலிவர்திகானை அழித்துவிடத் திட்டமிட்டுவிட்டாராம். மேலும் மீர்ஜாபர் லுடீப்கானைப் போன்றவர்களை வளைக்க முயற்சி நடைபெறுகிறதாம். மேலும் முடீனைக் கொல்லவும் அஞ்ச மாட்டார்களாம். ஆகவே அவன் திரும்பி வரவேண்டுமாம். அவளையும் அழைத்துக்கொண்டு தூர தேசம் செல்லவேண்டுமாம்............! இப்படி எதையெதையோ எழுதிக் குவித்திருந்தாள்.

"இவை எப்படிக் கிடைத்தன?"

"திவான் ஒரு கடிதத்தைக் கொடுத்து அனுப்பினர். வழியில் ஒரு பெண் தங்களுக்கு ஒரு கடிதத்தைக் கொடுக்கச் சொல்லிக் கெஞ்சினாள்"

முடீனும், ஸுராஜுவும் கலந்தாலோசனை செய்தனர். ஆனல் திரும்பிவிட அவர்கள் விரும்பவில்லை. ஆகவே ஒரு விளக்கமான கடிதம் எழுதி இருவரும் கையொப்பமிட்டனர். திவானுக்கு அதனைக் கொடுக்கும் படியும் பணித்தனர். ஊர்மிளாவுக்கு எதையும் எழுதவும் இல்லை. சொல்லவும் இல்லை. வந்தவன் கிளம்பிவிட்டான். சோணிசந்த் அப்பொழுதுதான் உள்ளே நுழைந்தான்.

"மிகவும் முக்கியமான செய்தியோ?"

"ஆமாம், வைரத்தின் விலைப் பட்டியல் வந்தது! பாதுஷாவைப் பார்க்கவேண்டுமாம்"

"நல்ல கொழுத்த இலாபங் கிடைக்கும். பெரிய இடத்து விவகாரமல்லவா?"

அவர்கள் அதுபற்றிய பிரச்சினையை வளர்க்க விரும்ப வில்லை. அதற்கேற்பச் சாவடிச் சமையற்காரன் 'உணவு தயாராகவுள்ளது' என்று தெரிவித்தான். மூவரும் எழுந்தனர். அருகிலிருந்த நீரோடையில் குளித்து முழுகி விட்டு வந்தனர். பிறகு அருமையான விருந்துண்டனர். பிறகு நல்ல தூக்கம் அவர்களை அணைத்துக்கொண்டது. மாலை வந்தது. வெளியில் உலாவினர். இரவு நெடுநேரம் சோணிசந்த் பேசிக் கொண்டிருந்தான். நள்ளிரவில்தான் உறக்கம் அவர்களைக் கட்டித் தழுவியது!

மங்கிய அகல் வெளிச்சத்தில் இருவர் தூங்கிக் கொண்டிருந்தனர். ஒருவன் மட்டும் தூங்குவதுபோலப் பாசாங்கு செய்துகொண்டிருந்தான்.

பண்டாரம் மெதுவாக உள்ளே வந்தான். அவர்கள் உடைகளைச் சோதனை போட்டான். கடிதங்கள் இரண்டு தான் கிடந்தன. அவைகளை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தான். அவன் பின்னாலேயே சோணிசந்த் வந்தான். வெளியில் எரிந்துகொண்டிருந்த மங்கிய விளக்கில் அதனைப் படித்தான். அவன் முகம் விகாரமாக மாறியது.

வைத்தியர் வரப்பிரசாதர்

அலிவர்திகானது உடல்நிலை வரவரக் கெட்டுவிட்டது. சுபேதாருக்கே பயந்தட்ட ஆரம்பித்துவிட்டது. முதுமையில் தான் அனுபவித்த அளவிற்கு மீறிய போகமே இந்த நிலைக்குக் காரணம் என்று தவறுதலாகக் கணக்குப் போட்டுவிட்டான். என்றாலும் நளினியை அவன் பார்க்காமலும் இருக்க முடியவில்லை. தினமும் அவளது குளிர்ந்த பார்வையில் ஒருமுறையாவது குளித்து முழுகிவிடவேண்டும் என்பது அவனது தீராத ஆசையாக மாறிவிட்டது. ஆகவே நளினி எப்பொழுதுமே அவனது அருகிலிருந்து பணிவிடை செய்துவந்தாள்.

சுபேதாரின் கேவலமான உடல் நிலையைக் காணக் காணத் திவான் மோகன்லாலுக்கு சொல்லொணுத வருத்தம் வந்து சூழ்ந்து கொண்டது! அலிவர்திகான் மீண்டும் பிழைப்பான் என்று சொல்லமுடியாது! அவன் தினமும் கொஞ்சங் கொஞ்சமாகச் செத்துக்கொண்டே வந்தான். ஆகவே அவன் பல பிரமுகர்களைக் கண்டு பேசினுன். கடைசியில் அமீன்சந்த்தின் ஆலோசனையை யும் விரும்பினுன். அவன் வைத்தியர் வரப்பிரசாதரின் பெயரை நினைவூட்டினுன். அவர் ஒருவரால்தான் இந்தக் காரியம் முடியும் என்று அழுத்தமாகக் கூறினுன். ஆகவே அந்த வைத்திய வள்ளலைக்கொண்டே சிகிச்சை செய்வ தென்று முடிவு செய்தனர்.

அமீன்சந்த் அன்றைக்கே வரப்பிரசாதரைச் சந்தித் தான். சந்தித்ததோடு மட்டுமல்ல, மீண்டும் ஒரு சதிச் செயலுக்கு விதை தூவினுன்! நளினி அன்று பாலோடு சேர்த்துக் கொடுத்த மருந்து அவனை மெதுவாகவே கொல்லும். அதாவது யாருமே சந்தேகிக்க முடியாத அளவு நோயால் அடிபட்டு இறந்தவன் போலவே ஆளை உருக்குலைத்துக் கொல்லும். ஆனுல் அவனது ஆயுளை அவ்வளவு நாட்களுக்கு நீட்ட முடியவில்லை. சூழ்நிலை அப்படி இருந்தது. டில்லி சென்றவர்கள் மிக விரைவில் வந்துவிடுவார்கள். அவர்கள் வந்து சேர்வதற்குள் அலி வர்திகான் மடிந்தால் மக்களைக் கிளப்பிவிட வசதி ஏற்படும். அப்படி ஏற்படுகிற குழப்பத்தில் ஒரு பொம் மையைச் சுபேதாராக்கலாம்! தங்கள் விருப்பம்போல் ஆட்டி வைக்கலாம்.

ஆகவே அலிவர்திகான் உடனே சாகடிக்கப்பட வேண்டும். ஏற்கனவே கொடுத்த நஞ்சைப்பற்றி ஒரு சிப்பாய் கண்டு பிடித்துவிட்டான். அவனே சிறையில் கிடக்கிறுன். மேலும் அவன் முடீன்கானுக்கு உண்மைத் தொண்டன். அவனிடம் உண்மையை ஒளிக்காமல் சொல்லிவிடுவான். அப்பொழுது அலிவர்திகான் உயி

ருடனிருந்தால் ஆபத்து இரட்டிக்கும். போட்டதிட்டமும் பாழாகிவிடும். இதற்கு வரப்பிரசாதரின் உதவி கட்டாயம் தேவை! ஆம், உடன் கொல்லும் விஷம் வேண்டும். அதை மருந்தென்று கூறி அவர் தரவேண்டும்.

இந்தக் கொலைகாரத் திட்டத்தை ஒப்புவாரா அந்தக் கிழவர்?—இதுதான் உடன் தீர்க்கப் படவேண்டிய பிரச்சினை. இது கேள்விக்குரிய நேரமல்ல. உடன் செய்யப் படவேண்டும். அவர் எப்படி மறுக்கமுடியும்? அவரது பிடி நம்மிடம் உள்ளது!

அமீன்சந்த் இப்படி மனப் போராட்டத்தை நடத்திக்கொண்டே அந்தக் கிழவரைச் சந்தித்தான்.

“வரப்பிரசாதரே, நமஸ்காரம்”

“வாருங்கள்”

“பாம்பு ஏற்றிய நஞ்சைப் பாம்பே இறக்க வேண்டுமாம்!”

“என்ன சொல்கிறீர்கள்?”

“அலிவர்திகானுக்குத் தாங்களே மருத்துவம் செய்ய வேண்டுமாம்”

வரப்பிரசாதர் விகாரமாக விழித்தார். அவரால் அந்த நிலைமையை எப்படிச் சமாளிக்க முடியும் என்று நினைக்கவும் முடியவில்லை போலும்! அமீன்சந்த் சிரித்தான்.

“ஏன் பயப்படுகிறீர்?”

“பயமில்லை........”

“அச்சமின்றி இன்னொருமுறை ஒரு அருமையான நஞ்சை மருந்தென்று தரவேண்டும். அவன் அதனை அருந்தி மடியவேண்டும்”

"உமது உருவம் பால்போன்றது. உமது நெஞ்சில் பாஷாணம் பதுங்கி யிருக்கிறது"

"வீண் பேச்சுக்கு நேரமில்லை. நீர் சொன்னதைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் பழைய பாஷாணக் கதை அம்பலமாக்கப்படும். தூக்கு மரத்தில் ஊஞ்சலாடுவீர்! எச்சரிக்கை செய்கிறேன்"

"ஐயோ..........."

அமீன்சந்த் நினைத்ததை மாற்ற யாரால் முடியும்? வைத்தியர் வரப்பிரசாதர் ஒப்புக்கொண்டார். அந்த நேரத்தில் அரசாங்கச் சிப்பாய்கள் வந்து சேர்ந்தனர். வரப்பிரசாதர் அரண்மனையை நோக்கிப் புறப்படத் தன் மருந்துப் பெட்டியைத் தயார் செய்யத் தொடங்கினர். அமீன்சந்த் வெற்றிச் சிரிப்புடன் வெளியேறினன்.

வழி வளர்ந்தது!

மறுநாள் காலை சாவடியை விட்டு மூவரும் புறப்பட்டனர். சாவடித் தலைவன் ஒரு பை பணம் பெற்றுக்கொண்டு நன்றி செலுத்தினன்.

அவர்களின் பிரயாணம் வளர்ந்துகொண்டே இருந்தது. வழியும் பெருகிக் கொண்டிருந்தது. நாட்கணக்காகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். வழியெங்கும் மரங்களும், வாவிகளும், சோலைகளும், பூந்தோட்டங்களும் நிறைந்திருந்தன. அவைகளைப் பார்த்துக் கொண்டும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டும் சென்றனர். சோணிசந்தின் பெயர் சோணி என்று சொல்லி வைத்திருந்தான். அவர்கள் தௌலா, கான் என்று தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டிருந்தனர்.

இப்படிப் போய்க்கொண்டிருந்த பயணம் கடைசியாக முடியுங் கட்டத்தை யடைந்தது. அதாவது டில்லி மாநகரின்

அருகில் உள்ள மண்டபத்தில் தங்கினர். அந்த மண்டபத்தில் தங்கியிருந்தபொழுது பக்கிரியொருவன் வந்து 'ஜே, ராம்சந்த்' என்ருன். அவர்களுக்குச் சிரிப்பாக இருந்தது. முகம்மதிய மதத்தவன் இராம பஜனை செய்கிருனே என்று எண்ணினர். ஒருவேளை மிக நெருக்கத்தில் மதம் மாறிய பண்டாரமாக இருக்கலாம் என்று எண்ணிக் கொண்டனர். அவர்கள் அருகிலுள்ள சுனையில் நீராடப் போகிருேம் என்று கூறவே, சோணிசந்த் தனக்கு உடல் நிலை சரியில்லையென்று சொல்லித் தப்பித்துக்கொண்டான்.

வந்த பக்கிரி அதே வார்த்தைகளை உச்சரித்தான். சோணிசந்த் அதனையே திருப்பிக் கூறியவுடன் பக்கிரி அவனை நெருங்கினுன்.

"நீர் தானே டில்லிக்கு எதிரிகளைத் தொடர்ந்து செல்வது?"

"ஆமாம்"

"தலைவர் கட்டளை - அவர்களை எத்தனை நாட்கள் அதிகமாகத் தவக்கப் படுத்த முடியுமோ அவ்வளவு நாட்கள் தவக்கப்படுத்தி டில்லியில் தங்கச் செய்ய வேண்டும்"

"ஜே ராம்சந்த்"

மீண்டும் குதிரை ஏறினர்...

"நீங்கள் டில்லியில் எங்கே தங்கப் போகிறீர்கள்?"

"இன்னும் தீர்மானிக்கவில்லை"

"வேண்டுமானுல் எனது இருப்பிடத்தில்......"

"நீங்கள் எங்கிருப்பது?"

"நாட்டிய ராணி ரஜினியைத் தெரிந்திருக்க வேண்டுமே! அவளது மாளிகை என் சொந்தம்போல! வியாபாரமும் பார்த்துக் கொள்வேன். நாட்டியமும் கண்டு

களிப்பேன். நீங்கள் விரும்பினுல் என்னுடன் வாருங்கள். ரஜினியை அறிமுகப்படுத்துகிறேன். அவளைப் பார்த்து விட்ட பிறகு நீங்கள் அவளைவிட்டுப் பிரியவே மாட்டீர்கள். அவளது அழகை என்னுல் வருணிக்க முடியாது. நேரில் பார்க்க வேண்டும். அவள் அழகுப் பேழை!"

ஷாராஜுவின் மனம் நெகிழ்ந்து விட்டது. முடீன் அதனைக் குறிப்பால் உணர்ந்து கொண்டான். உடனே அவனே முந்திக்கொண்டு விடையளித்து விட்டான்.

"நாங்கள் வந்த வேலை முக்கியமானது. அதை முடித்துக்கொண்டு உங்களைப் பார்க்கிறோம். இப்பொழுது உடன்வர முடியாமைக்கு வருந்துகிறோம்"

இதற்குள் கோட்டை மதிலை அடைந்துவிட்டனர். அப்பொழுது மாலை மணி ஐந்திருக்கும். அங்கிருந்த கோட்டைக் காவலரைக் கேட்டபோது அன்று வேட்டை நாள் என்று தெரிய வந்தது. ஆகவே சோணியிடமிருந்து விடை பெற்றுத் தௌலாவும் கானும் தவக்கமின்றித் தங்கள் பயணத்தைத் துவக்கினர். காற்றில் பறந்துதான் சென்றனர் போலும்—அவ்வளவு வேகம்! சோணிசந்த் சிறிது நேரம் நின்று பார்த்துவிட்டு நகருக்குள் நுழைந்தான்.

காட்டிற்குள் கூடாரங்கள் அடிக்கப் பட்டிருந்தன. அங்கு எவரும் இல்லை. ஆகவே காட்டினுள் மேலும் சென்றனர். கவலை தோய்ந்த முகத்தினராய்க் காவலாளிகள் வந்து கொண்டிருந்தனர்.

"பாதுஷா எங்கே?"

"அவர் சென்றவிடம் தெரியவில்லையே!"

பாதுஷா இன்னும் திரும்ப வில்லையே என்ற பயமும், சோகமும் கப்பிக்கொண்டிருந்தன அவர்களது கண்களில்! அவர்கள் விழிகளால்தான் இந்த மொழிகளை உதிர்த்தனர். தட்டிவிட்டனர் அவர்களின் குதிரைகளை. அந்த இருண்ட காட்டில் எங்கெங்கோ அலைந்தனர்.

"ஐயோ செத்தேன்"

அப்பொழுது ஒரு குரல் கேட்டது. யாரோ அம் மாதிரி கூவினார்கள். திடுக்கிட்டனர். திகைத்து நின்றனர்.

ஒரு வேளை அதுதான் பாதுஷாவின் குரலோ என்று எண்ணி ஏங்கினர். ஆனால் இருட்டு குறுக்கே நின்றது. வெறிபிடித்தவன் போலக் குதித்தான். "ஸுராஜ். அல்லா வின் அருளோ, என்னவோ" என்று அவன் கருதும்படி அந்த நேரத்தில் தீவட்டி வெளிச்சங் கிடைத்தது. ஆம், அவன் அவனையுமறியாமல் "ஆபத்து. டில்லி பாதுஷா வுக்கு விபத்து" என்று கூவி விட்டான்.

கடைசி ஜோதி

மன்னன் வேட்டைக்கெனக் காட்டினுள் புகுந்தான். கலைக் கூட்டத்தைக் கலக்கினான். விடாது பின் தொடர்ந் தான். ஆனால் காலங் காத்துக் கிடக்குமா? கதிரவன் மேற்கை நாடினான். காரிருள் சூழ்ந்துகொண்டது. அரச னுக்கு அப்பொழுதுதான் அவன்நிலை விளங்கிற்று. பொழுதுசாய்கிறவரையில் வேட்டையாடிக்கொண்டிருந்து விட்டோமே என்று எண்ணினான். பாதை தெரியவில்லை. ஆனால் படை முழக்கம் கேட்டது! ஒலி வருந் திசையை நோக்கினால் ஒரே இருட்டு, கும்மிருட்டு!

அருகிலிருந்த ஒரு மரத்தின் மீது ஏறினான். கண் ணுக்கு எட்டிய மட்டிலும் ஒன்றுமே தெரியவில்லை. வெகு தொலைவில் ஒரு சிறு வெளிச்சம், ஒரு ஜோதி, தென்பட் டது. பயத்தால் நிரம்பிக் கிடந்த அவன் மனத்தில் சிறு மகிழ்ச்சித் துளியும் சேர்ந்தது. அவசரமாக இறங்கினான். இறங்கமுடியவில்லை. ஏதோ ஒன்று இறுக்குவது போலி ருந்தது. கையால் தடவினான். வழுவழுவெனத் தெரிந் தது. அவ்வளவுதான்! "ஐயோ, செத்தேன்" என்று கூவி னான். என்ன அது? மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த

மலைப்பாம்பு! அது வரவர உடல் முழுவதையும் வளைத்து விட்டது!

அப்பொழுது அவன் மனம்.........?

ஆம், அன்று வேட்டைக்கு மன்னன் புறப்படும் நாள்! வேட்டை நாள் என்றால் ஆர்ப்பாட்டங்கள் இல்லாமல் இருக்குமா? பதினாயிரக்கணக்கான போர்வீரர்கள் அணி வகுத்துச் சென்றனர். நூற்றுக்கணக்கான யானைகள் பட்டாலும் ஜரிகையாலும் அலங்கரிக்கப்பட்டுப் படைக்கு முன்னணியில் சென்றன. ஒவ்வொரு கரியின்மீதும் இரு வீரர் அமர்ந்திருந்தனர்; முதல் எட்டு யானைகளிலுள்ள வர்கள் முரசு கொட்டினர்; பிற யானைகளிலுள்ளவர் களில் ஒருவன் அங்குசத்தால் குத்தித் துரிதப்படுத்தி னான்; மற்றவன் தங்க, வெள்ளி வேலைப்பாடுகளமைந்த பட்டுக் குஞ்சங்கள் தொங்கும் வளைந்த வாத்தியத்தை முழக்கினான். இவற்றிடையே அவன்—டார்ட்டாரி தேசத் துப் புரவியின்மீது கம்பீரமாக! அவனைச் சுற்றிலும் உயர்ந்த உடைகளால் உடலை மறைத்த உல்லாசச் சீமான்கள் நல்ல வெண்மை நிறமுள்ள குதிரைகளில் வந்தார்கள். ஐந்நூறு ஒட்டகங்கள் பின் தொடர்ந்தன. அவைகளின் முதுகுகளில் ஏராளமான சுமை ஏற்றப் பட்டிருந்தது.

இப்படியெல்லாம் அந்த நேரத்தில் நினைவு இழுத்துச் சென்றது அவனை! மேலும்......

வேட்டைப்படை கிளம்பிவிட்டது. மன்னன் மாளிகை வாயில்கள் திறக்கப்பட்டன. மாளிகைகள், மன்னர் சபா மண்டபங்கள், இசையரங்கங்கள் உள்ள வீதிகளை யெல்லாம் தாண்டி வந்து கொண்டிருந்தது. பல வீதிகள் வழியே நுழைந்து நுழைந்து வணிகர்கள் வாழும் கடை கடைவீதியையும் தாண்டிவிட்டது!

மாளிகைகளில் பேசும் 'சொர்ணச் சிலைகள்' திரை மறைவில்! சாதாரண மக்கள் வழி நெடுகிலும் மண்டி

யிட்டுக் கரங்களைக் கண்களில் ஒத்தி, மார்பில் தொட்டு மண்ணில்வைத்து வணங்கினர். முரசொலியும், படை செல்லும் இரைச்சலும் நகரின் அமைதியைக் குலைத்தன. எங்கும் போர் முழக்கம்! நகரெங்கும் படைகள் நடந்து செல்வதால் புழுதி கிளம்பி நகரையே விழுங்கிவிட்டது போன்றிருந்தது. கடைசியாகக் கோட்டை மதிலை அடைந்துவிட்டது. கோட்டைக் கோபுரங்கள் தனது கதவுக் கரங்களை விரித்து வரவேற்றன. படை நுழைந்து சென்றது.

"இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் வந்து இதோ இறக்கப் போகிறேன்" என்று எண்ணினன், மன்னன். அவன் நினைவு அதற்கு மேலும் தொடர்ந்தது.........

இடம் காடு, வீரர்கள் வெகு வேகமாக மத்தளங்களை முழக்கினர். வேட்டை நாய்கள் நாலா பக்கங்களிலும் சிதறியோடின. காட்டு விலங்குகள் கதிகலங்கிப் போயின. சிங்கங்கள் கர்ஜித்தன. அந்தக் காடே எதிரொலித்தது. அதைக் கேட்ட பிற விலங்குகள் இங்கும் அங்கும் ஓடின—புலிகள் குகைகளை விட்டுக் கிளம்பின. மான்கள் மருண்டோடின. யானைகள் பிளிறின. பறவைகள் அவல ஒலி எழுப்பிப் பறந்தன.

யானைமீதிருந்தவர் வேங்கைமீது வேலைப் பாய்ச்சினர். யானைகளைத் துரத்தியோடினர் சிலர். சிங்கங்கள்மீது குண்டைச் செலுத்த முயன்றனர் வேறு சிலர்.

வீரர்கள் வேட்டையிலிருந்த நாட்டத்தால் கூட்டங் கூட்டமாய்க் காட்டினுள் புகுந்து மிருகங்களை வேட்டையாடிக் கொன்று குவித்தனர். உணவு கொள்ளவும் மறந்தனர். அதுமட்டுமா? பாதுஷா அவர்களுக்கு நடமாடுங் கடவுள்—அவனையே மறந்துவிட்டனர். அடடா.....தனியாக ஏன் வந்தேன் என்று எண்ணமிட்டான். இனிச் சிந்திக்க முடியவில்லை......மூர்ச்சையானன்.

யார் இந்த மனிதன் ? 'ஷாஆலம்'

இரண்டாம் ஷாஆலம் முடிசூடினன் !

பிரகாசமாக எரிந்துகொண்டிருந்த விளக்கின் ஒளி மங்கத் தொடங்கிவிட்டது. அவியும் சுடர் சற்று அதிக ஒளியுடன் எரியுமல்லவா? ஷாஆலம், அணையும் விளக்கின் கடைசி ஜோதி, இறுதிச் சுடர்! ஆமாம், முகலாய வம்சத்தின் கடைசி மூச்சு கி. பி. 1862 வரை ஊசலாடிக் கொண்டிருந்தது! அக்பர்ஷா, பகதூர்ஷா ஆகியோர் நடமாடும் பிணங்களாக உலவினர்கள். ஆனல்.........அவர்கள் அணைந்த பின்னரும் திரியில் எரியும் சிறு நெருப்பும், அதிலிருந்து ஒருவித நெடியுடன் கிளம்பும் புகையும் போன்றவர்களே. விளக்கிலிருந்த எண்ணெயும் வற்றி விட்டது. திரியின் இறுதிப் பிரியும் எரிந்து முடியுந் தறுவாயிலிருந்தது. முகலாய வம்சத்தின் கடைசி மன்னன் ஷாஆலம் அரியணை ஏறினன்.

இந்திய உபகண்டத்தின் இதயபீடம் டெல்லி...... அங்குதான் ஷாஆலம் தனது ஆட்சியைத் துவக்கினன்.

கி. பி. 1525-ல் பாபர் வெற்றிப் புன்னகை புரிந்தான். ஆனல் அது கி.பி. 1803-ல் ஷாஆலத்தின் அழுகை ஓலமாக மாறிவிட்டது. காந்த வனத்திலே, இரான் தம்பரிலே, கூர்ஜரத்திலே, வங்காளத்திலே, காபூலிலே, ஒரிஸாவிலே, மின்னலைப்போல ஒளிவிட்ட முகலாய வாள், வீரமிக்க போர்வாள், சமத்துவ சங்கநாதம் எழுப்பி இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஏக காலத்தில் தன் வசப்படுத்திய அக்பர் பாதுஷாவின் கொலை வாள், ஷாஆலத்தின் காலத்தில் துருப்பிடித்துக் கிடந்தது குருதியில் குளிப்பாட்டுவாரின்மையால் ! ஔரங்கசீப்பின் அதட்டுங் குரல் இல்லை. அடிமைக்குரல் கேட்டது ! பானிப்பட்டு புகழ் பாபர், ஓடி ஒளிந்து வாழ்ந்தாலும் பீடழியாப் பூபதி ஹுமாயூன், அகிலம் புகழும் அக்பர், அழியும் அழகுடைய 'தன் அன்புச்சிட்டுக்கு' அழியாச் சிற்பக் கூண்

டாகத் தாஜ்மஹாலைக் கட்டிய ஷாஜஹான், ஆட்சி பீடத்தில் அமர்ந்தவர்களிலே ஒரு தனிரகம் ஔரங்கசீப் ......என்று காலக்கோல் கோலம் இழுத்துக்கொண்டே வந்துவிட்டது.

சீக்கியரின் மத குருவான குரு கோவிந்தசிங் இறந்த பிறகு ஏற்பட்ட பந்தாவெனும் போலிக்குருவுடன் போரிட்டு ஜம்மூ மலைப் பிரதேசத்திற்கு விரட்டினன் பகதூர்ஷா.........'அரசாக்குவோர்' பிடியில் சிக்கிய ஜஹாந்தர்ஷா.........வளர்த்த புகழ் குறையும் நேரத்தில் தங்கள் வாழ்வைத் துவக்கிய முகமது பரூக்ஸியர், இரமீஉத தௌலா, தமீஉத் தார்ஜாத், முகம்மதுஷா, ஆமது ஷா, ஆலம்கீர்.........என்று சரித்திரம் தானே செலவுக் கணக்கில் எழுதிக்கொண்டது.

ஷாஆலம் தான் முகலாய வம்சத்தின் கடைசி ஜோதி!

அந்தக்கால நிலை...........? உண்மையில் ஷாஆலம் மன்னர் பெயரளவில்; அவர் உரிமை, பெருமை உறிஞ்சப் பட்டுவிட்டன! அவர் முடியணிந்திருந்தார். ஆனல் பிடியைப் பிறிதொரு இடத்தில் பறிகொடுத்துவிட்டார்! கோல் உண்டு, கூனர்கள் கொண்டுள்ளது போலக் கையிலேந்த. ஆனல் அதன் பிடிப்பால் கண்டது கைவலிதான்! கொலுமண்டபம் போவதுண்டு, பரம்பரை வழக்கப்படி ஊராள அல்ல, உருளும் விழிகளால் உயிரையே வாங்கும் உள்ளம் உருக்கிகளின் நாட்டியம் பார்க்க! மதியூக மந்திரியும் பெரும் பெரும் பிரதானிகளும் இருந்தார்கள் ஏற்கெனவே இருந்த முறைப்படி. இருந்தாலும் வேலை மாற்றமாகிவிட்டது. இப்பொழுது ஆள வழிகாட்ட அல்ல, அடங்கியிருக்க, ஆகுக் திட்டங்களை அவ்வப்பொழுது அறிவித்து அபயமளிக்க! படையுண்டு பயனில்லை!— உண்மைக் கவி பாடினல் இப்படித்தான் பாடியிருப்பான். வேறு வகையில் வருணிக்க வழியில்லையே! அப்படி முகலாய சக்கரவர்த்தியின் புகழ் பட்டுப்போயிற்று. கெட்டுக் கிடந்தது.

ஷாஆலம் இப்பொழுது மெதுவாகக் கண்களைத் திறந்தான். ஆ, அவன் கண்ட காட்சி! ஆறுபேர் தீவட்டி யுடன் நின்று கொண்டிருந்தனர். இரண்டு குதிரைகள் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தன. ஒரு வீர வாலிபன் மெதுவாக வருடிக் கொண்டிருந்தான். அவன் நெற்றியை ......மற்றவன் கூர்மையாக அவனது முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஆ ஸுராஜ், நீ எங்கே வந்தாய்? வங்காளத்தில் ஏதாவது கலவரமா? எனக்குத் தக்க சமயத்தில் வந்து உயிர் கொடுத்தாயே. அல்லாதான் உன்னை அனுப்பி யிருப்பார்! இந்த வாலிபன் யார்? இந்தத் தீவட்டிக்காரர் களை எங்கு கண்டாய்?" என்று வேகமாகக் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டான். "அதைப்பற்றி யெல்லாம் பின்னால் பேசிக் கொள்ளலாம். முதலில் கிளம்புங்கள்... ....அணைய இருந்த முகலாய வம்சத்துக் கடைசி ஜோதியை அவியாது காத்தேனே, அது போதும்" என்றான் அந்த வாலிபன். பணிந்து நின்ற தீவட்டித் தடியர்களைப் பார்த்து "உம், புறப்படுங்கள்" என்றான்.

தீவட்டி ஏந்தி முன்னே வேலையாட்கள் செல்ல மன்ன னைத் தாங்கியபடி குதிரையைச் செலுத்தினான் ஸுராஜ். அவனைத் தொடர்ந்தான் அவன் நண்பன்.

ரசமான உரையாடல்!

"வெளிநாட்டிலிருந்து வாணிகம் என்ற வேடத் துடன் வெள்ளையர் நாட்டில் நுழைந்தனர். கண்டமெங்கும் அங்காடிகள் அமைத்தனர். நாள் ஆக, ஆக.........ஆண்ட வர்கள் சரிந்தனர். அடிமைகளாகத் தொடங்கினர். வயிற் றப்பனுக்கு வழிபெற வேண்டி வண்டி வண்டியாகப் பண் டங்களைக் கொண்டுவந்து குவித்துப் பிண்டம் பெற்று வந்த அண்டை நாட்டுப் பரங்கியர் ஆளவந்தார்களாகப்

பார்க்கின்றனர். இது அநீதி. மேலும் வங்காளத்திலும் வாலாட்ட ஆரம்பித்து விட்டனர். அவர்களின் துடுக்குத் தனத்தை ஒட்ட நறுக்க வேண்டும் கொஞ்சமும் நெஞ்சில் இரக்கங்காட்டாமல்! கூண்டோடு அந்த வெள்ளைக் கழுதைகளை வைத்துக் கொளுத்த வேண்டும். அழிக்க வேண்டும் அந்த ஆணவக்காரக் கும்பலை! ஆவி சோர்ந்து அலறவிட வேண்டும். அவர்களின் கெடுமதி ஒழிக்கப் படவேண்டும். அகம்பாவம் அழிக்கப்பட வேண்டும். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வந்திருக்கிறோம் என்று கொஞ்சமும் சிந்திக்காமல் நாட்டுக் குடி மக்களிடம் பகைத்துக் கொள்கிருர்கள். இதற்கொரு வழி செய்யப்படவேண்டும். இந்த வெள்ளைக்காரத் தொல்லையைச் சொல்லவே இத்தனை தூரப்பிரயாணம் செய்ய வேண்டிவந்தது......"

இப்படியெல்லாம் ஸுராஜ் சொல்லவில்லை. மிகச் சுருக்கமாகவே தன் வார்த்தைகளை முடித்துக் கொண்டான்.

"பாதுஷா! தங்கள் புகழ்கெடுகிற மாதிரியில் இந்தப் பண்டகசாலைக்காரர்கள் நடந்து கொள்கிருர்கள். கொள்ளையடிக்கிருர்கள். கொலையும் செய்கிருர்கள். இதற்கு எப்படியும் ஒரு மார்க்கம் காட்ட, பெருமைக்குரிய பாதுஷா—மகராஜ்—அவர்களிடம், எனது தாதா கேட்டுவரப் பணித்தார்"

அவ்வளவுதான் கூறிய வார்த்தைகள்! இதனைக் கூறி முடித்தவுடன் அவன் முகத்தில் சிறு பயம்—பச்சையாகப் பெரிய பாதுஷாவிடம் புளுகினேமே என்ற அச்சம்—ஏற்பட்டது. ஓரக்கண்ணுல் முடீன்கானைப் பார்த்தான். அவன் சிறு புன்னகை காட்டினுன். அலிவர்திகானுக்கு ஸுராஜ் டில்லிக்குப் புறப்பட்டதே முதலில் தெரியாது. ஆனுல் பாதுஷாவிடம் புளுகினுன். இந்த நேரத்தில் முடீன் தன் பைகளைத் தடவிப் பார்த்துக் கொண்

டான். என்ன ஏமாற்றம். அங்கே அந்தக் கடிதங்க ளில்லை!

"அடடா, இவ்வளவு நேரம் மறந்து விட்டேன். என்னைக் காப்பாற்றிய வீரனல்லவா நீ! சபாஷ்,ஸுராஜ், உன் வீரத்தைக்கண்டு பெருமையடைகிறேன். மனமாரப் பாரட்டுகிறேன். முகலாய சாம்ராஜ்யம் இன்று தீரர்கள் தேவை தேவை யென்று கூவுகிறது. சரியான சூரன் நீ!"

"தங்கள் புகழ்ச்சிக்கு நன்றி. ஆனால்......"

"அத்துடன் நிறுத்துவானேன்? அச்சமின்றி வேண் டியதைச் சொல்லு"

"நான் முன்னரே கூறி விட்டேன். நான் வந்த காரி யத்தை"

"பிறகு........"

"எப்படியும் அவர்களை ஒழிக்க வேண்டியதுதான்"

"இதுதானே? அது தீர்ந்துபோன சங்கதி. நாளைக்கே அவர்கள் கோட்டையை நம் படை தாக்கட்டும்"

"அவசரம் ஆத்திரக்காரனின் சொத்து. அது நமக் குத் தேவையில்லை"

"என்ன......எது அவசரம்? இப்ராகீம், உன் உற வினன், நமது இனத்தவன், இஸ்லாம் மதத்தவன் கொல்லப்பட்ட பின்னருமா? அவன் ஆவி துடித்ததுபோல அந்த அந்நியர்களை அங்கங்கள் பதறப் பதற வெட்டி வீழ்த்து! அவர்களின் பெண்டு பிள்ளைகள் கதறக் கதறக் கொன்று குவி! பிணங்களை அடுக்கிப் பீரங்கியைத் திருப்பு! சிசுக்களின் சிரங்களையும் சீவு! விடாதே—பரிதா பப்பட்டு! சிறுமதிக்காரர்கள் சிந்தட்டும் கண்ணீர், கண் களால் கக்கவேண்டும் குருதி! முகலாயன் ஒருவனின் உயிர் ஆயிரம் அந்நியர்களின் பிணங்களுக்குச் சமம்— அதனை நிலைநாட்டு! இறந்த இப்ராகீமுக்கு வெள்ளைப் பிணங்களால் சமாதி கட்டு! அவன் ஆவி திருப்தியடை

யட்டும்! அச்சம்விடு! டில்லி பாதுஷா உன் பக்கம்—அல்லாவும் துணை இருக்க வர மறுக்கமாட்டார்"

"செய்யலாம். இதனை நானே கூட, என் தாதாவின் உத்தரவும், உதவியுமின்றியுங் கூட—செய்திருப்பேன். ஆனால் அவர்கள் பலம் உடையவர்கள்!"

"படைதானே, பயப்படாதே! முகலாயப் படை நாளை உன் தலைமையில் கிளம்பும். திருப்தி தானே?"

"படை பலத்தை நான் சொல்லவில்லையே"

"பின் பணத்தைக் கண்டு பயப்படுகிறாயா? அந்தப் பணம் நமது குடிகளின் வியர்வையிலே வெந்த வெள்ளிப் பணம்! நம் கஜானா காலியானாலும் கவலையில்லை. அந்தக் காலிகளுக்குக் கூலிகொடுத்தாக வேண்டும்"

"பணம்......அந்தப் பரங்கியரிடம் ஏது? இருந்தாலும் நாடாளும் நம்மிடம் நாடு தாண்டி நாடு வந்திருக்கும் நாதியற்ற நாடோடிகள் போட்டிபோட முடியுமா?"

"வளர்த்தாதே. வார்த்தைகளைச் சுருக்கு"

"அவர்களிடம் மூளை பலம் அதிகம்"

அவர்கள் உரையாடல் முடிந்தது போலத் தெரிந்ததும் முடீன்கான் தொடர்ந்து முடுக்கிவிட்டான்.

"அவர்களுக்கு ஏழாவது அறிவு ஒன்றிருக்கிறது. ஒரு பகுதி அவர்களிடம். மறு பகுதி நம்மிடம். அவர்கள் தாயத்தார்களையே தட்டிவிடுவார்கள். நாம் முட்டிக் கொள்வோம்"

"நம்மிடம் மூளைபலம் குறைவென்று கருதுகின்றாய்? கோழைகள்! குலக்கோடரிகள்!"

"கோழையல்ல, மகராஜ்! இப்பொழுது நீங்கள் தானே என் வீரத்தை வியந்தீர்கள். குவலயத்தையே குலுக்கிடவும் கலங்காத உள்ளம் உண்டு. ஆனால் அவர்களிடம் தந்திர புத்தியுண்டு. அதனால்தான் பார்க்கிறேன்"

ஸுராஜ் உண்மையில் பாதுஷாவின் நிலைமையில் பேசுபவன். ஆனால் மூடீன்கானின் அறிவுரைப்படி சாந்தமாகவே பேசினான். அவர்கள் நினைத்த பலன் கிடைத்தது. பாதுஷாவின் கோபத்தைக் கிளறிவிடவேண்டும், அதன் பயனாகத் தக்க உதவிகள் அத்தனையும் பெற வேண்டும் என்று எண்ணினார்கள். பலன் கை மேல் கிடைத்துவிட்டது. ஸுராஜ் வளர்த்திப் பேசுவதைப் பாதுஷாவால் சகிக்க முடியவில்லை. அவன் மீது கோபப்படுகிற அளவு பொறுமை காட்டினான் அவன். அதுவும் ஒரு நன்மைக்கே என்று காரியம் நடந்தது!

உடன் மூடீன்கான் வெள்ளையர்களின் நுழைவைப் பற்றி விளக்கமாக எடுத்துரைக்கலானான்.

'அந்த வெள்ளையத் திருட்டுத் தடியர் கூட்டம் இத்தரணியில் புகுந்தகதையொன்றே அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு ஏற்ற உதாரணம்! இந்தியாவுக்குப் புதிய மார்க்கங் காண அவர்கள் துடித்த துடி உலகம் அறியுமே! பார்த்த லோமியாடயஸும், வாஸ்கோடிகாமாவும் தானே வழி வகுத்து விட்டார்கள்! பாருங்களேன், அவர்களின் திமிரை! அடுத்து வந்த காப்ரல் கள்ளிக்கோட்டையரசர் ஸாமொரினுடன் போரே தொடுத்துவிட்டான். திராவிடத்தில் நறுமணம் வீசிற்று. அவர்கள் மூக்கைத்திட்டி விட்டார்கள்! போர்த்துகீசியரின் அகம்பாவம் திடீரென வளர்ந்து பிறகு பட்டென்று வெடித்து விட்டது. டச்சுக்காரர்கள் மட்டும் என்ன, இவர்களுக்கு மட்டமா? தூது வந்தே இந்த நாட்டின் தூய்மையைக் கெடுத்து விட்டார்கள். அக்பர் பாதுஷா காலத்தில் இரால்பு பிட்ச் வந்தான். ஜான் மில்டன்ஹால் அவனைத் தொடர்ந்தான். ஜஹாங்கீர் பாதுஷா காலத்தில் ஜரோகா தெரிசனத்திற்குக் காத்துக் கிடந்தான். வில்லியம் ஹாக்கின்ஸ், வில்லியம் எட்வர்டிஸ் தூது வந்தனர். ஸர் தாமஸ்ரோவும் எட்வர்டு டெர்ரியும் பரங்கிரியன் பராக்குக் கூறுபவரே! கோவா, சௌல், டய்யூ, டாமன், பஸீன் என்று போர்த்துகீசியர்கள் பிடித்

துக்கொண்டார்கள். டச்சுக்காரர்கள் பிப்பிலிப்பட்டினம், பழவேற்காடு, சதுரங்கப் பட்டினம், கொச்சி என்று ஆக்ர மித்து விட்டார்கள். தரங்கம்பாடி, ஸொராம்பர்—அந்நிய ஆதிக்கம் மிகுந்த இடங்களே. சந்திரநாகூர், மசூலிப் பட்டினம், புதுச்சேரி பிரெஞ்சுக்காரர்களின் பிரதேசங் கள்—எப்படிப் பரவினர்கள்? எல்லாம் பிரிந்து விட்டு வேடிக்கை பார்க்கும் விசித்திரமான திட்டத்தால்தான்! அதுமட்டுமல்ல. ஒட்டாத ஜோடிகளை முடிந்துவிட்டு அவை தவளையும், எலியுமாக தாம் கழுகாகிடும் கதைத் திட்டத்தால்தான்!''

இந்த வரலாற்று உண்மைகளைச் சற்றுக் காரமான வார்த்தைகளால் பின்னிக் கோத்து வருகையில் பாதுஷா குறுக்கிட்டார்.

''ஹூக்ளியிலே அவர்கள் பட்டபாடு தெரியாதோ! பாதுஷா ஷாஜஹானல் பட்ட உதைகள் எவ்வளவு?''

''ஹூக்ளி நிகழ்ச்சி எனக்கு நன்ருகத் தெரியும். தாதா அடிக்கடி சொல்வார். ஆனல் அதற்கு மூன்று மாதங்கள் போராட வேண்டியிருந்தது. மறக்கவேண் டாம்''

''அன்றைக்கும் கொள்ளைதான் காரணம். முஸ்லீம் யாத்திரிகர்களின் கப்பல்களைப் போர்த்துகீசியர்கள் பிடித்துக்கொண்டார்கள். சுங்கவரி கேட்டார்கள். திக கற்ற சிசுக்களைப் பிடித்து அடிமையாக்கினர்கள்''

''கொடுமைகளின் கோடியில் ஒரு துளி இது—ஆனல் பெரு வீரர் ஷாஜஹான் மூன்று மாதங்கள் செலவிட வேண்டியிருந்தது. காரணம் அவர்கள் பக்கம் ஒரு வகை யான பலம் அதிகம்''

''அப்படியானல்......?''

''அது மட்டுமல்ல பாதுஷா, அந்தப் போர்த்துகீசியர் களைவிட ஆயிரம் மடங்கு அதிக வலுவுடையவர்கள் ஆங்கிலேயர்கள்! சூரத்திலே விதை தூவினர், வளர்ந்து

விட்டதே! மசூலிப் பட்டினம், பாலஸோர், ஹரிஹர புரம், மதராஸ், தேவனும் பட்டினம், பம்பாய், கல்கத்தா என்று பெருக்கிவிட்டார்கள் அந்தத் தந்திர நரிகள். அதனுல்தான் யோசிக்கிறேன்''

"உன்னை வீரனென்று எடை போட்டேன். ஷுராஜ்! எனது சாய்ந்த தராசும், தேய்ந்த படிக்கல்களும் எடையைத் தவருகப் போட்டுவிட்டன போலும். உன் ஆயுள் முழுவதும் யோசி. வங்காளம் வீழ்கின்றவரையிலும் யோசி. உன் கோட்டை, கொத்தளங்கள் தூள் தூளாகச் சிதறுகிறவரை யோசி. என் புகழ் மங்கும் மட்டும் யோசி. ஆனல் தனியிடந்தேடு. யோசிக்க முகலாய பாதுஷாவின் கொலுமண்டபம் ஏற்றதல்ல. யோசி. போ, போ!''

"மாட்சிமை தங்கிய பாதுஷாவே, மன்னிக்கவேண்டும். தங்கள் மனநிலையை அறியவே ஓடோடியும் வந்தேன். யோசித்துக்கொண்டா நிற்பேன். இப்பொழுது புரிந்து கொண்டேன். இன்னும் சில நாட்களில் தைமூர் கொள்ளையை விடப் பெருங் கொள்ளை அந்த வெள்ளைய வெளியில் அடிப்பேன். டெல்லிக்குச் சேதி வரும். அப்பொழுது என் எடை சரியென்று புலப்படும். அந்த வெற்றியை நீங்களே கொண்டாடப் போகிறீர்கள். தங்கள் கட்டளையை மேற்கொண்டேன். வணக்கம் கணக்கில! வாழ்க நுங்கள் கொற்றம்!''

ஸுராஜ் உத்-தெளலா வணங்கினன். மூடீன்கானும் பணிந்தான்.

"வருகிறேம், விடை பெறுகிறேம்'' என்றனர் இருவரும்.

"இல்லை. நீங்கள் விருந்தினர்கள். இங்கு தங்கிச் செல்ல வேண்டும்''—பாதுஷா கூறிவிட்டார்.

மாகாணங்களை ஆளுபவர்களை நவாப் என்பர். சுபேதார் என்ற அதிகாரிகளும் உண்டு. அலிவர்திகான் அத்தகையவர்களில் ஒருவன். அவனது பேரன் ஸுராஜ்.

அதுவும் பாதுஷாவின் உயிரையே மீட்டிருக்கிறான். அவனை விருந்தூட்டாமல் அனுப்பலாமா? கூடாதுதான்!

அப்பொழுது பாதுஷாவின் கண்களில் யாரோ ஒரு காவலாளி உள்ளே நுழைவது தெரிந்தது. ஆம், உண்மையிலேயே ஒரு காவலாளி வந்து மண்டியிட்டான். "பாதுஷாவின் புகழ் ஓங்குக" என்று கரங்களைக் கண்ணில் ஒத்தி "சிறு துரும்பாகிய யான் ஒரு சேதியுடன் வந்துள்ளேன்" என்று மார்பிலும், பிறகு மண்ணிலும் கைகளை வைத்துத் தலையைத் தாழ்த்தினான். ஒரு காகிதச் சுருளை நீட்டினான். விடைபெற்றுத் திரும்பினான். அவன் அதைக் கையில் வாங்கிப் பிரித்துப் படித்தான். மன்னன் முகம் சிவந்தது. கண்கள் கனலைக் கக்கின. அவனது வளைந்த மீசை துடித்தது!

விருந்து !

பாதுஷா ஸுராஜுக்கு மிகவும் விமரிசையான விருந்தும், பாராட்டும் ஏற்பாடு செய்திருந்தான். டில்லியே அமர்க்களப்பட்டது. அரண்மனை யெங்கும் குதூகலம் வழிந்தது! எங்கும் ஆட்டமும் பாட்டமும்! எங்கு திரும்பினாலும் இசைமுழக்கம்! எப்பக்கத்திலும் காதுக்கினிய கீதம், அதற்கேற்ற நாதம் எழுப்பும் இசைக் கருவிகள் முழங்கிக் கொண்டிருந்தன.

மணிமண்டபத்தில் இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அதன்மீது வெண்மையான பட்டு விரிப்பு போடப்பட்டிருந்தது. கண்ணாடி கூஜாக்கள், கோப்பைகள், இன்னும் பலவகையான பண்ட மேந்தும் பாண்டங்கள் ஏராளமாக இருந்தன. சுற்றிலும் அமர்ந்துண்ணத் திண்டுகள் விரிக்கப்பெற்றிருந்தன. அந்த மண்டபத்தில் அடிக்கொரு அடிமைப் பெண் வீதம் நின்று கொண்டிருந்தார்கள். அடிமைப்பெண் என்று எளிதாகச் சொல்லிவிட்டாலும் அவர்கள் அழகை அவ்வளவு சுலபத்தில்

வருணிக்க முடியாது! பேரழகிகள் அவர்கள். அவர்கள் தங்கள் தோள்களில் மதுக் குடங்களைச் சுமந்து நின்றார் கள். வேறு சிலர் விசிறிகள் தாங்கி நின்றனர். மற்றும் சிலர் பீடாத்தட்டுகள் பிடித்து நின்றனர். மற்றும் சிலர் உக்காப் புகையைத் தயாராக்கிக் கொண்டிருந்தனர்.

மூவர் வந்தனர். அமர்ந்தனர்.

"ஸுராஜ், இது எனது சொந்த விருந்து. எனது உயிர் தப்புவித்த உனக்கு! மாலை மக்களின் முன்னால் நன்றியுரை, பிறகு......"

"இதெல்லாம் எனக்கு எதற்கு? என் கடமையைச் செய்தேன். அத்தோடு காலமும் ஒத்துழைத்தது"

ஸுராஜ் முறைப்படி கூறவேண்டிய உபசார வழக்கு வார்த்தைகளைச் சிதறினான். முடீனுக்கு மட்டும் அளவிறந்த மகிழ்ச்சி! தனது உயிர்த் தோழனுக்கு முகலாய பாதுஷா இத்துணை பரிவுடன் விருந்தும், வரவேற்பும் நடத்தினால் அதில் அவனுக்கும் பங்குண்டல்லவா? ஆகவே அவன் அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில் பெருமை கொண்டான். அதன் முழுவிபரமும் தெரிய ஆவல் கொண்டான்.

"பிறகு......என்று நிறுத்தி விட்டீர்களே!"

"அதுவா? இரவு ரஜினியின் நாட்டியம் உண்டு"

இரஜினி—இந்தப் பெயர் ஸுராஜுவின் இதயத்தைக் குத்திவிட்டது போலும்! அவன் முகத்தில் இரத்தக் குமிழ்களின் கும்மாளம்! ஆம்! அந்தப் பெயரே அவனை அப்படி ஆட்டிவைத்ததென்றால் அவளை நேரில் கண்டு விட்டால் என்ன செய்வான்? அவன் மனம் எத்தனை கோணங்களாக மாறித் தவிக்குமோ? யார் கண்டார்கள்! முடீனுக்கு மட்டும் அந்த ஆசை கிடையாதா? உண்டு, ஆனால் பெயர் கேட்டவுடன் பித்தனாகும் பேதைமை நிச்சயமாக அவனிடம் கிடையாது. அவன் வாழ்விலோர் குறிக் கொள் கொண்டவன். அதற்கு இடையூறாக வரும் எதி

லும் தலையிடுவதில்லை. தலையிட்டுத் தனது உயிர்த்திட்டத்திற்கு உபத்திரவத்தை வரவழைத்துக் கொள்வதில்லை.

மூவரும் பேசிக்கொண்டே விருந்தருந்தினர். இனிய உணவு, எல்லாம் இறைச்சிவகை! மதுவும் உண்டு! கேட்கவும் வேண்டுமா? பிறகு அவர்களை விருந்தினர் மண்டபத்திற்கு அனுப்பிவிட்டுப் பாதுஷா தனது தனியறையை நாடிச் சென்றான்.

ஸூராஜூவும், முடீன்கானும் ஒரே பாதையில்தான் நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

ஆனால் இருவரும் வெவ்வேறு உலகில் சஞ்சரித்தார்கள்! இவன் எண்ணம் கட்டிய கோட்டையை இன்னொருவனது சிந்தனைக் கோட்டை கேலிபேசிக் கொண்டிருந்தது. ஸூராஜ் இரஜினியின் உருவத்தை எப்படி அமைத்து அழகு பார்க்கலாம் என்று எண்ணினான். அவளது அங்கங்களை எப்படி அமைத்தால் அழகுவழியும் என்று கற்பனை செய்தான். பிறகு ஒவ்வொன்றிற்கும் உதாரணங்கள் தேடிக்கொண்டிருந்தான். முடீனோ வங்காளத்திலே தனது நெஞ்சைச் செலுத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு ஏனோ ஒருவித சந்தேகமும், சஞ்சலமும் இருந்த வண்ணமே இருந்தன. அவனால் அதிலிருந்து தப்பியிருக்க முடியவில்லை! அவனுக்கு உடனே திரும்பிப்போக வேண்டும் என்ற எண்ணம்! ஆனாலும் தன் நண்பனுக்கு ஏற்படும் பெருமைகளையும் கெடுத்து விடக்கூடாது என்று எண்ணியே இதுவரை ஊர்திரும்ப வேண்டிய செய்தியைப் பற்றி நினைவுகூடப் படுத்தவில்லை.

அந்தக் கடிதம்!

பாதுஷா தமது தனியறையில் நுழைந்ததும் அவருக்கு அந்தக் கடிதத்தின் நினைவு வந்துவிட்டது. அதனை மீண்டும் ஒருமுறை எடுத்துப் படித்தார். அவரால் அதனை நம்பவும் முடியவில்லை, நம்பாமலும் இருக்க முடிய

வில்லை! இங்கும் அங்கும் உலவிக்கொண்டே அதனைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தார்.

அந்தக் கடிதத்தின்கீழ் அமீன்சந்த் என்று கையொப்பமிட்டிருந்தது. பாதுஷாவிற்கு அமீன்சந்த்தை நன்ருகத் தெரியும்! அவனிடத்தில் அதிக நம்பிக்கையும் உண்டு. அவன் என்னதான் எழுதியிருந்தான்? உண்மையில் அது மிகவும் முக்கியமான செய்தி!

பாதுஷாவின் பாதகமலங்களுக்கு அடியேன் அமீன் சந்த் ஆயிரங்கோடி சரணங்கள்............ தொடக்கமே இப்படித் துதிபாடல்! உள்ளிருந்த ஒவ்வொரு எழுத்திலும் பலப்பல தொடர் கதைகள் புகுந்து மறைந்து புதைந்து கிடந்தன. ஆம்; ஒவ்வொரு எழுத்திலும் இரகசிய மூச்சுச் சீறிக்கொண்டு வந்தது!

ஸூராஜ்-உத்-தௌலாவின் வார்த்தைகளை நம்ப வேண்டாம். அதுவும் முடீன்கானின் நச்சுப் பொய்களை நம்பி விடாதீர்கள்! அவர்கள் வந்தது மதிப்பிற்குரிய சுபேதார் அலிவர்திகானுக்கே தெரியாது. அப்படியானுல் அவர்களின் போக்கினைப் புரிந்துகொள்ளுங்கள்.

அவர்கள் நம்பிக்கைத் துரோகிகள். அலிவர்திகானைக் கொல்லவும் அஞ்சமாட்டார்கள். அவர்களின் எண்ணமெல்லாம் வங்கத்தின் அரசுரிமை! அலிவர்திகானின் நட்புள்ளம் வெள்ளைய வியாபாரிகளுடன் சமாதானத்தை நாடுகிறது. இந்தப் பொல்லாதவர்களே அலிவர்திகானை வீழ்த்த முனைகிருர்கள். ஆனுல் வெள்ளையர்கள் சுபேதாருடன் சேர்ந்து கொள்கிருர்கள் என்ற எண்ணத்தால் அவர்களைப் பகைத்துக் கொள்கிருர்கள்.

உங்களிடம் அவர்களுக்கு மதிப்போ, பயமோ இருக்கிறது என்று கருதுகிறீர்களா? வங்கத்தையே தனியே துண்டித்துக்கொள்ளத் தவிக்கிருர்கள்.

............இப்படி ஓடியது!

அலிவர்திகானுக்கு இவர்கள் வந்ததுகூடத் தெரியாதாம்! எப்படி நாம் அதனைத் தீர்மானிப்பது? ஆனால் வெள்ளைக்காரப் பிரச்சினை சிறியது. அதுவும் உள்நாட்டு விவகாரம்! அதைக் கலந்து பேசிட இவ்வளவு தூரம் வருவானேன்? அப்படியே வந்தவர்கள் வெள்ளைக்காரர்களைப்பற்றி நான் குறைத்துப் பேசியும் அவர்கள் பரிந்து பேசுவானேன்?.........

பாதுஷாவின் மனம் இப்படிக் கேள்விமேல் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தது. ஆனால் அவரால் ஒரு முடிவிற்கும் வரமுடியவில்லை! எப்படி வரமுடியும்? வந்திருப்பவர்களோ சுபேதாரின் சொந்தப் பேரனும், அவனது நண்பனும், கடிதம் எழுதியிருப்பவனே ஒரு சாதாரண வியாபாரி! எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையோ உயிர்த் திட்டத்தைப் பற்றியது! நடவடிக்கைகளோ விசித்திரமாக உள்ளன! இந்தக் குழப்பமான நிலையில் அவர் என்ன செய்வார்! தடுமாறினார்......

அந்தக் கடிதம் அவரைப் பார்த்துச் சிரித்தது!

மீண்டும் சிந்தித்தான்.........

சரி, இப்பொழுது இந்தப் பிரச்சினையை எழுப்பவே கூடாது. சந்தேகம் எழுந்திருப்பதாகவே காட்டிக் கொள்ளவே கூடாது! ஸூராஜூக்கு நல்ல விருந்து நடத்தவேண்டும். அவனுக்கு மகிழ்வூட்டும் எல்லா ஏற்பாடுகளையும் வெற்றிகரமாக முடிக்கவேண்டும்

பிறகு ஸூராஜூவைத் தனியாக அழைத்து இந்தக் கடிதத்தைக் காட்டிக் கேட்கவேண்டும். அவன் இந்தக் கடிதத்தைப் படிக்கும்பொழுது அவனது முகமாற்றங்களை உன்னிப்பாக நோக்கவேண்டும். அவனது உள்ளத்தைப் பிட்டுப் பார்த்துவிட்டுப் பிறகுதான் ஒரு முடிவிற்கு வரவேண்டும்.

......இப்படி நிதானம் நீதி சொன்னது!

இந்தப் புளுகர்களை உடன் சிறையில் தள்ளவேண்டும். சிறையிலே தள்ளிவிட்டுத் தக்க வெகுமதிகள் தரவேண்டும்.

முகலாய பாதுஷாவை முண்டம் என்று எண்ணிக் கொண்டார்கள் இந்த எத்தர்கள். என்னிடமே ஏமாற்று வார்த்தைகளை வீசி, என் படையைத் துணைகொண்டு பட்டம்பெற்று வங்கத்தின் "சட்டாம் பிள்ளைகளாகப்" பார்க்கிறார்கள். மதிகெட்டவர்களின் நரித் திட்டத்திற்கு மண்டையில் அடி கொடுக்கவேண்டும்.

......கோபம் உமிழ்ந்த முடிவு இது!

உடனே ஸுராஜுவை அழைத்துக் கேட்டுவிட்டால், என்ன தலை முழுகிவிடும்?

......அவசரம் இப்படித் தூண்டியது!

பாதுஷாவின் மனம் ஒரு போர்க்களமாகி விட்டது! அங்கு நிதானம், ஆத்திரம், கோபம், சாந்தம், அடக்கம், அவசரம், பொறுமை, படபடப்பு—இப்படியே பலபேர் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டனர்! பாதுஷா என்ன செய்வார்? திக்குமுக்காடிப் போனார்.

'கவலையைத் தீர்ப்பது!'

சோணியைக் கண்டதும் ஸுராஜ் துள்ளிக் குதித்தான். முடீன் முகத்தைச் சுளித்தான். அவன் வரவு அவனுக்கு மகிழ்ச்சி தரவில்லையென்று தெரிந்தது!

சோணி வந்தான். எதிரிலிருந்த இருக்கையில் அமர்ந்தான்! அதற்குள் அங்கு நின்றிருந்த ஒரு அடிமைப் பெண் ஒரு கோப்பையை நீட்டினாள். அதில் ஒரு வாய் அருந்தினான்.

"உமக்கு இந்த இடம் எப்படித் தெரிந்தது?"

"இந்த இடம் என்ன, அண்டத்தின் எந்த மூலையிலிருந்தாலும் கண்டுபிடித்து விடுவேன்"

"அவ்வளவு சூரரோ ?"

"அந்த அசகாய சூரனையும் ஏமாற்றி விட்டீர்களே !"

என்ன............ !

வீரர்கள் விழித்தனர். தங்களைப் புரிந்துகொண்டான் என்று தெரிந்துகொண்டு திணறினர்.

"நீங்கள் சுபேதாரின் அடுத்த வாரிசு ஸூராஜ் என்று நேற்றுத்தான் தெரிந்துகொண்டேன்."

"அப்படியா...... ?"

"தாங்கள்தான் வீரர் முடீன்கான் என்று புரிந்துகொண்டேன்."

சோணி இப்படிக் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த ஸூராஜூக்கு அவசரந் தாங்க முடியவில்லை ! உடனேயே இரஜினியைப்பற்றிக் கேட்டுவிட வேண்டுமென்று அவன் நாக்குத் துடித்தது ! அதற்கேற்றாற்போல் முடீன் கூறினான்.

"வைர வியாபாரியாரே, நீங்கள் சொன்னீர்களே இரஜினி—அவள் இன்று ஆடப்போகிறாள். இருந்து பார்த்துவிட்டுப் போங்கள்."

"பருப்பில்லாமல் கல்யாணமா ?"

மூவரும் சிரித்தனர் !

"அது மட்டுமல்ல, இரஜினி வருங்கால சுபேதாரை வரவேற்கத் தவிக்கிறாள். இன்று அவள் இல்லம் தங்கள் வருகையால் புனிதமடையப் போகிறது !"

"என்ன, நீரே முடிவு கட்டிவிட்டீரே !"

"அதற்காகத்தானே என்னை அனுப்பினாள் !"

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையிலேயே, காவலன் ஒருவன் வந்து நின்றான். கொலு மண்டபத்து

நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுவிட்டு வருகை தரவேண்டுமென அரசாங்க அழைப்பையும் அளித்துவிட்டு வெளியேறினன்.

மணி ஓடியது. மங்கையர் வந்தனர்!

ஆடை, அணி வகைகளைப் பூட்டினர். அழகு பார்த்து முடியை வைத்தனர். பட்டு மேலங்கியைப் போர்த்தினர். மணத்தைப் பூசினர்.

பிறகு அவர்கள் தங்கள் விருந்து மாளிகையைவிட்டு மணி மண்டபத்தை யடைந்தனர். அங்கு ஏற்கனவே எல்லாப் பிரமுகர்களும் வந்து குழுமியிருந்தனர். ஊர்ப் பொதுமக்கள் ஏராளமாகத் திரண்டிருந்தனர்.

ஸூராஜூவையும், மூடீன்கானையும் கண்டதும் மண்டபத்தில் ஆரவாரம் எழுந்தது. வாழ்த்து முழக்கங்கள் மேகத்தோடு மோதின! இந்த வரவேற்பைப் பார்த்துத் திகைத்துப் போனுன் சோணி. அவர்களை மந்திரிகள் வரவேற்றனர். தங்கத் தவிசுகளில் அமரச் செய்தனர்.

பாதுஷா வந்தார்!

தர்பார் இராகத்தில் வரவேற்புக் கூறினுன் பராக்குக் கூறுவோன். மற்றவர்கள் "வாழ்க" போட்டனர். எழுந்து நின்று மரியாதை தெரிவித்தனர்.

பாதுஷா தன்னைப் பாம்பின் வாயிலிருந்து காப்பாற்றிய வீரன் ஸூராஜூவைத் தழுவிக்கொண்டார். பிறகு அவையோரைக் கம்பீரமாகப் பார்த்தார்.

"அவையோரே, இந்த வீரன் வங்கம் தந்த சிங்கம். தங்கக் கம்பிதான் குணத்தில்! மலைப்பாம்பு என்னைச் சுற்றி வளைத்துக் கொலை செய்யத் துடிக்கையில் இந்த வீரனது வாள் வெட்டித் துணித்தது அந்த நச்சரவை!

"எனக்கு உயிர் கொடுத்த உத்தமன், முகலாய வம்சத்தின் சுடரொளியைக் காத்த வித்தகன். இவன் புகழ் ஓங்குக."

—பாதுஷா பேசிய பாராட்டுரை இது!

பாதுஷா மீண்டும் அவையை நோக்கினர். அமைச்சரைப் பார்த்தார்.

"இனி தொடங்கட்டும் ஆட்டம்" என்ருர்!

ஆ, அங்கே மின்னல் பலவால் பின்னப்பட்ட 'மான்' ஒன்று வந்து நின்றது! அது, பாயாத புள்ளிமான்! ஆம், இரஜினிதான் மேடையிலே தோன்றினுள். அவளது பேரழகு யாரையும் மயக்கிவிடும். வைத்த கண்கள் வாங்காமல் பார்த்தனர். "தோள் கண்டார், தோளே கண்டார்" என்று இங்குதான் பாடவேண்டும்! அழகு என்னும் பேழையில் இளமையென்னும் வைரமாலை மறைத்து வைக்கப்பட்டது போன்றதுதான் அவளது அங்க அமைப்புகளும், அவைகளில் 'கதகளி' செய்யும் இளமையின் பூரிப்பும்!

அவளை ஸுராஜ் பார்த்தான்!

அவள் ஆடினுள், அவனது உள்ளம் பாடிற்று! ஆம்; மணி மண்டபத்தின் நடுவட்டத்தில் ஆடினுள்! ஆனல் உண்மையில் அங்கு கூடியிருந்தோர் அனைவரின் இதயங்களிலும் ஆடிக்கொண்டிருந்தாள்! ஸுராஜுவின் மனம், சதுர் மேடையைப்போல அடிக்கடி அதிர்ந்தது!

'கவலையைத் தீர்ப்பது நாட்டியக் கலையே' என்ற பாட்டிற்கு அவள் ஆடினுள். அவள் அங்குள்ளோரின் உள்ளங்களை உருக்கிவிட்டாள்! பாதுஷாவின் கண்கள் களிப்பை கக்கின. முடீன் நெஞ்சம் மகிழ்ச்சியில் அமிழ்ந்து எழுந்தது. இரஜினியின் ஆட்டம் அன்று அபாரமாக அமைந்து விட்டது என்று எல்லோரும் எண்ணி விட்டனர்.

ஆட்டம் தீர்ந்தது. ஸுராஜுவின் ஆசைப்பசி தொடங்கியது!

அவள் விடைபெற்ருள். தன் விழி வெட்டால்

ஸூராஜூவின் இதயத்தைப் பிட்டுப் போட்டு இரத்த வெள்ளம் பெருகச் செய்து விட்டுப் போய்விட்டாள். "போருளே பொற்கொடியாள், போருளே" என்று பாடிற்று அவனது ஏங்கிய மனம்.

அவை கலைந்தது. பாதுஷா வீரரிருவரையும் அழைத்துக் கொண்டு வெளியில் சென்றார், சோணிசந்த் தனது தந்திரவேலை பலிக்காது போலிருக்கிறதே என்று எண்ணமிட்டான். தனது கடிதம் வேலை செய்யவில்லையே என்று ஏமாந்தான். பிறகு அவர்கள் பின் சென்றான்!

நாட்டிய ராணி இரஜினி!

தன் மாளிகையைச் சேர்ந்த இரஜினி ஆடைகளையெல்லாம் மாற்றிவிட்டு வேறொரு புது அலங்காரம் செய்துவிட்டாள். இப்பொழுது அவள் புது வடிவெடுத்த மோகினிபோலவே காட்சி தந்தாள்! அவள் பிறகு இங்கும் அங்கும் உலாவிக் கொண்டிருந்தாள். அடிக்கடி மாடியிலிருந்து வீதியைப் பார்த்தாள்!

நிலவு சிரித்தது. அந்தச் சிரிப்பில் அந்த நீல மாளிகையும் தன் அழகைக் காட்டிக் கொண்டிருந்தது! 'நீளத் தாழ்வார ஓரத்திலே நின்று நித்தம் தவஞ்செய்யும் குமரிநல்லாள்' என்று கவிதை யமைத்துக் கொண்டிருந்தன மாளிகையைச்சுற்றி மணம் வீசிக்கொண்டிருந்த செடிகளிலே கொட்டை விழி விழித்துக் கொண்டிருந்த மலர்கள். அவைகள் எழுதிய கவிதையைப் பண்ணமைத்துப் பாடிக் கொண்டிருந்த வண்டுகள் காணக் காட்சியாய், கேட்கக் கீதமாய் இருந்தன.

இவைகளிலே அவள் மனம் பதியவில்லை. அது கட்டுக் கடங்காமல் எங்கேயோ ஓடிக்கொண்டிருந்தது.

.........அன்று திடீரென்று சோணிசந்த் வந்து நுழைந்தான். அவன் சொன்ன செய்திதான் அவள் மறந்திருந்த அவளது பழையநாள் வாழ்வைக் கிளறி

விட்டது! அவளின் வாழ்க்கை வரலாற்றில் சில பல ஏடுகளைப் புரட்டினால் ஒரு பெயர் தென்படும். அது அரங்கமாலா. அதுதான் அவளது உண்மைப் பெயர்!

அரங்கமாலா, இரஜினியாக மாறுவதற்குள் எவ்வளவோ பெரும் புரட்சிகள்! ஆனால் அந்தத் தோப்புத்தான் இத்தனைக்கும் காரணம்! அரங்கமாலா தன்னந்தனியாக மணம் வீசிய ஒரு 'காட்டு ரோஜா'. அவள் ஒரு நாள் ஸூராஜூவின் கரங்களில் சிக்கிவிட்டாள்! மலரைக் கசக்கிப் பிழிந்துவிட்டான்! அவளும் முதலில் தயங்கிப் பிறகே இணங்கினாள்! தோப்பிலே சந்திப்பு வளர்ந்தது! அவர்கள் சந்திப்பைச் சந்தி சிரிக்க வைக்க, அவள் வயற்றிலே ஒரு வைரி வளர்ந்தான்!

மாலா மருண்டாள். அவளது மாரனோ மனங் கலங்கவில்லை. தன் 'வீங்கிய' வயிறைக் காட்டிக் கெஞ்சினாள்! அவன் 'வெட்டிப் பேச்சால்' தட்டிக் கழித்தான்.

எல்லோரும் அறிய மணந்து கொள்ள வேண்டுமென்று வேண்டினாள். அவன் மறுத்தான். இல்லாவிட்டால் அந்தப்புரத்தில் அவனது ஆசை நாயகியென்றுவது அனுமதி தந்து விடுமாறு கேட்டாள். அவனோ தனது தாதாவின் கோபப்பார்வையைத் துணைக்கிழுத்தான்.

மாலா மனமுடைந்தாள். வங்கத்தை விட்டு ஓடத் தீர்மானித்தாள். அவளின் 'அவசர சேர்க்கை'யால் கிடைத்த 'அறுவடை'யைக் கங்கையிலே விட்டெறிந்தாள்! பிறகு ஓடினாள். டில்லியில் நாட்டியராணி இரஜினியானாள்!

இந்தத் துயரக் கதையை நினைவூட்டி விட்டது சோணிசந்தின் சேதி!

"இரஜினி இன்று வங்கத்திலிருந்து ஸூராஜ், சுபேதாரின் பேரன் வந்திருக்கிறான். அவனை எப்படியும் மயக்கி இங்கே தங்கவைத்துவிடு! பிறகு வங்கம் நம் கைவசம்"

ஸூராஜ்-இந்தப் பெயரைக் கேட்டவுடன் நெருப்பை

மிதித்து விட்டது போலத் துடித்து விட்டாள் அவள். எப்படியும் அவனைப் பழிக்குப் பழி வாங்கிவிடுவது என்ற முடிவோடு ஒரு பெருமூச்செறிந்தாள். மேலும் அவள் அமீன் சந்த்தின் 'ஜெ ராம் சந்த்' கூட்டத்தைச் சேர்ந்த வள்! அவள் வீட்டில்தான் திருட்டுச் சாமான்கள் பல பதுக்கி வைக்கப்படும். பல கள்ள வியாபாரத் தலைவர்கள் தங்குவார்கள். ஆகவே, சோணிசந்த்தின் வார்த்தைகளை அவள் நிறைவேற்றுவதன் மூலம் தலைவனின் கட்டளையை மீறவில்லை என்ற திருப்தியும், பழிக்குப் பழி வாங்கி விட்டதால் ஏற்படும் அமைதியும் கிடைக்கும்!

"அவன் இங்கு தங்கினால்......?"

"அலிவர்திகான் சாவான். மக்களிடையே கிளர்ச்சி பிறக்கும். புரட்சி வாடை வீசும். அப்பொழுது நம் தலை வர் தக்கதோர் ஆளைத் தலைமையாக்குவார். முடி அவன் தலையில். பிடி மட்டும் நமது தலைவர் கையில்!"

"இப்படியானால் இவனுக்கு முடி கிடைக்காதே"

"நிச்சயமாகக் கிடைக்காது!"

இரஜினி யோசித்தாள். பிறகு ஒரு பெரிய திட்டம் போட்டாள். தானே ஆடுவதாகப் பாதுஷாவின் அனுமதி கோரினாள். அன்று தனது திறமையத்தனையும் காட்டி ஆடினாள். அத்துடனல்லாமல் சோணிசந்த்தையும் அவனை எப்படியும் அழைத்து வரும்படி அனுப்பி விட்டாள். அத னால்தான் பாதைமேல் பார்வையைப் பாய்ச்சி நின்றாள்!

மணியாகவாக அவளது மனம் வாடியது. எண்ணம் எங்கெங்கோ ஓடியது!

ஆனால்.........?

வங்கத்தின் சுபேதாராகப் போகும் ஜுராஜுவும், சூழ்ச்சிக் குழுவின் ஒற்றன் சோணிசந்த்தும் வந்துகொண் டிருந்தனர். மாடியிலிருந்து இந்தக் காட்சியைப் பார்த்த அவள் மகிழ்ச்சி மிகுதியால் நாட்டியமே ஆடினாள்!

உள்ளே ஓடினுள். படுக்கையிலே மலர்களைத் தூவினுள். பன்னீரைத் தெளித்தாள். பால் செம்பில், கற்கண்டுப் பொடியைத் தூவினுள். கண்ணுடி யருகே சென்று அலங்காரங்களைச் சரி பார்த்தாள்! ஆடைகளைத் திருத்திக்கொண்டாள். வாயிற்படிக்கு ஓடினுள் அவர்களை வரவேற்க!

ஸுராஜ் நுழைந்தான். அவள் சிரிப்பால் வரவேற்றுள்! சோணி நழுவிவிட்டான். இனி அவனுக்கு அங்கென்ன வேலை? பிறகு இருவரும் மாடிக்குச் சென்றனர்.

ஸுராஜ் பேச்சை ஆரம்பித்தான்.

"இரஜினி, நீ மிகவும் அழகி!"

"வங்கமண் அப்படி வளர்த்துவிட்டது"

"என்ன, நீ வங்கத்தில் பிறந்தவளா?"

"அதனுல்தான் வங்க சுபேதாரை வலுவில் அழைத்தேன்!"

ஸுராஜ் கட்டிலிலே அமர்ந்தான். அவள் மட்டும் நின்றுகொண்டிருந்தாள்!

"உன் கால்கள் கடுக்குமே!"

"ஆட்டக்காரிக்கு அந்த நோய் கூடாது!"

இரஜினி சிரித்தாள். ஸுராஜுவின் விலா எலும்புகள் நோக ஆரம்பித்துவிட்டன.

"ஒரு ஆட்டம் நான் பார்க்கலாமா?"

"ஒன்றென்ன ஓராயிரம் முறை ஆடுவேன் உங்களுக்காக!"

நாட்டியராணி அப்படிக் கூறிக்கொண்டே ஆடத் தொடங்கிவிட்டாள். ஆட்டமா அது, ஒவ்வொரு எடுப்பிலும், பிடிப்பிலும் கலை பேசிக்கொண்டிருந்தது! கலையை அனுபவிக்கிற அளவு ஸுராஜுவை அந்த இடம் விட்டு

வைக்கவில்லை. பட்டு விரிக்கப்பட்ட பஞ்சணை, உணர்ச்சியைக் கிண்டும் படங்கள், காமத்தைப் பெருக்கும் நிர்வாணச் சிலைகள்...... அவனைச் சித்திரவதை செய்யத் தொடங்கிவிட்டன!

"இரஜினி, நீ களைத்துவிட்டாய்!" என்றான் அவன்.

அதற்குள் பாலைத் தன் கையிலேந்தி அவள் அருகிலே வந்தாள்.

"எனக்கு இந்தப் பால் வேண்டாம்"

"பின்........."

"..............."

"சுத்தக் குறும்பு"

இரஜினி அவனது கன்னத்தைக் கிள்ளினாள். கன்னத்தையா கிள்ளினாள்? அவன் உள்ளத்தைக் கிள்ளி உணர்ச்சியை அள்ளிவிட்டாள்!

அன்று இரவு வீணாகவில்லை. பஞ்சணைக்கும் உடம்பு வலி அதிகமாகி விட்டது! திடீரென்று முடீன் குரல் கேட்டபொழுதுதான் அவன் விழித்துக்கொண்டான்.

நள்ளிரவில்!

முடீன்கான் தன்னந் தனியனாக அந்தப் பெரும் மாளிகையிலே உலவினான். பிறகு தன் படுக்கையிலே படுத்துக்கொண்டான். அன்று ஸுராஜ் நடந்துகொண்டது கொஞ்சமும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அந்தச் சோணி ஒரு பெரிய வஞ்சகக்காரன் என்று அவனுக்குப் பட்டது. முடீனுக்கு அவனுடன் ஸுராஜுவை அனுப்பப் பிரியமில்லை. அவனே பிடிவாதமாகப் போய்த் தானாகவேண்டும் என்று கூறிவிட்டான். முடீன் அவன் முடிவின் குறுக்கே நிற்க முடியவில்லை! ஆகவே அனுப்பி

N51

விட்டான். எனினும் அவன் மனம் மட்டும் அமைதியடையாது தவித்தது.

சுந்தரி யொருத்தி விசிறினுள். அவளைப் பார்த்ததும் அவளைச் சைகை காட்டி விரட்டிவிட்டான். அவன் மனம் தனிமையை நாடியது. அவன் எதையோ இழந்துவிட்டவன்போல ஏங்கிக் கொண்டிருந்தான். கடைசியில் தூக்கம் அவனைத் தழுவியது!

நள்ளிரவில்.........

மூடீன் திடீரென்று விழித்துக்கொண்டான். யாரோ வருங் காலடியோசைகள் கேட்டன.

திடு, திப், தப், தொப்.........

காவற்காரனுக இருக்குமோ? பணிப் பெண்கள் இவ்வளவு சத்தம் வருகிற மாதிரியில் நடக்கவே மாட்டார்களே! பின் யாராக இருக்கலாம்? மூடீன் கண்களை மூடியபடியே யோசித்தான். அதற்குள் காலடியோசைகள் அவன் அறைக்குள்ளாகவே கேட்டன. ஐயோ, அப்பொழுது பாதுஷா ஷாஆலமே வந்தான்! மூடீன் எழுந்து வணக்கந் தெரிவித்தான். அவன் முகத்தில் பயம் பரவியிருந்தது.

"ஸ ராஜ் எங்கே?"

"......... அவர் இங்குதான் படுத்திருந்தார்"

"காணுமே"

"இரவில் உலவச் செல்வதும் உண்டு"

"சரி, இதைப் படி"

பாதுஷா அந்தப் பழைய கடிதத்தை அவன் கையில் கொடுத்தான். மூடீன் அவசர அவசரமாக அதனைப் படித்தான். அவன் முகம் பயங்கரமாக மாறிவிட்டது! அவன் கண்கள் சிவந்தன. மீசை துடித்தது!

10553

"இது சுத்தப் பொய், வடிகட்டின அயோக்கியத் தனம்''

"கொஞ்சமும் உண்மையில்லையா ?''

"பாதுஷா அவர்களே, உங்களிடம் ஒளிக்காமல் சொல்லி விடுகிறேன். சுபேதார் அவர்கள் வெள்ளைய ரிடம் வெறுப்புக் காட்டுவதில்லை. ஆகவே அவரது உதவி யில்லாமல் தங்கள் உதவிகொண்டு தாக்கலாம் என்ற எண்ணத்துடன் வந்தோம். இந்தக் கடிதம் எழுதியவன் பரிதாபத்திற்குரியவன். இவன் மகள் அழகி. ஆகவே ஸூராஜ் அவள் இன்பத்தை ஒருநாள் சூறையிட்டு விட்டான் மேலும் இவன் முஸ்லீம் துவேஷி! ஆகவே பழிக்குப் பழி வாங்க இந்தப் பாதகச் செயலைச் செய்திருக் கிறான். அவனை வங்கம் போய்ப் பார்த்துக்கொள்கிறேன்.''

"அப்படியானால்.........?''

"வங்கத்தில் ஏதோ பெரிய சூழ்ச்சிக் குழு வேலை செய்கிறது என்று தெரிகிறது!''

"நீங்கள் உடனே வங்கம் செல்லுங்கள். ஆனால் இதை எழுதியவனை ஒன்றும் செய்துவிடாதீர்கள். அவன் நடவடிக்கைகளை மட்டும் கவனித்துக் கொள்ளுங்கள்''

பாதுஷா விடைகொடுத்து விட்டுச் சென்றான். முடீன் தன் சாமான்களை எடுத்துக்கொண்டு தோட்டத் துப் பக்கம் சென்றான். அங்கு அவனது குதிரை அவனைக் கண்டு கனைத்தது. தன் குதிரையின்மீது ஏறிக்கொண்டு ஸூராஜூவின் குதிரையையும் ஒரு கையில் பிடித்துக் கொண்டு சோணிசொன்ன முகவரியிலுள்ள மாளிகையை நோக்கி நடந்தான்! அவன் குதிரை மெதுவாகச் சென்றா லும், அந்தக் குதிரையடிகள் நன்றாகக் கேட்டன. ஏனெனில் ஊரில் அவ்வளவு அமைதி. ஆம்; அப்பொழுது நள்ளிரவு!

கடைசியாக இரஜினியின் நீலமாளிகை வந்தடைந் தான். குதிரையை விட்டிறங்கி உள்ளே நுழைந்தான்.

வெளிவாயிற் கதவு திறந்து கிடந்தது. மூடன் ஆச்சர்யத் தோடு உள்ளே நடந்தான். எங்கும் இருள் கவ்விக் கொண்டிருந்தது. ஆனால் இடையிடையே மங்கலான விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. தாழ்வாரத்தைத் தாண்டியவுடன் ஒரு அறையில் பேச்சுக்குரல் கேட்டது. எட்டிப் பார்த்தான். இரஜினிதான் அவ்வளவு மெது வாகப் பேசிக்கொண்டிருந்தாள். எதிரில் சோணி உட்கார்ந்திருந்தான்.

அவன் தலையைத் தன் கைகளால் தாழ்த்தி அவன் காதுக்குள் எதையோ சொன்னாள்! சோணி பயந்துவிட் டான்.

"இரஜினி, அப்படிச் செய்யாதே"

"என் விருப்பம்"

"தலைவரின் கட்டளை அதுவல்ல"

"என் பழங்கதை உனக்குத் தெரிந்தால் இப்படிப் பேசமாட்டாய்."

"சரி. உன் எண்ணம்போல் செய்"

"ஜே ராம் சந்த்"

இரஜினி எழுந்து வெளியே வந்தாள். மூடன் ஒரு தூண் மறைவில் ஒளிந்துகொண்டான். அவள் கொஞ்ச நேரம் அப்படியே நின்றாள். பிறகு தயங்கித் தயங்கி மாடிப்படிகளில் ஏறினாள். அவனும் அவளைத் தொடர்ந் தான். பிறகு அந்த அலங்காரமான பள்ளியறைக்குள் புகுந்தாள். அங்கு கமழ்ந்த நறுமணம் வெளியிலும் வந்து விளையாடியது!

அங்கு ஸுராஜ் ஆழ்ந்த நித்திரையிலிருந்தான். அவன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான். அவள் அருகே சென்று நின்றாள். பெருமூச்சுவிட்டாள். பிறகு அவனது ஒளி வீசும் முகத்தைத் தன் மலர்க்கரங்களால் தடவினாள். அப்புறம் அவன் பக்கத்தில் படுத்துக்

கொண்டாள். கொஞ்சநேரம் அப்படியே அசையாது படுத்திருந்தாள். பிறகு அவன் பக்கமாகத் திரும்பினுள். அவன் உடலில் தன் கரங்களை வைத்தாள். அவன் உறக்கம் கெடவில்லை. பிறகு தன் கரங்களால் அவன் கால்களைப் பின்னிக்கொண்டாள்! அப்பொழுதுதான் அவளை நெருங்கித் தழுவிக்கொண்டான். அதுவும் தூக்கத்தில் செய்த செயல்தான்! அவள் அவன் உதட்டில் தேனைத் தடவினுள். தன் குங்கும நிற இதழ்களால்! ஆனுல் அந்தக் கோலத்திலேயே ஒரு கரம் தன் இடுப்பிலே ஒளிந்திருந்த வாளை இழுத்துவிட்டது வெளியில்! அடுத்த கணத்தில் அது ஸுராஜுவின் உடலில் பாய்ந்திருக்கும். ஆனுல் மூடன் திடீரென்று உள்ளே நுழைந்தான்.

"அடி பாதகி, கொல்லவா நினைத்தாய்!" என்று கூவினுன், நடுநடுங்கிப் போனுள் அவள். இந்தக் கலவரத்தில் ஸுராஜ் விழித்துக்கொண்டான். கீழே திக்திக்கென்று அடித்துக்கொண்ட நெஞ்சைத் தன் ஒரு கையால் அழுத்திக் கொண்டிருந்த சோணிசந்த் மெதுவாக ஏறி வந்தான் மாடிப்படிகளில்!

"கண்ணே, வாள் ஏது உனக்கு?"

"நான் தேடி எடுத்து வந்தேன்?"

"ஏன்?"

"உங்கள் உயிரையே குடித்துவிட!"

"என்ன?..............."

இரஜினியின் பெண்மையும், அதற்கு இயல்பாக உரிய பயமும் பறந்துவிட்டன. அவள் ஆத்திரமாகவே வார்த்தைகளை வீசினுள்.

"அரங்கமாலா இவள்!"

"ஆ, அரங்கமாலாவா?......"

ஸுராஜுவுக்கு ஆத்திரம் மறைந்து ஆச்சர்யம் பிறந்துவிட்டது!

"மாலா! என்னை மன்னித்து விடு. இப்பொழுது என்னுடன் வந்துவிடு. கழிந்த காலத்தில் நான் செய்த பாவத்திற்கு இதனைக் கழுவாயாகக் கொள்ளுகிறேன்" என்று நெஞ்சு நெகிழக் கெஞ்சினுன். அவள் அவனைக் கண்டபடி தாக்கினுள் காரமான வார்த்தைகளால்! அவனே மண்டியிட்டான். மன்ருடினுன்! முடீனுக்கு ஒன்றும் விளங்கவில்லை—ஒரு வேளை குடிமயக்கந் தெளியவில்லையோ என்று எண்ணினுன். ஆனல் ஸுராஜ் உண்மையிலேதான் அவளது மன்னிப்புக்கு மன்ருடினுன்!

இரஜினி, என்னதான் பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தால் மனம் மரத்துப் போயிருந்தாலும், ஓர் பெண்தானே! நெஞ்சிளகி விட்டது. அவள் 'குபுக்' கென்று அழுதுவிட்டாள். மண்டியிட்டிருப்பவன் ஒரு சுபேதார். அவன் அவளது மன்னிப்புக்கு, அதுவும் ஆண்டு பல உருண்டு அழித்துப் போடப்பட்ட ஒரு பழைய குற்றத்திற்கு, கேவலம் ஒரு ஆதரவற்ற, ஒரு விபசாரத்தால் நாறிப்போன பெண்ணிடம் மண்டியிட்டுவிட்டான்! அவள் வாளை வீசினுள். அவனே தாளைத் தழுவுகிருன். காரணம் என்னவோ? நடிப்புத்தான் அப்படி நிலைமையைச் சிக்கலாக்கிற்ரே? அவள் திடீரென்று கீழே விழுந்து தழுவிக்கொண்டாள். அவன் முகத்தோடு முகம் பொருத்தித் தேம்பினுள். அவன் தேற்றினுன்.

"காதலா, என்னை வங்கத்திற்கு அழைத்துப் போனல் உங்கள் பள்ளியறையின் கனக மணிக்கட்டிலை மட்டும் அலங்கரிக்க மாட்டேன். அரசாங்க வேலைகளையும் கவனிப்பேன். காரணம், வங்கத்திலே வட்டமிடும் 'வாழ்வுறிஞ்சிகள்' கூட்டத்துடன் எனக்குத் தொடர்புண்டு"

இந்த நேரத்தில் அங்கிருந்த சாளரத்தின் திரை அறுந்து விழுந்தது. அடுத்த கணத்தில் ஒரு சொருகுவாள்

பறந்து வந்தது! அந்தோ. அவள் மார்பைத் துளைத்து விட்டது! பெண்மை சிரித்தது அங்கு. ஆண்மை அழுதது!

நச்சுக் கோப்பை!

வைத்தியர் வரப்பிரசாதர் அந்தப்புரத்திற்குள் நுழைந்தார். அங்கு அழகான கட்டிலில் அலிவர்திகான் கிடத்தப்பட்டிருந்தான். அருகில் நளினி உட்கார்ந்து கொண்டிருந்தாள். சில பெண்கள் அங்கும் இங்கும் சிதறி நின்றனர். வைத்தியர் நோயாளியருகே சென்று நாடித் துடிப்பை நன்ருகச் சோதித்தார். நாக்கின் நிலைமையால் நோயின் நடப்பைக் கணித்துக் கொண்டார். வயிற்றின் அடிப்பாகத்தைத் தட்டிப் பார்த்தார். பிறகு சிறிது யோசித்தார்!

அப்பொழுது அங்கு திவான் மோஹன்லால் வந்து நுழைந்தார்.

"மருந்துவரே, சுபேதாரின் உடல் நிலை......"

"மோசந்தான்"

"உங்கள் திறமைக்கேற்ற தேர்வு இப்பொழுது"

"இதில் என்ஞல் 50 அம்சம் வாங்குவதும் கடுமை"

"சரி, ஏதோ முயற்சி செய்கிறேன்"

மருத்துவர் தனது மருந்துப் பெட்டியைத் திறந்தார். அதிலிருந்த ஒரு சிறு பொட்டலத்தை எடுத்து நளினியிடம் கொடுத்தார்.

"இதனைத் தேனில் குழைத்துக் கொடுக்கவேண்டும். மாலையில் வந்து பார்க்கிறேன்."

திவானும், மருத்துவரும் வெளியில் வந்தனர். வரும் வழியில் அவர்கள் பேசிக்கொண்டே வந்தனர்.

"சுபேதாருக்கு ஏதேனும் மனக்கவலை இருக்குமோ?"

"இல்லாமல் என்ன, தனது பேரனைப் பார்க்க வேண்டும் என்ற பேரவா இருக்கிறது"

"அவர்களை அவசியம் வரவழையுங்கள் !"

"அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள் என்று செய்தி கிடைத்துள்ளது"

வைத்தியர் சற்றுக் கனத்த குரலுடன் அழுத்தந் திருத்தமாகவே பேசினார். அவர் மேலும் ஒரு கேள்வியைத் திடீரென்று கிளப்பினார் !

"சுபேதார், இறந்துவிட்டால் யாருக்கு இலாபம்? அவர் சாவைத் துரிதப்படுத்த ஆசைப்படுபவர்களும் அரசாங்கத்திலிருக்கிறார்களா ?"

திவான் சிலையானார். வழியிலே நின்றுவிட்டார்.

"ஏன்............?"

"அவரது வாழ்வை நான் நீட்டினால், என் வாழ்க்கை நாளை வெட்டி நறுக்கிச் சுருக்கி விடுவார்களாம். மாறு வேடத்தில் இரவில் வந்து பயமுறுத்துகிறார்கள் !"

"நீர் எதற்கும் அஞ்சவேண்டாம். நானிருக்கிறேன். அந்த வஞ்சக வட்டாரத்தை வெட்டிப் புதைக்க வெகு விரைவில் ஒரு திட்டம் தீட்டுகிறேன்"

இருவரும் பிரிந்தனர்.

வைத்தியர் வரப்பிரசாதர் அமீன்சந்தின் மிரட்டுதல்களால் நடுங்கிப்போனார். ஆனால் அவரது மனச்சாட்சி அவரைக் கிள்ளிக்கொண்டே இருந்தது ! ஆகவே அவர் வெகுநேரம் யோசித்தார் ! சுபேதாரைக் கொன்றுவிட்டுப் பழியை நம்மீது போட்டால் என்ன செய்வது? அமீன்சந்த் எதற்கும் துணிந்தவன் ! வஞ்சகமாக நஞ்சிட்டுக் கொல்வது தியாகமாம், தேசத் தொண்டாம் ! இதுதான் ஆரியச் சூழ்ச்சி. ஆரிய வஞ்சகர்களின் அநியாயத் திட்டம்......... எண்ணினார். பிறகு ஒரு முடிவிற்கு வந்தார். எப்படியும் முன் கொடுத்த நஞ்சிற்கு

மாற்று முறிப்பு மருந்து கொடுத்துவிடுவது என்று எண்ணிவிட்டார். ஆகவேதான் திவானிடமும் செய்தியைச் சொல்லி வைத்தார்.

மாலை வந்தது............

வரப்பிரசாதர் மீண்டும் வந்தார். இப்பொழுது கையிலே இரண்டு பாட்டில்கள் கொண்டுவந்தார். ஒன்று நஞ்சு, பிறிதொன்று நஞ்சைக் கொன்று நல்ல இரத்தம் பாய்ச்சும் முறிப்பு மருந்து! நளினி வரவேற்ருள். வைத்தியர் ஒரு கண்ணுடிக் கோப்பையை வரவழைத்தார். அதில் மருந்தை ஊற்றப்போனுர். அலிவர்திகானே சுயநினைவிழந்து கிடந்தான். நளினி வைத்தியரின் முகத்தை அப்படியே சித்திரம் வரைவதற்காகக் கூர்ந்து பார்க்கும் சைத்திரிகனைப்போலப் பார்த்தாள். பிறகு சட்டென்று அவரது கையைப் பிடித்தாள்.

"ஏன் இப்படி ஏமாற்றுகிறீர்?"

"என்ன?........."

"இது அமீன்சந்த் கேட்ட அவுடதமா?"

அவர் விழித்தார். அவள் கோப விழி வீசினுள். அவள் திவானுடன் பேசிய உரையாடலை உடன் வந்தே ஒட்டுக்கேட்டாள் என்பது யாருக்குத் தெரியும்? வைத்தியர் பேசிய வார்த்தைகளைக் கூர்ந்து கேட்க அவள் சந்தேகப்பட்டு விட்டாள். ஆகவேதான் அப்படி மறித்து நிறுத்தினுள்!

நளினி அவரது கன்னத்தைக் கிள்ளிவிட்டுச் சிரித்தாள். கிழவர் தடுமாறினுர்!

"சரி, இந்தா அவர் கேட்ட அவுடதம்"

நஞ்சை அவரது நடுங்கும் கரங்கள் ஊற்றித் தந்தன. நளினி அதனைத் தன் கையிலே வாங்கினுள். பிறகு அலிவர்திகானைத் தூக்கத்திலிருந்து எழுப்பினுள். அவன் பார்வை பஞ்சடைந்திருந்தது! அவனை மெதுவாகத்

தூக்கி அமரச் செய்தாள். அவனோ அவள் தோள்மீதே துவண்டு விழுந்தான். அமீன் முகத்தைத் திருப்பி அந்தக் கோப்பையை அவனது உலர்ந்த உதடுகளில் பதித்தாள். அவன் மெதுவாக "மொடக் மொடக்"கென்று குடித்தான். அவளது மலர்க்கரம் அவனது மார்பைத் தேய்த்துவிட்டது! அந்தோ, சிறிது நேரத்தில் அவன் கண்கள் தானே மூடிக்கொண்டன. அவள் அவனைத் தழுவலிலிருந்து தலையணையில் தலையை வைத்துப் படுக்க வைத்தாள். அவன் மூச்சு மெதுவாக வந்துவந்து போய்க் கொண்டிருந்தது.

திரும்பினர்!

ஸுராஜுவும், முடீனும் 'ஐயோ' என்று பதறி விட்டனர்............

செத்தவள் எழுவா போகிறாள்? சிறிது நேரம் கண்ணீர் விட்டனர். அவளை அந்தப் பஞ்சணையில் கிடத்தினான் ஸுராஜ். ஆனால் முடீன் சாளரத்தை நோக்கினான். அங்கே சோணியின் முகம் தெரிந்தது. அவனை ஓடிப் பிடிக்கவேண்டும் என்று எண்ணி வெளியில் வந்தான். ஆனால் எப்படி அந்த இடத்தைவிட்டு மறைந்தானோ தெரியவில்லை. அவன் 'அந்தர்த்யானம்' ஆகி விட்டான்!

முடீன் திரும்பி வந்தான். ஸுராஜ் அந்த வதங்கிய மலரின் இதழிலே தேனிருக்குமா என்று தேடிக்கொண்டிருந்தான். அவன் கண்களில் நீர் வற்றிவிட்டது! மதுக் கோப்பைகளைப்போல மங்கையரை மதித்து வந்த அவன், அன்று அவளின் சாவுக்காக அழுதுவிட்டான். ஆம்; அன்றைய அனுபவம் அவனுக்குப் புதிது! பஞ்சணையில் கொஞ்சலும், மிஞ்சலும், பிறகு அஞ்சலும்,......... அவன் கண்டவை! கத்தி வீச்சோ, விரிவுரையோ, பிறகு இரத்த வெள்ளத்திலே பிணமோ கண்டதில்லை. காணுவோம்

என்று எதிர்பார்க்கவுமில்லை. அவன் நண்பன் அவனை மெதுவாகத் தட்டினான்.

"ஸுராஜ், இனி நாம் காலங் கடத்துவது முறையல்ல!"

"பாதுஷாவின் வேண்டுகோள்தான் இந்த விபரீத அனுபவத்திற்கெல்லாம் காரணம்"

"பாதுஷா நள்ளிரவில் நமக்கு உத்தரவு கொடுத்துவிட்டார். நடந்ததைப் போகும்பொழுது சொல்லுகிறேன். புறப்படுங்கள்."

இருவரும் புறப்பட்டனர்.

நாட்கள் புரண்டோடின. அவர்கள் பயணமும் கடுவேகமாக ஓடிக்கொண்டிருந்தது!

இடையிலே வந்த சாவடிகள், மண்டபங்கள், தங்குமிடங்கள் எங்கும் அவர்கள் அதிக நாட்கள் தங்கவே இல்லை. அவர்கள் எண்ணமெல்லாம் மூர்ஷிடாபாத்தில் சென்று பதிந்திருந்தன! அவர்கள் எப்பொழுது அலிவர்திகானைச் சந்திப்போம் என்று தவித்தனர். வங்கத்தின் உள்நாட்டு விவகாரங்கள் புகைந்துகொண்டிருக்கின்றனவா, எரியத் தொடங்கிவிட்டனவா என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் குதிரைகளும் தங்கள் தாய்நாட்டிற்குப் போகிறோம் என்ற எண்ணம் உந்த, உந்த ஓட்டம் ஓட்டமாகப் போய்க்கொண்டிருந்தன.

அவர்கள் தலைநகரை நெருங்கிக்கொண் டிருந்தனர். இன்னும் ஒரு நாள் பயணத்தில் ஊர் சேர்ந்துவிடலாம். ஆகவே அவர்கள் உற்சாகமாகவே போய்க்கொண்டிருந்தனர்.

அந்தப் பாதையின் நடுவழியே ஒரு கட்டைவண்டி குடைசாய்ந்து கிடந்தது.

இருவரும் அங்குபோய்க் குதிரைகளை விட்டிறங்கினர். அவர்கள் நடந்த விபத்தின் விபரத்தை அறியப் பார்த்தனர்.

பாதையின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவன் ஓடிவந்தான். அவன் முகத்தில் பரபரப்பு 'வெளிச்சம் போட்டது.' அவன் ஒரு பட்டிக்காட்டுச் சிறுவன் போலிருந்தான்.

"ஐயோ, இந்த வண்டியில் பூட்டப்பட்டிருந்த காளைகள் மிரண்டோடி விட்டன. சுபேதார் அலிவர்திகான் சாகக் கிடக்கிறார். இந்த வண்டியில் வந்த வைத்தியர் அடிபட்டு அவரை ஒரு வைத்தியர் வீட்டிற்கு அனுப்பி விட்டேன். நான் மூர்ஷிடாபாத் போயாகவேண்டும். என்னை அழைத்துப் போங்களேன்!" என்று கூவினான்.

இருவரும் திடுக்கிட்டனர்.

"நீ வந்து விட்டால் வண்டி என்ன ஆவது? அப்படிப் போவதானால் அந்த அடிபட்ட வைத்தியர் சென்ற வண்டியிலேயே போயிருக்கலாமே!" என்றனர்.

"காளைகளைப் பிடித்து விடலாம் என்று நினைத்தேன். அவைகள் கிடைக்கவில்லை"

அவனை முடீன் குதிரையில் ஏற்றிக்கொண்டான். பிறகு இருவரும் துரிதமாகத் தலைநகர் நோக்கி நடத்தினர். போகும்பொழுது அவர்கள் தலைநகர் சென்றவுடன் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றிப் பேசிக்கொண்டே சென்றனர்.

முதலில் அலிவர்திகானைச் சந்திக்கவேண்டும். பிறகு திவானைக் கலந்து பேசவேண்டும். அப்புறம் அமீன்சந்தை அழைத்துவரச் செய்து அந்தக் கடிதத்தைப் பற்றிக் கேட்கவேண்டும். பிறகு வெள்ளைக்காரர்கள் விவகாரத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்...என்று திட்டமிட்டுக் கொண்டே சென்றனர். இவர்கள் வார்த்தைகளைக் கேட்

டுக்கொண்டிருந்த அந்த வாலிபனின் முகம் விகாரத்தை விசிறிக்கொண்டிருந்தது.

அவர்கள் தலைநகரின் கோட்டை வாயிலை யடைந்ததும் அவனை இறக்கிவிட்டனர். பிறகு அவனைப் பார்த்து மூடன் ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தான்!

"உன் பெயர் என்ன?"

"என் பெயர் சந்த்"

அப்பொழுது ஸுராஜ். 'போகும்பொழுது சோணி, வரும்பொழுது சந்த்" என்றான்.

சோணி, சந்த்!

மெதுவாக மாடிப் படியேறி வந்த சோணிசந்த் அந்தச் சாளரத்தின் கதவுகளைச் சிறிது திறந்தான். அங்கு இருந்த காட்சி விநோதமாக இருந்தது. அவர்கள் உரையாடலை உற்றுக் கேட்டான். இரஜினியின் போக்கு விபரீதமாக மாறிவிட்டதைக் கண்டு அவள் இனி உயிர் வாழ்ந்தால், தன் தலைவருக்குத்தான் ஆபத்தென்று எண்ணினான். தன் இடையில் மறைத்துவைத்த சொருகு வாளை எடுத்து வீசினான். அடுத்த கணத்தில் பக்கத்து அறையில் நுழைந்து அங்கிருந்த மையத்தூணில் அமைந்திருந்த இரசியக் கதவின் வழியாகக் கீழே வந்து தோட்டத்துப் பக்கமாக ஓடினான்.

ஒட்டு மீசை, ஒட்டுத் தாடி, வியாபாரி வேடம்......... எல்லாம் கலைந்தது! அவன் குதிரையேறி ஓட்டமாக வங்கத்திற்குப் புறப்பட்டான். போகும்பொழுது அங்கங்கே உள்ள 'ஜெ ராம்சந்த்' ஆட்களிடம் எச்சரிக்கை செய்தான்! கடைசியில் தலைநகர் நெருங்கவே அவர்கள் என்னதான் பேசிக்கொள்கிறார்கள் என்றறிய ஒரு திட்டமிட்டான். ஆகவே ஒரு நாடகமாடினான். அவன் நினைத்தபடி காரியம் நடந்தது. அவன் தனது பிரயாணச்

செய்திகளைத் தலைவரிடம் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டே அந்த வீரர்களுடன் பிரயாணம் செய்தான்.

கடைசியில் கோட்டை வாயிலில் இறக்கிவிடப்பட்டவுடன் தனது வேடத்தை மாற்றிக் கொண்டான். இதுவரை பட்டிக்காட்டுச் சிறுவனாக நடித்தான். இனி அவனது இயல்பான வடிவத்துடன் அமீன்சந்த் இல்லத்திற்கு ஓடினான்.

வீட்டினுள் நுழைந்தான், அங்கு யாரும் இல்லை. மேலும் உள்ளே போனான். ஊர்மிளா உட்கார்ந்திருந்தாள். இவனைக் கண்டதும் ஆவலோடு ஓடிவந்து தழுவிக் கொண்டாள்!

"மாமா, அவரும் திரும்பி விட்டாரா?"

"அடி அசடு, அவசரக் குடுக்கை! முதலில் அப்பா எங்கே? பிறகு மற்றதைப் பேசலாம்"

சோணிசந்த் ஓடினான். அப்பொழுது அவர்கள் மது அருந்திக்கொண்டிருந்தனர்.

"தங்கள் ஒத்துழைப்பிற்கு இந்தக் கோப்பை"

"பழிக்கு, இந்தப் பாராட்டுதலா?"

"உமக்குப் பழைய புத்தி போகவில்லை!"

"என் அந்தராத்மா இன்னமும் என்னைச் சுட்டுக் கொல்கிறது"

"இதை அருந்தும்......"

அமீன்சந்தின் ஹிஹிஹி......ஒலித்தது. வைத்தியர் தொண்டையைப் பிடித்துக் கொண்டு கதறினார். அப்பொழுதுதான் சோணிசந்த் உள் நுழைந்தான்!

"ஐயோ இதென்ன?"

"இதுதான் கொலை!"

"இது எண்ணிக்கையில் இரண்டு"

சோணிசந்த் கேட்ட கேள்விக்கு அமீன்சந்த் அழுத்தந் திருத்தமாகப் பதிலளித்தான். பிறகுதான் அவன் வந்த விபரத்தை யறிய விரும்பினான். இவர்கள் பேசத் தொடங்கியவுடன் வைத்தியர் மெதுவாகக் கேட்டார்!

"இது என்ன?"—பரிதாபமாக இருந்தது அவரது குரல்!

"இது தாங்கள் கொடுத்த நஞ்சில் எஞ்சியது!"

"ஐயோ......"

வைத்தியர் செய்ய முடியாத, செய்ய வேண்டாத நிலையடைந்து விட்டார். ஆம்; அவர் சாவைத் தழுவி விட்டார்! இனி அவரின் உதவி அவனுக்கு எதற்கு? அவர் உயிர் வாழ்வது அவனது பயங்கரத் திட்டத்திற்கு ஒரு அபாய அறிவிப்பு! ஆகவேதான் அவரது உயிரைக் குடித்துவிட்டான் வஞ்சகன். அந்த அயோக்கிய சிகாமணி அவருக்கு நஞ்சுக்கோப்பையைப் பரிசளித்தான்!

"வர வர நம் நிலைமை சிக்கலாகும்!"

"ஏன்?"

"நான் அவ்வப்பொழுது அனுப்பிவைத்த டெல்லிச் செய்திகளிலிருந்து புரிந்திருக்குமே!"

"இன்று காலையில் கடிதம் தந்த விபரம் மட்டுமே வந்தது"

"ஆம்; என் டெல்லிப் பயணம் ஒரு பெரிய தொடர் கதை. இரவு வந்து பார்த்துக்கொள்ளலாம். நாம் முதலில் அலிவர்திகானிடம் செல்லவேண்டும். அந்த முரட்டு முகம்மதியர்கள் வந்துவிட்டார்கள்!"

"சரி, இந்தப் பிணத்தை இங்கேயே அடக்கம் செய்துவிட்டு, கணத்தில் அரண்மனைக்கு வந்துவிடு. நான் உடன் புறப்பட்டுப் போகிறேன்"

சோணிசந்த் தூண்டிவிட்டபடியே அமீன்சந்த் தன்

மகள் ஊர்மிளாவுடன் அரண்மனையை நோக்கி நடந்தான். அங்கு அப்பொழுது பலர் கூடியிருந்தனர். அமீன்சந்த் உள்ளம் கள்ளத்தனத்தால் பள்ளமாகியிருந்தது! ஆகவே அவன் முகத்தில் குருதி சுண்டிக் கிடந்தது. அது வருத்தத்தால் வந்த மாற்றம் என்று பார்ப்பவர்கள் சொல்வார்கள். விபரமறிந்தவர் வஞ்சகத்தால் வந்த விகாரம் என்று நிச்சயம் கூறுவர்!

சாவு முனையில்!

கட்டிலில் கிடந்தான் அலிவர்திகான். சாவு அவனைத் தழுவிடக் காத்துக்கொண்டிருந்தது. இதை அவனது சுழலும் கண்கள் சொல்லிக்கொண்டிந்தன. 'கர் கர்' என இராகம் பாடும் நெஞ்சு ஈளைச் செய்தி பரப்பிக் கொண்டிருந்தது.

பக்கத்தில் ஒரு பணிப்பெண். ஆம்; அவள்தான் நளினி! ஆடை அலங்காரம் நலுங்காமல் குலுங்காமல் மருந்து குழைத்துக்கொண்டிருந்தாள். அவளது அபாரமான அலங்காரம், அவளுக்குக் கவலையிருப்பதாக நடிக்கும் நடிப்பிற்கு ஒரு பெரிய 'சோடை'யாக இருந்தது. அங்கு அமீன்சந்த் நின்றுகொண்டிருந்தான். எரிமலை வெடிக்கப் போகிறது என்று தெரிந்துகொண்டும் அதன் பக்கத்திலுள்ள சுரங்கத்தில் வேலைசெய்யும் தொழிலாளியைப் போலத்தான் அவன் நிலைமை இருந்தது!

திரைக்கு அருகில் ஆஸ்தான அரண்மனைப் பெண்கள்—தங்கச் சிலைகள்—நின்றுகொண்டிருந்தனர்.

மீர்ஜாபர், அரண்மனையில் மிகப்பெரும் பதவியாளன் அங்கு இருந்தான். திவான் மோஹன்லால் செய்வதென்னவென்று தெரியாது தவித்துக்கொண்டிருந்தான். இன்னும் இப்படிப் பல திறப்பட்ட அரசாங்கப் பெரிய பதவியாளர்கள் அங்கு கூடியிருந்தனர்.

இருளடைந்த முகத்துடனிருந்த அமீன்சந்த் ஓரக் கண்களால் நளினியைப் பார்த்தான். அவன் கண்களில் அப்பொழுது பசுமையில்லை. பயம், குளங்களில் பாசி படர்ந்திருப்பதுபோல் பரவியிருந்தது. அவள் மட்டும் எந்தவித உணர்ச்சியையும் கொட்டி இறைத்துவிடவில்லை!

அரண்மனைக் கட்டிடங்களில் எப்பொழுதும் குடி கொண்டிருக்கும் குதூகலம் எங்கோ ஓடி ஒளிந்துவிட்டது. விம்மல் கேட்காத இடமில்லை. வேலைக்காரர்கள் வாய் விட்டுக் கதறினர். நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் ஒரே பயங்கர நிசப்தம்! எங்கும் சுடுகாட்டு அமைதி! எந்த மூலையிலிருந்தும் எக்குரலையும் கேட்க முடியவில்லை. பறவைகள்கூட வருத்தம் தெரிவித்தன போலும்—பறவை கள்கூடப் பறக்கவில்லை! புள்ளொலி மூர்ஷிடாபாத்தில் கேட்கவில்லை!

சூரியன் மறைகிற நேரம். அந்திப்பொழுது! மஞ்சள் வெயில் வீசிக்கொண்டிருந்தது! இரண்டு குதிரை வீரர்கள் வெகு வேகமாக வந்துகொண்டிருந்தார்கள்.

அரண்மனைக்குள்ளே..........? சாவுடன் போராடிக் கொண்டிருந்தான் சுபேதார். அந்த நேரத்திலும் நளினி யைக் குளிர்ந்த பார்வையால் அள்ளி விழுங்கிக்கொண் டிருந்தான்! அது படுகளம் என்பதை மறந்துவிட்டவள் போலப் பவள இதழ்ப் பெட்டியைத் திறந்தாள். முத்துக் குவியல் சிதறியது! இதனை அமீன்சந்த் கவனிக்காமல் இருப்பானு?

தந்தையுடன் வந்த ஊர்மிளாவோ தாயைக் காணுத கன்றைப்போலத் தவித்துக்கொண்டிருந்தாள். அவள் கண்கள் முடீன்கானைத் தேடிக்கொண்டிருந்தன!

"தண்ணீர்...... ந...ளி...னி" என்று தடுமாறினன் சுபேதார். மெதுவாக அருகில் அமர்ந்து ஒரு அரவணைப் புத் தந்து, அவன் வாயில் நீரைப் பெய்தாள் அவள். அவன் முகத்தில் தெளிவு பிறந்தது.

"ஸுராஜ், இன்னும் வரவில்லையா?" என்முன்.

"கவலைப்படாதீர்கள். விரைவில் வந்து விடுவார்.

நாட்டின் எல்லையை அடைந்துவிட்டார்கள் என்று செய்தி கிடைத்துவிட்டது'' என்ருன் திவான்.

அப்பொழுது,—

திடு, திடு, திடு.........

காலடி யோசைகள்!

''தாதா......''

தாதாவும் பேரனும் கட்டித் தழுவினுர்கள். அழுதார் கள். அந்தக் காட்சி கலங்காத கல்மனத்தையும் கரைத்து விடும்!

மீண்டும் சுபேதார் பேசினுன்: ''நீங்கள் எல்லோரும் போங்கள். ஸூராஜூவுடன் தனித்துப் பேசவேண்டும்''

எல்லோரும் சென்றனர்.

''என் அருமைக் குழந்தாய். நான் சாகிறேன். கிழவன், காலத்திலேதான் சாகிறேன். இன்ருேடு எனது இவ்வுலக வாழ்வு முடிகிறது. என் ஏடு கிழிகிறது! ஆனுல் நாளை நீதான் சுபேதார்! உனக்குப் புதுக்கணக் குத் தொடங்குகிறது......''

''தாதா, நீங்கள் பேசுவது பயங்கரமாக இருக்கிறது. நீங்கள் சாகமாட்டீர்கள்! அரசாங்க வைத்தியர்கள் அத்தனை பேரும் கைவந்தவர்கள்''

''போதும் வீண்பேச்சு—இருக்கும் இரண்டொரு நிமிடங்களில் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். தடுக்காதே''

''குழந்தாய்......... நீ...... உன்...... ஆ...யு...ளி...ல் அந்த...... வெ...ள்...ளை...ய...ரி...ட...ம்...... உள்ள...... ஆ...யு...த...ப...ல...த்...தை...... ஒ...ழி...த்...து...விடு.''

அலிவர்திகான் தலை சாய்ந்தது. பேரன் பாட்டன் மேல் விழுந்தான். முடீன் கண்ணீர் வடித்துக்கொண்டே அந்த அறையின் வாயிற்படியில் நின்றுகொண்டிருந்தான். ஊர்மிளா அவன் அருகிலேயே அசைவற்றிருந்தாள். மற்றவர்களோ நடைப் பிணங்களாக நடந்துகொண் டிருந்தனர். வெளியே!...... அமீன்சந்தும் நளினியும் ஏதோ இரகசியமாகப் பேசிக்கொண்டே சென்றனர். சூரியனும் மறைந்தான். இருள்வந்து சூழ்ந்து கொண்டது!

மூன்றாம் பாகம்

சூழ்ச்சிக்கரு!

ஸ்ராஜ் முடிசூடிக் கொள்வதற்குள் அதனைத் தடுத்து நிறுத்திவிடலாம் என்று யோசித்தான் அமீன் சந்த். ஆனால் சிந்தனை தந்த தீர்ப்போ வேற்றுருவுடன் வெளிவந்தது. குற்றவாளியைக் கூண்டிலேற்றி நிறுத்திப் பிறகு தூக்குத் தண்டனை யென்று தீர்ப்பளிப்பதைப் போல அவனை அரியணையேற்றி அழிவுக்குழியில் தள்ள வேண்டும் என்று முடிவுக்கு வந்தான். ஆகவேதான் முடிசூட்டு விழாவில் முன் நின்று காரியங்களாற்றும் முக்கிய பிரமுகர்களில் முதல்வனானான் சூழ்ச்சியின் தோழன், துரோகத்தைத் தாரமாகக்கொண்ட அமீன்சந்த்!

அலிவர்திகானுடைய சவ அடக்கத்திற்குப் பிறகு துக்கத்தால் வெளியில் எழுந்து நடமாடாமலே கிடந்தான் ஸ்ராஜ். அதுபோலவே அமீன்சந்த்தும் வெளியில் வரவில்லை. வெளியில் வராமல் அவன் வேறொரு புதிய படுகுழிவெட்டத் திட்டமிட்டபடியே இருந்தான். தனது இரகசிய மாளிகையினுள்ளிருந்து கொண்டு ஊரில் பெரிய சீமான்களாக உள்ளவர்களை யழைத்து விருந்து நடத்துவதுபோல அவர்களின் நேர்மையான நெஞ்சங்களிலே துரோகத்தைத் தூவப் பார்த்தான். வெற்றி கிட்டவில்லை. வேறொரு முறையைக் கையாண்டான். அதனால்தான் தனது குல எதிரியின் கோலாகல விழாவைக் குதூகலத்துடன் நடத்துவது போலவே நடித்தான்.

என்றும் போலவே அமீன்சந்த் தனது இருட்டறையில் உட்கார்ந்திருந்தான். அவனது மடியிலே தலைவைத்துப் படுத்திருந்தாள் நளினி. அப்பொழுது சோணிசந்த் ஓடோடி வந்தான். வியர்வை கொட்டக் கொட்டப் பெருமூச்சு வாங்க வாங்க வந்து நின்றான்.

"சோணி, புதிய செய்தி......?"

அவன் தனது தலைவனின் செவிகளில் ஏதோ கூறினன். அந்த வஞ்சகச் சிரிப்புக்காரன் முகத்தில் மீண்டும் தெளிவு மின்னிற்று!

"டாக்காவில் கொலையா......?"

"ஆம்!"

"சரி, சரி, முயற்சி செய்வோம்"

சோணிசந்த் திரும்பினன். நளினியும் நகர்ந்தாள்!

அமீன்சந்த் சிந்தித்தான்......

டாக்காவின் தலைவன் கொல்லப்பட்டான். ஆம்; அவனது கூட்டத்தாரால்! கொலைசெய்வது அவர்களுக்குச் சாதாரண விளையாட்டு. ஆனல் ஒரு கொலையின் மூலம் எவ்வளவு நன்மைகளடையலாம் என்று கணக்குப் போடுவதுதான் அமீன்சந்தின் வேலை! இக் கொலையால் அவனுக்குக் கிடைக்கும் நலம் என்ன? டாக்கிவிலுள்ளவன் ஸுராஜுவுக்கு அடங்கியவன். ஒருவேளை ஸுராஜுவின் சினத்தைக் கிளறலாம்......! அதன் விளைவு......? குட்டிக் கலகம் ஏற்படும். அமீன்சந்த்தின் திட்டம் அதுவல்லவே! பெரிய போராட்டமே நடத்த அவன் முயற்சி செய்கிருன். அதுவும் தன்னை ஏமாற்றிய வெள்ளையர்களும், தனது மதவிரோதியான ஸுராஜுவின் கூட்டத்தாரும் சண்டையிட வேண்டும். அந்தப் பயங்கரக் காட்சியைப் பார்த்துப் பரவசப்படவேண்டும்—அதுவன்றே அவன் நாளும் கண்டுகொண்டிருக்கும் கனவு! அது பலிக்குமா? அதற்கு வழியென்ன? 'கனவு பலிக்குமோடி கண்ணம்மா' என்று அவன் மனம் பாடிக்கொண்டே இருந்தது.

டாக்காவின் தலைவன் வெள்ளையர்களால்தான் கொல்லப் பட்டான் என்ற வதந்தியைக் கிளப்பிவிட்டால் என்ன? கிளப்பி விடலாம். முடியும். ஆனல் சுபேதார் நம்பவேண்டுமே! அதற்கேற்ற ஆதாரங்கள் உண்டா? உண்டாக்க முடியாதா? உண்டாக்கலாம். சமயமும்

சந்தர்ப்பமும் சாட்சி சொல்ல வேண்டுமே......! அப்ப டியே இருந்தாலும் சுபேதார் போருக்குப் புறப்படுவான் என்பது என்ன நிச்சயம்? யார் உறுதி கூற முடியும்? கொலையுடன் கொள்ளையும் நடத்தினால் ஒருவேளை நம்ப லாம். கொள்ளையடிக்கக் கூலிப் பட்டாளம் நாடெங்கும் உள்ளனர். அமீன்சந்தின் சூழ்ச்சிக் குழுவினர் வெவ் வேறு உருவில் வெவ்வேறு ஊர்களில் வாழ்கின்றனர். யாரும் சந்தேகிக்க முடியாத வகையில் உலவுகின்றனர். ஆகவே கொள்ளையடிப்பது எளிது. ஆனால் காரியம் வெற்றியடைய வேண்டுமே! 'ஜெ ராமசந்த்' கூட்டம் தொட்ட காரியங்களில் தோல்வி கண்டதில்லை.

அமீன்சந்த் இப்படிப் பலபட யோசித்தான். திட்ட மாக எந்த முடிவுக்கும் வரவில்லை. அந்த நிகழ்ச்சி சிக்க லான எதிர்காலத்தை எதிரொலியாக்கிக் கொண்டிருந் தது! ஆகவேதான் திடமாகக் குறிப்பிட்ட முடிவுக்கு வர வசதியில்லாமலிருந்தது. இறுதியாக வந்த தீர்மானம் —எப்படியும் ஒரு முறை டாக்கா நகருக்கு நேரில் செல் வது என்பதுதான்! அப்படிப் போனால் ஏதாவது நன்மை விளையலாம் என்று அவன் மனம் அவனுக்கு ஆரூ டம் சொல்லிக்கொண்டிருந்தது!

அப்படிப் போகும்போது தன் சூது வெளிப்பட்டு விட் டால் என்ன செய்வது? ஆகவே, டாக்கா பிரயாணம் அரசாங்கத் துணையுடன் இருப்பது நல்லது. சுபேதா ரிடம் நேரில் பேசிய பிறகு அவனின் அனுமதியுடன் புறப்பட்டுச் சென்றால் சந்தேகத்திற்கு இடமில்லை, பிறகு தனது வஞ்சக பஞ்சதந்திரங்கள் எதிர்ப்பின்றிப் பாயும். போட்டியின்றி விளையாடும். ஆகவேதான் அவன் சுபேதாரைச் சந்திக்க உறுதி கொண்டான். ஆனால் போவதற்கு முன்னால் தன் வருகையைத் தெரிவிக்கப் புதியதோர் முறையைக் கையாண்டான். அவனுக்கு அது எளிது—ஆம்; மானத்தைப் பணயம் வைத்து வயிற் றுப் பிழைப்பு நடத்தும் கூட்டத்திற்கு அது சர்வ சாதாதணமான நிகழ்ச்சி—ஆனால் மயிர் நீப்பின் வாழாக்

கவரிமான் அன்னர் இந்தச் செய்தியைக் கேட்கவும் கூசுவர்.

"யார் அங்கே?.........!"—அமீன்சந்த் அழைத்தான்.

புன்னகை பூக்க வந்தாள் பூங்கொடி வள்ளி. அவளைத் தொடர்ந்து ஊர்மிளாவும் நுழைந்தாள்.

"அப்பா..." என்ருள் ஆர்வத்துடன்.

"அரண்மனை செல்வோமே, அம்மா" என்ருன் அவன்.

"அவரைப் பார்க்கவா?" என்று தலையைத் தாழ்த்தினுள்.

"ஆம்..." என்று அழுத்தினுன் வார்த்தையை.

"அப்படியானுல் ஆகட்டும்" என்று முத்தாய்ப்பு வைத்தாள்!

மகள் முன் செல்ல அப்பன் பின் சென்ருன். ஊர்மிளா முடீன்கானை நாடிச் சென்ருள். அமீன்சந்த் நிலைமையை விளக்கினுன். தன் அப்பனுக்காகச் சுபேதாரைக் கண்டு பழைய காளிகோயில் நிகழ்ச்சியை நடத்தி டாக்கா நிகழ்ச்சியைச் சிறிது சிறிதாகக் கூறினுள்.

"டாக்காவில் கொலையாமே!"

"வெள்ளையர்கள்தாம் காரணம்..."

"கொள்ளையிடக்கூடத் திட்டம் இருக்கிறதாம்"

"இவைகளையெல்லாம் அப்பா சொன்னுர்"

"வாடிக்கைக்காரர்கள் எழுதியிருந்தார்களாம், வழக்கமான வியாபாரக் கடிதங்களில்"

இப்படிச் செய்தியைத் துண்டுதுண்டாக்கி இடையிடையே செருகி விட்டாள். அவளுக்கு உள்ளுக்குள் பயம் வேறு—எங்கே முடீன் பார்த்து விடுகிருனே என்று. சுபேதார் முகம் சிவந்து விட்டது!

"சரி, உன் தந்தையை நான் பார்க்க வேண்டும்"

"வரச் சொல்கிறேன், இப்பொழுதே!"

ஊர்மிளா வெளியில் வந்தாள் வெற்றிப் புன்னகையுடன! அமீன்சந்த் பிறகு சுபேதாரைச் சந்தித்தான். டாக்காவில் நடந்தவற்றை மிகத் தெளிவாகப் புளுகினுள். அவனும் நம்பிவிட்டான். பிறகு அமீன்சந்த்தை நேரில் சென்று நிலைமையைப் புரிந்து வரப் பணித்தான்! ஆனுல் அமீன்சந்த் போவது இரகசியமாக இருக்கவே விரும்பினுன். உடன் டாக்காவின் திவானுக்கு வேறு கட்டளை பிறந்தது. நகரத் தலைவனின் சொத்துக்கள் எல்லாம் உடன் எடுத்து வரவேண்டும் என்ற செய்தியனுப்பினுன். அமீன்சந்த் தனது திட்டங்கள் அணுவும் குறையாமல் வெற்றி பெறுவது கண்டு தானே ஆச்சரியப்பட்டுக்கொண்டான். ஆனுல் அழிவுக்குழியை நோக்கிப் பிரயாணம் செயகிருன் என்பது அவனுக்குத் தெரியவில்லை!

டாக்காவில்

கிஷோனிதாஸ் பரபரப்பாக இருந்தான். ஆடை, அணிகள் அடுக்கடுக்காக அவனைச் சுற்றிலும் பரவிக் கிடந்தன. ஒரு வேலைக்காரன் அவைகளை யடுக்கிக்கொண்டிருந்தான். எங்கோ வெகுதூரப் பிரயாணத்திற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தான் என்பது விளக்கமாகத் தெரிந்தது.

"அடேய், அப்பா ஏன் இன்னும் வரவில்லை?"

"வருவதாகத்தானே சொன்னுர். வந்துகொண்டே இருப்பார். வந்து விடுவார்"

"நீ உடனே ஓடு, ஓடியழைத்து வா"

வேலைக்காரன் ஓடினுன். கிஷோனிதாஸ் இங்கும் அங்கும் எதையோ தேடிக்கொண்டிருந்தான்.

கிஷோனிதாஸ்......? டாக்காவின் தலைவன் கொல்லப் பட்டான். ஏன், எப்படி......மாண்டான் என்று பாருக் குமே தெரியாது! அவனது திவானின் மகன்தான் கிஷோனிதாஸ். இனி மாண்டவரின் உடைமைகள் டாக்கா வில் இருப்பது சரியல்ல என்று திட்டமிட்டு சுபேதா ரின் கட்டளைப்படி மூர்ஷிடாபாத்துக்கு அனுப்பிவிடத் தீர்மானித்தான் திவான். அதன்படியே கிஷோனிதாஸ் தலைமையில் எடுத்துச் செல்ல ஏற்பாடுகளும் செய்தான். அன்றைக்குத்தான் பிரயாணம் தொடங்க வேண்டிய நாள். ஆனால் அனுப்பி வைக்கவேண்டிய திவான்ஜி இன் னும் வரவில்லை.

"என்னடா அதற்குள்ளே திரும்பி விட்டாய்?"— உடன் திரும்பிவந்த வேலைக்காரனைப் பார்த்துக் கேட் டான் இப்படி!

"இல்லை மகராஜ்! யாரோ தங்களைப் பார்க்கக் கோட்டைவாயிலில் நிற்கிறார்கள். அதைச் சொல்லி விட்டு......" என்று இழுத்தான் பணியாளன்.

"யார் அது? என்னைப் பார்க்க இந்த நேரத்தில்!"

"அந்த ஆள் இந்த ஊர் அல்லவாம். இருப்பிடம் கல்கத்தாவாம்"

இந்த விடையைக் கேட்ட திவானின் மகன் திகைத் துப் போனான். ஆர்வத்தால் அசையாத சிலையானான்!

கல்கத்தா ......!

ஆம்; எவ்வளவு அழகான பெயர். அவனது முகத்தில் அந்த வார்த்தையைக் கேட்டவுடன் மகிழ்ச்சி பொங்கியது. கல்கத்தா—உன் ஊர் எது என்று கேட்டபோது அவள் கூறிய விடை இன்னமும் அவன் காதுகளில் இனித்துக் கொண்டிருந்தது! அவளது பொன்னையும் தோற்கடிக்கும் மேனி......அப்பா, அவன் இதயம் உதைபந்தின் 'பிளாடர்' போல உப்பி வடிந்தது! அதிலே அவ்வளவு கவர்ச்சி...... ......அந்த வளைவு வளைவான கேசம், அதை அவள் வாரி

விட்டிருந்த வகை அவனை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. கேசம் நிறத்தில் கருப்பல்ல. தங்கத்தை வார்த்து விட்டது போன்றிருந்தது—அதுவும் அழகாய்த்தானிருந்தது. அவளது நீலம் பாய்ந்த இரண்டு கண்களும் அல்பிரூனியின் புத்தகங்கள்தான்! ஆயுள் முழுவதும் படிக்கலாம்.

அந்தச் சுந்தரி ஒரு வெள்ளைக்காரி! அன்று அவள் டாக்காவிற்கு வந்தபொழுது உடைந்துபோன உருதுவில் பேசினாள். ஒவ்வொன்றும் முத்து என்றுதான் அவன் எண்ணினான்.

"உன் இருப்பிடம்......?"

"கல்கத்தா"

இந்த நினைவுதான் அவனுக்குச் சட்டென்று தோன்றியது.

"டாக்காவை நான் சுற்றிப் பார்க்கவேண்டும்" என்றாள் அவள்.

அடடா! அந்தக் கோச்சு வண்டியில் அவளுடன் செய்த பிரயாணம்—பிரயாணமா அது.........—எவ்வளவு இன்பகரமானது! அவளுடன் இணைந்து உட்கார்ந்திருந்தான். அவன் தோள்மீது அடிக்கடி கையைப்போட்டு "இது என்ன? அந்தக் கட்டிடத்தில் யார் இருக்கிறார்கள்?........." என்று அவள் கேட்டபொழுதெல்லாம் அவன் புளகாங்கிதம் அடைந்தான்.

கடைசியில் கல்கத்தாவிற்குக் கிளம்பினாள். அந்த நேரத்தில் அவன் கையைப் பிடித்துக் குலுக்கினாள். ஏனோ அப்படி அழுத்தினாள்? அவனுக்கு ஏதோ வெறியுணர்ச்சி—திடீரென்று ஒரு முத்தம்! அவள் அதனால் வெட்கப்பட்டாளா, வெறுப்புற்றாளா?...... ஒரு பாதிச் சிரிப்பு!

அவள் பெயர் லூஸி. ஒருவேளை அவள் அனுப்பியிருப்பாளோ?......... இவ்வளவும் ஒரு கணநேரத்தில் அவன் மனத்திற்குள் படையெடுத்தன!

"அடேய்!" என்றான்.

அதுவரை தன் தலைவன் ஏன் அப்படி மலைத்து நின்று விட்டான் என்று புரியாமல் தானும் அசைவற்று நின்று கொண்டிருந்த வேலைக்காரன் திடுக்கிட்டான்.

"மகராஜ்" என்றான்.

"உடனே அவரை அழைத்துவா"

கட்டளை நிறைவேற்றப்பட்டது.

"ஹி ஹி ஹி........."

"என்னை அமீன்சந்த் என்பார்கள் நாட்டில். நான் கல்கத்தாவில்......" என்று தன்னைத்தானே அறிமுகப் படுத்திக்கொண்டான்.

"அது சரி. லூஸியை உங்களுக்குத் தெரியுமா?" என்று அவசரப்பட்டான் அவன்.

லூஸி...... இந்தப் பெயரைக் கேட்டவுடன் அமீன் சந்தின் முகத்தில் ஒரு வகையான உணர்ச்சி பாய்ந்தது. ஆனால் அதனை வருணிக்க முடியாது! ஏதோ காரியமாக வந்த அவனுக்கு ஒரு புதிய வேட்டை கிடைத்துவிட்டது. லூஸி...... அவள் யார்? அவளை இவன் அவ்வளவு அவசரத்துடன் விசாரிப்பானேன்? ஒரு வேளை.........? இருக்கும். ஏதோ இவர்களுக்குள் நெருங்கிய தொடர் பிருக்கவேண்டும். கட்டாயம் காதல்தான்!...... இவனை எப்படிச் சரிக்கட்டுவது என்று தவித்துக்கொண்டிருந்த அவனுக்குப் பெரிய மரக்கலம்—லூஸி—கிடைத்துவிட்டது. இனி வெற்றிதான்!

டாக்காவின் பிரதம அதிகாரி கொலை செய்யப்பட்டார் அவனது குழுவினரால். ஆகவே அவனுக்குக் காரியம் எளிது. இவனோ வயதில் இளைஞன். யாரென்று புரியவில்லை! ஒருவேளை திவானாக இருக்கலாம். எப்படியாயினும் இவன் தக்க பதவியாளன் என்று திட்டமாகத் தெரிகிறது. காளையர்களைக் கட்டுப்படுத்த — கட்டுப் படுத்த என்ன, தட்டிவிடவும் சக்தியுள்ள 'காந்தக்

கற்கள்' ஏராளமாக ரகவாரியாக உள்ளனவே! இப்பொழுது கேட்ட பெயர் கிடைப்பதற்கு மிகவும் எளிது. வெள்ளைக்காரி—தொட்டால் துவளும் கூட்டத்தினள் அல்லள், தொட்டுத் தொட்டு ஆண்களைத் துகள் துகளாக்கிவிடும் சக்தி—வசீகரப் பார்வை, கொல்லும் குலுக்குச் சிரிப்பு, கவரும் நடை............ இவைகளின் உருவில்—உண்டு அவர்களிடம்! அதனைக் கண்டு ஏமாந்து விட்டான் இந்தப் பித்தன்.

அலிவர்திகானிடம் இட்ட தூபம் காரியம் சாதிக்கவில்லை. அதற்குள் அவனையே கருக்கிவிட்டான்! இப்பொழுது வந்துள்ள ஸுராஜ்-உத்-தௌலா அவனின் நேர் எதிரி—மகா துட்டன், வெகு கெட்டவன்! அவனை நெருங்குவதே கடினமாகத்தானிருக்கிறது.........என்ன செய்யலாம்! சாணக்கியர் எழுதிய அர்த்த சாஸ்திரம் படித்த அவனுக்கு யோசனைகளுக்குப் பஞ்சமேது!

"திவான்!"

"நான் திவானல்லவே. அவரின் மகன்!"

அவன் ஆள்யாரென்று புரிந்துகொண்டான். இனி எப்படியும் தாயத்தார்களுக்குள் முட்டிக்கொள்ள செய்ய வேண்டும். இதற்கு ஏதாவது வழியுண்டா? வெள்ளையர்களுடன் தகராறு முற்றவேண்டும். இதற்குத் தக்கதோர் பாதை......இப்படி ஆராய்ந்து கொண்டிருந்த அவனுக்கு லூஸி கிடைத்தாள். கிடைத்ததை விட்டுவிட அவன் அவ்வளவு ஏமாந்தவனா?

"ஹீ ஹி ஹி ......!"—அமீன்சந்தின் வழக்கமான வஞ்சகச் சிரிப்பு!

"என்ன சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டான். கிஷோனிதாஸுக்கு ஒரு புது வகையான உணர்ச்சி...... வேசிகள் வீட்டுத் தரகர்கள் சிரிப்பு இப்படித்தானிருக்கும்! அதனைக் கேட்டுப் பழக்கப்பட்டதால் அவனுக்குத் தானே சிரிப்பு வந்தது.

"தாங்கள் மகாப்பிரபு" என்று பல்லவியைத் தொடங்கினுன். அதன் வளர்ச்சி...?

"ஆமாம்; அவளுக்கு உங்கள் மீது கட்டுக்கடங்காத ஆசை. தங்களை நினைக்கும் பொழுதெல்லாம் நீர் திரளுகிறது அவள் கண்களில்! ஆனுல் அவள் உயர்ந்த பணியாளன் ஒருவனின் மனைவி......"

"என்ன என்மீது அவளுக்கு ஆசையா? இது உண்மையா?"

"இல்லாவிட்டால் என்னை அனுப்புவாளா?"

"என்ன ஆச்சர்யம்......"

"ஆச்சர்யம் ஏது சுவாமி. எல்லாம் அவன் செயல்"

"ஓய், காதல் கட்டத்தில் கடவுளை இழுக்காதீர்"

"மன்னிக்கவேண்டும். அவள் எப்படியும் தங்களைக் கல்கத்தாவிற்கு வரச் சொல்கிருள்"

"வந்தால்?"

"இது கூடவா சொல்லவேண்டும்! அவள் இன்பக் களஞ்சியமாவாள்."

கிஷோனிதாஸ் முகத்தில் ஒரு மின்னல் தோன்றி மறைந்தது. ஆனுல் அமீன்சந்த் அமைதியாக அவன் முகத்தின் பாவங்களைப் படித்துக்கொண்டிருந்தான்.

"கல்கத்தாவுக்கு நான் வருவதா? மாண்டவரின் சொத்துக்களைச் சுபேதாரிடம் ஒப்புவிக்க வேண்டிய நான் இடையிலேயே நின்றுவிடுவதா?—இது முடியாது"

"ஏன்?......"

"இந்தச் சேதி சுபேதாருக்குத் தெரிந்தால் ஆபத்து"

அமீன்சந்த் விழித்துக்கொண்டான். சரியான பிடி கிடைத்துவிட்டது. கிஷோனிதாஸ் கட்டாயம் கல்கத்தா வந்துதான் ஆகவேண்டும். ஸுராஜ் கோபங்கொள்ள

வேண்டும். இது அவன் திட்டம்! ஆகவே சற்று யோசிப்பவன் போல நின்று கொண்டிருந்தான்.

"உங்களை வெள்ளை வணிகர்களே கட்டாயப்படுத்திக் கொண்டு சென்றால்..."

"ஆமாம்; நல்ல ஏற்பாடுதான். வெளியுலகுக்கு நான் நல்லவனாகவே இருப்பேன். ஆனால்..."

"காரியம் எப்படி முடியும் என்ற கவலையா? அதற்கு நானிருக்கிறேன்"

"மிகவும் மகிழ்ச்சி. உமக்கு என் நன்றி. இதய பூர்வமான வணக்கம்"

கிஷோனிதாஸ் வணக்கம் செலுத்தினான். அமீன் சந்த் விடைபெற்றான். அவன் கையில் ஒரு முத்துமாலை இருந்தது. அவன் போட்ட திட்டம் நிறைவேறிக்கொண்டே வந்தது. டாக்காவிற்கு எந்த முடிவான திட்டத்துடனும் வரவில்லை. சென்றால் ஏதேனும் செய்யலாம் என்று எண்ணினான். ஆகவே வந்தான். வந்துகொண்டிருக்கையிலே ஒரு பெரிய திட்டமிட்டான். ஆனால் அதை எப்படிச் சாதிப்பது? இதுதான் அவனுக்கும் புரியாமலிருந்தது. தானே புரிய வைத்துவிட்டான் கிஸோனிதாஸ். தூண்டியிலே தானே வந்து சிக்கிக்கொள்ளும் மீன் போலானான். அமீன்சந்த் தூண்டில்காரனான சுபேதாருக்கு இனி எப்படி வேண்டுமானாலும் கயிறு திரித்துக் கடிதம் தீட்டலாம்!

கிஸோனிதாஸ் எப்படியும் கல்கத்தா வரப்போகிறான்.

இந்தச் செய்தியை உடன் ஸுராஜ்-உத்-தௌலாவுக்குத் தெரிவித்துவிட எண்ணினான் சற்று விபரீதம் கலந்த வகையில்! அவன் உளம் சாதாரணமானதல்ல—உடனே படையெடுப்புத்தான்! இரண்டு பகைவர்களும் முட்டிக்கொள்வார்கள்!......

கூடவே வந்த வேலைக்காரனிடம் 'ஜே ராம்சந்த்' என்று கூறினான். அவனும் அதையே திருப்பிச் சொன்னான். இருவரும் வணக்கம் தெரிவித்துக்கொண்டனர். முத்துமாலையை அவனிடம் கொடுத்தான். பிறகு அவன் சென்றுவிட்டான்.

"ஹீ ஹி ஹி.........''—அமீன்சந்த் சிரித்தான்.

வியாபார வேடம்

ஸுராஜ்-உத்-தௌலா நின்றுகொண்டிருந்தான். அவன் பக்கத்தில் அவனது உயிருக்குயிரான தோழன் முடீன்கான் ஏதோ சிந்தனையிலாழ்ந்திருந்தான்.

"வெள்ளையர்களுக்குச் சூழி சரியில்லை போலும். மேலும், மேலும் நம்மிடமே மோதுகிறார்கள். மலையைக் கண்டு மண்மேடென்று கருதுகிறார்கள். மடையர்கள்"

"ஆத்திரப் படாதீர்கள் ! கிடைத்த செய்தி கெடுமதியாளர்கள் கிளப்பிவிட்ட பொய் வதந்தியாகவும் இருக்கலாம்"

"முடீன், நம் ஒற்றர்களின் திறமையில் குற்றங் காண்கிறோம் !''

"அப்படியில்லை. அர்த்தமற்ற ஆத்திரங்கூடாது. அதுவும் ஆத்திரத்தில் அறிவிழந்து அவசரத்தை மணந்து கொள்ளலாமா ?''

"உன் ஊர்மிளா சொன்னாளே, அவளது அப்பன் சொன்னதாக ! அதுவும் பொய்யா ?''

"பின் ஏன் இன்னமும் கிஷோனிதாஸ் தலைநகர் வரவில்லை ? கொலைக்குக் காரணமானவர்களே கிஷோனிதாஸையும் கெடுத்து அழைத்துக்கொண்டு போயிருப்பார்களல்லவா ?''

"வெள்ளையர்களுக்குப் பரிந்து பேசும் துரோகியல்ல

நான். ஆனால் கிஷோனிதாஸ் வராமல் போவாரா? வருவார். வெள்ளையர்களின் போக்கின் காரணந்தான் புரியவில்லை. கொலை செய்யத் துணிந்தவர்கள் கொள்ளையிட்டிருக்கலாம் நகரையே—செய்யவில்லை! கிஷோனிதாஸ் கொண்டு வருவது அற்ப சொத்து. இதற்காகவா நாவைக் குழைப்பர்? இருக்காது. இதில் ஏதோ சூதிருக்கிறது. அதுவும் துரோகம் சேர்ந்து விளையாடுகிறது"

"என் மனம் அமைதியடையவில்லை. காரணம் எதுவானாலும் சரியே, அந்தக் கெடுமதி படைத்த குண்டர்களை யடக்கவேண்டும்; அவர்களின் வால்களை ஒட்ட நறுக்கவேண்டும்"

"கல்கத்தாவில் கிஷோனிதாஸை நிறுத்தி வைத்திருப்பதில் ஏதோ அர்த்தமிருக்கிறது. அந்த மர்மந்தான் தெரியவில்லை. ஏனெனில் அவர் அப்படித் தவறும் தறுதலைத்தனம் படைத்தவரல்லவே?"

"மர்மம் என்ன, என்னை ஒழிக்கச் சதி"

"மன்னிக்கவேண்டும், துரோகியாகத் துணிவது மிகக் கடினம்"

"ஆம். ஆனால் துணையிருக்கையிலல்ல, தனித்து! ஏதோ சூழ்ச்சி நடக்கிறது. இது மட்டும் உண்மை."

"அற்பர்கள் கூடிப் பேசுவதால் இமயம் நடுங்கலாமா?"

"உளி அளவில் சிறியது. ஆயிரம் உளிகள் சேர்ந்தால் இமயம் இடிய வேண்டியதுதானே!"

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் யாரோ ஒரு வேலைக்காரன் வந்தான். ஒரு கடிதத்தை நீட்டிவிட்டுத் திரும்பி விட்டான். ஸுராஜ் அதைப் பிரித்துப் படித்தான், அவன் கண்கள் அகல விரிந்தன. அவன் முகத்தில் வானவில்லில் பல வர்ணங்கள் தோன்றுவதுபோல பலப் பல உணர்ச்சிகள் தோன்றின. ஆனால் அவை ஓடும்

வண்டிச் சக்கரத்தின் இடைக்கால்கள் மாறிமாறி மேலுங் கீழும் செல்வதுபோலச் சென்றன. மூடன்கானுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன் அந்தக் கடிதத்தில் என்ன இருக்கிறதென்பதை யறிந்துகொள்ள ஆவலால் துடித்தான். அது என்னவென்று கேட்க அவன் எண்ணினன் என்பதை அவனது துடிக்கும் உதடுகள் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.

"பார்த்தாயா, நான் சொன்னது நடந்துவிட்டது" என்றான் ஸுராஜ். அவன் கண்கள் கோபத்தால் சிவந்தன. அவன் குரல்கூடச் சற்று கனத்தது.

"என்ன நடந்துவிட்டது?"—ஆச்சரியத்தோடு கேட்டான் மூடன். அப்பொழுது அவன் வீசியெறிந்த கடிதம் ஒரு மூலையில் கிடந்தது. காற்று அதனைப் படிக்க முயன்றுகொண்டிருந்தது!

என்ன கடிதம்?—கல்கத்தாவிலிருந்து வந்திருந்தது. அமீன்சந்த் எழுதியிருந்தான்.

.........கிஷோனிதாஸ் ஒப்பந்தம் பேசிக்கொண்டிருக்கிறான் வெள்ளையரிடம்! அவனைச் சுபேதாராக்க அவர்கள் உறுதி கூறியுள்ளார்கள். அதற்குக் கைமாறாக வரியோ, காணிக்கையோ கேட்கக் கூடாதாம்......

......இந்தக் காரணங்களால்தான் கிஷோனிதாஸின் போக்கு மாறிவிட்டது. கிளம்பும்போது இந்தக் கேடுகெட்ட புத்தியில்லை. இடையிலே ஏற்பட்ட கோளாறு! அதுவும் முன்கூட்டியே வெள்ளையர்களால் யோசித்துத் திட்டமிட்ட சூழ்ச்சி......

......தாங்கள் வெத்துவேட்டாம். விஷயமில்லாமல் துள்ளுகிறீர்களாம். இன்னும் ஒரு வாரத்தில் தங்கள் தலை உருளப் போகிறதாம். படையெடுக்கப் போகிறார்களாம் அந்தப் பண்பற்ற பரங்கிகள்—நெருப்புடன் விளையாடப் பார்க்கின்றன விட்டில் பூச்சிகள்......

......போருக்கு இழுக்க, தங்கள் ஆளை வழிமறித்து விட்டார்களாம் அந்த 'வக்ரகங்கள்'......

அமீன்சந்த்தின் இரசமான உரையாடல்—பக்குவம் மிக்க பேச்சு ஒலித்துக்கொண்டிருந்தது இருவர் உள்ளங்களிலும்! தங்கள் பிரஜை, உண்மையுள்ள ஊழியன், காருண்யமிக்க சர்க்கார்......என்று வார்த்தைகள் மிகப் பணிவாகத்தானிருந்தன. எழுதியது யார்? அமீன்சந்த்! யாருக்கு? தனது சொந்த மகளை அதுவும் அப்பன் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே............ஸுராஜ் தனக்குள்ளாகவே வருந்தினான். அவன் கண்கள் கலங்கின. அமீன்சந்த்தின் உண்மையான இராச விசுவாசத்தைக் கண்டு அவன் மிகவும் இரங்கினான். முடீன்கான் சிந்தித்தான். சிரிப்பை வீசினான்!

"இதற்குத் தக்க திட்டம் வேண்டும். சிரிப்புத் தருமா சிறப்பான வழியை?"

"மன்னிக்க வேண்டும். அமீன்சந்த் ஒரு சாதாரணக் கப்பல் வியாபாரி. அவனுக்கு ஏன் இவ்வளவு தொல்லைகளும் துயரங்களும்...இராச பக்தி அளவிற்கு மீறுகிறது என்று நினைத்தேன். சிரிப்புத் தானாக வந்துவிட்டது"

"முடீன், உன் எண்ணம் குறையுடையது. நான் அனுப்பினேன். ஆபத்தை யுணர்த்தியவனையே சந்தேகிக்கிறாய், இது தவறு!"

"அமீன்சந்த் ஒரு நுழை நரி- அவ்வளவுதான்"

டெல்லியில் பாதுஷா காட்டிய கடிதம்தான் அமீன்சந்த்தின் உள்ளுருவத்தை ஓரளவு உணர்த்தியது முடீனுக்கு! அதிலிருந்து அவன் நடவடிக்கைகளை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வந்தான். பாதுஷாவின் கட்டளைப்படியே அவனது போக்கை இரகசியமாக நோக்கி வந்தான். சரியான பிடி கிடைக்கும் வரையில் சுபேதாரிடம் அமீன்சந்த்தைப்பற்றி எதுவுங் கூறுவதில்லை என்று முடிவு கட்டியிருந்தான். ஆனால் வாய்ப்பு நேருகிறபொழு

தெல்லாம் அவன் ஒரு சூழ்ச்சிச் சிலை யென்பதைக் குத்திக் காட்டிக்கொண்டுவந்தான்.

"முடீன். அது கிடக்கட்டும். இப்பொழுது என்ன செய்வது?"

"தவருன கூட்டுறவைத் தடுக்கவேண்டும்"

"தடி கொண்டா?"

"ஆமாம். ஆனுல் முதலில் வழக்கம்போல் வார்த்தையில்......"

"சரி, சரி, கேட்போம்"

"கிஷோனிதாஸ் உடனே வெளியேற்றப்பட வேண்டும். கல்கத்தா தலைவருக்கு சுபேதார் கட்டளை"

"ஆனுல் இதை அனுப்புவது ....."—சுபேதார் நெற்றியைத் தடவினுன். இங்கும் அங்கும் நடந்துகொண்டே இருந்தான். திடுக்கிட்டுத் திரும்பினுன்.

"முடீன், நீயே போ"

"நானு, ஏன், எப்படி?"

"......................"

"இந்து வியாபாரியைப் போல வேடமிட்டுக்கொள், கடிதத்தைக்கொண்டு போ. நேராக அல்ல, அமீன்சந்த் மூலமாகவே! ஏனெனில் உன்னுல் அப்பொழுதுதான் அமீன்சந்த்தைப் புரிந்துகொள்ளமுடியும்"

"உத்தரவு"

முடீன் உள்ளே சென்றுன். ஸுராஜ் மீண்டும் நடந்துகொண்டிருந்தான்.

......அமீன்சந்த் உண்மையில் எழுதியிருப்பானு? இருக்காது!

அவனது ஜென்ம வைரி நான்—ஒருவகையிலல்ல, பல வகையிலும்......மகளைக் கெடுத்தது சொந்த விஷயம்.

ஆனால் அவன் முஸ்லீம் அல்லாதவன். மித வெறுப்புக் கூடவா மறைந்துவிடும்? குரான் என்று கூறவுங் கூசுங் குடிகள் நம் நாட்டில் வாழ்கிறார்கள். ஏன் இவன் அப்படி இருக்கக் கூடாது?

சூழ்ச்சிக் குழுவில் இவனும் ஒருவேளை அங்கம் வகிக்க லாம். பின்னர் வியாபாரிகளுக்கு அரசியலில் நுழைய வேண்டிய அவசியம் என்ன? மூடன் எப்பொழுதும் வரு முன் கூறும் வல்லமை யுள்ளவன். அவனும் சந்தேகிக் கிறானே!

அதோ அமீன்சந்த்—அவன் முகத்தில் களங்கமில்லை. அவனது இயல்பான சிரிப்பு, சற்றுக் கோரந்தான்! அது அவனது பிறவியின் குறைபாடு......இப்படி யெண்ணி யெண்ணிப் பொழுது கழிந்துக்கொண்டிருந்தது.

இப்பொழுது ஒரு தாடிக்கார ஆசாமி உள்ளே நுழைந்தான்.

"வணக்கம்"

"ஹா, ஹா, ஹா ......"—அவர்கள் இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

"மூடன், வியாபார வேடம் வெகு பொருத்தம். நீ வாள் எடுக்கவேண்டாம். வண்டி வண்டியாகப் புளுகக் கற் றுக்கொள். பெரிய கோடீஸ்வரனாகி விடுவாய். வாணிபத் திற்கு அதுதானே முதல், மூலதனம்"

மூடன் விடைபெற்றுக்கொண்டு சென்றான். அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி-ஏன்? அமீன்சந்தின் நடவடிக்கை களை நெருங்கி கவனிக்க வாய்ப்புக் கிடைத்ததை எண்ணித் தான்! அவன் சென்ற திக்கைப்பார்த்துக் கொண்டே நின் றான் ஸுராஜ் நீண்ட நேரம்—பிறகு ஒருபெரு மூச்செறிந் தான்.

எச்சரிக்கை

குதிரையில் சென்று கொண்டிருந்த மூடன் அங் குள்ள குளக்கரையைப் பார்த்தான். ஊர்மிளா அந்திப்

பொழுதைக் கழிக்க அங்கு அமர்ந்திருந்தாள். உடனே குதிரையைவிட்டுக் கீழிறங்கி அவளிருக்குமிடம் சேர்ந்தான்.

"அம்மா......"

"என்ன வேண்டும்?"

"முத்தம்..."

"என்ன..."—சீற்றக் குரல்.

"கல்கத்தாவுக்கு இங்கிருந்து..."

"என்ன உளறுகிறாய்!"

"மொத்தம் எத்தனை மைல்கள் ?"

ஊர்மிளா அவனை உற்று நோக்கினாள். அவன் குரல் அவளுக்குப் பழக்கமானதாகவே தோன்றியது.

"நீ யார்?"

"நான் ஒரு வியாபாரி"

"பெயர்..."

"கான்!"

மூடன் சிரித்தான். ஊர்மிளா சிந்தித்தாள்.

"ஊர்மிளா, என்னைத் தெரியவில்லையா?"

அவள் ஆனந்தத்திலாழ்ந்தாள். தன் உயிர்க் காதலன் இப்பொழுதுதான் முதன் முதல் அவளிருப்பிடம் நாடி வந்திருக்கிறான். ஆகவே அவனைத் தன் மாளிகைக்கு அழைத்துச் செல்ல எண்ணினாள். ஆனால் அவன் வந்த காரியம் முடியும்வரை எந்தச் சொந்தச் செயலையும் செய்ய முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். திரும்பி வரும்பொழுது அவசியம் தங்கவேண்டும் என்று மன்றாடினாள். அவனும் அவளது அன்பழைப்பை ஏற்றுக்கொண்டான்.

"காதலா, இந்த வணிக வேடம் ஏனோ?"

"அரசியல் பித்தலாட்டம். அதைப்பற்றி நீ ஏன் கவலைப் படுகிறாய்?"

"சொல்லாவிட்டால் போங்களேன்!"

"உன் தந்தை இப்பொழுது எங்கிருப்பார்?"

"பணிமனையில்!"

அவன் குதிரையேறினான். அவள் வழி கூட்டியனுப்பினாள்.

அமீன்சந்த் அவனை வரவேற்றான் சாதாரண முறையில்! அவனுக்கே அவன் யாரென்று தெரியாது. வியாபாரி வேடத்தில் வீரன் முடீன் மறைந்திருக்கிறான் என்ற உண்மையை அவன் அறியவில்லை. வந்தவன் சுபேதார் கட்டளையைக் காட்டினான். மேலும் விளக்கமாகச் சொன்னான். அமீன்சந்த் முகத்தில் களிப்பு கூத்தாடிற்று. தனது நெடுநாள் ஆசை இதோ நிறைவேறப் போகிறது......சுபேதாரின் விருப்பத்தை இந்த அரசியல் ஞானி எடுத்துக் கூறுவான். ஏற்கனவே ஏற்றிவைத்துள்ள போதையால் எதிர்த்தே பேசுவர் வெள்ளையர். பிறகு ஆத்திரம் அணைகடக்கும். அப்புறம் போர், போர், போரே!...அமீன்சந்த் எண்ணத் திரையில் படம் நிழலாடிற்று! அவன் வந்தவனை வெள்ளையர் கூடாரத்திற்கு அழைத்துச் சென்றான்.

டிரேக், தனது தனியறையில் புகைத்துக்கொண்டே பணிமனைக்கட்டுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது இருவரும் நுழைந்தனர். இருக்கை தந்து உபசரித்தான். வழக்கம்போலச் சிரித்துக்கொண்டே அமீன் சந்த் அவனை அறிமுகம்செய்து விட்டு நழுவினான். பிறகு முடீனும், டிரேக்கும் பேசிக்கொண்டிருந்தனர் நெடு நேரம்.

"சுபேதார் என்னை அனுப்பினான்"

"காரணம் என்னவோ?"

"டாக்காவிலிருந்து வந்த கிஷோனிதாஸை மடக்கியதின் காரணம் அறிய......"

"அப்புறம்......"

"அவனை உடனே விட்டுவிடவேண்டும், கல்கத்தாவில் அவனை அரைக்கணமும் வைத்திருக்கக் கூடாது"

டிரேக் சிந்தித்தான். பிறகு அமைதியைக் கிழித்துக் கொண்டு பேசினான்.

"மன்னிக்கவேண்டும். அந்தக் கட்டளையை நிறைவேற்ற முடியாது!"

"முடியாதா...சரி, உங்கள் கோட்டை புதுப்பிப்பு வேலை உடனே நிறுத்தப்படவேண்டும்"

"கோட்டையைப் பலப்படுத்துகிறோம், சந்திரநாகூர் பிரஞ்சுக்காரருக்காக. சுபேதார் அஞ்சத் தேவையில்லை"

"சுபேதாரின் கட்டளையை மீறுவது தவறு. ஆபத்தை விலைபேசி வாங்குகிறீர்......எச்சரிக்கை செய்கிறேன்"

"தூதரே, உம் வேலை முடிந்தது. இனி வீண்வார்த்தைகளை வீசி வேதனையை வரவழைத்துக் கொள்ளாதீர்"

"சரி, உம். விடையை எழுதிக்கொடும்—"

"முடியாது"

முடீன்கான் முகம் சிவந்தது. வெறிச் சிரிப்பு வீசித் தனது மீசையைத் தொட்டுத் தடவினான். ஒட்டுமீசைதானே அது......ஆத்திர மிகுதியால் தன் நினைவிழந்து பலமாகத் தடவவே அது நழுவி விட்டது. கீழே விழுமுன் அதனைச் சட்டென்று பிடித்து பழையபடியே ஒட்டவைத்தான். இது கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடந்த இரகசியக் கதை.........அதையுங் கண்டுவிட்டான் அந்தத் தந்திரபரம்பரையைச் சேர்ந்த டிரேக்.........இருப்பினும் வெளியில் காட்டிக்கொள்ள வில்லை!

கொல்லவுந் துணிந்தான்!

"அப்பா, அவர் வந்திருக்கிறார்!" என்று குதித்துக் கூத்தாடினாள் ஊர்மிளா.

"யாரம்மா......" என்றான் அமீன்சந்த்.

"அவர்தானப்பா......"

"மூடன்கானு......!"

"ஆம். அப்பா, அவரது தாடியும், மீசையும்...... என்னவேடிக்கை!"

"என்ன.........மாறு வேடத்திலா?"

"உங்களைக் கூடக் கேட்டாரே.........பார்க்க வில்லையா?"

"ஆகா. பார்த்தார்...!" என்று அழுத்தமாகக் கூறி நிறுத்தினான் அமீன்சந்த்.

அவனது எதிரி......அவன் கையில்சிக்கியிருக்கிறான்! விட்டு விடுவதா? கூடாது......இந்த மாதிரி பொன்னான வாய்ப்பு நிச்சயமாகக் கிடைக்காது. அவனை ஒழித்து விட்டால் அச்சத்தைத் துச்சமெனத் தள்ளிவிட்டு எதையும் எந்த நேரத்திலும் துணிந்து செய்யலாம்!......ஆனால் ஊர்மிளா அவனுக்கு ஒரு சிறு துன்பம் செய்யவும் விடமாட்டாள்......அவளையும் ஏமாற்றவேண்டும். அவளை மட்டுமா? சுபேதாருக்குத் துளியும் சந்தேகமில்லாமல் இந்தத் துணிகரமான செயலில் இறங்கிவிட்டால் பிறகு வெற்றி அமீன்சந்துக்கே! 'நரி வாழ்க. நயவஞ்சகத்திற்கு ஜே'.........கூட்டத்திற்கு வெற்றி மாலை......ஆளப் பிறந்ததாக வீரவுரை யாற்றும் இந்த மொட்டைத் தலையர்களுக்குச் சாவோலை......இப்படி எண்ணினான்!

"அம்மா, மூடனை வரவேற்போம்......ஆனால் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்! எனக்கு அவன் யாரென்று தெரிந்து விட்டது என்பதை மட்டும் அவனிடம் சொல்லக் கூடாது!"

''சரி.........அப்பா''

குதிரையிலிருந்து இறங்கி வந்தான் மூடீன். அமீன் சந்த் எழுந்து வந்தே வணக்கம் செலுத்தி அழைத்துச் சென்ருன்.

''வெள்ளை நரிகள் வாலை ஆட்டுகின்றன!''

''பரம்பரைப் பழக்கம் அது......ஆத்திரப் படாதீர்கள்! சுபேதாரிடம் சொல்லி நல்ல சூடு கொடுக்கச் செய்யுங்கள்!''

''மண்டை கிழியக் கிழிய அடித்து விரட்ட வேண்டும். ....ஆணவக்காரர்கள்.........நாட்டின் அண்ணல் சுபேதாரின் ஆணையை அவமதிக்க எவ்வளவு துணிச்சல்......... நாடோடிப் பயல்கள்!''

''நல்ல பாடங் கற்பிக்க வேண்டும்''

அமீன்சந்த், ஆத்திரத்தீயில் எண்ணெயை வாரி வாரி ஊற்றினன். பிறகு அவன் விருந்து படைத்தான் வெகு ஆடம்பரமான முறையில்......பிறகு ஊர்மிளா வந்தாள் சிரித்தபடி! மூடீன் ஒருவருக்கும் தெரியாமல் கை சைகையினுலேயே தன்னை யாரென்று காட்டிக் கொடுத்துவிட வேண்டாமென்று குறிப்பாலுணர்த்தினன். அவளும் கண்ணுலேயே விடை சொன்னுள். பிறகு பேசி மகிழ்ந்தனர். இரவும் வந்தது!

நல்ல இருட்டு.........மூடீன் தன்னை யாரோ அழுத்துவதுபோல உணர்ந்தான். பிடியை உதறிக்கொண்டு எழுந்துவிட்டான். பக்கத்தில் அடக்கமான அளவில் எரிந்துகொண்டிருந்த விளக்கைத் தூண்டிவிட்டான்......என்ன சொல்லட்டும்!...அவனைக் கொல்ல உருவிய வாளுடன் ஒரு குண்டன் நின்று கொண்டிருந்தான். மூடீன் வேடத்திலே வியாபாரி......வெற்றிகண்ட வீரனல்லவா உண்மையில்? தடியனைத் தாக்கினன். பிறகு இருவருக்கும் வெகு நேரம்வரை பெரும் போராட்டமே

நடந்தது.........போராடும்பொழுது மிகத் தாழ்ந்த குர லில்''ஐயோ அப்பா'' என்று அவதிக்குரல் கேட்டது. கடைசி யில் கொல்லவந்த குண்டனைக் கொன்றே போட்டான் மூடன். பிறகு ஓடி அந்த மாளிகை முழுவதும் சுற்றிப் பார்த்தான்.

ஒரு அறையில் அமீன்சந்த் கட்டுண்டு கிடந்தான். அவன் விழிகள் பிதுங்கிவிடுவேன் என்று பய முறுத்திக் கொண்டிருந்தன......அவன் நெஞ்சை அப்படி யாரோ அழுத்தியிருக்கவேண்டும்! உடனே கட்டுகளை அவிழ்த்து விட்டான். அவன் எதையும் கூறுமல் உள்கட்டுக்கு ஓடி ஞன்.

''ஐயோ......கொள்ளைக்காரர்கள். வெள்ளைக்கார வெறியர்கள். பெண்களை என்ன கதியில் விட்டிருக்கின் றனரோ?'' என்று புலம்பிஞன்.

''ஏன்......இப்படிச் செய்தார்கள்?''

''உங்கள் தூது எங்கள் வீட்டிற்கு எமதூதாகி விட் டது?''

''என்ன துணிகரம்......''

பிறகு பெண்கள் தங்கியுள்ள விடுதியில் நுழைந்தால் அங்கு ஒரே அலங்கோலம்......நளினி வாயில் துணி யடைக்கப்பட்டுக் கிடந்தாள். ஊர்மிளா மூர்ச்சையிழந்தே கிடந்தாள்! மூடன் முகம் மிகவும் பதட்டத்தைப் படமெடுத்துக் காட்டிற்று.

ஊர்மிளாவின் அருகில் நெருங்கிஞன். அப்பொழுது அதன் எதிரிலுள்ள சாளரத்தில் இரண்டு கண்கள்...... மூடன் பார்த்துவிட்டான்!

''ஐயா...... நான் வருகிறேன்...... சுபேதார் படை யுடன் வருவார் என்பதை நிச்சயமாக நம்பும்!'' என்று கூறிக்கொண்டே வெளியில் சென்ருன்.

ஒளிந்திருந்தவன் யாரென்று கண்டுபிடிக்க ஓடிஞன்.

அந்தக் கள்ளனும் குதிரையேறித் தப்பிவிடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டோடினன்......... மூடனு விடுவான்? கொஞ்ச தூரத்திலேயே வளைத்துவிட்டான்! அவனைக் குதிரையிலிருந்து கீழேயே தள்ளிவிட்டான். அவன் பயந்து நடுங்கிப்போனன். அவன் தலைமயிரைப் பற்றி யிழுத்துக்கொண்டு வந்தான் மூடன்.

"நீ யாரடா......?"

"நான்........." என்று இழுத்தான்.

அவன் முகத்திலே ஒரு குத்துவிட்டான். கன்னங்கள் வீங்க வீங்க அடித்தான்.

"ஐயோ...... சொல்லி விடுகிறேன்!"

"சொல்லடா கள்ளா......"

"கொள்ளையிட மட்டுமா......"

"கொலையும் செய்ய......"

"யார் ஏவி விட்டார்கள்?"

"....................."

மீண்டும் அடி, உதை, குத்து.........

"எங்கள் எஜமான் அமீன்சந்த்......"

"ஆ........."

அமீன்சந்த் அங்கே தன் கபட நாடகம் வெற்றி பெரு விட்டாலும், வெளியில் உண்மை தெரியாமல் முடிந்து விட்டது என்று சோணிசந்திடம் தோல்விக் கதையைச் சொல்லிக்கொண்டிருந்தான். இங்கோ அவன் சூது வெளியாகிவிட்டது! அவன் சூதால் வாழ்ந்துவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிருன். அந்தச் சூதே அவனுக்கு எட்டடிப் பள்ளத்திற்கு ஏற்பாடு செய்கிறதென்பதை உணரவில்லை.

கம்பெனிக் கோட்டை

மிகப் பெரிய மேஜை—அதில் அந்திப்பொழுதுக்கு அருந்துவதற்கெனப் பான வகைகள் பல வைக்கப்பட்டுள்ளன. பெயர்கூடச் சொல்ல முடியாத அளவு பல நிறங்கொண்ட பாட்டில்கள் நிறைந்திருந்தன. தட்டுகளில் பல வகையான தின்பண்டங்களை வைக்க மறக்கவில்லை அந்த 'பட்லர்!'. அவன் வெள்ளையுடை பூண்டு இங்கும் அங்கும் ஓடிப் பரிமாறிக் கொண்டிருந்தான்.

அது ஒரு ஓட்டல், உணவுக் கடை!

கல்கத்தாக் கோட்டையில் வேலை செய்யும் பணியாளர்களெல்லாம் மாலை நேரங்களில் அங்குவந்து பானம் அருந்துவார்கள். அன்று வழக்கம்போல பெரிய வணிகத் தலைவர்கள் மாடியினுள் நுழைந்தார்கள். டிரேக், ஹால்வெல், மின்சின் இன்னும் பலர் வந்திருந்தனர். மேஜையைச் சுற்றி உட்கார்ந்துகொண்டே தட்டுகளிலுள்ள மாமிசத் துண்டங்களுடன் தங்களது கொரிக்கும் இரும்புப் பற்களால் சண்டையிட ஆரம்பித்து விட்டார்கள்.

டிரேக் மட்டும் ஒரு கோப்பை மதுவுடன் தனியான ஒரு இடத்தில் நின்றுகொண்டு யோசித்தான். சிறிது நேரத்திற்குப் பின்னுல்! அவன் சிந்தனை.........? .... இந்தக் கருப்பர்களின் தொல்லை பொறுக்க முடியவில்லை! ஆமாம், ஆமாம்...... ஒரு வாரத்திற்குமுன் எவனே ஒரு வியாபாரியாம், இரகசியத் தூதாம், அமீன்சந்த் சிபார்சாம்! மகா வேடிக்கை...... விடையில்லாமல் விரட்டியதுதான் விவேகமான வேலை......அமீன்சந்த் ஒரு நரி—அவன் வேலையோ அது?......... அவன்தான் கிஷோனிதாஸைக் கொண்டுவர ஏற்பாடு செய்தான்......... பிறகு சுபேதார் கட்டளையைச் சுமந்துவந்து நிற்கிறுன். அது தான் போகிறதென்றுல் கோட்டையைப் புதுப்பிக்கக் கூடாதாம்......... அடுத்த தாக்குதல்!........... டிரேக் கையிலேந்திய கோப்பையின் வழியாக 'டான்ஸிங் ஹால்'

—நாட்டிய அரங்கம் தெரிந்தது. கிஷோனிதாஸ்—லூஸி இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு குடி வெறியுடன் வட்டத்திற்குள் நுழைந்தார்கள்! அதைப் பார்த்தான்.........அவன் மனத்திலே புதுவித எண்ண அலைகள்......அமீன்சந்த் ஏன் இவளை அழைத்து வந்தான்? இவனால் யாருக்கு நன்மை? கிஷோனிதாஸ் மாண்ட டாக்கா நகரத் தலைவரின் சொத்துக்களை, பொருள்களைக் கொண்டு செல்கிறான். அவனை மடக்கினால் சுபேதாரின் கோபம்.........கோபத்தால் யாருக்கு இலாபம்?......... நம்மீது பாய்வான்......... நம்மிடம் படையில்லை. பணம் சண்டையிடுமா?............ அமீன்சந்த் நம்மை மாட்டி விடத்தான் இப்படி முயற்சி செய்கிறானோ? இல்லா விட்டால்...... சுபேதார் கையொப்பமிட்ட கடிதம் அவன் வழியாக வருவானேன்?...வந்தவன் மாறுவேடக்காரன். பொருந்தாத பொய்த்தாடி காட்டிக்கொடுத்துவிட்டதே! ...அமீன்சந்த்தை எப்படி நம்புவது? அவன் கருப்பன். முழுவதும் நம்பக்கூடாது! ஸுராஜ் முரடன். என்ன செய்யப்போகிறான்? கிஷோனிதாஸை விரட்டி விட்டால் மட்டும் அடங்கி விடுவானா?......கோட்டை புதுப்பிப்பு கூடாது என்று மறு அம்பு!...எப்படியாவது வம்புக்கு இழுக்கிறானா?...இப்படி எண்ணினான்.

கையிலிருந்த மதுக்கிண்ணம் காலியாகி விட்டது. இந்தச் சமயத்தில் யாரோ இருவர் மாடியேறி ஓடி வந்தனர். மூச்சு வாங்க வாங்கக் கூவினர்.

"காசிம் பஜார்க் கோட்டையைச் சுபேதார் பிடித்து விட்டார். எதிர்ப்பில்லாமல் பணிந்து விட்டனர். காசிம் பஜாரிலிருந்து முகலாயப்படை கல்கத்தாவை நோக்கி விட்டது. புறப்படுங்கள்...அவசரம்...அவசரம்!" என்று கூவினர்.

ஓட்டல் முழுவதும் ஒரே குழப்பம்......அவரவர்கள் ஓட்டமும் பெரு நடையுமாய் வீடு நோக்கி விரண்டோடினர். சிலர் தங்கள் மனைவிகளைக் கையைப் பிடித்து இழுத்

துக் கொண்டோடினர். சிலர் குடிவெறியில் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து கொண்டே சென்றனர். சிலர் கோப்பைகளை வீசி விட்டோடினர். நாட்டிய அரங்கம் எரிமலை வெடித்த பாம்பே நகரம் போலாகி விட்டது.

ஒரு சில துரைமார்கள் மட்டும் நின்று கொண்டிருந்னர்.

''என்னடா நடந்தது?''

ஏககாலத்தில் எல்லோரும் கேட்டார்கள். எதிரில் நின்று கொண்டிருந்த மானிங்ஹாமும், பிராங்லண்டும் சட்டென்று விடை கூறினர்.

"கதை கேட்கவா நிற்கிறீர்கள்?...உடனே படையைத் தயார் செய்யுங்கள்......எதிரிகள் வந்துவிட்டார்கள்...... கணத்திற்குக் கணம்......மூச்சுக்கு...மூச்சு...முன்னேறி வருகிறார்கள் முகலாயர்கள். அங்கிருந்து அடிபட்டு, உதை பட்டு உதை தாங்காமல் ஓடி வந்த இரு சிப்பாய்கள் தந்த செய்தி இது...வெள்ளையர்களை...அப்பாடா பயமாயிருக்கிறதே! கண்ட கண்ட இடங்களில் துண்டம் துண்டமாக வெட்டி வீழ்த்துகிறார்களாம் நம்மவர் வெந்து தணிவைதைப் பார்த்துப்பார்த்து!......நெஞ்சு படபடக்கிறது ..... போவோம் வாருங்கள்."

டுமில், டுமில்......

அதோ எதிரிகள் வந்து விட்டார்கள். பீரங்கிச் சத்தம் கேட்கிறது!

அங்கிருந்து எல்லோரும் பரப்பரப்பாக நடந்து வெளியேறினார்கள். அந்த ஓட்டல் ஓரே அமர்க்களமாகக் கிடந்தது.

வீழ்ந்தது !

மூடீன்கான் அந்தக் கள்ளனை விட்டுவிட்டு நேராகச் சுபேதாரைச் சந்திக்கக் குதிரையில் பறந்து சென்றான். சுபேதார் தன் அந்தப்புரத்தில் இருக்கும் பொழுதே சந்

தித்தான்......அவ்வளவு ஆத்திரம்! வெள்ளையர்கள் பேசிய வீணுரைகளை யெல்லாம் கூறி உடனே படை யெடுக்க உத்தரவிடவேண்டும்......என்று வேண்டினன்.

"முடீன்......உன் விருப்பம் போலப் படை திரட்டி உடனே புறப்படு...நானும் வருகிறேன் அவசியமானல்!" என்று முழு வேலையையும் அவனிடமே ஒப்படைத்தான் சுபேதார்.

படை நல்ல முறையில் அமைந்ததில்லை. அந்த நேரத்தில் ஆட்களும் குறைவாகவே இருந்தனர். முடீன் சிந்தித்தான். ஒரு முடிவிற்கு வந்தான். அதிக வீரர்கள் வேண்டும். அவசரமான தேவை. நாளை ஒத்திப் போடவும் கூடாது. இதற்கு என்ன செய்யலாம்? ஒரு வழி அவன் மனதில் பட்டது. சிறையினுள் சென்றான் தனது படைத் தளபதிகள் சிலருடன். பல கைதிகளைப் பார்த்தான். அவன் மனதிலே மின்னலைப் போன்ற ஒரு எண்ணம். இவர்கள் எந்தக் குற்றம் செய்தவராக இருந்தாலும் பரவாயில்லை, உடனே விடுதலை செய்து விடலாம். படை வீரராக்கி விடுவோம்! சிறையில் கிடந்து வாடும் இவர்கள் போர்க்களத்தில் போராடிச் சாவதை மேலென்றுதான் எண்ணுவார்கள்! அப்படியே உத்தரவுமிட்டான்.

பல கைதிகள் வெளியேற்றப்பட்டனர். அவர்களுக்குப் படை உடையும் ஆயுதங்களும் பாசறையிலே அளிக்கப்பட்டன. அவர்களிலே ஒருவன் முடீன்கானைச் சந்திக்கப் பிடிவாதம் பிடித்தான். அவன் யார்? அலிவர்திகானல் சிறையிலே தள்ளப்பட்ட அஜிஸ்கான். கடைசியில் சந்தித்தான் முடீன்கானை!

" தளபதி அவர்களே......வணக்கம் "

"அஜிஸ்......!"

" ஆயுள் கைதியாக அடைபட்டேன். இன்று விடுபட்டேன்......"

" என்ன குற்றம் செய்தாய்?"

"அது பெருங்கதை......பிறகு சொல்கிறேன். எனக்கொரு வரந்தர வேண்டும்! உங்களுடனேயே இருக்கும்படியான வாய்ப்பு வேண்டும்"

"இவ்வளவுதானே......என் மெய்க்காப்பாளனாகவே இரு......என்னை என் நிழல் போலத் தொடரலாம்!"

அஜிஸ் ஆனந்தத்துடன் வெளியேறினான். அவனுக்கு எப்படியும் சூதுக்காரக் கூட்டத்தைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற பேரவா. ஆகவேதான் சிறையிலிருந்து விடுபட்டும் அந்த வேலையை வேண்டிப் பெற்றுக்கொண்டான்!

கொஞ்சமும் முன்னேற்பாடின்றியே முகலாயப் படை கிளம்பிற்று என்றாலும் காசிம் பஜாரில் வெள்ளையர்கள் எந்தவிதமான எதிர்ப்பையும் செய்ய முடியவில்லை. எப்படி முடியும்? தலைமைப் பண்டகசாலையான கல்கத்தாவைக் காப்பாற்ற தக்க முறையில் படை பலம் இல்லை. அதுவும் சுபேதார்—நாட்டின் ஒரே தலைவனின் எதிர்ப்பு. அதுவும் முன்பின் அறிவிப்பின்றி! எதிர்பார்க்காத நேரத்தில் சமாளிக்க முடியுமா? ஆகவே சில மணி நேரங்களில் காசிம்பஜார் சுபேதார் காலடியில்!

கல்கத்தாவிற்கு இந்த வீழ்ச்சிச் செய்தி எட்டுவதற்கு முன்னால் வெடிகுண்டுச் சத்தந்தான் கேட்டது! அவர்கள் இருக்கும் பட்டாளத்தைச் செப்பனிட முயன்றனர்! கைவசமிருப்பது இருநூறு வீரர்கள்! அதுவும் அதில் வெள்ளையர் மூன்றில் ஒரு பங்குதான்; அவர்களிலும் ஒரு சிலரே போர்க்களத்திலே நின்றவர்: அதுவும் போரிட்டுப் பயிற்சி பெற்றவர் ஒருவர், இருவரே! வெள்ளையரும், பிறரும் கலந்துள்ள படை கல்கத்தாவிலே உண்டென்று பெருமை யடித்துக் கொண்டார்கள். அவர்களும் நல்ல முறையில் பழக்கப்படவில்லை. பலருக்குத் துப்பாக்கியின் சுடுமுனை எது வென்பதே தெரியாது! இருக்கும் வெடி மருந்துகள் மூன்று நாள் கணக்குக்குத்தான் வரும். இருந்ததையும் ஏற்கனவே அழித்துவிட்டார்கள். பீரங்கி வண்டி

யொன்ருே, இரண்டோ......அதுவும் சக்கரத்திலே 'மக்கர்'......அவைகள்தான் கோட்டை வாயிலில் கிடந்தன!

கோட்டைக்குள் உணவு நிலைமை மோசம். ஒரு வாரத்திற்குத்தான் போதுமானது. உள்ளே உணவைக் பெருக்கவும் முடியாது; வெளியிலிருந்து கொணரவும் முடியாது.

நல்ல போர்த் தளபதியும் இல்லை. சிலர் போர்வீரர். ஆனல் புத்திசாலிகளல்லர்! மற்றவர்களோ போர் முறையில் மண்டுகள்தாம். சக்தியிலோ, புத்தியிலே யுக்தியிலோ வல்லவர்கள் இல்லை. இத்தகைய நிலையில் மிகப் பெரிய படையை எதிர்க்க ஏவிவிடப்பட்டார்கள்.

ஸுராஜுவும், முடீனும் தாக்குதலை நிறுத்தவே இல்லை. எதிர்ப்பு வரவர மங்கிக் கொண்டே இருந்தது! ஏன்? கோட்டையினுள் குழப்பம், போராட்டம், கூச்சல் குடியேறிவிட்டன. ஒழுங்கில்லை! எங்கும் அல்லோல கல்லோலம்.

ஏக்கம், பயம், ஆச்சர்யம், அழுகை, வெறிச் சிரிப்பு—இப்படி வகை வகையாக வந்து வந்து போய்க்கொண்டிருந்தன. ஒரு சிலர் உபதேசம் செய்தனர். உபதேசம் அங்கு உபயோகமற்ற வேலை அப்பொழுது! யாரும் ஒழுங்காக இல்லை; இருக்க முடியவில்லை! போராட நினைப்பு இல்லை; நினைப்பு வந்தாலும் நிலைமை பின்னுக் கிழுத்தது. வழக்கம் போலப் பணமும் கொடுத்துப் பார்த்தனர். வாங்க மறுத்து விட்டனர். பண முனையை விரும்பவில்லை. குண்டு முனையில் பேசினர்!

வெள்ளைக்காரர்கள் தங்களாலியன்ற வரை எதிர்ப்பு முன்னணி அமைத்துப் போராடினர். முகலாயப் பெரும் படையோ வெட்டிச் சாய்த்துப் பிணமலைகளின் மீது ஏறி ஓடி வந்தது! அந்த ஓட்டத்தைப் பார்க்கவே பயந்துவிட்டனர். ஓடிவிட வழி பார்த்தனர். ஓடவா முடியும்......?

கடைசியில் கல்கத்தா வீழ்ந்தது. ஸுராஜ் வெற்றி கொண்டான். சாகுந்தறுவாயில் தாதா இட்ட கட்டளை

யான வெள்ளையரின் படைக்கலப் பலத்தை அடித்து நொருக்கி விட்டதாகப் பூரித்தான். புன்னகை பூத்தான்! முடீனும் மகிழ்ச்சியால் தோள் வீங்கப் பெருமிதப் பார்வையுடன் சுபேதார் பக்கத்தில் வந்துநின்றுன்.

ஓடவும் முடியவில்லை!

காசிம்பஜார் வீழ்ச்சியடைந்தது என்று செய்தி எட்டியவுடனேயே ஒவ்வொருவர் உள்ளத்திலும் இடி விழுந்து விட்டது போன்ற அதிர்ச்சியைக் கொடுத்தது! சாதாரணக் குடிகள். சுபேதார் என்ன என்ன கட்டளைகளை இடுவானே? சித்திரவதை செய்யப்போகிருன். அவன் மூர்க்கன்! அவன் தண்டனைகள் எந்தப் பயங்கர உருவில் அமையுமோ! வெள்ளைத்தோலர்கள் மணிக் கட்டுகளை முறிக்கப் போகிருன். எழுதவே வேண்டாம், எழுதி எழுதி யெங்கள் நாட்டுப் பொருளைச் சுரண்டியது போதும் என்று சொல்லிச் சொல்லி அடிக்க உத்தரவிடப் போகிருன். வெள்ளை வனிதா மணிகள்......பசியெடுத்த புலிகள் கையிலே சிக்கப் போகிருேம். அவர்களுக்கு அது குதூகல விளையாட்டு. நமக்குக் குலை நடுக்கந்தான்! கல்கத்தா எங்கும் கலவரக் கனவுகள் இம்மாதிரி பலவிதமாக, பலவகையாக! கல்கத்தாவே நடுநடுங்கிக்கொண்டிருந்தது!

கல்கத்தாவிலே தோல்வி முடிசூடப்போகிறது என்று அறிந்தவுடனேயே வெள்ளைக்காரரின் சரித்திரத்திலே ஒரு பெரிய கரும்புள்ளி விழுந்துவிட்டது என்று புரிந்து கொண்டனர். வெற்றிவீரர்களாகவே வந்துவந்து பழக்கப் பட்டவர்கள் என்று பெருமை பேசி வந்த வெள்ளைக்காரர்கள் புறங்காட்டி ஓடவேண்டிய நிலைமை வந்து விட்டது.

ஆகவே வெள்ளைக்காரர்கள் கூடிப் கூடிப் பேசினர். குசு குசு குரலில் திட்டமிட்டனர். எதற்கு? எதிரிப் படையை முறியடிக்கவா? அடித்து விரட்டிவிடவா?

அல்ல, அல்ல! ஓட வழி பார்த்தனர். பின் வாங்க ஏதாவது உபாயம் உண்டா என்று தேடினர்! உபாயம் கிடைத்தது. ஆனல் அந்தத் தந்திர ஏற்பாடு அவர்கள் எளிதாக மாட்டிக்கொள்ளவே வழி வகுத்தது!

கி. பி 1756 ஜூன் மாதம் 18-ம் நாள்—அவர்கள் வாழ்விலேயே ஒரு துயரக் கதையை எழுதிக் காட்டிற்று! அன்றுதான் வெள்ளையர்கள் கல்கத்தாவையே காலிசெய்து விட்டு ஓடிவிடுவது என்று முடிவு செய்துவிட்டனர்.

நடுநிசி, ஒரே இருட்டு!

வெள்ளைக்காரர்கள் அத்தனை பேருங் கூடினர். பின் வாங்குவது சரி. அதனை எப்படி முடிப்பது? ஓடிவிடு வது என்ருல் அவ்வளவு எளிதான காரியமா? சுற்றிலும் கடல் தரைப் பக்கம் எதிரியின் பீரங்கிப் படை. ஆகவே அவர்கள் தப்பிப் பிழைக்கலாம் என்று முயன்ருல் ஒரே வழிதான். அதுதான் அவர்களுக்கு உன்னத வாழ்வளித்த கடல்! கடல் வழியே நள்ளிரவிலே நழுவிவிடுவதுதான் நல்ல மார்க்கம் என்று உணர்ந்தனர்.

இந்தப் பின்வாங்கு படலத்தை முன்னின்று கடத்து விக்க இருவர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் மானிங் ஹாமும், பிராங்லன்டும். அவர்களின் மேற்பார்வையிலே தான் வாணிபத்தால் இந்திய உபகண்டத்தின் வாழ்வைப் பறித்த வெள்ளையர்கள் ஓடிவிட முயன்றனர்.

கப்பல் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. ஆனல் யார் முதலில் ஏறிக்கொள்வது? உயிர் தப்பியோடும் போதுகூட முறை பார்க்க முடியுமா? பயமும், பதட்ட மும் அவர்களை ஆட்டிவைத்தது! சிலர் மானத்திற்காகப் போராட எண்ணினர். ஆகவே பெண்களை உடனே வெளியேற்றி விடவேண்டும் என்றனர். உடனே சிறு சிறு மூட்டைகளுடன் இளம் பெண்கள் பலர் வேகமாக வந்தனர். அங்கு தடுமாறிக்கொண்ருந்த கிழவர்கள்மீது பசசாதாபபபட்டு, பரிவுடன் அவர்களை முன்னுக்கிழுத்து வந்தனர். சிலர் சிறுர்களுக்காக 'வக்காலத்து' வாங்கினர்!

ஆனால் நடந்தது என்ன......? இவர்கள் அத்தனை பேரும் ஏறிக்கொள்வதற்கு முன்னால் மேற்பார்வையாள ராக நியமிக்கப்பட்ட இருபெரு வீரர்களுமே ஏறிக் கொண்டனர். ஸூராஜூவின் பயங்கரத் தோற்றத்தை நினைத்தவுடனேயே அச்சம் வந்து அவர்கள் இதயத்தைக் குலுக்க, வீரம் பறந்தோட, வெட்கம் காற்றிலே பறக்க பெண்கள் ஏறுவதற்கு முன்னாலேயே ஏறிக்கொண்டனர் கப்பலில்! அத்தோடு விடவில்லை! மற்றவர்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தாம் மட்டும் தப்பினால் போதும், 'தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று கூறிக்கொண்டு கப்பலைக் கிளப்பிவிட்டனர். கரையிலே நின்றவர்கள் கைதட்டி அழைத்தனர். அலறினர். கதறினர். ஆத்திரக் கூத்தாடினர். அவர்கள் திரும்ப மறுத்துவிட்டனர்—வெகு தீவிரமாக!

பலர் நீரிலே குதித்து நீந்திப்போய்க் கப்பலையடைந் தனர். பெண்டு பிள்ளைகளையும் விடுத்துவிட்டு சில சோற்றுப் பிண்டங்கள் கப்பலிலே புகுந்துகொண்டனர்! கரையில் கிடந்த எல்லாக் கலங்களும் கிளம்பிவிட்டன. இந்தப் புறங்காட்டியோடும் பொல்லாத வேலை முடிவதற் குள் இரவும் கழிந்துவிட்டது!

காலை மலர்ந்தது.

ஏமாந்தவர்கள் கைபிசைந்தனர். இரண்டே இரண்டு படகுகள் மிஞ்சியிருந்தன. முறையாக என்ன செய் திருக்கவேண்டும்? மக்களை அல்லவா அனுப்பியிருக்க வேண்டும். அதைச் செய்யாதது மட்டுமல்ல, வேறொரு வெட்கங்கெட்ட செயலை மேற்கொண்டார்கள்! காக்க வேண்டிய கவர்னர் துரை டிரேக்கும், போராடவேண்டிய மின்சினும் அந்தக் கலங்களில் ஏறிக்கொண்டு 'கம்பி நீட்டி' விட்டனர்!

ஹால்வெலும் இன்னும் சிலருமே மீதியிருந்தனர். அவர்கள் பின்வாங்குபவர்கள் அத்தனைபேரும் தப்பி யோடுகிறவரை எதிர்ப்பைத் தொடர்ந்து நடத்தவே

நிறுத்தப்பட்டனராம். அவர்கள் அப்படியே எதிர்த்தனர். அரைநொடியில் சரணடைய வேண்டி வந்தது. ஏன்? தப்பிவிட்டோம் என்று மனப்பால் குடித்தவர்களின் கப்பல்கள் கரையிலே மோதியதால் மேலுஞ் செல்ல முடியாமல் மாட்டிக்கொண்டனர்.

எதனைக் கண்டு அஞ்சியோடினரோ, அதே இடத்திற்குத் திருப்பி அழைத்து வந்துவிட்டது அவர்களது கப்பல். பாவம்! வெள்ளையர் வீழ்ச்சி யடைந்தனர். ஓடப் பார்த்தும், ஓட முடியாமல் ஸுராஜுவின் காலில் விழுந்து பணிந்தனர்!

இருட்டறை!

ஆரம்பத்தில் வெள்ளையர்கள் தளராது போரிட்டார்கள் தான்......... எனினும் நாலா பக்கங்களிலும் சூழ்ந்து வந்த எதிர்ப்பு அனலைக்கண்டு பயந்தே விட்டார்கள். ஆகவேதான் பின்வாங்கி ஓடவும் திட்டமிட்டனர். அந்த முயற்சியும் வீணுகவே சரணடைந்தனர். இரண்டு நாள் போராட்டத்தோடு எதிர்ப்பு மடிந்துவிட்டது.

வெள்ளையர்கள் தோற்ருர்கள். கிடைத்தவர்கள் அத்தனை பேர் கரங்களிலும் விலங்குகள் பூட்டப்பெற்றன. கைதிகளைப் பெருமிதத்துடன் பார்த்தான் ஸுராஜ்.

"முடீன்! இவர்களைத் தக்கதோர் இடந்தேடி அடைத்து வையுங்கள்; விடிந்ததும் விசாரிப்போம்" என்ருன். பிறகு தனது கூடாரத்திற்குச் சென்றுவிட்டான். போரினுல் ஏற்பட்ட ஓயாத உழைப்பு அவனுக்கு அன்று நிம்மதியான உறக்கத்தை அளித்தது. அவன் நெஞ்சமும் அசையாமல் தூங்கிக்கொண்டிருந்தான். மூடீனும் தன்கீழ்த் தளபதிகளில் முதல்வனுன அஜிஸ்கானை அழைத்துக் காவலில் அந்தக் கைதிகளை வைக்கச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

வீரர்களுக்கு அந்தக் கட்டளையைத் தெரிவித்துவிட்டு ஏதோ, அவசர வேலையாக வெளியேறி விட்டான் அஜிஸ்! கைதிகளைப் பத்திரப்படுத்த ஒரு அறை தேடினார்கள். உண்மையில் கிடைக்கவில்லை.

ஐயோ......... அவசரத்தினால் எவ்வளவு பயங்கர விளைவுகள் நடந்து விடுகின்றன! "அஞ்சற்க, அபயந் தந்தோம். உங்களுக்கு எத்தகைய இன்னலும் இழைக்க இடந்தரோம்" என்று சுபேதார் சொன்னபோது அந்தக் கைதிகள் பெருமூச்செறிந்தனர்—ஓரளவு திருப்தியுடன்! இந்த நாட்டுக் கண்ணியப் பேச்சு, அந்த வெள்ளைக் கைதிகளுக்குக் கொஞ்சம் நம்பிக்கை கொடுத்தது!......... ஒரு துளி மகிழ்ச்சி அவர்கள் உள்ளத்தில்...... அந்தோ காலமும் சூழ்நிலையும் அவர்கள் எண்ணத்தில், மகிழ்ச்சியில் மண்ணை வெட்டிக் கொட்டிவிட்டன!

ஏன்......? அவர்களை அடைக்க ஒரு இடம் கண்டு பிடித்தனர்—கடைசியாக! பதினெட்டு அடி நீளம், பதினான்கு அடி அகலம் கொண்டது. மூன்று பக்கங்களில் காற்றோ வெளிச்சமோ வரமுடியாது! நான்காவது பக்கத்தில் இரண்டு சாளரங்கள்—அதில் பலமான இரும்புத் தூண்கள்...... ஒரு பக்கத்தில் இருண்ட தாழ்வாரம் உண்டு. இந்த இடத்தையே தெரிந்தெடுத்தனர்.

இந்த இடத்தை வெள்ளையர்கள் இராணுவக் குற்றவாளிகளை அடைக்கப் பயன்படுத்தினர். அந்த அறையில்—அறையா அது, நரகம் என்று கூறுகிறார்களே அது உண்மையாக இருந்தால் அதுவாகத் தானிருக்கவேண்டும்!

எத்தனை பேரை அந்த இருட்டுக்குள் தள்ளுவது? பட்டி மாடுகளா...... அவர்கள்! அந்த இருட்டுக் குகையில் நூற்று நாற்பத்தாறு உயிர்கள்—ஆண், பெண் குழந்தை...... அதில் பெரும்பாலோர் வெள்ளையர்களே! அந்தக் கொடுமைக் கூடாரத்தில் ஆட்டுமந்தையை மடக்குவதுபோல அடைத்துவிட்டனர். வேண்டுமென்றா...... இல்லை, இல்லை—வேறொரு இடமும் கிடைக்காமையினால்!

அங்கு காற்றுமில்லை, ஒரே நெருக்கம்! என்ன செய்வார்கள்? அவர்கள் காவலாளிகளிடம் கெஞ்சினர், கருணைக்காக மன்றாடினர். பிறகு வேறு முறையுங் கையாண்டனர். கொஞ்சம் பேர்களையாவது வேறு இடத்திற்கு மாற்றிவிட்டால் அவர்கள் நிம்மதியாக இருந்திருப்பார்கள்.

"ஆயிரம் பொன் தருகிறோம்......" என்றான் கைதிகளிலே ஒருவனான ஹால்வெல்.

"எதற்கு?" என்றான் காவல் காத்த சிப்பாய்.

"இருப்பவரிலே சிலருக்கு வேறு இடத்தில் சிறை அமைத்துக் கொடுங்கள். எங்களைத் தப்பிவிட அனுமதிக்க வேண்டாம்...... இந்தச் சிறு உதவி செய்தால் போதும்"—மீண்டும் விளக்கினான் அதே கைதி.

"முடியாது!"

கண்டிப்பாக மறுத்துவிட்டனர் சிப்பாய்கள் இருவரும். பிறகு பலமுறை வேண்டியும் சிப்பாய்கள் செவிடராயினர்! கைதிகள் தாங்கள் தரும் தொகையை இரட்டித்தனர்! சிப்பாய்கள் காதைத் தீட்டிக்கொண்டனர். நாவிலே நீர் ஊறிற்று, கைகள் தாமே நீண்டன!

ஆனால்...... சுபேதாரின் உத்தரவில்லாமல் எதையும் செய்ய முடியாது, செய்யவுங் கூடாது. உத்தரவு வாங்குவது அவ்வளவு கடினமும் அல்ல, இடம் போதவில்லையென்று காரணங் காட்டி மிக எளிதில் அனுமதி பெற்றுவிடலாம். ஐயோ .... சுபேதார் தூங்குகிறார் நிம்மதியாக! அவர் தூக்கத்தைக் கலைக்க இந்த நாட்டில் யாருக்கு உரிமையுண்டு......தைரியந்தானிருக்கிறது! ஆகவே அவர்கள் படும்பாட்டைப் பார்த்தும் குருடராகி, அவர்களின் துயரக் குரலைக் கேட்டும் ஊமைகளாகி விட்டனர்!

இரவு கரைந்தது! ஒரே வெப்பம்......தாகம்! குழந்தைகள் நா வறண்டு வீறிட்டுக் கதறின! பெண்கள் மயக்

கம் அடைந்தனர். இந்தக் கோரக் காட்சியைப் பார்க்கவும் சகிக்காமல் கண்களை மூடிக் கொண்டனர். புழுக்கம் தாங்க மாட்டாமல் உள்ளுக்குள்ளிருந்தவர்கள் ஒருவரை யொருவர் மோதிக்கொண்டு சாளரத்தை யடைந்தனர். சிலர் நாக்கை நீட்டி நீட்டித் தாகம் எடுப்பதைக் காண்பித் தனர். தொண்டை வறண்டதால் சிலர் துவண்டு விழுந்த னர். விழும்போது ஒருவர் மேல் ஒருவர் அடிபட்டுச் சாய்ந்தனர். சொட்டுச் சொட்டாகக் காவலாளிகள் நீரைப் பெய்தனர். அந்தத் துளி நீரையும் அவர்கள் நாக்கால் நக்கிக் குடித்தனர்! சிலர் பிணமாயினர். மற்ற வர்களோ அவர்களில் சிலர் மரித்தார்களே என்று அழ வில்லை. கொஞ்சம் இடங்கூடக் கிடைத்ததே என்று பிணங்களைப் பரப்பி அவைகளின் மீது நின்றனர்......... நிலைமை அப்படி......அவர்கள் என்ன செய்வார்கள்? பரிதாபம். சிலர் மூளைக் கோளாறால் கண்டபடி உளறி னர். பலர் அந்த நிலைமைக்கு வந்து கொண்டிருந்தனர். காவலாளிகளைக் கண்டபடி வைதனர். தங்கள் ஆத்திரந் தீர வாயில் வந்தபடி திட்டித் தீர்த்தனர். அவர்கள் துப் பாக்கியின் 'பாசக்கயிற்று' முனையைக் காட்டினர்.

அந்தப் பயங்கர இருட்டறை சிரித்தது இருட்டில்... ......இரவும் இந்தக் காட்சியைப் பார்க்க முடியாமல் ஓடி விட்டது!

விசாரம்!

காலை வந்தது. இரவு எழுதியனுப்பிய இந்தச் சேதி யைச் சொன்னது. கேட்டுத் திடுக்கிட்டான் ஸுராஜ்.

கைதிகளைக் கொண்டு செல்லக் கதவைத் திறந்தனர். வெள்ளைப் பிணங்கள் பொல பொலவெனச் சாய்ந்தன. அவைகளை அப்புறப் படுத்தவே அரை மணிக்கு மேலாகி விட்டது. எஞ்சியவர் இருபத்துமூவர்! அறுபத்து மூவர் போல இவர்கள் ஒரு துறையில் எண்ணிக்கையால் குறிப்

பிடப்படவேண்டியவர்கள்! அவர்கள் நடைப்பிணங்களாக இருந்தனர். நாளடைவில் அவர்களின் தோழர்கள் சென்ற திக்கைநோக்கி நடப்பர்என்று தெரிந்தது திட்டவட்டமாக! வாள் முனையில் வெட்டி வீழ்த்துவானேன். தாமே சாகட்டும் என்று முன் கூட்டியே திட்டமிட்டு இந்த வேலை செய்தார்களா ? ஒரு நாளும் இல்லை !

ஸுராஜ்—உத்—தௌலா இதைக் கேட்டதும் கலங்கிவிட்டான். மனம் மயங்கினான். கனல் கக்கியே பழக்கப்பட்ட கண்களில் புனல்........சுபேதார் உண்மையிலே இடிந்து விட்டான் இந்தப் பயங்கரச் சேதியைக் கேட்டு! முகலாய வம்சத்தின் ஆட்சியில் ஒரு பெரிய இரத்தக்கோடு கிழித்து விட்டார்கள் ; அசட்டுத்தனத்தால் அழியாப் பழியை உண்டாக்கி விட்டார்கள் !

"மூடன், என்ன காரியம் செய்து விட்டீர்கள் ? பத்திரப் படுத்துங்கள் என்றால் உயிரைக் குடித்து விட்டீர்களே !"

"மன்னிக்க வேண்டும். அவசரத்தில் நடந்து விட்டது"

"நமது அவசரம் நூற்று இருபத்து மூவரின் பிணங்களைக் கொட்டிவிட்டது. கைதிகளைக் கொன்றோம் கருணையின்றி......இது நீதியா ?"

"சென்றதை யெண்ணி வருந்துவானேன் ? விசாரிப்போம். விவரங் கிட்டும்"

ஆனாலும் ஸுராஜுக்குத் துக்கம் மாறவில்லை. அவன் ஏக்கமே உருவாக அமைந்து விட்டான்.

"பட், பட், பட்......"—கைதட்டும் ஒலி.

"மகாராஜ்" என்று பணியாள் வணங்கினான்.

"உடனே அஜிஸ்கானை அழைத்துவா" என்று மூடன் கட்டளையிட்டான்.

" அவர் ஊருக்கு வெளியே சென்றுள்ளார் " என்று விடை தந்தான் மீண்டும் வந்து !

" சரி, காவல்காத்த சிப்பாய்களை அழைத்து வா " —சுபேதாரின் கட்டளை.

நடுக்கத்துடன் இருவர் வந்தனர். பயந்துகொண்டே பணிந்தனர்.

"வீரரே, வீண் பழியை என்மீது சுமத்திவிட்டீர்கள். அவர்கள் விரோதிகள் தாம்—வெட்டி வீழ்த்திக் களத்திலே கத்தியும் கையுமாக நின்றிருந்தீர்களானால் உங்களுக்கு விருதுகள் அளித்திருப்பேன் "

" தக்க இடம் கிடைக்கத் தவக்கப்பட்டதால்........ "

" அதோ நூற்று இருபத்து மூன்று பிணங்களும் நம்மைப் பார்த்துச் சிரிக்கின்றன. ஆம்; சிரிக்காமல் என்ன செய்யும்? நான் ஆயிரமாயிரம் பிணங்களைத் துவைத்துக்கொண்டு ஓடிப் போரிட்டிருக்கிறேன். பிணங்களின் மீது நின்று கொண்டு வாளை வீசியிருக்கிறேன். ஆனால் இந்தப் பிணங்களோ என் இதயத்தில் புதைக்கப் பட்டு விட்டனபோலும்! இதயம் தாழ்கிறது. அப்படியே தாழ்ந்து விடும் போலிருக்கிறது "

" பாதிப் பேரையாவது இடம் மாற்ற வேண்டினர் "

" தவறிவிட்டது என் ?"

" அப்பொழுது இரவு ..."

" இரவாயிருந்தால்......?"

" உத்தரவு பெற......"

" என்னைக் கேட்டிருக்கலாமே !"

" தாங்கள் அயர்ந்து......"

ஆம்; சுபேதார் நிம்மதியாகத் தூங்கிவிட்டான். அவனது தூக்கம் அவர்களுக்கு அழியாத தூக்கத்தைக் கொடுத்துவிட்டது. அந்தப் பயங்கர மரணக் கதை

அவன் மனத்திலே மறைந்து மக்கிப் போகட்டும், எதிரி களிடம் எப்பொழுதும் போலவே நடக்க வேண்டும்...... இப்படி மனதிலே எண்ணிக்கொண்டு எஞ்சியிருந்த இருபத்து மூவரையும் அழைத்துவரும்படி கட்டளை யிட்டான். காவலாளிகள் வெளியேறினர்.

விசாரணை !

கைதிகள் ஒவ்வொருவராக வந்தனர்.

"என் பெயர் ஹால்வெல், தாங்கள் படைத்த நரகத்திலிருந்து தப்பி இன்னும் உயிருடனிருக்கிறேன்."

ஸுராஜ் கொஞ்சமும் வருத்தப்படுவதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

"காவலாளிகள் நீர் தந்தனர் சொட்டுச் சொட்டாக... காரணம் நாங்கள் அதற்காகப் போட்டியிட்ட கோரக் காட்சியைக் கண்டு ரசிக்க! ஒளி காட்டினர் சாளரத்தின் வழியாக, நாங்கள் அவர்கள் கருணை வெள்ளத்தில் பிணங் களாக மிதப்பதைக் காண !"

"அடுத்த கைதி......?"—அவன் சொன்னான்.

"அடைத்த அறையின் அளவு தெரியாமல் நூற்று இருபத்து மூன்று உயிர்களை வாங்கி விட்டீர்களே ! இது அடுக்குமா ?"

இப்படிக் கைதிகள் ஒவ்வொருவராக விசாரிக்கப் பட்டனர். ஒவ்வொருவரின் ஒப்பாரியும் கேட்க மிகவும் இரக்கமாகத்தானிருந்தது! ஆனாலும் ஸுராஜ் தனது கம்பீரப் பார்வையை மாற்றவில்லை.

அப்பொழுது அஜிஸ் உள்ளே நுழைந்தான்......இது வரை எங்கு சென்றிருந்தான் ? என்ன செய்து கொண் டிருந்தான் ?......அது மிகவும் முக்கியமான கண்டுபிடிப்பு வேலை !

அஜிஸ் எப்படியும் அமீன்சந்த்தைக் கண்டுபிடித்து விட வேண்டுமென்று கிளம்பினான். முடீனும் உத்தரவைப் போட்டிருந்தான். ஆகவே கல்கத்தாவின் எல்லைக் கோடுகளிலெல்லாம் திரிந்தான்.

ஒரு காளி கோயில்......அதனுள் சிரிக்கும் குரல்...... அவனுக்குப் பழகிய பழைய குரல்! உடனே ஒளிந்து கொண்டான் அஜிஸ்.

"நம் திட்டத்தின் ஒரு முனை வெற்றியடைந்து விட்டது........வெள்ளைக்காரர்கள் வீழ்ச்சியடைந்தனர். இன்னொரு பக்கம்......... முகலாயச் சவக்குழி தோண்டப் பட வேண்டும்.........அதுவும் முடிந்துவிடும் வெகு விரைவில்...ஹி ஹி, ஹி......!"

இப்படி அந்தக் குரல் ஒலி பரப்பியது. அவனது வழக்கமான சிரிப்பும் கலந்துகொண்டது. வெள்ளையர் வீழ்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியால் அவன் ஊதி உப்பிப் போனான். அடனே அஜிஸ் உள்ளே நுழைந்தான். காலடியோசை கேட்டவுடன் சிலையோடு ஒண்டிக்கொண்டான். அவனா விடுவான்? அவனைச் சிறையிட்டான். கையில் விலங்குகளை மாட்டி இழுத்து வந்தான்.........

சுபேதாரிடம் இரு வீரர்கள் அவனை இழுத்து வந்தார்கள். யார் அவன்? அமீன்சந்த்!

"மகராஜ், இவன் தளபதி அஜிஸ் அவர்களால் கைதியாக்கப்பட்டவன்" என்றனர்.

உடனே அஜிஸ் ஆரம்பித்து விட்டான் அவனது வண்ட வாளங்களை......சுபேதார் நெற்றியைச் சுளித்துக் கொண்டான்.

" அஜிஸ், அமீன்சந்தை எப்படிக் கைதி செய்தீர்?"

"நகருக்கு வெளியே அலைந்த போது களைத்துவிட்டேன். களைப்புத்தீர ஒரு இந்துக் கற்கோயிலில் தங்கினேன். அது காளி கோயிலாம். இந்த ஏமாளி ஏதோ உளறினான். சந்தேகப்பட்டேன்"

"அமீன்சந்த், இதுவரை உம்மீது இருந்த நம்பிக்கை குறையவில்லை"

"சுபேதார்ஜீ, நான் நிரபராதி!"—அஜிஸ் ஆத்திரத்தோடு கூவினன்.

"இவன் துரோகி...கொஞ்சம் அமைதியாகக் கேட்டால் துரோக புத்தியை அம்பல மாக்குவேன்!"

"அஜிஸ்...ஆத்திரம் வேண்டாம். தக்க சமயத்தில் இவனை நாம் சுபேதாருக்கு உண்மை உருவிலே அறிமுகம் செய்வோம்—சாட்சியோடு ஆதாரத்தோடு!"

அப்பொழுது வந்த மூடன் நடந்துக்கொண்டே சமாதானம் பேசினன்.

"அமீன்சந்த், நீர் நிரபராதியென்ருல் ஒளிவானேன்!"

"போரைப் பார்க்கவும், அந்தக் கோரக் காட்சியில் கிளம்பும் பயங்கரக் கூவலைக்கேட்கவும் நடுங்கும் கூட்டத்தவன். ஆகவே ஒளிந்தேன்...ஒளியாமலிருந்திருந்தால்தான் நீங்கள் சந்தேகிக்கவேண்டும்"

"கிஷோனிதாஸ் எங்கே?"

"நான் அறியேன், வங்கத்தின் தங்கமே!"

அஜிஸ் மீண்டும் குறுக்கிட்டான்—மற்ருரு புதிய செய்தியைச் சொல்ல!

"சுபேதார்ஜி, கிஷோனிதாஷும், இன்னொரு மாதும் ஒருவரை ஒருவர் தழுவிப் பின்னியபடியே கடற்கரையில் பிணமாகக் கிடந்தனர்!"

"அகம்பாவிக்கு ஏற்ற பரிசு" என்ருன் மூடன்.

"அமீன்சந்த் உமது பேச்சில் நஞ்சிருக்கிறது. உமது மூச்சிலே விஷவாடை வீசுகிறது. உமது கண்களிலே கணத்திற்குக் கணம்தோன்றி மறையும் அச்ச அலைகள் உம்மைக் காட்டிக் கொடுத்து விட்டன!"

"தேவா, அச்சம் குற்றத்தால் அல்ல-போர்க்கொடுமை மையைப் பார்த்ததால்!"

"நாம் உம்மைக் குற்றவாளியென்று தீர்மானிக்கிறோம்"

அமீன்சந்த்துக்கு அளித்த தண்டனை...வெறும் சொத்துப் பறிமுதல்தான்! அந்தத் துரோகிக்கு இது போதுமா? அவன் இன்னமும் சரியாகச் சுபேதாருக்கு அறிமுகமாகவில்லை. அந்தத் தீர்ப்பைக் கேட்டதும் 'ஐயோ...' என்று பதறினான். பயங்கர இருட்டறை கொட்டை விழி விழித்தது. ஸுராஜ் ஹுக்காப் புகையை மெதுவாக இழுத்து இழுத்து விட்டுக்கொண்டிருந்தான். அவன் முகம் மிகவும் வாடியிருந்தது. நூற்று இருபத்து மூன்று பிணங்களை அடுக்கியிருந்தனர். அதன் பக்கத்தில் எஞ்சிய இருபத்துமூவர் அழுது கொண்டிருந்தனர்...அமீன்சந்த், அந்தப் பயங்கரத் துரோகி...இப்படி நிகழ்ச்சிகள் மனத்திரையில் பட்டுத் தெறித்தன! ஸுராஜ் கண்களை மூடினான்.

நான்காம் பாகம்

தெற்கே!

இடம் சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை! அந்த வானளாவும் மண்டபத்தினுள் குழப்பம். ஏன்?

வெள்ளை வியாபாரத் தலைவர்களிடம் பரப்பரப்பு. வருணிக்க முடியாத ஒரு அவசரக் கோலம்! கிலி கொண்டிருந்தனர் அந்த 'கிளார்க்குகள்' கூட்டம். மொத்தத்தில் சொன்னால் எல்லோருமே பீதி யடைந்தனர்.

தென்னாட்டில் பிரஞ்சு ஆங்கிலோ போட்டி பலமாக இருந்தது. அந்தப் போட்டியின் உருவம் பல விதமான திரைகளுக்குள் புகுந்து கொண்டு ஆடிற்று! அந்தப் போட்டியை ஒழிக்கப் போட்ட திட்டங்கள் எல்லாம் போரிலே தான் முடிந்தன அமைதியான முறையில் ஆக்க வேலைகளுக்கு ஊக்கந் தரும் வகையில் எதுவும் அமையவில்லை.

ஹைதராபாத் அரசன் நிஜாம் உல்முல்க் திடீரென இறந்து விட்டான். பிறகு யார் பட்டம் பெறுவது? இறந்த மன்னனுக்கு நாசர்ஜங் என்றொரு மகனும், முசபர்ஜங் என்ற பேரனும், உண்டு. அவர்கள் பட்டத்துக்கு வாரிசுதார்கள்! ஆகவே அரச பதவியை அடைவதற்கு மகனுக்கும் பேரனுக்கும் போட்டி! அவர்களில், பேரன் முசபர்ஜங் பிரஞ்சுக் கவர்னர் டூப்ளேயைக் கட்டாயம் உதவிசெய்ய வேண்டுமென்று மன்றாடினான், அவனும் அவனது வெற்றிக்கு உழைப்பதாக உறுதி கூறினான். உதவிகள் பல புரிந்தான். என்றாலும் மகன் நாசர்ஜங்கே அந்த பட்டப் போட்டியில் வெற்றி பெற்றான். முடியும் சூடிக் கொண்டான். பிரஞ்சுக்காரர்கள் சரித்திரத்தையே மாற்றி எழுதினார்கள். சூழ்ச்சியால் நாசர்ஜங்கை வீழ்ச்சியடையச் செய்தார்கள். வெட்டுண்டு மாண்டான் நாசர்ஜங். சிறைப் பட்டிருந்த பிரஞ்சு 'செல்லப்பிள்ளை' முசபர்ஜங் முடி சூட்டுவிக்கப் பெற்றான். பிரஞ்சுக்காரர்கள் கூத்தாடினார்கள். டூப்ளே—பத்தே—பாத்—டூப்ளே—ஜெயங் கொண்டபுரம்—என்று அவர்களின் வெற்றியைக்

கொண்டாடும் வகையில் ஒரு நகரையே பிரஞ்சுக் 'கவர்னரின்' பெயரால் அழைத்தார்கள். 'ஜெயஸ்தம்பம்' வேறு நாட்டப் பெற்றது. நவாப் பட்டம் வேறு கொடுத்தார்கள்.

அதுமட்டுமா..........?

கர்னுடகத்தில் அன்வாருதீன் ஆண்டு கொண்டிருந்தான். சந்தா சாகேப் ஆட்சியுரிமை பெற உரிமையுள்ளவன். அவன் பிரஞ்சுக்காரர்களுடன் கொஞ்சிக் குலவினுன். 'கர்னுடக முசபர்ஜங்'காகப் பயன் படுத்தப்பட்டான்! அவனை மகாராஷ்டிரர்கள் சிறையிட்டார்கள். அப்பொழுது பிரஞ்சுக்காரர்கள் அவனுக்காகப் பரிந்து வந்தார்கள். அவனது குடும்பத்திற்குத் தக்க பாதுகாப்பு அளித்தனர்! பிறகு அவனை மீட்பதற்குப் பொருந் தொகை கொடுத்தனர். சந்தாசாகேப் வெளியில் வந்தான். பிரஞ்சுக்காரரின் உதவியினுலும், தூண்டுதலினுலும் நவாபுடன் போருக்கே கிளம்பி விட்டான். ஆம்பூர் என்ற இடத்தில் பயங்கரப் போர் நடந்தது. நவாப் தோற்ருன். அவன் மகன் முகம்மது அலி திருச்சிக் கோட்டையிலே ஒளிந்து கொண்டான்.

இப்படிப் பிரஞ்சுக்காரர்கள் வாகை சூடிக்கொண்டு தென்னுடு முழுவதும் திரிந்தார்கள். பிரஞ்சக் கவர்னர் டூப்ளேயின் செல்வாக்கு உச்ச நிலையிலிருந்தது. வெள்ளையர் வாய் பொத்தி, கைகட்டி யிருக்கமுடியுமா! வெள்ளையர் நிலை? ஆங்கிலேயரின் எதிர்காலம்? பெரிய இருட்டு, காரிருள்! ஆனுல் ஆங்கிலேயர்கள் பெரிய தந்திரக்காரர்களல்லவா? வரலாற்றையே புரட்டி எழுதிவிட மாட்டார்களா ?

காலத்திற்கேற்ற முறையில் ஆங்கிலேயருக்குக் கிளைவ் என்ற பெருவீரன் கிடைத்தான். அவன் தந்திர யோசனைகள் ஏற்றுக்கொள்ளப் பெற்றன. உடனே திருச்சிக் கோட்டையிலே திருடனைப்போல விழித்துக் கொண்டு கிடந்த முகம்மது அலிக்கு உதவி செய்வதென முடிவுசெய்

தனர். திருச்சியிலே வெள்ளையர் முற்றுகையிடப் புறப் பட்டு விட்டனர். இந்தச் சேதி கேட்டவுடன் சந்தா சாகேப் தனது ஆற்காட்டுக் கேட்டையிலே இருந்த வீரர் கள் அனைவரையுமே அழைத்துக் கொண்டு புறப்பட்டான். எவ்வளவு போராட்டங்கள்............ஆரணிச் சண்டை! காவேரிப்பட்டினப் போர்! திருச்சியில் தீரப் போராட்டம்! என்று நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. இந்த நேரத்தில் கிளைவ் பாதுகாப்பிழந்திருந்த ஆற்காட்டை வெகு எளிதில் பிடித்து விட்டான்.

பிறகு கெளண்டிலாலி என்ற வீரனுடன் கலவரம்! என்னென்ன வகையான போராட்டங்கள்! ஆம், கடைசி யாகப் பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தை எப்படியோ ஒழித்து விட்டனர்! வெகுபாடு பட்டு, பல போராட்டங் களை நடத்தி இந்தக் காரியத்தைச் சாதித்தார்கள் ஆங்கி லேயர்கள்.

வெற்றியென்ற கோபுரத்தைப் பல வீரர்களின் பிணங்களால் அல்லவா கட்டுகிறார்கள்! அதற்கு அழகு செய்ய உயிர்களெனும் வண்ணச் சுண்ணக் குழைவுகள்! மூளை பலமெனும் தீட்டு கோல்கள்............அப்பப்பா! வெள்ளையர் வெற்றியடைந்திருந்தாலும் வேறு ஏதாவது புது ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்து கொண்டிருக் கும் பொழுதுதான் வடக்கே அந்தப் பேராபத்து............ கல்கத்தா வீழ்ச்சி நடந்தது.

முதல் உதவி!

வெள்ளையர் இங்கு வரும் பொழுது வேறு எந்த எண்ணத்துடனும் வரவில்லை. ஆளும் நிலைமை ஏற்படும் என்று அவர்கள் கனவிலும் கருதவில்லை. கி. பி. 1600–ல் முதன் முதல் பண்டகசாலை அமைக்கும் பொழுதும், அதற் குப் பின்னால் சில பல ஆண்டுகள் வரையிலும் அவர்க ளுடைய நோக்கமெல்லாம் வணிகத் தொழிலைப் பெருக்கு வதுதான்!

ஆனால்? காலமும் சூழ்நிலையும் அந்தப் போக்கை மாற்றி விட்டன. அவர்கள் தங்கள் வியாபார வளர்ச்சிக்கு உள் நாட்டு அரசியல் வாதிகளின் துணை தேவையென்றுணர்ந்தார்கள். ஆகவே தான் உள் நாட்டு விவகாரங்களில் தலையிடுமாறு தள்ளப்பட்டார்கள். வெற்றியுங் கண்டார்கள். நுழைந்தார்கள் வெற்றியோடு வெளியிலும் வந்தார்கள்.

திடீரென்று கல்கத்தாவிலிருந்து செய்தி வந்தது— ஜுலை 15–ல் காசிம்பஜார் கோட்டை சுபேதார் கைவசமாகி விட்டது என்று! திடுக்கிட்டார்கள். அவர்கள் ஏற்கனவே கல்கத்தாவின் பலமற்ற நிலையை உணர்ந்தார்கள். கல்கத்தாவின் அங்காடிகள் நிலைமை மோசந்தான். ஆகவே இராணுவத்தை அங்கு வளர்க்க, பெருக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணினார்கள்.

நிலை குலையப்போகும் கல்கத்தாவிற்கு என்ன முதல் உதவி செய்வது? யார் அந்த உதவியைச் செய்ய முடியும்? நேரிலா, சென்னையிலிருந்தபடியா?.........இப்படிச் சிந்தித்தார்கள். அப்பொழுது அவர்கள் எண்ணத்தில் வந்த செய்தி இதுதான்: உடனே ஒரு படையை அனுப்புவது! ஆனால் இதில் முன்னெச்சரிக்கையாகக் கவனிக்கப்பட வேண்டிய செய்தியொன்றுண்டு. கல்கத்தாவில் உள்நாட்டுச் சுபேதாருக்கும் வந்தேறிகளாகிய வணிகர்களுக்கும் சண்டை. ஆகவே படையில் கூலிக்காகச் சேர்ந்துள்ள நாட்டவர் வணிகர்களை எதிர்த்தே போரிட்டாலும் போரிடலாம். ஆகவே வெள்ளையர்களே நிரம்பிய ஒரு படை அனுப்புவதென்று முடிவு செய்தனர்.

மேஜர் கில்பேட்ரிக் படைக்குத் தலைமை வகிக்க இசைந்தார். 230 பேர் கொண்ட ஒரு பெரும் படை அவர் ஆணையின்படி நடக்க அனுப்பட்டது!

ஆனால் அதனால் அடைந்த பயன்...ஒன்றுமில்லை!

அந்தக் காலத்தில் கடற்பிரயாணம் என்றால் 'கைலாச யாத்திரை' என்றுதான் அர்த்தம்! சமுத்திரராசன் தய

வில் வாழும் எத்தனை மலை மன்னர்கள்—அவர்களைத் தாண்டவேண்டும்! வாயுதேவன் உத்தரவு வேண்டும். இத் தனையும் கடந்து செல்லவேண்டும். இப்படிப் பல 'கஷ்ட நஷ்டங்க' ளிடையே புகுந்து கில்பேட்ரிக் வந்து சேர்ந்தான். பல்டா என்ற கடற்கரைக் கிராமத்தில் தங்கியிருந்தான்.

ஆனால் புறப்பட்டவர்களில் பலர் பல்டாவரை உயிரு டன் வரவில்லை. எண்ணிக்கையில் வரவரக் குறைந்து விட் டனர். பலர் வழியிலே மடிந்து விட்டனர். ஆகவே அவர் களின் நிலைமை மகாமோசம். இருநூற்றுமுப்பது பேரில் முப்பது பேரே போரிடத்தக்கவர் எஞ்சியிருந்தனர். பரி தாபம்! முதல் உதவி செய்யப்போனவர்கள் கடைசி உத வியை அவர்களிடமே எதிர்பார்க்க வேண்டியவர்களாகி விட்டனர்.

வியாபாரக் குழு!

அன்று கல்கத்தாவின் கோர நிலையைப் பற்றிப் பேசவே வியாபாரக் குழு கூடிற்று!

கல்கத்தா. அங்கு என்ன நடந்தது? விபரந் தேவை— விளக்கமாக—விரிவாக. கல்கத்தாவைச் சுபேதார் பிடித்து விட்டாரா? அத்துடன் விடவில்லையாமே! இருட்டறையில் தள்ளி நம்மவரை—நூற்று இருபத்து மூவரைக் கொன்று குவித்து விட்டாராமே! என்ன அநியாயம்! என்ன கொடுமை! கொன்றுவிட்டார்!......ஹ ஹ ஹா......கொலை காரனுக்கு மதிப்பு—அவர் பட்டம்! அந்த மதிகெட்ட மடையனை விடக்கூடாது...உடனே தக்க திட்டம் வேண் டும் அவன் மண்டையிலே அடிக்க. நாம்தான் தீவிரமாக அதனைத் திட்டிட வேண்டும். அந்தத் தீயனின் தூய்மை யற்ற செயலுக்குத் தக்க விடை தர வேண்டும்.

இப்படிப் பலர் வாதமிட்டனர். வாதம் வரவர சூடாகி விட்டது. உறுப்பினர்கள் தங்கள் தங்கள் ஆத்திரத்தைக் கொட்டியளந்தனர்.

முதலில் ஆர்ம் துரை எழுந்தான். அவன் பெரிய சரித்திர ஆசிரியன். கல்கத்தாவில் வாழ்ந்தவன். அதன் நிலவரம் தெரிந்தவன். அதற்கு மாற்று மருந்து எதுவெனப் புரிந்தவன். அவன் தொடங்கினன் இப்படி......

"கனம் தலைவர் அவர்களே! இதனை உடன் கவனித்து ஆவன செய்ய வேண்டுகிறேன்"—கணீரென ஒலித்தது அவன் குரல்.

"ஆமாம்; இது அவசியம் கவனிக்கப்பட வேண்டியது. ஆபத்து நமது நிழலாகிறது. இனிச் செல்லுமிட மெங்கும் தொடரும்!"—அடுத்தபடி பேசிய அட்மிரல் வாட்சனின் பேச்சு இது.

பிறகு ஒருவர்—

"உடனே சுபேதாருடன் நேச உடன் படிக்கை செய்து கொள்வது நலம்"

அடுத்தவர்—

"அதைநான் அழுத்தந்திருத்தமாக ஆமோதிக்கிறேன். இப்பொழுதுள்ள நிலைமையில் சண்டையிட வலுவில்லை. வம்பை விலைக்கு வாங்க வேண்டும்"

ஆர்ம் முகம் கறுத்தது. வெள்ளைமுகம் சினத்தால் இரத்தம் ஏறிக் குப்பென்று சிவந்தது!

"சற்றுக் கவனிக்க வேண்டும். சமரசம் பேசிச் சாந்தி அடைவதென்பது தகிடுதத்த வேலை—பாம்பு கடித்த ஒருவனுக்கு விசிறி கொண்டு வீசுவது போலத்தான்! கடித்த இடத்திலிருந்து விஷம் பரவுவதற்குள் பாய்ந்து கடித்துத் தசையைக் கொத்தாகப் பிடுங்கிட வேண்டும். அதுவும் கடித்த பாம்பைக் கொண்டே ஏற்றிய நஞ்சை இறக்க வேண்டும். அதுதான் அறிவுடையவர் செயல்!"

"சொல்வது விளங்கவில்லையே"

"அதற்காகத்தானே பேசுகிறேன். விளங்கும். பொறுத்திருங்கள். நான் சொல்கிறேன். என் கல்கத்தா

அனுபவத்தின்மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். ஒரு படை போகவேண்டும். ஆமாம். கட்டாயம் இந்த உதவி தேவை"

"அதுதான் சரி"—பல குரல்கள்!

"வேண்டாம்"—சத்தம் கட்டைதான்—ஆனால் வாதம் வரவர வளர்ந்துகொண்டே இருந்தது.

முதலில் கப்பற் படையைப்பற்றிச் சிந்தித்தனர். நெடுநேர சிந்தனைக்குப் பின் அட்மிரல் வாட்சன் தலைமையில் கப்பற் படையை அனுப்புவதென முடிவு செய்தனர்.

தரைப் படையைப்பற்றிப் பிரச்சினை வந்தது. காலமாகிவிட்டது. வாதம் முடியவில்லை. வியாபாரக்குழு கலந்து கலந்து கூடவேண்டி வந்தது. இரண்டு தினங்கள்வரை அவர்களது வாய்ச் சண்டை ஓயவில்லை! ஒவ்வொரு நாளும் வாதித்தனர். தரைப்படைத் தலைவர் யார்?—ஒருநாள் வாதம்! அவருக்குள்ள அதிகாரம்?—பிறிதொருநாள் இந்த ஆராய்ச்சி! அவர் கடமைகள் என்னென்ன, கப்பற்படைத் தலைவருக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு யாது, பழைய கல்கத்தா கவர்னரிடம் அவர் கொள்ளவேண்டிய முறை......... இப்படிப் பேசிக் கழித்தனர் பொன்னான காலத்தை!

பைகாட், ஆல்டர்கிராம் ஆகியோர் தலைமை வகிக்கத் தவித்தனர். தகுதியோ பூஜ்யம்! லாரன்ஸுக்குத் தலைமை வகிக்கத் தகுதியிருந்தது. ஆனால் வயது குறுக்கிட்டது. அவர் குடு குடு கிழம்! அவரது தளர்ந்த உடல் தடையாய் நின்றது.

இந்த நேரத்தில் ஆர்ம் எழுந்தான்!

"அவையோரே! நான் அருமையான படைத் தலைவனைக் கண்டு பிடித்துள்ளேன். அவனை அனுப்பினால் வெற்றி நிச்சயம்......அவன் பெயர் கிளைவ்......ஆற்காட்டு வெற்றிவீரன்!"

அந்த மூன்றெழுத்தை ஆர்ம் ஓத, வீரன் லாரன்ஸும்

தாளம் போட்டான்! வியாபாரக் குழுவினர் கிளைவைத் தக்க அதிகாரத்துடன் தலைவராக்கினர். ஆனாலும் அவன் தலைமைப் பதவிக்கு எதிர்ப்பு இல்லாமல் இல்லை. கல்கத்தாவிலிருந்து புறங்காட்டித் தப்பியோடி வந்த மானிங்ஹாம் தடுத்தான். அவனது எதிர்ப்பைக் குப்பையில் தள்ளினர். ஆல்டர்கிரான் பொறுமையால் தனது படையைக் கிளைவின் தலைமையில் அனுப்பவும் மறுத்து விட்டான். ஆகவே, எதிர்ப்பிற்கிடையே கிளைவ் தரைப் படைத் தலைவனானன்!

அக்டோபர் 15

வேலைக்காரன், மாட்டியிருந்த நாட் குறிப்பில் தேதியை மாற்றி வைத்தான்—ஆகஸ்ட் 5-ல் செய்தி கிடைத்தது கல்கத்தாவில் தோல்வி யென்று! அக்டோபர் வரையிலும் அவர்கள் வாதம் வளர்ந்துவிட்டது என்று அந்தக் 'காலண்டர்' சொல்லிக்கொண்டிருந்தது!

கிளைவ் மேஜையருகே சிகரெட் புகையை விட்டுக் கொண்டே காப்பியைச் சுவைத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது வேலைக்காரன் வழக்கம்போலக் கடிதங்களைக் கொண்டுவந்து வைத்தான். இரண்டு கடிதங்கள் இங்கிலாந்திலிருந்து வந்திருந்தன. நண்பர்கள் எழுதியிருந்தனர்.

மற்றவை......?

அவைகளிலே ஒன்று கல்கத்தாவிலிருந்து வந்திருந்தது. ஆனல் அவனுக்குக் கல்கத்தாவிலிருந்து எழுதக் கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்?

......தாங்கள் தலைமை வகித்துப் புறப்படப் போவதாக அறிந்து மகிழ்ச்சி. உங்கள் வருகையை நாளும் எதிர்பார்க்கிறது கல்கத்தா—கல்கத்தா மட்டுமா? இந்திய உபகண்டமே! ஆம்: இந்தத் துடுக்குமிக்க துருக்கரின் வாலை ஒட்ட நறுக்கவேண்டும். முரட்டுக் குணம் படைத்த வறட்டு மூளை முகலாயர்களை விரட்டியடிக்கவேண்டும்.

நீங்கள் வியாபாரிகள், நாங்கள் அவர்களின் குடிகள்! நமது தொல்லைகளுக்கு எல்லையில்லை.

கல்கத்தாவில் என்னாலான ஒத்தாசைகள் அத்தனையும் செய்கிறேன். வருக, வருக...

......நான் தலைமை வகிக்கிறேன் என்பது எப்படி இவ்வளவு விரைவில் கல்கத்தாவிற்குத் தெரிந்தது? ஒரு வேளை இங்கேயே அந்த ஆட்கள் இருக்கிறார்களோ...! இல்லாவிட்டால் இவ்வளவு சீக்கிரம் எப்படி எழுத முடியும்? எழுதிய ஆள் யார்? அமீன்சந்த்—அதே ஆள்! ஆகஸ்ட் 5-ல் செய்தி தெரிவித்திருந்த அதே ஆள்தான் இப்பொழுதும் எழுதியிருக்கிறான். அவன் ஒரு மாயாவியோ? புரிந்துகொள்ள முடியவில்லையே...

ஆமாம், அவன் ஒரு வைதீக இந்து! இஸ்லாத்தின் விரோதி. ஆகவே, சுபேதாரை எதிர்க்கிறான், அதற்குப் பெரிய திட்டமிட்டு வேலை செய்கிறான். நிச்சயமாக அவன் ஆட்கள் சென்னையில் என்னைச் சுற்றி மட்டுமல்ல, ஜகமெங்கும் இருக்கிறார்கள். பெரிய சதிகாரக் கூட்டம் போல உலவுகிறார்கள். கோயில்களெல்லாம் அவர்கள் கோட்டைகள்தாமே! இந்துக் கோயில்களில் முகமதியன் நுழைய மாட்டான். முகம்மதியர் பள்ளிவாசலில் இந்து ஏன் நுழைகிறான்? சூழ்ச்சி செய்ய இடமா இல்லை... ஏராளம்!

அமீன்சந்த்—நமக்கு ஒரு நல்ல வேட்டை நாய். கல்கத்தாவில் கட்டாயம் வெற்றி! ...

கிளைவ் தனக்குள்ளாகவே பெரிய 'பிளான்' வகுத்து விட்டான். அதனால்தான் போலும் அவன் தலை தானே ஆடிற்று! எதிரில் காப்பி ஆறிக்கிடந்தது. அவன் தான் விட்டுக்கொண்டிருந்த புகை மண்டலங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கிளைவ் அறியமாட்டான் அமீன்சந்த் தலைமையிலே ஒரு 'ஜெ ராம்சந்த்' கூட்டம் வேலை செய்கிறது என்ற உண்மையை...

சொத்திழந்த அமீன்சந்த், தன் படத்தைக் கீழே போடாமல் ஆடும் நாகம்போலவே நடமாடினான். அவனுக்கு ஒரு பெரிய குழப்பம்... எப்படியாவது சுபேதாரை வீழ்த்திவிட வேண்டும் என்று திட்டமிட்டபடியே வாழ்ந்திருந்தான். அவனது 'கள்ளபார்ட்டுகள்' எங்கெங்கும் இருந்தனர். அதனால் அவன் எதையும் செய்ய முடிந்தது. சென்னையில் நடக்கும் செய்திகள் உடனுக்குடன் அவனுக்குக் கிடைத்துக்கொண்டிருந்தன. அவனது மனத்திலே புதியதோர் திட்டம் புலப்பட்டது. வரும் சென்னைப் படையினுதவியினால் சுபேதாரை அடக்கிவிட்டு வேறொரு 'பொம்மை'யைச் சுபேதாராக்கி அவனைத் தன் விருப்பம் போல ஆட்டி வைக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான். அதற்காகவே கிளைவுக்கு 'வரவேற்பு மடல்' வாசித்துக் கொடுத்தான். கிளைவும் அதனை மகிழ்ச்சியுடனே வரவேற்றான்.

இருதரப்பு விவரங்கள்

என்ன ஆச்சரியம்... வெள்ளையர்கள் கல்கத்தாவை நோக்கி முன்னேறுகிறார்கள் !

அக்டோபர் 16, சென்னைக் கடற்கரையில் கம்பீரமாகக் கப்பல்கள் நின்றுகொண்டிருந்தன. சிப்பாய்கள் எறும்புச் சரம்போல வந்து ஏறிக்கொண்டிருந்தார்கள். தொள்ளாயிரம் வெள்ளை வீரர்களும் பதினைந்து இந்தியச் சிப்பாய்களும் அதில் இருந்தார்கள். கப்பல்கள் ஐந்தே தான், எண்ணிக்கையில்—கப்பல்கள் கிளம்பி விட்டன. கரையில் ஏராளமான வெள்ளையர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். கைக் குட்டைகளாலும், தலைப்பாகையினாலும் விடைதந்தனர். கப்பல்கள் வரவரக் கரைந்துகொண்டே வந்து கடைசியில் கடலோடு கரைந்துவிட்டன போலும் !

கடலிலே காற்றோடு போராடி, அலைகளுடன் வாதாடி, மலைகளுடன் மன்றாடிக் கல்கத்தாவை நோக்கிக் கணத்திற்

குக் கணம் முன்னேறிக் கொண்டிருந்தனர். ஒரு கப்பல் இன்னொரு கப்பலைவிடப் பல மைல்களுக்கு அப்பால் போய்க் கொண்டிருந்தது......இது வேறு தொல்லை! ஒன்றை யொன்று இருந்து இழைத்துக்கொண்டு போக வேண்டியிருந்தது. ஐந்து கப்பல்களும் திக்குக் கொன்றாக வந்துகொண்டிருந்தன. என்ன செய்வது.........எப்படி ஒன்று சேர்ப்பது...? அதுதான் அவர்களுக்குச் சிக்கலான பிரச்சினையாக இருந்தது!

பல தொல்லைகளுக்கிடையே பல்டா என்ற இடத்தை அடைந்தனர்...ஆனால் வரவேண்டிய இரண்டு கப்பல்கள் கண்ணுக் கெட்டியவரையில் பார்த்தும் தெரியவில்லை! கம்பர்லாந்து, மார்ல்பரோ......என்ற பெயருடைய அந்தக் கலங்கள் எங்கு வழிதவறித் தவித்தனவோ.........அவர்களுக்குப் புரியவில்லை. ஆனால் அவைகள் தாம் முக்கியமான நாவாய்கள்......ஏனெனில் ஒன்றில் இருநூற்றைம்பது வெள்ளைப் பட்டாளத்தார் இருந்தனர். மற்றொன்றில் தரைப் படை வீரர்களில் பெரும்பாலோர் இருந்தனர். ஆகவே அவை இல்லையேல், அவர்கள் தோல்வியிடம்தான் அடைக்கலம் புகவேண்டும்! அங்கே இருந்த கில்பேட்ரிக் படையோ சிதைந்து சீரழிந்து, இடிந்த மண்டபம் போல நிலைகுலைந்து கிடந்தது......பம்பாயிலிருந்து வரும் என்று அவர்கள் கனவு கண்ட படையுதவி வரவில்லை.

ஆனால் துள்ளிக் கொண்டிருந்த கிளைவ் எதற்காகவும் காத்திருக்கவில்லை. உடனே சுபேதாரின் நடவடிக்கைகளைக் கண்டித்து, எச்சரித்து......ஒரு முடங்கல் விட வேண்டும் என்று துடித்தான்! அப்படியே வெள்ளையர் தலைவர்களும் சுபேதாருக்கு ஒரு நீண்ட முடங்கலை எழுதியனுப்பினர்.

காகிதத் தூது கிளம்பியது சுபேதாரைச் சந்திக்க ..... அந்த நேரத்தில் சுபேதார்......?

கல்கத்தாவில் வெகு ஆடம்பரமாக வெற்றிவிழாக் கொண்டாடினான். பாதுஷா ஷா ஆலத்தின் அன்றைய

தீரப்பேச்சு, வீரவுணர்ச்சி அவன் காதுகளில் ஒலித்தது... கண்களின் முன் வந்து நர்த்தன மாடிற்று. உடனே டெல்லிக்குச் செய்தியனுப்பினான். டெல்லியிலே ஒரே கொண்டாட்டம்! பாதுஷாவே முன்னிருந்து நடத்தினான் இந்த வெற்றித்திருநாளை...வெள்ளையரின் அழிவு அழுகை நாளை!

பெருமையைப் பெரிதாகக் கொண்டான்—பிறவற்றிலே சுபேதார் ஸுராஜ் ஏமாந்தான்! ஏன்......?

அவனது துலோக்கோலில் கல்கத்தா மிகவும் பாரமாக இருந்தது! உலகத்திலேயே அது போன்ற பணக்காரப் பட்டினம் இருக்காது என்று எண்ணினான். கொள்ளை கொள்ளையாகச் செல்வத்தை வாரிக் குவிக்கலாம் என்று கனவுக் கணக்குப் போட்டான். ஆனால் கிடைத்த பொருள்கள் கற்பித்த பாடம், அவனது தராசின் தரம் குறைவு என்பதுதான்! சுபேதார் வருகையை அறிந்து சிலர் ஓடிவிட்டனர். அமீன்சந்தின் 'ஜெ ராம்சந்த்' கூட்டத்தார் குழப்பத்தை முதலாக வைத்துக் கொள்ளையை வியாபாரமாக்கி மறைந்து விட்டனர் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு! மேலும் அந்த ஆண்டு கம்பெனி வியாபாரமும் வெகு மட்டம்! அமீன்சந்த் சொத்து பறிமுதலில் கிடைத்ததும் குறைவுதான் .....நான்கு இலட்சம் வெள்ளிப் பணங்கள், வேறு சில வணிகப் பொருள்கள்... அவ்வளவேதான்! சிப்பாய்களும் இராணுவத் தலைவர்களும் தின்றது, 'அமுத்தல் கொள்கைக்கு, ஆளானது போக மிச்சப்பட்டது எச்சிலை மாதிரிதான்—அதுதான் கிடைத்தது சுபேதாருக்கு! இந்தக் குறைந்த கொள்ளையை அடித்து முடிப்பதற்குள் அந்தக் கைதிகளை—ஹால்வெல் கூட்டத்தாரை—கசக்கிப் பிழிந்தார்கள்.

சுபேதாருக்குப் பெருத்த ஏமாற்றந்தான் உண்மையில்......ஆனால் அடக்கி விட்டோம். ஆணவக்கார அந்நிய நாட்டுக் கும்பலை என்ற திருப்தியோடு திரும்பினான்...... முந்நூறு வீரர்கள் மட்டும் அங்கு காவலுக்காகத் தங்கி

னர். மோனிசந்த் என்பவன் நிர்வாகத் தலைவனாக நிய மிக்கப்பட்டான்.

கல்கத்தாவைச் சூறையிடச் சுபேதார் வருகிறார் என்று ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரருக்கும், டச்சுக் காரருக்கும் செய்தியனுப்பினார்கள்.........உதவி வேண்டி, ஒற்றுமையான எதிர்ப்பு முன்னணி அமைக்கலாம் என்று எண்ணி!......சுபேதார் வெளிநாட்டு வியாபாரிகளாகிய நமக்குப் பொது எதிரி......ஆகவே போர் தொடுப்போம் சேர்ந்து, புறங்காட்ட ஓட்டுவோம் வாரீர்...என்று கூவி னர். டச்சுக்காரர்......வாயடைத்திருந்தனர். பிரஞ்சுக் காரர்......கல்கத்தாவைக் காலி செய்யுங்கள். நாங்கள் வருகிறோம். வந்து காப்பாற்றுகிறோம்......என்றனர். ஆனால் அவர்களையும் விடவில்லை சுபேதார்.

என்ன செய்தான்? பொக்கிஷத்தை நிரப்புங்கள் என்று கட்டளை பிறப்பித்தான் பணிவான உடன் படிக்கைகள் மூலம் தப்பித்துக்கொள்ள முயன்றனர். முடியவில்லை. தங்கள் நிலைமையை நலமாக்க மலைபோலப் பணத்தைக் கொட்டினர். டச்சுக்காரர் நாலரை இலட் சத்தை யள்ளித் தெளித்தனர். பிரஞ்சுக்காரர் மூன்றரை இலட்சத்தைக் காணிக்கை யாக்கினர். படையுதவியும் பண்ணினர்.

ஆனால் சுபேதார் கல்கத்தாவைக் காப்பாற்ற எத் தகைய முயற்சியும் எடுக்கவில்லை. இங்கிலாந்து சிறு நாடு என்று கருதியோ என்னவோ கவலையற்றிருந்தான் கடுமை யான கட்டளைகளுக்குக் கீழ் ஆங்கிலேயர்கள் மீண்டும் வர லாம் என உத்தரவிட்டிருந்தார்கள். ஏனெனில் அரசாங்கப் பொருள் வருவாயில் ஒரு திடீர்க் குறைப்பு ஏற்பட்டதைச் சமாளிக்கவே இந்தக் கட்டளையும் பிறந்திடலாயிற்று!

வெள்ளையரின் துடுக்குக் கடிதம் கிடைத்தது.......... சுபேதார் ஆத்திரத்தில் கூத்தாடினான். தனது படைகளை மூர்ஷிடா பாத்தில் கூட்டினான்... .....''நாட்டாரே, நல் லிளஞ் சிங்கங்களே...... என் படை வீரரே, தீரரே,

கேளீர்! வெளி நாட்டு வெள்ளைத் தோலர்கள், அந்த சோதாக்கள் முன்னேறுகிருர்களாம். அவர்களின் மதிகெட்ட போக்கை, சிறுபிள்ளைத்தனத்தை உடனே அடித்து, நொறுக்கிவிட வேண்டும். என் இளம் சூரரே, களம் நோக்கிப் புறப்படுங்கள். இந்தப் புதுமுறுக்குடன் வரும் பரங்கியருக்கு விலா எலும்புகள் நோகின்றனவாம். அவர்களின் முதுகெலும்பு முறுகிக்கிடக்கிறதாம். அதற்குத் தக்க மருந்து நமது வாட்கள் தடவட்டும், அவர்களின் ஆசையில் நெருப்பை வளர்ப்போம்......" என்று பொறி பறக்கப் பேசினுன். வீரர்கள் வெகுண்டெழுந்தனர்.

மோலி சந்த்

அமீன்சந்த் ஒரு கொடிப் பாதை வழியாக வந்து கொண்டிருந்தான். பக்கத்தில் ஒரு ஆண்டிப் பண்டாரம் பேசிக் கொண்டே தொடர்ந்தான்.

அது அடர்த்தியான காடு......அங்கு உடைந்துபோன காளி சிலையும், அதன் ஓட்டைக் கோபுரமுந்தான் மனிதர்களுக்குரிய சொத்து.........அமீன்சந்த்துக்குக் காளி கோயில்தான் தங்கு மடம் போலும்! கல்கத்தாவிலே ஒன்று......இங்கே மற்றென்று! அமீன்சந்த் அங்கு வருவான், போவான். பகற் கொள்ளைக்கு வெள்ளையுடையைவிடக் காவியுடை அதிக உதவியும், பாதுகாப்பும் தருகிறதல்லவா? அதனுல்தான் அவனுடன் வந்த ஆள் அந்த ஆள் மயக்கி யாடையிலே புகுந்து கொண்டிருந்தான் போலும்! அந்த இடம் பல்டா என்ற இடத்தைச் சேர்ந்தது. இப்பொழுது இருவரும் பெரிய ஏற்பாட்டுடன் தங்கள் இருப்பிடத்தை விட்டுக் கிளம்பினர்.

அமீன்சந்த் கிளைவைச் சந்திக்க விரும்பினுன்.......... ஆனுல் அவனது ஆதரவை இழுக்கத் தக்கதோர் திட்டத்தைப் போட்டபடி! கிளைவ் அடுத்தபடி போரிடவேண்டும், அவனை முழுவதும் எதிர்க்க வேண்டிய தலைவனைப் பற்றிய

உளவை அவனுக்குச் சொல்லிக் கொடுத்தால் கிளைவ் உடனே அவனை நம்புவான்.........பிறகு எந்தச் செயலும் எளிதில் எண்ணியபடி முடியும்!

கிளைவை எதிர்க்கப் போகும் தலைவன் யார்? அவனைப் பற்றிய உளவுதான் என்ன ?

சுபேதாரின் ஆணையின்படி அப்பொழுது கல்கத்தாப் பகுதியைக் காத்து வந்த தலைவன் மோனிசந்த்......அவன் தான் இப்பொழுது கிளைவை ரணகளத்தில் சந்திக்க வேண்டும் ......உடனே, தவக்கமின்றி; ஏனெனில் சுபேதார் மூர்ஷிடாபாத்தில் தங்கியுள்ளான் அவன் மேனிசந்துக்குத் துணையாக ஒரு சிறு படையும் கொடுத்துள்ளான்.

அவனது சிந்தனை சுழன்றது......

ஒரே சமயத்தில் இரண்டு துருவங்களைச் சந்திக்க இரண்டு அமீன்சந்த்துகள் தேவை......அப்படிக் கிடைத்து விட்டால் அவனது வஞ்சகத் திட்டம் வெற்றி பெறும். ஒரு கல் இரண்டு கனிகள்—யோசித்தான்! ஆண்டி ஒரு அமீன்சந்த், தானொருவன்......ஆக இருவர் கிடைத்து விட்டனர்! கிளைவ் கல்கத்தாவிற்குப் புதியவன்......ஆள் முகந் தெரிந்தவனுக இல்லை. ஆகவே ஆண்டி அமீன்சந்த் இந்தச் சமயத்திற்கு மட்டும்!

"சோணி......"

"அட, சோணிசந்த்தா ஆண்டி உருவில் உள்ளான்... அடையாளமே தெரியவில்லையே!"

"தலைவ......"

"இன்று நீ ஒரு கணப்பொழுதிற்கு அமீன்சந்த்தாக வேண்டும்"

"தங்கள் கட்டளை...எதைச் சொன்னாலும் அடியேன் செய்யச் சித்தமாக இருக்கிறேன்"

காதோடு காதாக எதையோ ஓதினான். பிறகு பிரிந்தனர்.

அவர்கள் நின்று பேசிக்கொண்டிருந்த மாத்திற்கருகில் உள்ள புதிரிலிருந்து ஏதோ ஓசைகேட்டது. அமீன் சந்தின் 'எலிக் காதுக்கு' அந்தச் சிறு ஒலியுங் கேட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இருட்டிலும் ஒளிவிடும் நீல மணிக் கண்களை ஏன் அப்படி ஓட்டவேண்டும்...எங்கெங்கும் அவன் பார்வை பாய்ந்தது. ஆனால் என்னவென்று மட்டும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவனுக்குச் சந்தேகம் வலுத்தது. ஆகவே ஓசைகேட்ட பக்கத்தில் ஓடி ஓடிப் பார்த்தான். வெகு தூரத்தில் ஒரு மனித உருவம் போவது போலத் தெரிந்தது...அவன் திடுக்கிட்டான்!

முதல் சூழ்ச்சி

மோனிசந்த் உட்கார்ந்திருந்தான். அவன் எதிரில் அந்தத் துரோகி...ஹி ஹி ஹி சிரிப்புக்காரன்..அமர்ந்திருந்தான். அவன் நீண்ட நேரம் பேசினான். அவன் பேச்சை மெள்ளமாகக் கவனித்து வந்தான்.

"அன்பரே, தோழரே, மோனிசந்தரே, நாட்டின் பேரால், நம் மதத்தின் பேரால் கேட்கிறேன்..."

"என்ன..."

"சுபேதார் இந்து மத வைரி"

"இருக்கட்டுமே..."

"அவனை ஒழிக்க வேண்டாமா?"

"ஒழித்து விட்டு..."

"வெள்ளையர் வந்தால்..."

"என்ன மாற்றம்......புதிய சிறைமாற்றம்...... அல்லா போய் ஏசு வருவார்!'

"மன்னிக்க வேண்டும்...இந்தத் துடுக்கு மிக்க துருக்கரைப் போல மத சம்பந்தமான செயல்களில் அந்த வெள்ளையர் இறங்கப் போவதில்லையென்று உறுதி கூறுகின்றனர்..."

"அப்படியா..."

ஹி ஹி ஹி...அமீன்சந்தின் காரியம் பலித்து விட்ட தற் கடையாளமான பொருள் புதைந்த சிரிப்பு அது! மத வெறியைக் கிளப்பி விட்டான்.. மோனிசந்த் சரிந்து விட்டான். ...இனிச் சரணுகதிதான் பாக்கி. ...அமீன்சந்த் துணிந்து கேட்டான் கொஞ்சமும் நாட்டுப்பற்று இன்றி! ...கல்கத்தாவில் போரிடுவது போலப் பாசாங்கு செய்து மூர்ஷிடாபாத்துக்கு ஓடிவிட வேண்டுமாம். அவன்... துரோகத்தின் நச்சு நாக்கு எப்படி நின்றது?

"அமீன்சந்த், உமது விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறேன்" என்முன் மிகமெதுவாக, முடிவில்!

மோனிசந்த் அவனுக்கு உண்மையில் இணங்கி விட்டானு?...அவன் மனம் அவ்வளவு சீக்கிரத்தில் துரோக நஞ்சை ஏற்க இடங்கொடுக்கவில்லை. அமீன்சந்த்தின் பகையும், வெறுப்பும் கூடாது என்பதற்காகவே தலையை ஆட்டினுன். ஆனுல் போராடத் திடமிட்டான், திட்ட மிடுந் தீரமிருந்தது அவனிடம்—எனினும் உயிருக்குப் பயந்த கோழை. தன் உயிரை வெல்லமென நினைக்கும் மனப்பான்மையுடையவன்.

'ஜெ ராம்சந்த்' கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனை எதிர்த்து எவ்வளவோ தீவிர வேலைகள் செய்தான் அமீன் சந்த் தனது ஆளை அவனையே கொன்று விடும்படி ஏவி விட்டான்......அவனும் அதற்காக ஒரு சமயம் தனது உயிரைத் திரணமாக மதித்து இரவு நேரத்தில் தாக்கினுன். மோனிசந்த் பயந்துவிட்டான். பணிந்தும் விட்டான். அவன் அவ்வளவு கோழை! அமீன்சந்த் மோனிசந்த்...இந்த இரண்டு சந்துகளில் அமீன்சந்த் பெரிய நரியல்லவா? அவனுக்குத் தெரியும் மோனிசந்த்தின் வார்த்தைகளில் முழு நம்பிக்கை வைக்கக் கூடாதென்று! இந்தப் பேருண்மையைத்தான் சோணிசந்தின் காதோடு காதாகச் சொல்லியனுப்பினுன்.

இந்த நேரத்தில் திடீரென ஒரு தாடிக்காரன் மோனி சந்த் முன்னால் தோன்றினான்.

"நீ யார்?......"—அதட்டினான் சந்த்.

"என்னைப் பற்றிய கேள்வி வேண்டாம்......அமீன் சந்த்தை நம்பாதே.........அவன் சொற்படி நடந்தால் நீ துரோகி"

"நானே முடிவு கட்டிவிட்டேன்......"

"அப்படியானால் என் நன்றி, அன்பைக் குழைத்து, ஆர்வத்தை இழைத்து"

அவன் போய்விட்டான்...யார்?......மோனிசந்துக்கு ஒன்றும் விளங்கவில்லை. இருந்தாலும் நாடு பெரிய நெருக்கடியான நிலைமையிலிருக்கிறது. இப்பொழுது வழுவினால் இந் நாட்டின் எதிர்காலமே நழுவி விழுந்து நாசமாகிவிடும் என்று எண்ணினான். ஆகவே உடனே கிளைவின் முன்னேற்றத்தைத் தடுக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப் புறப்பட்டான்!

இரண்டாம் பாகம்

கிளைவ் தனது கூடாரத்தில் ஒரு பண்டாரத்துடன் பேசிக் கொண்டிருந்தான். அவன்தான் அமீன்சந்த்—அல்ல அல்ல......அமீன்சந்த் வேடத்தில் மறைந்துள்ள சோணிசந்த். கிளைவின் எதிரில் ஒரு வங்க தேசப்படமிருந்தது. அதில் பல்டா, மோடாபூர், பட்ஜ்—பட்ஜ்; கல்கத்தா முதலிய இடங்களில் × என்று குறியிட்டிருந்தது. கிளைவ் சிரித்துக்கொண்டே கூறினான்.

"அமீன்சந்த் அவர்களே, உங்கள் உதவிக்கும் யோசனைக்கும் நன்றி"

"நாங்கள் படை கொடுக்க முடியாது......பக்குவமான யோசனைகள் தருவோம். ஆனால் எடையில், மதிப்பில் அதிகம் இரண்டாவதுதான்"

" ஆம். முழுமனதுடன் ஒப்புக்கொள்கிறேன்......... வெற்றி வெறும் வெடிகுண்டுகளால் கிடைப்பதல்ல"

" வீரரே, நான் சொன்னது நினைவிலிருக்கட்டும்... மோனிசந்த் கோழை......அவன் உயிருக்கு ஆபத்தென்றால் படை, போர் ஒன்றும் நினைவிலிருக்காது. ஓட்டந்தான்..."

சூழ்ச்சியின் இரண்டாம் பாகமும் வெற்றியாயிற்று. கையைக் குலுக்கினர். பிரிந்தனர்.

சோணிசந்த் நேராகத் தன் தலைவனைச் சந்திக்கப் புறப்பட்டான். அவன் இருண்ட பாதைகளின் வழியாகவே சென்றான். ஆனால் அவனை யாரோ பின் தொடர்கிறார்கள் என்று அவன் மனம் அவனுக்குச் சொல்லிக்கொண்டே இருந்தது. ஆகவே அவன் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனான்............ஆனால் காலடி யோசைகள் கேட்ட வண்ணமிருந்தன.

நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்த்துவிட்டு ஒரு பாழடைந்த வீட்டினுள் நுழைந்தான்......அங்கு ஓரே இருட்டு.,........முகந் தெரியாத அளவு கொஞ்ச தூரம் நடப்பதற்குள் இரண்டு இரும்புக் கரங்கள் அவனைப் பிடித்து வாயைப் பொத்தி இழுத்தன......ஐயோ அவன் பயத்தால் பிணம்போலச் சாய்ந்தான் ! அவனைத் தரதர வென......இழுத்துக்கொண்டே போயிற்று.

ஒரு அறை......அங்கு மங்கலான ஒளி......ஒளியைத் தூண்டிவிட்டது அந்த உருவம்......அந்த உருவம் அடர்ந்த தாடியுள்ள ஒரு வீரன் !

" அடே, வெள்ளையர் கூடாரத்தில் என்ன பேசினாய் ?"

"............ .."

ஒரு அறை கன்னத்தில், இரண்டு அடிகள் முதுகில், மூன்று உதைகள் அடி வயிற்றில்...சோணிசந்த் சுருண்டு போனான் !

"பண்டாரம், பசிக்கு ஒரு பிடி உணவு......"

"நிறுத்தடா......உடனே உண்மையைக் கக்கவேண்டும்......இன்றேல் நீ பிணமாவாய் !"

மீண்டும் அடி, உதை, குத்து,.........

அமீன்சந்த்தின் ஒரு கரம்போல இருக்கும் அவன்—உண்மையைச் சொல்லிவிட்டான். அடி, உதை உதவுவது போல் அண்ணன் தம்பி உதவுவார்களா? அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமே......!

"நாளைய போரிலே நிச்சயமாக மோனிசந்த் தோற்கப் போகிறான்............அதற்குரிய உபாயத்தைச் சொல்லி விட்டேன்......"

"என்னடா அது ?"

"மோனிசந்த்தைப் போர் ஆரம்பத்தில் நேராகத் தாக்கச் சொன்னேன்......"

"நல்ல வீடணர் கூட்டமடா நீங்கள்.........உங்கள் பரம்பரையே இப்படித்தானா ?"

அவனை உலுக்கிக் கீழே தள்ளினான்.

அப்பொழுது ஒரு பெண் உள்ளே நுழைந்தாள். அவள் அந்த வீரனைப் பார்த்ததும் 'ஹ...' என்று கூவிவிட்டாள். ஏனெனில் முன்னொரு முறை இதே வீரனைத் தனது அறையின் கதவோரத்தில் கண்டு நடுங்கியிருக்கிறாள். மறுபடியும் அவனைச் சந்தித்ததும் அவள் பயந்துவிட்டாள். நுழைந்தவள் ஊர்மிளா. அங்கு நின்றவன் யார்.........? உண்மை ஊழியன் அஜிஸ்தானே ? அவன் எப்படி வந்தான் ? அது பெரிய புதிர் !

போர், போர்

போர்......

டிசம்பர்த் திங்கள் 27-ம் நாள் கப்பல்கள் கிளம்பி விட்டன. இனிப் போர், போர்......போரே ! பல்டா

வைக் கடந்து விட்டனர். அடுத்தபடியாக அவர்கள் வந்து சேரவேண்டிய மேடாபூர் என்ற இடத்தை மோனிசந்த் தனது களமாக அமைத்து எதிர்ப்பான் என்று எதிர்பார்த்தான். ஆனால் அங்கேயும் எதிர்ப்பில்லை.

அடுத்தபடி போகவேண்டிய இடம் பட்ஜ்—பட்ஜ்... ஆனால் அதைக் கிளைவ் எதிர்பார்த்த அளவு எளிதில் பிடித்துவிட முடியவில்லை. மோனிசந்த்தின் எதிர்ப்பு தாங்க முடியாத அளவு பெரிதாக வலிமையுடையதாக இருந்தது.

நிமிடத்திற்கு நிமிடம் புதுவிதத் தொல்லைகளை ஏவிக் கொண்டிருந்தனர். அடிக்கொரு முறை ஆபத்து வந்து தொட்டுப்பார்த்து ஓடிற்று. முகலாயக் கப்பல்களும் தங்கள் பங்கைச் செய்யத் தவறவே இல்லை. எதிர்த்துப் போராடின. அவர்கள் முன்னேற்றம் அலைகளுக்குப் பல வீரர்களைப் பலியாக்கிய பின்னரே முடிந்தது...அம்மம்மா, பட்ஜ்— பட்ஜை அடைவதற்குள் அவர்கள் பட்டபாடு ..... சொல்லுந் தரத்ததன்று!

சில சந்தர்ப்பங்கள் கிளைவைத் தூண்டிவிடும் முன்னேறென்று...அடுத்த கணத்திலேயே ஒரு பெரிய தடங்கல் வரும். இயற்கை வேறு அவர்களுடன் ஒத்துழைக்க வில்லை. வெள்ளைய வீரர்கள் பெரிய தியாகிகளைப் போலவே எதையுங் கருதாமல் போரிட்டனர். எனினும் ஓயாச் சண்டையால் ஓய்வு தேவைப் பட்டது...போர்க்களத்தில் ஓய்வு ஏது? அலைகளுக்கிடையே இருந்து தவித்தனர். நிலத்திற்குச் செல்லலாம் என்றால் மோனிசந்தின் குதிரைப் படை தயாராக நின்று கொண்டிருந்தது!

துன்பத்திலும், துயரத்திலும் கிளைவ் சிரித்தான். எதிரிகளின் படைகளைத் தூகள் தூகளாக அடிக்கத்தான் முயன்றான். எதிர்த் தளபதிகளைச் சிதறவும் அடித்தான். ஆனாலும் அவர்களிடம் வெற்றி மங்கை ஏனோ விடாது தழுவி முத்தமிட்ட வண்ணமிருந்தாள்.

கிளைவ் சிந்தித்தான்...அமீன்சந்த் அவன் மனக்கண்

முன்னுல் தோன்றினுன். அவன் சொல்லிக் கொடுத்த யுகம் அவன் செவிகளில் ஒலித்தது!

அவன் போர்க்களத்தை உற்று நோக்கினுன். மோனி சந்த் ஒரு யானையின் மீதிருந்து கொண்டு போர் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். கிளைவ் இதுதான் தக்க சமயம் என்று கிடுகிடுவென அவன் அருகில் தனது வீரர்களை விரட்டி அவனை நேரடியாகத் தாக்கிட ஏவினுன். கிளைவ் தனது துப்பாக்கியை அவன் தலைக்கு நேராகத் திருப்பிச் சுட்டான்; சுட்டுக்கொண்டே இருந்தான்! மோனிசந்த் கொஞ்ச நேரம் சமாளித்தான்...இனி ஓட்டந்தான்! அவன் ஓட்டத்தை யாரால் பிடிக்க முடியும்? யானையைத் திருப்பினுன். தலைவனில்லாத படை பயந்து சிதறி யோடியது!

இந்தக் காட்சியைக் கண்ட வீரன் அஜிஸ்கான் உருவிய வாளை உறையிலிடாமலேயே பக்கத்திலே நின்ற குதிரை மீதேறிப் பறந்தான்......அவன் மறைந்தே விட்டான்!

போர்...இன்னும் நிற்கவில்லை. அந்தியாகிவிட்டது.

பட்ஜ் பட்ஜ் நகரின் கரையோரத்தில் ஒரு வெள்ளைய வீரன் ஏதோ உளறிக் கொட்டிக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் அந்தப் பகுதி மக்கள் கூடிவிட்டனர். மக்களுக்கு ஏற்கனவே போரினுல் பீதி............அதிலும் உளறிக்கொட்டும் ஒரு மாலுமி வேறு கரைக்கு வந்து விட்டான் என்ருல் அவனைப்பற்றி யறிந்து கொள்ள எவ்வளவு ஆவலிருக்கும்......எவ்வளவு துடி துடித்திருப்பார்கள்?

"நாளைக் காலையில் இந்தக் கருப்பன்களை யெல்லாம் சுட்டுப் போடப் போகிருேம்......ஆமாம்...கொள்ளை .... கொலை... பட்ஜ் பட்ஜ் பைசல் செய்யப்போகிருேம்...... என்ன... தெரிஞ்சுதா?"—இப்படி உளறினுன் அந்தக் குடிகாரன்.

அவ்வளவுதான்......அங்கு சூழ்ந்திருந்த மக்கள் எங்கு போயினர்? காற்ருேடு கலந்து கரைந்து மறைந்து விட்டனரா......மாய மந்திரத்திஞல் தங்களை மறைத்துக்கொண்டார்களா? கடைசியில் அந்தக் குடிகாரனை அவனது தோழன் வந்து இழுத்துக்கொண்டு போனுன்......ஆனுல் மக்கள் எங்கெங்கோ சிதறிப் போய்விட்டனர்.

மறுநாள் கிளைவ் படைவீரர்கள் புடைசூழக் கரையை வந்தடைந்தான். கோட்டையைப் பிடித்து விட்டோம், கொத்தளத்தைப் பணிய வைத்துவிட்டோம் என்று கும்மாளம் போட்டனர் அவனது பட்டாளத்தார். ஆனுல் அந்த இடமோ காலி செய்யப் பட்டிருந்தது! குடிகாரன் ஒருவனுல் உண்மை வெளிப்பட்டு அந்தப் பகுதி மக்கள் அந்த இடத்தையே காலி செய்து விட்டோடினர்.

மோனிசந்த்—? ஐந்நூறு பேர்களை மட்டும் விட்டு விட்டுச் சில மணி நேரங்களில் கல்கத்தாவை விட்டுக் கிளம்பி ஹூக்ளிக்குப் போய் அங்கிருந்து மீண்டும் மூர்ஷிடாபாத்துக்குப் போய்விட்டான். அவன் உண்மையில் போரிட எண்ணிஞன். ஆனுல் அவனது பரிதாபத்திற்குரிய பயங்கொள்ளித் தனத்தைப் பயன்படுத்திக் கொண்டான் தந்திர மிக்க கிளைவ்.

கடைசியாகக் கல்கத்தா மீது படையெடுத்தான் கிளைவ். அந் நகரத்தின் பக்கம் துப்பாக்கி முனைகள் அதிக நேரம் திருப்பப்பட வேண்டிய நிலையிலில்லை. கல்கத்தா மீண்டும் பரங்கியர் பாதங்களில் விழுந்து விட்டது......அந்தோ!

அமீன்சந்த்......அந்த அயோக்கிய சிகாமணிக்கு...... பரமதிருப்தி......தன் நாட்டின் வீழ்ச்சியிலே மகிழ்ச்சி கொள்ளும் துரோகி! அவன் மகிழ்ந்தான்......மகிழ்ச்சி இல்லாமல் போகுமா? அவன் போட்ட திட்டம் அணுவுங் கோணுமல், குறையாமல் நிறைவேறி விட்டதே!

ஆபாசமான ஆசை

ஜனவரி 2.........

கல்கத்தாவில் வெள்ளையரின் குரல் கம்பீரமாகக் கேட்டது. எங்கிருந்து இரவோடு இரவாய் ஓடினரோ அங்கே மீண்டும் பகலில் பயமின்றிச் சிரித்தபடி நடமாடினர்.

விரோதி இல்லை......இனி வீண்வம்புக்குக் குறைவா? நல்ல காரியங்களில்—ஆம், அவர்களுக்கு, நமக்கல்ல!—ஈடு பட்டவர்களுள் எப்பொழுதும் சில போட்டிகள், குறிப் பாகத் தலைமைப் பதவிக்குப் போராட்டங்கள் நடைபெறு வது வழக்கம்! இங்கே அந்த நியதிவிலக்கல்லவே! அட்மிரல் வாட்சன் தனது பிடியை வலுவாக்க முயன் ருன். கிளைவ் உடனே தான் வங்கப் பட்டாளத் தலைவன் என்ருன். லிட்டனல் கலோனல் என்ற பட்டம் தனக்கே உரியது என்ருன். நெருக்கடியில் ஒளிபவர் நிலைமை நலப் பட்ட பிறகு போட்டியிட வரமாட்டார்களா? வங்கத்தின் வெள்ளைய கவர்னர் அதையே செய்தான்.

இப்படிப் பொருமைப் புகை வளர்ந்து கொண்டிருந் தது......அப்பொழுது சில சிப்பாய்கள் கிளைவின் உத்தர வில்லாமலே தரைக்கு அழைக்கப்பட்டனர். அப்படி வந்த படைக்கு வழியை அடைத்து விட்டனர். கிளைவுக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. மீறினன்.

கல்கத்தாவினுள் நுழைந்தவுடன் அந்நகர உண்மை நிலவரம் புரிந்தது. அட்மிரல் கூட் என்பவன் ஆக்ர மிப்பிலே கல்கத்தா சிக்கியிருந்தது. அவனது அதட்டுங் குரல் அங்கு சட்டமாக இருந்தது! கிளைவ் அவனை நெருங் கினன்......நெருங்கினன்......நொறுக்கிவிடுவேன் என்று எச்சரித்தான். கூட் தான் வாட்சனின் கட்டளைப்படி காரியங்களாற்றுவதாகக் கூறினன்......"சிறையிடுவேன், சிற்றெறும்பே! சிறு மதியால் கடிக்க நினைக்காதே.

நசுக்கி விடுவேன். நான் உன் தலைவன். உடன் ஏற்றுக் கொள்...” என்று உரக்கக் கூவினான்.

கூட பயத்தோடு வாட்சனுக்கு இந்தச் செய்தியை அனுப்பினான். வாட்சன் கிளைவின் அடங்காப்பிடாரித் தனத்தை அடக்கவேண்டும் என்று ஆர்ப்பரித்தான். உடனே உத்தரவு பிறப்பித்தான்...... கிளைவ் தனது படையினருடன் கல்கத்தாவிலிருந்து காலி செய்யவேண்டும்... கலகம் விளைவிக்க முனைந்தால் சொறி நாய்களைப் போலச் சுட்டு வீழ்த்தி விடப்படும் என்று! அஞ்சினானா கிளைவ்......? அடங்கிவிட்டானா...... இல்லை அட்மிரல் வாட்சன் கரைக்கு வரட்டும். பார்க்கட்டும் மேற்பார்வை ...என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினான். வாட்சன் கிளைவின் எண்ணப்படிதான் நடக்கவேண்டி வந்தது!

தலைமைப் பதவிக்காக எவ்வளவு சண்டை—இது கேவலம்... பதவி வேட்டை பரமபாதகம் என்பார்கள். யாருக்கும் உள்ள ஆசைதான். பலர் தங்களுக்கு அந்தப் பொல்லாத ஆசை இல்லையென்று வாதிப்பார்கள் வெளிக்கு ஒப்புக்காக. ...ஆனால் அவரவர் இதயங்களில் கைவைத்துச் சொல்லட்டும். அந்த ஆசை இயற்கை. நிலைமை சிலருக்கு இல்லாமல் தடுக்கலாம். அவர்கள் விதி விலக்கானவர்கள். ஆனால் இந்த ஆசையை ஒழித்தால் தான் பொதுத்தொண்டு செய்ய முடியும்!

கிளைவ் போட்ட சண்டை உண்மையில் ஆபாசமான ஆசையால் ஏற்பட்ட அர்த்தமற்ற பூசல் என்று சொல்லி விடுவார்கள் எளிதில். ஆனால் அது அப்படியா...? அது வேறு பிரச்னை—எனினும் அதனால் அவர்கள் எடுத்துக் கொண்ட வேலைக்கு எவ்வளவு தடைகள், இடையூறுகள்! அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்ததாய் ஆனந்த மூர்த்தியாய் நின்றது எது? அது!...என்று கடவுளை அறிமுகப் படுத்துவார்கள் கடவுள் கட்சிக்காரர்கள். ஆனால் கிடைத்துள்ளன இரண்டு. ஒன்று ஒரு பண்பு, பிறிதொன்று உயிருள்ள பிண்டம்! அவை பதவியாசை. அடுத்தது உங்களுக்குத் தெரிந்த செய்திதான்—அமீன்சந்த்!

துரோக புத்தி அவனைத் தூண்டிவிடும் விசித்திர விளையாட்டைப் பாருங்கள்... அவன் கொள்ளும் ஆபாச மான ஆசையைப் பாருங்கள்! வாட்சனுக்கும் கிளைவுக்கும் சண்டையாம்...... அந்தச் சண்டையை அதிகப்படுத்த மார்க்கம் வேண்டுமாம்... அவர்கள் சண்டை வலுத்தால் ஒருவன் பக்கம் அவன் சேர்ந்து வங்கத்தைத் தன் வாய்ச் சொல்லில் கட்டியாளலாமாம்...! ஆகவே அட்மிரல் கூட்டத்தைத் தூண்டிவிட்டான். கிளைவை எதிர்க்கும் படி வெளிப்படையாகவே சொல்லிக் கொடுத்தான். அப்படியே நடந்தது... ஆனால் அந்த வேடிக்கை நீடிக்கும் என்பது அவன் நினைப்பு! ஆடுகள் இரண்டு அதிகநேரம் மோதிக்கொண்டிருப்பதால் ஓநாய்க்கு ஒரு ஆழாக்கு குருதி அதிகந்தானே......! ஆனால் அந்த வெள்ளாடுகள் சண்டையைச் சட்டென்று நிறுத்திவிட்டன. ஒற்றுமை யோடு எதிரியைத் தாக்கின.

கல்கத்தாவிலிருந்து மோனிசந்த்தின் படை சிறிது சிறிதாக வெளியேறிக் கொண்டிருந்தது. ...ஆகவே அப் படையின் கையில் கல்கத்தாவின் ஒரு பகுதி இருந்தது. அப்படை தங்கியிருக்கும் பெரிய கோட்டை வாயிலில் கிளைவின் சின்னஞ்சிறு படை போரிடுவதாகப் பாவனை செய்துகொண்டிருந்தது. மிகுதி வீரர்கள் சுற்றிலும் ஒளிந்துகொண்டிருந்தனர். இதை உணராத, உணர நேர மில்லாத மோனிசந்தின் படையினர் முழுவதும் வாயிற் படியிலே நின்று உயிருக்கு மன்றாடும் சிறு படையைத் தாக்கினர் வெற்றி பெற்றுவிடுவோம் என்ற எக்களிப் பால், புது வேகத்தில்...... ஆனால் காவலிழந்த அந்தப் பகுதியில் ஒளிந்திருந்த வெள்ளைப் படையினர் திடீரென நுழைந்துவிட்டனர். நாடாண்ட பரம்பரை தோற்றனர், நாடோடியாக வந்த வெள்ளையர் வென்றனர்....... உள் நாட்டுக் குள்ள நரி மனம் படைத்த துரோகியின் துணை யினால்! எஞ்சியிருந்த கல்கத்தா வெற்றிக் கோளாறும் தீர்ந்தது. வெற்றி, வெற்றி, முழுவெற்றி—வந்தவர் களுக்கு! வெட்கம்......

அஜிஸ்கான் திட்டம்

பாசறைக் கூடாரத்தை நோக்கி ஒரு குதிரைவீரன் வெகு வேகமாக வந்துகொண்டிருந்தான்.

அப்பொழுது முடீன்கான் தனது படைக் கலங்களைக் களைந்துவிட்டு நின்றுகொண்டிருந்தான்... அவன் வங்கத்தின் வாழ்விலே ஏற்பட்டுவிட்ட களங்கத்தை எண்ணி ஏங்குகிறான் போலும்! அவன் வாடாத முகம் வாடியிருந்தது. கலங்காத கண்களும் கலங்கித்தான் போயிருந்தன. வாட்டத்தைக் கண்டு வளையாத உள்ளத்திலும் ஒரு வளைவு ஏற்பட்டுவிட்டது.

அப்பொழுது அந்தக் குதிரைவீரன் குதிரையை விட்டிறங்கி ஓடிவந்தான்.

"அஜிஸ்... இத்தனை நாள் எங்கு மறைந்திருந்தாய்?"

"அவசரம்......"

"பதட்டம் வேண்டாம்... எங்கு போனாய்... என்ன கண்டாய், சொல் தெளிவாக!"

"துரோகியைத் தேடி... துயரக் கதையுடன் திரும்பி வந்துள்ளேன்"

"சரி... என்ன சொல்லவேண்டும் நீ. இப்பொழுது சொல்!"

"வெள்ளையர் கல்கத்தாவில் வெற்றிக்கொடி நாட்டிவிட்டனர்... உள்நாட்டுச் சூதுக்காரர்கள். நாட்டைக் காட்டிக்கொடுக்கும் நயவஞ்சகத் துரோகிகள். அவர்கள் பக்கம்... ?"

"ஆ... அப்படியானல் சுபேதாரின் கதி... ?"

பிறகு அஜிஸ்கான் திட்டவட்டமாகத் தனது தீர்மானத்தைத் தெரிவித்தான். முதலில் வெள்ளையருடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டும்... சமாதானக்

குழு வொன்றை அனுப்பச் சொல்லி அவர்களுடன் ஒப்பந்தம் பேசுவதுபோல இரண்டு வாரங்கள் கழித்து விடவேண்டும்... கழித்துவிட்டால் பழுதாகிக் கிடக்கும் பீரங்கிப் படை செப்பனிடப்பட்டு விட்டால் இந்தத் தப்பிலிகளைச் சுட்டுக் குவிக்கலாம்... இப்படிப் பேசினான்.

முடீன் அஜிஸ் கூறிய வார்த்தைகளைக் கேட்டான்... அவனுக்கு அந்தத் திட்டம் சரியென்றே பட்டது! ஆகவே சுபேதாரைச் சந்திக்கப் புறப்பட்டான்.

சுபேதாரோ முடீனுக்கு இன்னொரு புதிய திட்டத்தைச் சொல்லத் துடித்துக்கொண்டிருந்தான்...... என்ன அது?

அப்பொழுது ஐரோப்பாவில் இங்கிலாந்திற்கும் பிரான்ஸுக்கும் போர் மூண்டது. இந்தியாவில் அவர்க்ள் பகை ஒருவாறு அடங்கியிருந்தது! பட்டிருந்த பகை மீண்டும் துளிர்க்கும் என்ற பயம்... இல்லாமல் போகவில்லை! சந்திரநாகூரில் பிரஞ்சுப் படை—மிகப் பெரிய பட்டாளம் ஒன்றிருந்தது. பிரஞ்சுக் காப்டன் லாவைச் சந்தித்தால்... சந்திப்பு எந்த நேரத்திலும் நடத்தலாம்! யார் கண்டார்கள்... சுபேதாருடன் உடன்படிக்கை செய்துகொண்டால் இருபடைகளும் சேர்ந்து வெள்ளைக்காரர்களைத் தாக்கினால்...... இபபடிச் சுபேதார் எண்ணினான்.

அப்பொழுது முடீன் வந்தான்.

"முடீன்... புதியதோர் செய்தி"

"என்ன......"

"பிரஞ்சுப் படை வரும்... ஆள் வைத்துவிட்டேன் பேரம் பேச..."

"யார்......?"

ஐயோ... அவனை ஏன்தான் இப்படி நம்புகிறார்கள்?... அவனிடம் உள்ள மந்திர சகதிதான் என்ன? அவனது சூதுகள் பல தெரிந்தும் சுபேதாரிடம் அமீன்சந்த்தை

எதிர்த்து ஒன்றும் செய்ய முடியவில்லையே... முடீனக் கொல்லத் திட்டமிட்டான்! அவனது விஷ விளையாட்டுகள் அத்தனையும் அஜிஸ்கானுக்குத் தெரியுமே! ஆனால் அவன் ஒருநாள் இந்த ஆயிரமாயிரம் கொடுஞ் செயல்களுக்கும் தண்டனை அனுபவிக்கப் போகிறான்... அப்பொழுது உலகம் துரோகமே உருவெடுத்தால் போலுள்ள இந்த மாமிச மலையைக் கண்டு சிரிக்கும், காரியுமிழும் ஏளன எச்சிலை!

சுபேதாரின் திட்டத்தை எளிதாகப் புரிந்துகொண்டான். உடனே தான் வந்த காரியத்தையும் சொன்னான். முதலில் சுபேதார் இணங்கவில்லை. பிறகு அவன் திட்டப்படி நடக்க ஒப்பினான் உடனே படைப்போக்கை நிறுத்திக் கூடாரமடிக்கச் சொன்னான். கல்கத்தாவின் அருகில் வந்தும் படை முன்னேறவில்லை. முகாமிட்டனர். முடீன் சுபேதார் கையொப்பமிட்ட கடிதத்தை அனுப்பினான்!

துரோகிக்குத் துரோகி!

அமீன்சந்த் தனது வாழ்க்கையின் போக்கை எண்ணி எண்ணி வியந்தான்போலும். ...இப்படி ஒரு மனிதப் பிறவி உலகில் உண்டா? அவன் நடவடிக்கை ஒவ்வொன்றிலும் வஞ்சனை ஒளிந்துகொண்டு கூத்தாடிற்று... துரோகம் தன் தீ நாக்கை நீட்டி நீட்டிக் காட்டிற்று! அவனைப்பற்றி அவன் செத்து மடிந்து சாம்பலான பிறகு யாராவது நினைப்பார்களா? வங்க வரலாற்றில் அவனுக்கு இடம் உண்டா...... இல்லாமல் இல்லை!

அவன் மனதிற்குள்ளேயே சிரித்துக்கொண்டான். எந்த சுபேதார் தனது சொத்துக்களைப் பறிமுதல் செய்தானே, எந்த சுபேதார் தனது நச்சு நடவடிக்கைகளை உணர்ந்து கொண்டான் என்று அஞ்சினானே அவனே இப்பொழுது பிரஞ்சியரிடம் தூதுபோய்ப் படை கேட்டு வரச்சொல்கிறான். ஒருவேளை சுபேதார் அவனைச்

சோதிக்கிருனு? ...புதிய ஆட்டத்தில் சிக்கவிடுகிருனு... அல்லது ஆங்கிலேயரிடமிருந்து பிரிக்க இந்தச் சதியைச் செய்கிருனு?

சரி... அந்த லாவைச் சந்திக்கிறேன்... சுபேதார் படை கேட்டதாகச் சொல்கிறேன்... சமயம் நேருகிற பொழுது அதையும் வெள்ளேயரிடம் வெளியிட்டு விருது பெறுகினறேன்... என்மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் பலப்படுத்துகிறேன்!... இப்படிச் சிந்தித்தான்!

சுபேதாரின் விருப்பப்படி சந்திரநாகூர் செல்லவே திட்டமிட்டு வெளியில் கிளம்பினுன்... அப்பொழுது அவன் மகள் ஊர்மிளா வந்தாள்.

"அப்பா..."

"என்ன வேண்டும் கண்ணே"

"என்...கா...த...ல...ர்"

"அசடு நீ... போர்க்களத்தில் அவனை நீ எப்படிப் பார்க்க முடியும்?"

"அதெல்லாம் முடியாதப்பா" என்று சிணுங்கினுள் அவள்.

அப்பன் அதட்டினுன்.

அவள் அடங்கி விட்டவள்போலவே உள்ளே சென்ருள். ஆனுல் மனத்திற்குள் ஒரு பெரிய ஏற்பாட்டைப் பற்றி முடிவு செய்துகொண்டாள். தனது தந்தையின் அறையிலுள்ளிருந்த துணிப்பெட்டி ஒன்றைத் திறந்தாள். அதில் ஒரு படைவீரனுக்கு வேண்டிய உடைகளைப் பொருக்கி யெடுத்து மூட்டை கட்டிக்கொண்டாள்.. வெளியில் வந்தாள்.

அப்பொழுது அமீன்சந்த் சந்திரநாகூரில் என்ன பேசுவது...... என்ன உடன்படிக்கைக்கு அழைப்பது என்பனபோன்ற எண்ணங்களை எழுப்பிவிட்டு அவைகளிலுள்ள குறைகளைத் திருத்தியும், மாற்றியும் புதுப்பித்துக்

கொண்டிருந்தான். ஊர்மிளா மெதுவாகத் தன் அறையினுள் நுழைந்தாள்.

அடுத்து சில மணித் துளிகள்......

காவியுடையணிந்த அந்தப் பழைய பண்டாரம்...... சோணிசந்த் வந்தான். அவன் முகத்தில் பரபரப்பு இருந்தது!

"சோணி......"

"ஜே ராம் சந்த்......"

"என்ன சேதி"

அவன் தனது தலைவனின் செவியோரத்தில் சொல்தவற்கெனச் சுமந்து வந்த இரகசியத்தை ஓதினான்.

"சமாதானமா......தூதுக் கூட்டமா......"—பற்களை நறநற வெனக் கடித்தான்.

"சோணி......நான் சந்திரநாகூர் செல்கிறேன்......நீ இந்தச் சமாதானச் சடங்கு எப்படியும் கெட்டுக் குட்டிச் சுவராகும்படி செய்யவேண்டும்!......உடனே அதற்கான வேலைகளில் ஈடுபடு"

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது திருட்டுத்தனமாகத் தோட்டத்து வழியே போர்வீரன் உடையில் ஊர்மிளா போய்விட்டாள். அப்பன் தெரு வழியே......மகள் கொல்லைப் புறத்து வழியே......சென்று விட்டனர்!

சோணி மெதுவாக உள்ளே நுழைந்தான். பண்டாரத்திற்கு அன்று பசி......உணர்ச்சிப் பசி......தசையாசை. அவன் உள்ளத்தின் ஒரு மூலையில் ஒரு திருட்டு எண்ணம் இருந்தது......ஊர்மிளாவின் வளரும் பருவ அழகை ஒரு நாள் ஒரு முறையாவது பருகிச் சுவைக்க வேண்டும்! அதற்கு அன்று தக்க சமயம் என்று எண்ணினான் போலும்......

"ஊர்மிளா......"

மெதுவாக அழைத்தான். விடையில்லை. பிறகும் அழைத்தான். அவள் அங்கு இருந்தால் தானே......! அப்படியே அமீன் சந்தின் அந்தரங்க அறைவரை சென்று விட்டான். காலடியோசைகள் கேட்டவுடன் நளினி எட்டிப் பார்த்தாள்.

"சோணியா......" என்றாள் பெருமூச்சுடன்.

"ஆமாம்......" என்றான் ஏக்கத்தோடு

நளினியும் அன்று ஏக்கத்துடன் இருந்தாள். சோணியும் ஊர்மிளா மயக்கத்துடன் அங்கு வந்தான். சந்தர்ப்பம் சதி செய்தது! ஆகவே அவர்கள் தடுக்கி வீழ்ந்தனர் காமத் தாடகத்தில்......நளினிக்கு இது புதிதல்ல ஆனால் சோணிக்கு இது வேண்டியிருந்தது. இந்தச் சந்திப்பு அவனது தொண்டு செய்யவேண்டும் என்ற உள்ளத்தில் துரோகத்தை விதைத்தது! அன்று இரவு நளினிக்கும் விருந்து, சோணிக்கும் விருந்துதான்......ஆனால் அதன் விளைவு? ஆம். அமீன்சந்துக்கு அவன் அருகிலேயே ஒரு துரோகியை உண்டாக்கி விட்டது!

வால்ஷும் ஸ்கிராப்டனும்

வெற்றி வீரர்கள்தான் வெள்ளையர்கள். ஆனால் சுபேதார் பெயரை நினைக்கும் பொழுதெல்லாம் நடுங்கினர். கிளைவ் நாளும் இதையே எண்ணி யெண்ணிக் கிடந்தான். சுபேதாரின் எதிர் நடவடிக்கை என்ன வென்று புரியவில்லை.

அதோ தெரிகிறது கல்கத்தா! சில கிராமங்கள் எரிந்து கொண்டிருந்ததால் அந்த ஜோதியில் தெரிந்தது —கிளைவின் எதிர்ப்பு அப்படி உருக்கொண்டது. கிளைவ் வேறு வகையான பெரிய எதிர்ப்பைக் காட்டவில்லை. ஒரு வேளை பிரஞ்சியருடன் சுபேதார் ஒப்பந்தம் செய்து கொண்டு எதிர்ப்பு பெரிதாக்கப் பட்டால்......இப்படி எண்ணித்தான் போலும் அந்த அளவோடு நிறுத்திக் கொண்டான்.

சுபேதாரிடமிருந்து திடீரென்று ஒரு கடிதம் வந்தது. ஆங்கிலேயரிடமிருந்து அவர்களது விருப்பத்தை விளக்கமாகத் தெரிவிக்க ஒரு தூதுவர் குழுவை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தான். இரண்டு வெள்ளையர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

வால்ஷ், ஸ்கிராப்டன் ஆகிய இருவரும் தூது சென்றார்கள்.

பிரதமர் மோகன்லால் அவர்களைச் சந்தேகக் கண்களுடன் பார்த்தான்............சிறு ஐயம்! சூழ்ச்சியால் சுபேதாரைச் சுட்டு வீழ்த்திவிடுவாரோ என்று அஞ்சினான் உடனே அவர்களை ஏதேனும் ஆயுதங்களை மறைவாக வைத்திருக்கிறார்களா என்று சோதனை நடத்தச் சொய்தான்.

பிறகு பெருந் தளபதி அஜிஸ்கான் அவர்களை உடைவாளையும் கழற்றி வைத்துவிட்டுப் போகச் சொன்னான். அவர்கள் மறுத்தனர்......பிறகு அனுமதி தந்தான்!

கடைசியில் சுபேதாரின் பேட்டி கிடைத்தது. வணங்கினர். சுபேதார் தனக்கென அமைந்த அருமையான வெண்கலக் குரலில் கணீர் கணீரென ஒலிக்கும்படி பேசினான்.

"தொலைவிலிருந்து வந்து தொல்லைகள் பல விளைவிக்கும் வெளிநாட்டு வெள்ளை வணிகர்களின் தூதுவர்களா நீங்கள்?"

"ஆம்..... ஆம்......"

"உங்கள் துடுக்குத்தனம் எல்லைக் கோட்டைத் தாண்டி விட்டது!"

"அப்படியல்ல......"

"இப்பொழுது நீங்கள் என்னதான் செய்து வருகிறீர்கள்?"

"மன்னிக்க வேண்டும். எது துடுக்குத்தனம்?"

"என்ன நெஞ்சழுத்தம்......வணிகத் தொழில் என்று கூறி வந்து வஞ்சனைகள் பல செய்தும் வாய்க் கொழுப்பு மட்டும் அடங்கவில்லை!"

"நாங்கள் தூதுவர்கள்.........தக்க சமாதானம் தர முடியுமானாலும் எங்களுக்கு அந்த உரிமை பறிக்கப்பட்டு விட்டது இந்தச் சிறு பொழுதிற்கு மட்டும்.........ஆகவே பேச்சில் அளவு தேவை"

"போதும் நிறுத்துங்கள். நீங்கள் சுமந்துவந்த செய்தி........"

"இதோ உங்கள் முன்னிலையில் சமர்ப்பித்து விட்டோம்!"

தூதுவர்கள் தங்களுடன் கொண்டு வந்திருந்த கடிதத்தை நீட்டினர். சுபேதார் அலட்சியமாக வாங்கினான். படித்தான். படித்து முடித்து விட்டு அதனை அங்கே கிடந்த மேஜையின் மீது வீசினான். அவன் முகம் தெளிவற்ற ஒருவகையான உணர்ச்சியால் மறைக்கப்பட்டிருந்தது. சோகமா, மகிழ்ச்சியா...........சொல்ல முடியவில்லை. ஆழ்ந்து சிந்திக்கிறான் என்பது மட்டும் தெரிந்தது.

பட், பட், பட்

கைகளைத் தட்டினான். காவலாளிகள் இருவர் வந்தனர்.

"பிரதமரை அழைத்து வா"

ஒருவன் ஓடினான்.

"முடீனக் கையுடன் கூட்டிவா"—மற்றவனும் பறந்து விட்டான்.

சற்று நேரத்திற்குள் அவர்கள் வந்தனர். ஏதோ இரகசியமாகப் பேசிக்கொண்டனர். அவர்கள் திரும்பி விட்டனர். இவ்வளவும்......தூதுவர்கள் முன்னிலையில்!

"தூதுவர்களே, நீங்கள் நமது பிரதானிகளுடன் கலந்து பேச வேண்டியுள்ளதால் தங்கிச் செல்லுங்கள்" என்றான் கடைசியாகச் சுபேதார்.

தூதுவர் முகங்களில் பயமும் சந்தேகமும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. உணர்ச்சியற்ற பொம்மைகள் போலச் சிறிது நேரம் உட்கார்ந்தனர். ஆனால் சுபேதார் கூறியது போல ஆலோசனை மாநாடு எதுவும் நடைபெற வில்லை. இருவரும் தாங்கள் தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அவர்களை யாரோ கை தட்டியழைத் தான். அவர்கள் அந்த இரவில் நிற்கவும் அஞ்சினர்.

சூட்சுமத்தில் மோட்சம்

சோணி அந்த இன்ப இரவு ..எதிர் பாராத விதமா கச் சிக்கிய இன்பச் சேறு...நளினியோடு நடத்திய களி யாட்டம், அவளுடன் குசுகுசுவெனப் பேசிய வார்த்தைகள், அவள் காதோரத்தில் வெளியிட்ட வெதுவெதுப்பான கன வுத் திட்டங்கள்—இப்படி எண்ணினான். எண்ணியபடியே அங்குள்ள ஒரு மண்டிப் பக்கத்தில் நின்று கொண்டிருந் தான். அப்பொழுதுதான் தூதுவர் இருவரும் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

அமீன்சந்த் சொல்லிக் கொடுத்த திட்டத்தை வெளி யிட்டு இவர்களை விரட்டி விடவேண்டும்... அதனால் அவ னுக்கு என்ன இலாபம்? ஆம். நளினியைத் தன் நிரந்தர இரவுறவுக்காரியாக்கிக் கொள்ள வேண்டுமானால் அமீன் சந்தின் இன்றைய நிலை தாழ்த்தப்பட வேண்டும். சுபேதா ருக்காகச் சந்திரநாகூர் போயிருப்பதை வெளியிட்டு விட் டால்...வெள்ளையர் வெறுப்பர், சுபேதாரும் எதிர்ப்பான். ஆனால் பெயரைச் சொல்லலாமா?...அது துரோகமல் லவா ?...அப்படியானால் அவர் மூச்சும், பேச்சும்,...எல் லாம் துரோகமாயிற்றே......நயவஞ்சகமாயிற்றே..... நரி வாழ்க...தந்திரத்திற்கு ஜே...தலைவர் கற்பித்த பாடம். நான் செய்யக் கூடாதா...? சூட்சமத்தில்தானே மோட் சம்... இப்படி எண்ணிக் கொண்டுதான் அவர்களைக் கை தட்டி நிறுத்தினான்.

தூதுவர்களை நெருங்கினான்.

"தூதரே, உங்களுக்கு உதவியான இரகசியம் ஒன்று சொல்கிறேன்"

அவர்கள் காதுகளைத் தீட்டிக் கொண்டனர். சோணி சந்தை அழைத்துக் கொண்டு சென்றனர். தனியான இடம்—விளக்கும் மங்கல்தான்!

"என்ன சொல்லப்போகிறீர், பண்டாரமே!" என்றான் வால்ஷ் மிகவும் ஆச்சர்யமாக!

"சற்று விழிப்புடன் வேலையைத் தொடங்குங்கள்—இல்லாவிட்டால் உங்கள் உயிர் பரமண்டல யாத்திரைக்கு..."

"ஐயோ......"—வாய்விட்டுக் கூவினான் ஸ்கிராப்டன்

"அஞ்சாதீர்...ஆபத்து வருமுன் ஓட்டந்தான் சிலாக்கியம்"

"ஏன்?"—இருவர் முகங்களிலும் இந்தக் கேள்விக்குறி பளிச்சென்று தெரிந்தது.

"சுபேதார் இன்னமும் பீரங்கிப் படை வந்து சேரவில்லையே என்று ஏங்குகிறான். அதற்காகக் காத்துக் கிடக்கிறான்"

"சமாதான சங்கநாதம் முழக்கினாரே"

"படைவரும்வரை பசப்பிப் பேசுவது அரச தந்திரம்..."

"அப்பொழுது போரிடப் போகிறானா?"—வால்ஷுவின் கேள்வி இது'

"இப்பொழுது நடிக்கும் நாடகம் இரண்டொரு வாரங்கள் போரைத் தள்ளிவைக்க......"

"அப்படியா?" — ஏககாலத்தில் இப்படி இரண்டு குரல்கள் சேர்ந்து ஒலித்தன.

"அதுமட்டுமா...பிரஞ்சுப்படை வேறு வரப்போ

கிறது...தூது போயிருக்கிறார் அமீன்சந்த்...உங்களையும் கொல்லப் போகிறான். ஆகவே ஓடி விடுங்கள் இப்பொழுதே'—வந்த தூதுவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு ஓடலாமா என்று விழித்தனர்.

"நான் உங்கள் நண்பன்"

அவ்வளவுதான்...அந்த ஆளைப்பார்க்க முடியவில்லை. இருட்டில் புதைந்து விட்டான்.

"அடேய் விளக்கை யடக்கு" என்று கட்டளையிட்டனர். திவான் கூடாரத்திற்குப் போவதற்குப் பதிலாக ஆங்கிலேயக் கூடாரத்தை நோக்கினர். அவர்களுடன் இருட்டு, வாயடைப்பு, விரைவு......தொடர்ந்து துணை சென்றன. அவர்கள் வெகு வேகமாகத் தமது தலைவன் கிளைவைச் சந்திக்க ஓடினர். ஆனால் வழி நீண்டு கொண்டிருந்தது. அவர்களை யாரோ பிடித்து நிறுத்துவது போல் அடிக்கடி நின்று நின்று திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தனர்.

நுன்கோமன்

கிளைவ் புகைத்துக் கொண்டிருக்கும் பொழுது தூதுவர்கள் ஓடிவருவதைக் கண்டு ஆச்சரியப் பட்டான். அவனுக்கு மின்சாரத் தாக்குதல்போல ஒரு அதிர்ச்சி! ஏன் அவர்கள் ஓடிவரவேண்டும்?

"அவர்கள் சூழ்ச்சி செய்கிறார்கள்...நம்மைத் தாக்கப் படையை எதிர் பார்க்கிறார்கள்" என்று ஓடிவந்த இருவரும் விரைக்க விரைக்கக் கூறினர். சுருக்கமாக .....பிறகு தாங்கள் கிளம்பியதிலிருந்து ஓடிவந்தவரை நடந்த விபரங்கள் முழுவதையும் விளக்கமாக எடுத்துரைத்தனர்.

"இந்தக் கருத்த தோலருக்குச் சரியான குறுந்தடி தேவை. தடித்த தோலைத் தாறுமாறாக நாளைக்குக் கிழிப்போம்" என்று தனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டான் கிளைவ். மறுநாள் காலையிலேயே போரைத் துவக்க முடிவு

செய்தான். இனித் தூக்கமேது? இதைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தான்.

அந்த இரவிலும் கிளைவ் முன்னிலையில் அமீன்சந்த் வழக்கமான சிரிப்பை முழக்கிக்கொண்டே வந்தான்.

அப்பொழுது கிளைவ் மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தான்......சுபேதார் மாண்டு கிடக்கிறான். களத்தில் ......வாட்சன் கிளைவின் காலைப் பிடிக்கிறான்...வங்கத்தின் அரசாங்க வேலைகளை அவனிடம் ஒப்படைக்கின்றனர் கம்பெனியார்......அவனை வங்கம் போற்றுகிறது...பிறகு இந்தியாவில் ஆங்கிலக் கொடி பறக்கிறது ..இப்படிப் பல படியாக!

அமீன்சந்த்தை வரவேற்றான்.

"அமீன்சந்த் அவர்களே...முன்னர் ஆள் மாற்றம் செய்தீர்......இப்பொழுது கொள்கை மாற்றமா? சந்திர நாகூருக்குத் தூது சென்றீராமே!"

அவன் விழித்தான்...அந்தச் செய்தி கிளைவுக்கு எப்படித் தெரிந்தது?...உடனே சமாளித்துக் கொண்டான்.

"அதுதான் அடுத்துக் கெடுக்கும் படலம்...அதனைச் சொல்லவே வந்தேன்"

"பிரஞ்சுக்காரர் ஒத்துக்கொண்டனரா?"

"ஆகா......"

கிளைவ் யோசித்தான்......

"ஐயா......"

"துரையே......"

"மீண்டும் ஒரு உதவி!"

"உதவி என்னவோ......?"

கிளைவ் விளக்கினான். மறு நாள் காலை போர் தொடங்கி விடுவது என்று அவன் திட்டமாகச் சொன்

ஞன். அதன் பிறகு சந்திரநாகூர் மீது படையெடுப்பு...! இந்த இரண்டையும் வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமானால் சுபேதாரின் சந்திரநாகூர் படைக்குத் தலைவனாக உள்ள நுன்கோமனை எப்படியாவது அவர்கள் பக்கம் இழுக்கவேண்டும். எந்த விலை கொடுத்தாவது அவனைத் திருப்பிவிட்டால் சுபேதாரின் எண்ணத்தில் மண்! வெள்ளையரின் வெற்றியிலே புது மணம்! ஆம்; இதற்கு அமீன்சந்த் உதவிசெய்ய வேண்டும் என்று விரும்பினான்.

"ஆமட்டும்" என்றான்.

"அப்படியானால் அடுத்தபடி முடிசூடாச் சுபேதார் நீர்தான்" என்றான் கிளைவ்.

ஹி...ஹி...ஹி...மறைந்தது!

அழிவு......

பொழிது புலர்ந்தது...

கிளைவ் பேரைத் தொடங்கி விட்டான். போர் வளர்ந்தது......வெள்ளையர் சிறிதும் சிந்திக்காது தாக்கினர். கண்களில் பட்டவைகளை யெல்லாம் எரித்தனர் கண்டதுண்டமாக வீரர்களை வெட்டிச் சாய்த்தனர். சுபேதார் இந்தப் போராட்டத்தைச் சமாளிக்கவில்லை......முடியாது! அவன் இதை எதிர்பார்க்கவில்லை. அப்படி எதிர்பார்த்திருந்தாலும் அவனிடம் படை பலம் இல்லை. பீரங்கிப் படையும் வந்து சேரவில்லை. என்ன செய்வான்?

நல்லகாலமாக இயற்கை சுபேதாருக்குத் துணைப் படையை அனுப்பியது. ஆம், மூடுபனியை ஏவி வெள்ளையரைத் திகைக்க வைத்தது. வெற்றியடைந்து விடுவோம் என்ற குதூகலத்தில் குதித்துக் கொண்டிருந்தவர்கள் முகத்தில் பீதி, பயம்...! துக்க அலைகள் அவர்கள் மனக் கரையில் மோதி மோதிப் பேரிரைச்சலை உண்டாக்கின!

அப்படியும் 'தட்டுத் தடுமாறி' எதிரிக் கூடாரங்களில் புகுந்து விட்டனர். எனினும் அவர்களுக்கு வெற்றி யென்று அதனைச் சொல்லமுடியாது......! ஏன் எவ்வளவு தொல்லைகளை, துயரங்களை, இடையூறுகளைக் கடந்து இந்த இடத்திற்கு வந்துள்ளனர். ஆகவே அதை முடிவான வெற்றியென்று அவர்கள் வீரம் பேசிக்கொள்ள முடியாது. அதனால் வரும் களிப்பு வெற்றியோ, வெற்றிக் குதூகல ஆட்டமோ கிடையாது!

ஆனால் கலங்காத முகலாய உள்ளம்...? கலங்கி விட்டது. சுபேதார் பறந்து விட்டான். திவான் மதன் லால் உடனே சமாதான ஏற்பாடுகள் செய்தால்தான் தப்பலாம் என்று எச்சரித்தான். சுபேதார் போர்க் களத்தை விட்டே விலகிக் கொஞ்ச தூரத்தில் ஓய்வு பெற்றான். அவன் தங்கியிருந்த இடத்திற்கே முடீனும் ஓடினான். திவானின் எண்ணமே இப்பொழுதைய நிலைமை யில் அறிவுடைய செயல் என்று அழுத்தமாகச் சொன்னான். சுபேதார் அன்று டில்லியில் பாதுஷாவிடம் பேசிய வார்த்தைகளை எண்ணினான் ....அவனை வெட்கம் பிடுங் கித் தின்றது! அவன் வணங்கா முடியும் தாழ்ந்து தொங் கியது!

அப்பொழுது நுன்கோமன் வந்தான்......

" போர் நிலவரம் எப்படி?"

" சரணாகதியைத் தவிர வேறு வழியில்லை......"

" மண்டலம் ஆண்ட மறக்குல மாணிக்கம் தன் மணி முடி சுமந்த சென்னியால் பண்ட மாற்றுப் பண்டாரப் பயல்களுக்குப் பணிவதா...........இது பரிதாபம்... ..... உலகு ஒப்பாத நிகழ்ச்சி!"

முடீன் அழவில்லை... அப்படி யிருந்தது குரல்!

"அப்படியே வெள்ளைக்கொடி காட்டி வீழ்ந்து விட்டோம், தாழ்ந்து விட்டோம் என்று காட்டிவிடு...... போ!"

சுபேதார் கலங்கிய குரலில் கூறினான்.

பிப்ரவரி 9-ல் மீண்டும் சமாதானச் சடங்குகள் தொடங்கின.

வாள்முனை மழுங்கிப் பேனாமுனை வந்தது! உடன் படிக்கையில் சுபேதார் கையெழுத்திட்டான்...... உடன் படிக்கையா அது, அடிமை முறிச்சீட்டா, இந்த நாட்டு விடுதலைக்கு, சுதந்தரத்திற்கு, உரிமை வாழ்விற்கு மரண சாசனமா, வெளிநாட்டு வணிகர்களுக்கு வீரர் பரம்பரை மண்டியிட்ட அவமானத்தின் அத்தாட்சிப் பத்திரமா— தன்மான வாழ்விற்குச் சாவோலையா—அந்தோ... என்ன வென்று சொல்வது!

பிடித்த கோட்டைகளைத் திரும்பத் தந்துவிட வேண்டும். ஆங்கிலேயர் விருப்பம்போல் கல்கத்தாக் கோட்டையைப் புதுப்பித்துக் கொள்ளலாம். விற்பனை வரி கூடாது. சில கிராமங்களையும் முழு உரிமையுடன் 'தத்தம்' செய்யவேண்டும். நாணயங்கள் அவர்களே வெளியிட்டுக் கொள்ளலாம்... எப்படி ஷரத்துக்கள்...... சுபேதாருக்குப் படுதோல்வி! இரண்டு நாட்களுக்குப் பிறகுங்கூட எதிரிகள் தாக்கினால் காப்பாற்றிக்கொள்ள அல்லது எதிரிகளைத் தாக்க ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளவேண்டும் என்றும் இணைத்தனர். சுபேதார் அதற்கும் தலையை ஆட்டினான்.

பிறகு கிளைவ் தனது இலக்கை மாற்றினான். மூர்ஷிடாபாத்திலிருந்து சந்திரநாகூருக்குப் பார்வை பாய்ந்தது. பிணக்காட்டிலே நின்றுகொண்டு துப்பாக்கிகளின் இடி முழக்கத்தையும் மீறிக்கொண்டு, யோசித்தான்...... அங்கு பரவியிருந்த வெடிப் புகைபோல அவன் மனமும் இருண்டிருந்தது.

சுபேதாருடன் உறவு கொண்டாடிய பிரஞ்சுக்கார ரின் கொட்டத்தை யடக்கவேண்டும். கிளைவ் மேலிடத்தி லிருந்து உத்தரவு கேட்டான். சாதகமான விடையே கிடைத்தது. உடனே படையைக் கிளப்பினுன். பிரஞ் சுக்காரர் நாளை ஒத்திப்போட முயன்றனர். தாயகத்தில் வெள்ளையருக்கும் அவர்களுக்கும் தகராறு இல்லை; வந்த இடத்தில் வம்பை விலைக்கு வாங்கினர்! இடையே எவ்வளவு சமரச முயற்சிகள்—ஆனால் அவை தோற்றன! ஓடிப்போன டிரேக் பிரஞ்சுக்காரருக்குப் பரிந்து பேசி ஞன். கில்பேட்ரிக் வேறு இடையிலே புகுந்து குளறி ஞன். சந்திரநாகூர் நோக்கிச் சென்ற தூதுவர்களைத் திருப்பிவிட்டனர். எழுதிய உடன்படிக்கையைக் கிழித் தெறிந்தனர்.

வாட்சன் வேறு இந்தப் போரைப்பற்றிக் கடிதத் தூதுவிட்டான். சுபேதார் ஸூராஜ் பயத்தைக் கொப் பளிக்கும் கடிதம் ஒன்று வரைந்தான்—அங்குள்ள பிரஞ்சு மக்களும் அவர் நாட்டுக் குடிகளாம். இந்தச் சமயத்தில் காப்பாற்று என்று கலங்கிய கண்களுடன் நிற்பராம், அதனுல் யுத்தம் வேண்டாமாம். அறிவாளிகளிடத்தில் தூய உள்ளத்துடன் எதிரி கருணை வேண்டினுல் செய்வா ராம். காலத்திற்கும் சமயத்திற்கும் ஏற்றபடி நடப்பதே நல்லதாம்...... இப்படிப் பலவாறுகப் புலம்பியிருந்தான்!

ஆனுலும் கடைசியாகக் கிளைவ் படை சந்திரநாகூ ரைத் தாக்கத்தான் செய்தது. சுபேதாரின் படை ஹூக்ளி யில் இருந்தது. வேறு படை ஒன்று பிரஞ்சுக்காரருக்கு வரும்போலிருந்தது......இதையெல்லாம் முன் கூட்டி யறிந்த கிளைவ் சுபேதார் சேனைத் தலைவன் நுன்கோமனை அவன் பக்கம் இழுக்க முயன்றுன்......அமீன்சந்த் அதனை

முடித்துக் கொடுத்தான்! இனி...சந்திரநாகூர் சாய்ந்தது. சரிந்தது!

சுபேதார் இந்தச் சமயத்தில் என்ன செய்தான்? சமயம் சரிப்படட்டும் என்று காத்துக் கிடக்கும் அவனுக்கு ஒரு பெரிய அடி பிரஞ்சு வீழ்ச்சி! அதை வெளிக்காட்டலாமா?...அதுவும் அப்பொழுது வடமேற்கே ஆப்கானியர் படையெடுப்பார்கள் என்ற சூழ்நிலை பயங்கரமாக வளர்ந்து கொண்டிருந்தது. ஆகவே கிளைவின் வீரத்தைப் பாராட்டினான். வாட்சனின் வல்லமையைச் சொல்லிச் சொல்லிப் புகழ்ந்தான். வெளிப்படையாக வெற்றிக்கு வாழ்த்து அனுப்பினான்.

அமீன்சந்த் சிரித்தான்......! 'இருட்டறை' நடத்திய சுபேதார் இப்பொழுது இருட்டில் நடமாடுகிறான். கோட்டைபோன்ற பெரும் மாளிகையைத் தேனீயைப் போலச் சேர்த்து வைத்திருந்த பொருளைப் பறி முதலால் பிடுங்கிக்கொண்டான். இன்றோ சொத்தையும் பறி கொடுத்துப் புகழையும் இழந்துவிட்டான். தாலி இழந்த தையலானான்! இத்தகைய தலைகீழான மாற்றங்களைக் கண்ட அமீன்சந்த் ஏன் சிரிக்கமாட்டான்! அழிவுப் பாதையில் அதிவிரைவாக ஓடிக்கொண்டிருந்த சுபேதாரைப் பார்த்துச் சிரித்தான். விட்டு விட்டுச் சிரித்தான்—விலா நோகிறவரை சிரித்தான்.

ஐந்தாம் பாகம்

கலவர நிலவரம்

சுபேதார் தனது வேலைத் திட்டத்தைத் துவக்கி விட்டான். அமீன்சந்த் தனது இரட்டை நாவின் இரண்டாம் பகுதியைச் சுழற்றிவிட்டான். அதன் விளைவு...? ஸூராஜூவும் பிரஞ்சுக் காப்டன் லாவும் நட்பினராயினர். தப்பி வந்த பிரஞ்சுக் கைதிகள் ஆதரவு பெற்றனர். எங்கும் இரகசியமாகப் பட்டாளத்தார் நடமாட ஆரம்பித்தனர். சுபேதாரைக் கண்டு கேட்டான் கிளைவ்...காசிம் பஜாரைத் தாக்க வேண்டுமென்று! அவன் வேண்டுகோள் நிறைவேற்றப் படவில்லை. உடன் படிக்கையைக் கிழித்தெறிந்து விட்டது போலவே நடந்து கொண்டான் சுபேதார். காசிம் பஜாரில் வாழ்ந்த பிரஞ்சுக்காரர்களுக்குப் பணம், ஆயுதங்கள் கிடைத்தன. தப்பியோடினர் அவர்கள், அழைத்த போது வரவேண்டும் என்ற ஆணையுடன்!

சுபேதாருக்கு மற்றுமொரு வரவு—பிரஞ்சுக்காரரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டதால் பிரஞ்சுப் பிரபல தளகர்த்தன் புஸ்ஸியின் தொடர்பு வளர்ந்தது.

ஆனால் ஆங்கிலேயருடன் நேர்மாறான நடவடிக்கைகள்...! வழி மறிக்கப் பட்டனர். அவர்களுக்கு வெடி மருந்துகள் கிடைக்காதபடி செய்தனர். உடன்படிக்கைப் பத்திரத்து எழுத்துக்கள், எழுத்துக்களாகவே போயின. அவைகளும் செத்து மடிந்தன!

நாட்டு மக்களிடையே வெறுப்பு பெருகி விட்டது. யாரையும் நம்பமுடியவில்லை. சுபேதாரின் போக்கு சாவுக்குத் தள்ளிவிடுமோ என்று பயந்தனர். ஆட்சியிலேயே மாறுதல் வேண்டினர் அரியாசனத்தில் ஆள்மாற்றி அழகு பார்க்க எண்ணி விட்டனர் போலும்! நாட்டிலே உள்ள எல்லா வகையான கூட்டத்தாரும் இந்த வகையில் ஒன்றாகி விட்டனர். பெரும் பணம் படைத்த உள்நாட்டு செயித்கள் சுபோதாருக்கு நடமாடும் அபாய அறிவிப்பு

களாகி விட்டனர். அவர்கள்தான் சுபேதாரின் வீழ்ச்சிக்கு அதிகமாக உழைத்தனர். வேறு பல உள்நாட்டுக் கலவரப் பொறிகள் அங்கங்கே பறந்தன! இந்தப் பொறிகளைச் சேர்த்துப் பெரும் தீயாக்கப் பாடுபட்டனர் 'ஜெ ராம்சந்த்' கூட்டத்தினர்.

வெள்ளையர் இருவரும் பார்த்தனர். கிளைவ் ஆங்கில ஏகாதிபத்திய ஜோதி தெரிவதாக எண்ணினான். அதை வெளியிட்டும் விட்டான். ஆனால் அதற்காக உழைக்க நேரம் பார்த்து விலகியிருந்தான். மற்றொரு வெள்ளைத் தோலன்...பிரஞ்சு நாட்டு லா மட்டும் சுபேதாரை எச்ச ரித்தான். இனி அவர்களின் சந்திப்பைத் தள்ளி வைப்பது நல்லது என்று கூறிப் பிரிந்து சென்றான். ஆனால் ஆங்கிலே யர் நாட்டு மக்களின் நிலையை வைத்துக் கோள் பார்த்தனர். சுபேதார் வாளெடுக்க நாள் பார்த்துக் கொண்டிருந்தான்.

சுபேதாரின் வீரம் அப்படித் துடி துடிக்க வைத்ததே ஒழிய நிலைமை மோசமாகத் தானிருந்தது- நாட்டிலே செல் வாக்குள்ள மீர்ஜாபர் தன்னைத் தளகர்த்தனுக்கும் வரை செய்த தொல்லைகள் எவ்வளவு...! எலும்புத் துண்டைக் கண்ட நாய் போலானன், தளபதி என்ற பட்டத்தைப் பெற்றவுடன்! பதவியைத் தூக்கி யெறிந்ததும் அடங்கி விட்டான். அவன் நடத்திச் சென்ற படையைக் கூட்டி னன் சுபேதார். உடனே தளபதியை மாற்றினான். மீர் ஜாபர் மீது சந்தேகமோ, என்னவோ! நாமறியோம். அவன் சூது. வஞ்சனை விளையாடல்களில் ஈடுபட்டுள்ளான் என்று எண்ணியிருக்கலாம். ஆனால் வேலை நீக்கம் ஒரு தண்டனை யென்ற பெயரால் இல்லை!

சில விளக்க மில்லாத வதந்திகள் உலவின. சூழ்ச்சி... துரோகம்......வஞ்சகம்......உண்ட வீட்டிற்கு இரண்ட கம்...என்ற வார்த்தைகளுக்கு மக்களிடையே அதிக செல் வாக்கு! இச் சொற்கள் தந்த கசப்பைச் சுவைத்தன சுபே தாரின் செவிகள்; ஆனால் நம்பவில்லை அவர் மனம்! வாட் போன்ற ஆங்கிலேயரின் அட்டகாசங்களைக் கண்ட சுபே தார், வழக்கத்திற்கு மாறான போக்குக்கு ஏற்ற காரணம்

ஒரு வேளை மக்களிடையே பரவியுள்ள வதந்தி உண்மையுடன் தோழமை கொண்டுள்ளது என்பதோ, என்னவோ...என்று எண்ணினான். ஏங்கினான்!

ஆழ்வார் அவதாரம்

ஆப்கானியர்களை எதிர்த்துப் போராட வேண்டிய கடமையும் ஸூராஜூவுக்கு வந்து சேர்ந்து விட்டது. ஆகவே வெள்ளையர் கும்மாளம் போட்டனர். தாங்கள் எப்படியும் வெற்றிபெற்று விடலாம் என்று பூரித்துப் போயினர்.

ஆகவே இருட்டறையில் கூடினர். அமீன் சந்தையும் அழைத்தனர். ஆண்டவன் நினைக்கும் நேரத்தில் வந்து அருள்புரிவாராமே பக்தர்களுக்கு...அதுபோல வந்துசேர்ந்தான் வரமழை பொழிய! அமீன்சந்த் ஆடும் வஞ்சக நாடகத்தில் ஒவ்வொரு சமயம் ஒரு 'ஸ்பெஷல்' நடிகன் வருவான். அதுபோல வாட் இந்தச் சமயத்தில் வந்து சேர்ந்த நடிகன். அவன் அமீன்சந்தைத் தொழுதான். வழிபட்டான்!

அவர்கள் வலையை வீசினர்.

லுடீப்கான் என்னும் சுபேதாரின் சேனைத் தலைவர்களில் ஒருவன் சிக்கவேண்டும் என்பது அவர்கள் ஆசை! அதுதான் அவர்களின் முதல் திட்டம்......ஸூராஜ் ஆப்கானியரை எதிர்க்க வெளியேறுகிறபோது லுடீப் புரட்சிக் கொடியை ஏற்றினால், அவன்கீழ் நாட்டுமக்கள் வந்து விடுவர். அவனுக்கு ஆங்கிலேயர் உதவி செய்ய வேண்டும். அவனைச் சுபேதாராக்கி விட்டால் வெள்ளையருக்கு வெற்றித் திருநாள்தான்......இந்தத் திட்டத்தில் அவர்களின் வேலை ஆரம்பமாயிற்று!

அந்த இருட்டறையில் கனத்த குரலைமாற்றிக் காரிய மாற்றும் வழியைப்பற்றிப் பேசினான் அமீன்சந்த். அவன் அவர்களுடன் சேர்ந்துழைக்க ஆயத்தமானான். அவன்

வஞ்சக வார்த்தைகள் சந்தேகங்களைக் கிளப்பினாலும் ஆங்கிலேயர்கள் அவைகளைப் பெரிதாக நினைக்கவில்லை.

மறுநாள் சூழ்ச்சிக்கு உரு எழுதினர்..... லூடீப்! ஆனால் சிலர் முதல் நாள் திட்டத்தையே மாற்றவேண்டும் என்றனர். அவர்கள் மீர்ஜாபர்தான் லூடீப் இடத்திலே வைத்து மதிக்கப்பட வேண்டியவன் என்று வாதாடினர். அவன்தான் உண்மையில் சுபேதாருக்கு அடுத்த படியில் உள்ளவன்—உறவினன்! இந்தச் செய்தியைக் கிளைவுக்கு அனுப்பினான் வாட். அவன் அதனை மேல் அவைக்கு அறிவித்தான். ஒப்பம் கிடைத்தது. ஆனால் சுபேதார் தனது முழுவலிமையையும் ஆங்கிலேயர்மீது திருப்ப முயன்றான். ஏனெனில் அவனது எதிரிகளான ஆப்கானியர் டெல்லியைவிட்டு வெளியேறி விட்டனர். இனி எஞ்சியிருப்பவர் ஆங்கிலேயர்களே! ஆகவே படையைப் புதுப்பித்தான். மீண்டும் மீர்ஜாபரைப் படைத் தலைவனாக்கினான்.

சூழ்ச்சிக் குழுவுக்கு ஒரு பேரிடி...... அவர்கள் மனக் கோட்டை தகர்ந்து மண்மேடாகி விடுமோ என்று எண்ணினர். இவர்கள் திட்டத்தை அறிந்துகொண்டுதான் சுபேதார் அவனைத் தளபதியாக்கினானோ என்று அஞ்சினர். மீண்டும் லூடீப்பைத் தொண்டரடிப் பொடியாழ்வாராக்கப் பார்த்தனர். அவனைக் கண்டு பேசவும் முடியவில்லை. மீர்ஜாபர் தூண்டில் பக்கம் வருவானா என்பதே சிக்கலான பிரச்சனையாகி விட்டது.

இதே நேரத்தில் டெல்லியிலிருந்து மீஷ்வா வங்கத்தின்மீது படையெடுக்கப் போவதாக வெள்ளையருக்கு எச்சரிக்கை விட்டிருந்தான். ஆனால் அந்தச் செய்தியைத் தாங்கி வந்தவன் பார்வையிலும் நடத்தையிலும் சந்தேகிக்கப்பட வேண்டியவனாயிருந்தான். ஒருவேளை இது சுபேதாரின் சூதோ என்று எண்ணினர். அதற்காகவே அதனை ஸ்கிராப்டனிடம் கொடுத்துச் சுபேதாரிடம் சமர்ப்பித்தனர். அவனது முகபாவங்களிலிருந்து உண்மை

யைக் காணலாம் என்று எண்ணினர். ஆனால் ஏமாந் தனர். அந்த எச்சரிக்கை உண்மையென்றே நம்ப வேண் டியதாயிற்று.

கிளைவ் தனது படைகளை இரு இடங்களில் பிரித்து வைத்தான். பிளாசியிலிருக்கும் சுபேதாரின் படையைத் திருப்பி யழைத்துக் கொள்ளவேண்டும் என்றான். ஸுராஜுவுக்கு இந்த வேண்டுகோள் வெறுப்பையும், சந்தேகத்தையுமே கொடுத்தது. இதில் ஏதாவது பெரிய படுகுழி பறிக்கப்பட்டிருக்கும் என்று பயந்தான்! எனினும் படைத் தலைவன் மீர்ஜாபருக்கு, படையை நடத்திக்கொண்டு மூர்ஷிடாபாத்துக்கு வரும்படி கட்டளை பிறப்பித்தான். அவனும் வந்து சேர்ந்தான்.

இந்தச் சுற்றுச் சூறாவளி நிலைமைக்கிடையேதான் அமீன்சந்த் தனது திட்டத்தை நிறைவேற்ற வட்டமிட்ட படியே இருந்தான். நல்ல காலமாக மூடீன் போர்க் காரியங்களில் ஈடுபட்டிருந்தான். அவனது குறுக்கீடு இருக்காது என்பதை உணர்ந்ததுமே வெற்றி நாமாவளி பாட ஆரம்பித்துவிட்டது அவன் மனம்.

ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தான். அதற்குத் தளபதியின் வருகையும் வேண்டும் என்று அழைப்பு விட்டான்!

ஹி ஹி ஹி......

நமது சிரிக்கும் சதை மூட்டை வருவது தெரிய வில்லையா? மீர்ஜாபரை எப்படிச் சரிக்கட்டுவது என்று சிந்தித்தான்...... சிரித்தான்! அங்கே மீர்ஜாபரின் வர விற்காகக் காத்துக் கிடந்தவர் இருவர். ஒருவன் வாட். பிறிதொருவன் அமீன்சந்த்.

இந்த விருந்து ஏற்பாடே புது மாதிரியாக இருந்தது. ஏதோ ஒரு சுரங்கம். அதில் ஒரு மூலையில் ஒரு மேஜை. அதனைச் சுற்றி மூன்றே நாற்காலிகள்.

இருவர் அமர்ந்திருந்தனர் இன்னும் ஒருவர் வருவாரோ என்று ஏங்கிக்கொண்டே! அப்பொழுது மீர்ஜாபர் வந்துசேர்ந்தான்.

"ஹி ஹி ஹி...... வரவேண்டும். உங்கள் வரவால் எங்கள் இல்லம் புனித மடைந்தது."

"வணக்கம். வரவேற்புக்கு நன்றி"

மூவரும் அமர்ந்தனர்.

மூலையிலிருந்து ஒரு 'மின்னல்' வந்தாள், கையில் மது ஜாடியை ஏந்தி! மீர்ஜாபரின் முகத்தில் ஒரு புது ஒளி ஏற்பட்டது.

மதுவைச் சாய்த்தாள் அவள். மயக்கம் வருகிற வரையில் அருந்தினன்......... அருந்தினை...... அன்பாக அணைத்து ஆசை வார்த்தைகளுடன் ஊட்டிவிட்டாள். அந்த ஆரணங்கு யார்? பழைய 'உருப்படி'தான். அலிவர்திகானின் சாவுப் படுக்கையில் சந்தித்த சரசினனினிதான்! ஆமாம், அவள் அமீன்சந்தின் எதிர்ப்பில்லாத ஆயுதம்! பணியாத பெரு வீரர்களையும் தாள் பணிய வைக்கும் சக்தி இந்த ஆயுதத்திற்கு உண்டு.

காலம் சரி, இனிக் காரியந்தான் பாக்கி...

அமீன்சந்த் நாவைத் தீட்டிக்கொண்டான் மதுவில்! மதுவுக்குத்தான் இரண்டு பொருளுண்டே......! தேன், மயக்கும் நஞ்சு... அவன் பேச்சு இனிக்கும், அதன் விளைவு விஷ வாடைதான்!

"மீர்ஜாபர், உங்கள் வீரம்..."

"எத்தனையோ இரண களங்களில் எதிரிகள் கண்டு வியந்ததல்லவா?"

"புகழ்ச்சி வேண்டாம்...... புறப்படட்டுமா!"

இந்த இருவரின் பேச்சுக்களையும் கேட்ட மீர்ஜாபர் போதை நிலையிலும் பதில் சொன்னான்.

"இவ்வளவு விரைவிலா? இருட்டிவிட்டது. இரவு தங்கக் கூடாதா?" என்று கேட்டாள் நளினி. கண்களை—மதுவைவிடப் போதை யூட்டும் 'அபின் உருண்டைகளை'—சுழற்றிக்கொண்டே!

"என்ன இருந்தாலும் இந்தச் சுபேதார் இவ்வளவு துரோகம்..."

"அவன் பேச்சு ஏன்? அவனை யாருக்குப் பிடிக்கிறது நாட்டில்" என்றான் ஜாபர்.

"பிடிக்காத ஒருவன் வாழலாமா?"

"வாழக்கூடாது என்பது சரி...... அதற்கு வழி?"

"அதற்காகத்தானே கூடியிருக்கிறோம்."

"சதி செய்யவா என்னைத் தருவித்தீர்கள்? அதற்கு வேறு எந்தத் தடியனையாவது......"

"சதியா, சுதந்தரப் போராட்டம் நடத்த அழைக்கிறோம். கொடுங்கோலனைக் கொல்வது கோடி கோடி புண்ணியம்......"

"ஸுராஜுவைக் கொல்வதா... நினைக்கவும் நெஞ்சு நடுங்குகிறது! அவன் தளபதி நான்."

"விஷக்கிருமிகள் உள்ளே இருந்துகொண்டுதான் கொல்லுகின்றன."

"வீரன் விஷக் கிருமியாவதா?"

"வீரனை விவேகியாகச் செய்கிறோம். அவ்வளவு தான்!"

"துரோகி...... அந்தப் பட்டம் பெறவா சொல்கிறீர்கள். அது என்னால் முடியாது!"

இப்படிப் பேசிப் பேசிப் பார்த்தனர். மீர்ஜாபர் படியவில்லை. அவன் சுபேதாரை மனதார வெறுத்தான். ஆனால் எதிரிகளுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்ய விரும்பவில்லை. தைரியமும் இல்லை. போதையிலே காரியம்

எளிதில் சாயும் என்று பார்த்தனர். ஆனல் போதையினுல்தான் இவ்வளவு பிடிவாதமாக—விடாப்பிடியாகப் பேசுகிருன் என்று தெரிந்துகொண்டனர். தங்கள் முடிவை மாற்றிக்கொள்ள வேண்டியவர்களாகிவிட்டனர்.

கடைசியில்...... வங்கத்தின் வீழ்ச்சி அந்த மின்மினி ஒளியில் தெரிந்துகொண்டிருந்தது. நடுங்கும் கரங்களால் கையொப்ப மிட்டான் ஜாபர். வாட் கொட்டை விழி விழித்துக்கொண்டிருந்தான்.

அதில்......? ஸுராஜ் செய்துகொண்ட உடன் படிக்கை இருந்தது. அங்கே...... ஆங்கிலேயரின் எதிரி சுபேதாரின் எதிரி. ஆங்கிலேயருக்குக் கோலாகல வாழ்வு தரவேண்டும். கல்கத்தாக் கோட்டைக்கு ஒரு கோடிக்கு மேல் பணம் தரவேண்டும் முன்னர் செய்த கொடுமைக்கு ஈடாக! கல்கத்தாவில் வாழும் ஆங்கிலேயருக்கு 50 இலட்சம், இந்துக்களுக்கும், முகமதியர்களுக்கும் 20 இலட்சம்-சுபேதாரின் கஜானுவுக்கு இந்தச் செலவுப்பட்டியல்! இதனைப் பிரித்துக் கொடுக்க ஆங்கிலேயருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். படை வேண்டுமானல் அதற்கும் பணம் தரவேண்டும். கோட்டைகள் இனிக் கட்டக்கூடாது...இப்படிக் கண்டபடி எழுதிக் கையொப்பம் வாங்கினர். இதற்குக் கைமாருக ஆங்கிலேயர் மீர்ஜாபர் சுபேதாராக உதவி செய்வர். கண்களை விற்றுச் சித்திரம் வாங்கினுன் மீர்ஜாபர்!

குரானைக் கையில் வைத்துக்கொண்டு...'நான் அல்லாவின் பேராலும், அவரின் தொண்டர் நபிகள் நாயகம் பேராலும் சொல்கிறேன். இந்தத் திட்டங்களுக்கு மாருக என் உயிருள்ள அளவும் நடக்க மாட்டேன். சத்தியம்...' என்ருன். அந்தச் சத்தம் கேட்பதற்குப் பயமாகத்தானிருந்தது.

ஹிஹிஹி......மீர்ஜாபரின் வீழ்ச்சியைக் கண்டு சிரித்தான் அமீன்சந்த். வாட் துரையும் புறப்பட்டான். ஜாபர் இருந்தவிடத்தை விட்டு எழுந்தான். நளினி தொட்டாள்

......துவண்டான். இரவு கண் விழிப்பாயிற்று. விபீடணாழ்வார் திருவவதரித்தார். ஆழ்வாரின் ஜனனம் இன்னும் அம்பலத்திற்கு வரவில்லை.

சுடுகாடு நோக்கி!

கல்கத்தாவிலிருந்து ஒரு முடங்கல் வந்தது. அமீன் சந்த் கையொப்பம் ஒளிவிட்டு வீசியது! தூங்கும் குழந்தையைக் கிள்ளிவிடுவது, பிறகு தொட்டிலையும் ஆட்டிவிடுவது!............அமீன்சந்த்தின் சித்தாந்தமல்லவா அது! ஆகவே, ஆங்கிலேயருடன் சேர்ந்துகொண்டு மீர்ஜாபர் சூழ்ச்சி செய்கிறான் என்று எழுதிவிட்டான். இதைக் கண்டதும் சுபேதாரின் இளம மீசை துடித்தது. உடனேயே முடீனே வரவழைத்தான்.

"நண்பா, அந்தத் துரோகியின் மாளிகையைக் குட்டிச் சுவராக்க வேண்டும்" என்று கூவினான் சுபேதார்.

"ஸுராஜ், நீ ஆத்திரப்படுகிறாய். அவன் ஏன் துரோகியானான் தெரியுமா உனக்கு......அவன் வெறுஞ் சிலை. அவனை ஆட்டிவைக்கும் கூட்டம் வேறு இருக்கிறது........."

"அப்படியா......?"

"மேலும் மேலும் உண்மை ஊழியன் அஜிஸ்கான் மூலம் வந்துகொண்டிருக்கும் செய்திகள் என்னைப் பீதியடையச் செய்கின்றன!"

"ஐயோ......!"

"சூழ்ச்சி நம்மை மிகவும் நெருங்கிச் சூழ்ந்துள்ளவர்களிடையே புரையோடி, அறுத்தும் ஆற்ற முடியாத அளவு வளர்ந்து விட்டது. புரட்சி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் பணப் புதர்களில் பதுங்கிக் கொண்டிருக்கிறார்கள் பிரபுக்கள்"

"அப்படியானல் இப்பொழுது என்ன செய்வது?"

"எல்லோரையும் அழைத்துப் பேசுவோம்"

"அதற்கான ஏற்பாடுகளை உடனே செய்"

முடீன் எல்லாப் பணம்படைத்த பெருமக்களுக்கும் அழைப்பு விட்டான். எல்லோரும் வந்திருந்தனர். மீர்ஜாபர் மட்டும் வரவில்லை. வந்திருந்தவர்களிடம் நாட்டு நிலையை எடுத்துச் சொல்லி அவர்களிடம் ஒத்துழைப்பு வேண்டும் என்று கேட்டுக்கொண்டான் சுபேதார். அவர்களும் ஒத்துக்கொண்டனர். முடீன் நன்றி கூறினன். அந்த மண்டபத்தை விட்டு எல்லோரும் வெளியேறினர். முடீனும் சுபேதாரும் நின்று கொண்டிருந்தனர்.

"ஜாபருக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்....... நாம் அழைத்தும் வரவில்லை. அவனுக்குச் சேனதிபதி பதவி வேறு!"

"தாங்கள் நண்மையைக் கருதி நண்பன் என்ற உரிமையில் சொல்கிறேன். கோபத்தை ஒதுக்கிவிட்டு அவனை எப்படியும் சரிக்கட்டுங்கள் நேரில் சென்றுவது! அவன் எதிரிகளால் விலைக்கு வாங்கப் பட்டுவிட்டான். நீங்கள் இன்னமும் நம்பும் அமீன்சந்த் துரோகிகளின் முடிசூடா மன்னன். அவன் ஆடும் சூதாட்டம்தான் இந்தப் போராட்டம். காலம் உணர்த்தும் இதை!"

"சரி, சரி. ஜாபரை நான் நேரில் சந்திக்கிறேன்."

சுபேதார் தனது கட்டளையை மீறிய ஒருவனின் மாளிகைக்கு நேரில் சென்றுன்.

அவன் வந்து சுபேதாரை வரவேற்றான். அவன் பயந்து தான் வரவில்லையோ அல்லது எதிர்ப்புக்காட்ட எண்ணியோ என்னவோ சுபேதாரின் கட்டளையை—அன்பழைப்பைச் சுக்குநூருக்கி விட்டான். இப்பொழுது அந்தச் சுபேதாரே அவன் மாளிகைக்கு வந்துவிட்டான்.

"ஜாபர், உன்னைப்பற்றி நாட்டில் வழங்குகிற வதந்தி ......"

"சுத்தப் பொய், பொய்......நான் துரோகியல்லன்! வஞ்சகம் புரியமாட்டேன்" என்று புளுகினான். அது மட்டுமா? அந்தச் சிறுமதியாளன் குரானை வைத்துச் சத்தியம் செய்தான்! சுபேதார் திருப்தியடைந்து திரும்பினான்.

பிறகு கிளைவுக்கு 'ஏகத்தாளமான' எழுத்துக்களால் தூதுவிட்டான்......அந்த எழுத்துக்கள் எக்காளமிட்டன. கெக்கொலி கொட்டின! கிளைவின் பணிவை எதிர்பார்த்துச் சென்றது அந்தக் காகிதத் தூது!

கிளைவின் நிலை என்ன அப்பொழுது?...ஆங்கிலேயர் எதிர்காலத்தை வரவேற்கச் சுறுசுறுப்பாகவே வேலை செய்து கொண்டிருந்தனர். மீர்ஜாபாருடன் செய்து கொண்ட உடன்படிக்கை கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தது. ஆனால் அந்த இரகசியம், கடைமலிந்த சரக்காகி விட்டது. ......வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு சிரிப்பாய்ச் சிரித்தது!

படையில் ஒரு கூறு கல்கத்தாவில் நிறுத்தி வைக்கப்பட்டது. எஞ்சியது சந்திரநாகூர் படையுடன் சேரக் கிளம்பிவிட்டது. அந்தப் பெரும்படை மீண்டும் போருக்குப் புறப்பட்டுவிட்து!

"சூரப்புலி சுபேதாரே! பழைய உறவை மறந்து விட்டீரோ? அன்றுபட்ட இடி அதற்குள் நினைவில்லாமல் போய்விட்டது......இளவரசருக்கு என்னென்னவோ நினைவிருக்கும். இது எப்படி மனத்தில் நிலைத்திருக்கும்? புஸ்ஸியுடன் சொந்தங் கொண்டாடினீரே, அந்தப் புஸ்ஸி எங்களைப் பஸ்மீகரணம் செய்துவிடுவானோ?......பங்கப்படப்போகும் வங்கத் தங்கமே! சிங்கம் என்பது உமது நினைப்போ? .....சுண்டெலி எங்களுக்கு நீர்! லாவுக்கு உதவி செய்தீர்...லா உமக்குச் செய்யப்போகும் இலாபம் என்ன? அவன் உம்மைக் காப்பாற்றுவோனோ? அட மதி கெட்டவரே? எங்கள் நாட்டவருடன் வம்புக்கு வந்தீர்! இதோ வாங்கப் போகிறீர் தொடர் வட்டியுடன்! ......இந்தக் கடிதம் கிளைவ் தீட்டியது காற்றுப்போலப்

பறந்து சென்றது...என்ன இப்படியா கடிதம் எழுதுவர்! செ, செ......அதன் உள்ளழுகைத்தான் காட்டியிருக்கிறது! காசிம்பஜாருக்கு வருகிறோம். மீர்ஜாபர், இராய் டுலூப் முதலியவர்கள் முன்னிலையில் நம் வழக்கை வைப்போம். உடன்படிக்கைகளை நாங்கள் மீறியிருந்தால் எங்கள் வணிக உரிமைகளையே இழக்கிறோம். நீர் மீறியிருந்தால் இழப்புக்கு ஈடு தரவேண்டும்......என்று முடித்திருந்தான் கிளைவ்.

அது மாரிக் காலம்......ஆகவே விடைவர வெகுகாலம் பிடிக்கும். அதுவரை காத்திருக்கவில்லை. முன்னேறிற்று படை! கட்வா எனும் ஊரையடைந்தனர். அரிசிக் களஞ்சியம் எனும்படி அவ்வளவு செழிப்பான ஊர் அது! கிளைவுக்கு மட்டும் மீர்ஜாபாரின் ஞாபகம்.........அவன் போட்ட கடிதங்கள் ஒன்றிரண்டு! அந்தக் கடிதங்களைக் கொண்டு அவனை எப்படி நம்புவது?......

கிளைவ் எதிர்க்கரையை ஹூக்ளி நதியின் ஒருபுறத்திலிருந்து பார்த்தான்... !

ஐம்பதினாயிரம் வீரர்களுக்கு மேலிருந்த சுபேதாரின் படையினர் கூடியிருந்தனர். இடையிலே ஹூக்ளி வெள்ளப் பெருக்கு ... தாண்டுவதா, வேண்டாமா? இதுதான் அவன் முன்னுள்ள பிரச்சினை! அந்தப் போராட்டத்துடன்தான் வெள்ளையரின் வாழ்வும், சாவும் பின்னிக் கிடந்தன. வென்றால் வெள்ளையரின் வசீகர வாழ்வு வளரும்! பொன்றினால் ஒரு ஆள்கூடச் சாவோலை தாங்கியோட முடியாது! மீர்ஜாபரின் உதவி கிடைத்தால் சண்டை...அவர்களுக்குக் கொண்டாட்டாம்! இல்லாவிட்டால் தப்பியோடவும் திண்டாட்டம்!

அந்தக் கரையோரத்திலேயே போர்க்குழுவைக் கூட்டினான் கிளைவ். வந்தவரில் பதின்மூன்றுபேர் "வேண்டாம் இந்தப் பயங்கர நிலையில் போர்" என்றனர். எழுவரே ஆதரித்தனர். ஸர் ஹயர்கூட—பிரபல தளகர்த்தர்—தன்

குரலை உயர்த்தி நின்றுர் இந்தப் பிரச்சினையில்—வழக்கம் போலவே கிளைவ் தனது இரும்புக் கரத்தை வைத்தான்.

போர், போர்......உடனே! இரு 'ப்யூஜியாமாக்களும்' ஒன்றையொன்று நிமிடத்திற்கு நிமிடம் நெருங்கிக் கொண்டே இருந்தன. முடிவு......? சுபேதார் சுடுகாடு நோக்கி வேகமாக நடந்துகொண்டிருந்தான்......ஆங்கிலேயர் எங்கு போகிறேம் என்று தெரியாமலேயே முன்னேறினர்.

பிளாசி

பிளாசி—ஹூக்ளியின் கரையில் உள்ள ஊர். அங்கு சுபேதார் தனது படையைக் கொண்டுவந்து நிறுத்தியிருந்தான்.

மீர் மைதானம் என்ற இடத்தில் சுபேதாரின் படை வகுத்து நிறுத்தப்பட்டிருந்தது. எதிர்ப்புறத்தில் வெள்ளையர்கள் படை வந்து சேரவேண்டும். இவை இரண்டையும் தூரத்திலிருந்து கவனித்துக்கொண்டிருக்க வேண்டிய படை மீர்ஜாபருடையது! ஹூக்ளியைச் சேர்ந்த சிற்றுறு பாகீரதி ஆற்றின் கரையிலேதான் இந்த அமளி!

கி. பி 1757, ஜூன் 22— வெள்ளையர் நள்ளிரவில் ஆற்றைக் கடந்தனர். பிளாசிக்குள் நுழைந்தனர். மாந்தோப்பில் மறைந்திருந்தனர் விடியுமளவும்!

பிளாசி .....ஆம், அங்குதான் இந்த உபகண்டத்தின் அடிமை வாழ்வு உதயமாயிற்று. ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் பிறந்தது. பிளாசி......இந்திய வரலாறு இரத்தத்தால் எழுதிவிட்ட எழுத்துகள். அவைகளைக் கண்ணீரால் கரைக்க முடியுமா? பிளாசி...இந்தப் பெயர் இந்தியாவில் வாழும் எவருக்கும் இனிக்காது; கசக்கும். பிளாசி...சுதந்தர தாகமுள்ளோர் கேட்டவுடன் அழுவர். வீரங்குன்றுதவர் தோள்களைத் தட்டிப் பார்ப்பர். பிளாசி...அது ஊரின் பெயரா? இல்லை, இல்லை! வீழ்ச்

சிக்கு வேறொரு பெயர், அடிமையின் அலங்கார ஆடை, துரோகத்தின் துவக்குமிடம், வஞ்சகத்தின் வாழ்க்கைக் கூடாரம், காட்டிக்கொடுப்போரின் கோட்டை...இன்னும் ஆயிரமாயிரம் அர்த்தங்கள் உண்டு!

அங்கே என்ன நடந்தது?...

இரவு காலையை ஈன்றுவிட்டு இறந்தது. அந்தக் காலைக் கதிரவன் ஒளியில் அந்தக் காட்சி நன்ருகத் தெரிந்தது...எறும்புச் சரம் போல வீரர்கள் வரிவரியாகப் போய்க்கொண்டிருந்தனர். எருதுகள் பீரங்கி வண்டிகளை இழுத்துக் கொண்டு வந்தன. யானைப் படையும் அலங்காரத்துடன் சென்று கொண்டிருந்தது. குதிரை வீரர்கள் ஏராளமாக இருந்தனர். காலாட் படையைக் கணக்கிட்டால் ஐயாயிரத்திற்குக் குறையாது. இவைகளுக்கிடையில் குண்டு மழை பொழியும் படையும் இருந்தது. பிரஞ்சுப் படையினர் இடையிடையே கலந்திருந்தனர். சுபேதாரின் இந்தப் பெரும் படை ஆங்கிலேயரின் பட்டாளத்தை அப்படியே விழுங்கி விடுவதுபோலச் சென்று கொண்டிருந்தது.

ஆற்றங் கரை யோரம்...அதுதான் மீர் மைதானம். இனிப்படை செல்ல இடமில்லை. படை தங்கியது!

பிரஞ்சுத் தளகர்த்தன் சின்பிரே முன்னுக்கு வந்தான். "வீரர்களே, என் பின்னே வாருங்கள், தயங்காதீர்கள், தளராதீர். தவக்கமில்லாமல் கிளம்புங்கள்" என்ருன். வீரர்கள் ஒருவர் முகத்தை யொருவர் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டனர். யாரும் ஒத்துழைப்பதாகத் தெரியவில்லை.

என்ருலும்...

டப், டிப், டபார்

பீரங்கிகள் தங்குதடையின்றித் தங்கள் கடமையைச் செய்யத் தொடங்கி விட்டன. ஆங்கிலேயர் பயந்துவிட்டனர். அவர்கள் இடம் மாறினர். கிளைவ் படையை

வேருெரு பக்கம் இழுத்துச் சென்ருன். இப்பொழுது முன்னிலும் அதிகமாக, வெகு மும்மர'மாகப் பீரங்கிகள் தங்கள் கடுங்குரலால் மரணக் கதையைச் சொல்லின. எதிரிகள் தரையில் படுத்துக்கொண்டு தங்கள் உயிர்களைக் காப்பாற்ற முயன்றனர். மணியாகவாகச் சுபேதாரின் பீரங்கிகளின் சுரங் குறைந்தது. அவைகளில் ஆத்திரம் தொனிக்கவில்லை. ஆயாசந்தான் தெரிந்தது. அதைத்தானே எதிரிகள் எதிர்பார்த்தனர்! அவர்களோ நேர் எதிரிடையான நிலையிலிருந்தனர்...எங்கும் ஒரே புகை. அதனுல் காரிருள், இருட்டு! அழுகுரல் கேட்ட வண்ணமே இருந்தது. பிணங்களை யடுக்கியே பீரங்கி வீரர்கள் தங்கள் உடலை மறைத்துக் கொண்டனர். வெடி சத்தத்தைக் கேட்டுப் பயந்த யானைகள் பிளிறின. மிரண்டோடித் தங்கள் பக்கத்துப் படை வீரர்களையே மிதித்துத் துவைத்துக் கொன்று குவித்தன. குதிரை வீரர்கள் மின் வெட்டுப் போல இங்கும் அங்கும் பாய்ந்து போரிட்டனர். காலாட் படையிடையே ஒரே இரைச்சல்...குழப்பம்...!

கில்பேட்ரிக் தனது படை பலத்தைக் காட்டத் தொடங்கி விட்டான் ஆங்கிலேயர் பக்கமிருந்து! சினபிரே அதுவரையிலும் அகலவில்லை. ஆனுல் மேலும் தாமதிக்க முடியவில்லை...தனியாள் என்ன செய்ய முடியும்? ஓடினுன், ஓடினுர்கள்...ஆறு மைல்கள் பின்வாங்கி விட்டனர். ஆங்கிலேயர் வெற்றிப் புன்னகை காட்டினர். ஸுராஜுவுக்கு உண்மையில் தனது படையிடம் நம்பிக்கையில்லை. நம்பிக்கை கொள்ள முடியாதவாறு படையினரும், நடந்து கொண்டனர். படையினருக்குச் சுபேதாரிடம் நம்பிக்கையோ, போரிலே விருப்பமோ இருப்பதாகத் தெரிவில்லை. இந்த நிலையில் முடிவு எப்படியிருக்கும்? அதுமட்டுமல்லாமல் சுபேதாரின் உயிருக்குயிரான நண்பன் முடீன்...அவனைக் காணவில்லை!

முடீனின் முடிவு?

முடீன் படைகளிடையே புகுந்து வந்தான். அவனுக்கு மீர்ஜாபரின் நடவடிக்கைகளில் சந்தேகம். ஆகவே அவனையே கண்காணித்தான். சில நிமிடங்களிலேயே மீர்ஜாபரைப் பின்பற்ற ஒரு கூட்டமும், அவர்கள் எதைச் செய்வது என்று திட்டமிடாத தத்தளிப்பு நிலையிலிருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டான். முடீன்தான் உண்மையில் படையின் தளபதி, கண்காணிப்பவன், ஊக்குவிப்பவன் ......எல்லாம்! உடனேயே இதற்கு ஏற்ற வழி கண்டுபிடிக்க வேண்டுமே என்று சுற்றிலும் பார்த்தான். அஜிஸ் காணப்படவில்லை. காலாட் படையிடத்திலே ஒரு இளைஞன்—வீரன்—நின்று கொண்டிருந்தான்.

"வீரா, இங்கே வா" என்றான்.

அவன் பணிந்தான்.

"நீ இங்கே இருந்து கொண்டு மீர்ஜாபர் என்னென்ன செய்கிறான் என்று கண்காணிக்க வேண்டும்—விரைவிலே திரும்பி வருவேன். வந்தவுடன் என்னிடம் அப்படியே அத்தனையும் ஒப்புவிக்கவேண்டும்"

"அப்படியே......"

"உன் பெயர்"

"மிளான்....."

முடீன் தனது குதிரையை முடுக்கி விட்டான். அப்பொழுதுதான் சின்பிரே போரைத் துவக்கியிருந்தான். சுபேதாரின் படையிடையே உற்சாகம் இருந்தது. அதை ஊக்குவிப்பான் வேண்டி இங்கும் அங்கும் சென்று கூவினான். குதிரையிலிருந்தபடி கைகளை ஆட்டிப் படைகளை ஏவினான்!

பொழுது சாயச் சாய வேகங் குறைந்து கொண்டிருந்ததைக் கண்ட முடீன் மேலும் மேலும் ஊக்குவித்தான்.

அப்பொழுது அவனுக்கு மீர்ஜாபர் ஞாபகம் வந்துவிட்டது. அங்கு நிறுத்தியிருந்த மிளான் வீரனைக் காணப் பறந்து சென்றான்.

குதிரையை விட்டுக் கீழிறங்கினான்.

இந்தக் காட்சியைத் தூரத்திலிருந்த கூடாரத்திலிருந்த இருவர் உற்றுப் பார்த்தனர்.

"சோணிசந்த், இதுவரை நாம் வாளெடுத்துப் போரிட்டதில்லை. இந்தா சொருகுவாள்...இன்று எப்படியாவது முடீன்கானை முடித்து விடு, ஓடு" என்றான் ஹி ஹி ஹி......

"தங்கள் உத்தரவு" என்று நடந்தான் சேடன்.

முடீன் மிளானின் தோளைப் பிடித்துக்கொண்டு பேசிக் கொண்டிருந்தான். பின்னாலேயே மெதுவாக நடந்து வந்த துரோகியின் தூதுவன் வீசினான் கொலை வாளை ......அந்தோ !......அதோ ஒரு பெரு வீரன் சாய்ந்து விட்டான். ஒரு சிறு வாள் அவனது உயிரைக் குடிக்கத் துடித்துக் கொண்டிருந்தது. முடீன்கான்—சுபேதாரின் உயிருள்ள நிழல்—வீழ்ந்து விட்டான். அவனிடம் பேசிக் கொண்டிருந்த சிறு வீரன் கதறி விட்டான். முதுகுப்புறம் வந்து வாளை வீசி விட்டோடிய கோழையை விரட்டினான். இன்னொரு சொருகு வாளை அவன் மறுபடியும் வீசி விட்டோடியே போனான். அந்த இளைஞன் நிலை குலைந்து வீழ்ந்தான். தலை முடி சரிந்தது. நீண்ட கூந்தல் விரிந்து கிடந்தது.

"ஆ...என் காதலரே, உங்களுக்காக ஆணுடை தரித்துப் போர்க்களத்தில் வந்து சந்தித்தேன். ஆம்; சாவிலும் சேர்ந்து கொண்டேன்" என்று அழுதாள் ஊர்மிளா.

சாவைத் தழுவப்போகும் முடீன் கண்களைத் திறந்தான். இரு உடலங்களும் மெதுவாக நகர்ந்து ஒன்றையொன்று தழுவின. இரத்தக் குளத்தில் அவர்கள் 'ஜலக்கிரீடை' ஆடினார்கள் !

பிறகு.........

சுபேதாரின் முகம் அப்பொழுது சாதாரணக் குழந்தை முகம் போல இருந்தது. ஆபத்து.... இதோ வந்துவிட்டேன். இரு இரு உன்னை விடுகிறேனு பார். கொட்டத்தை அடக்குகிறேன்......என்று கூறிக்கொண்டேயிருக்கிறது......அந்த வேட்டுச் சத்தத்திலும் வெடிப் புகையிலும் கிளைவ் தோன்றினுன். அவனது கேலிச் சிரிப்புக் கேட்டுக் கொண்டே இருந்தது. சுபேதார் ஆத்திரத்தில் முகத்தில் அறைவது போல மூடிக் கொண்டான். கண்ணீர் வரவில்லை...கலக்கம் அவ்வளவு அதிகம் அடைந்துவிட்டான். அன்புத் தோழன் முடீன்கான் பிணமாக்கப்பட்டான். இரணகளத்தில் சூதுக்காரர்களால்...வீரனுக்கு ஏற்ற சாவு! ஆனல் படை என்னுவது?...இப்படியெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்தான் ஸுராஜ்.

சமய சஞ்சீவி சட்டென்று வந்தான். அமீன்சந்த் எங்குதானிருப்பானே, எப்படித்தான் வருவானே......... நாமறியோம்! ஹி ஹி ஹி......சிரித்தான்.

சுபேதார் வரவேற்றுன்.

“மதியிருண்ட நேரத்தில் மணி விளக்குப் போல வந்தாய். உடனே எதிர்காலப் போக்கை நல்ல முறையில் அமைக்க ஒரு இலட்சியவாதியைக் காட்டு......நாட்டை எண்ணி, நான் இறந்த காலத்தில் செய்த கேட்டை மறந்து!”

“கடலிலே கலம்......கடும்புயல், பக்கங்களிலோ மலைகள்! கலத்திலுள்ளவரோ கலகம் செய்கின்றனர். கொந்தளிப்பிலே வங்கம்—இந்த நேரத்தில் கப்பலோட்டியும் காலமாகி விட்டான்”

“நடந்தது நடந்ததே ஆகட்டும். நேற்று—இறந்துவிட்டது. இனி நாளையைப்பற்றிப் பேசு!”

“முடீன் போய்விட்டால் மீர்ஜாபர்தான்”

"மீண்டுமா? முன்னொரு முறைதான் நியமித்துப் பிறகு மாற்றினேன்"

"அதையெல்லாம் இப்பொழுது எண்ணிப் பயனில்லை. இராய்டுலூப் எதிரிகள் பக்கம்போல் தெரிகிறது. திவான் மோகன்லால்கூட நம்பிக்கைக் குரியவராகத் தெரியவில்லை. மீர்ஜாபர்தான் ஏற்றவர்!"

ஹிஹிஹி...... மறைந்துவிட்டது அந்தச் சிரிப்பொலி! மறுகணத்தில் ஆள் ஓடினான் ஜாபரை அழைக்க!...... ஜாபர் வந்து சேர்ந்தான்.

கூடாரத்திற்குள் மரம்போல நின்றுகொண்டிருந் தான். சுபேதார் ஏக்கமே உருவாக விளங்கினான்.

"ஜாபர் உன்னை மன்றாடிக் கேட்கிறேன். நடந்தது தவறு. மன்னித்துவிடு. வேற்றுமைகளை மறந்துவிடு. முகலாய வம்சத்தின் எதிர்காலம் எச்சிற்கல நாய்களால் ஏளனப்படுத்தும்படியான நிலைமை வந்துவிட்டது. வங் கம்—உன் கையில் ஒப்படைக்கப்படுகிறது. பெறுக. காப்பதுன் பாரமப்பா!"

தொண்டை வறண்டுவிட்டது. ஜுராஜ் களைத்து விட்டான். பேச முடியாமல் சட்டென்று நிறுத்தி விட்டான்.

"மன்னிக்கவேண்டும். நான் உங்கள் சேவகன்"— கடமைக்காவது ஜாபர் உடனே இந்த வார்த்தைகளைச் சொல்லி வைத்தான்.

"நீ என் உறவினன். அரியாசனமும் உன்னைத் தள்ளி விடாது. சமயம் சரியானது...... தூக்குக் கயிற்றில் தொங்குகிறது வங்கம், நமக்கோ மானபங்கம்! இதை நினைவில் வைத்துப் போரிடு."

"உங்கள் கட்டளையைச் சிரமேற் கொள்கிறேன்."

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலே தனது முடியை, யாருக்கும் வளைந்து வணங்காத வங்க சுபேதாரின் தங்க

முடியை எடுத்தான். எதிரில் நின்றுகொண்டிருந்த தனது ஊழியன்—சற்று அழுத்தமாகச் சொன்னால் அடிமை—காலிலே வைத்தான். கண்ணீரால் நனைத்தான் அவன் கால்களை... அந்தோ !

"இரவிலே அந்தக் கள்ள நெஞ்சத்தவர் தாக்குவர், விழிப்புடனிரு !" என்றான் சுபேதார் கடைசியாக.

இராய்டுலூப் அவனை அமைதிப்படுத்தித் தலைநகருக்குப் போகும்படி வேண்டிக்கொண்டான். சுபேதார் நடைப் பிணம்போலத் திரும்பினான்.

துரோகி

விபீடணாழ்வார் கையில் இலங்கையின் சேனையும் கிடைத்துவிட்டது. இனி வீழ்ச்சிதானே !

"படைகளைப் பாசறைக்கு அழை. பாதி இரவில் பகைவர் படையெடுக்க மாட்டார்கள்"

மீர்ஜாபரின் முதல் கட்டளை இது. சூதுக் குழுவில் அங்கம் வகிக்க மோகனலால் உடனே அவனது கட்டளையை நிறைவேற்றி வைத்தான். துரோகிகள் கூட்டத்தில் எப்படித்தான் இந்த மோகன்லால் சிக்கினானோ தெரியவில்லை. துரோக வியாதி பிடிக்காத ஆள் உலகில் இல்லவே இல்லைபோலும் ! இல்லாவிட்டால் எவ்வளவ்வா உண்மையாக இருந்த மோகன்லால் நெருக்கடியான கட்டத்தில் எதிரிகளுடன் இப்படிச் சேர்ந்து குலாவுவானா?

கிளைவ் அன்று முழுவதும் மீர்ஜாபரின் நடவடிக்கைகளைப்பற்றியே யோசித்து வந்தான். மூடன் சாவதற்கு முன் வரையில் வெள்ளையருடன் சேர்ந்துகொள்ள அவன் அஞ்சினான், சருக்கி விட்டால் தாங்குபவர் பக்கம் சாய்வோம் என்பதுதான் அவன் திட்டம் என்று கிளைவுக்குப் புரிந்துவிட்டது. அதற்காகவே ஆற்றங்கரை நாரைபோலக் காத்துக் கிடந்தான். அப்பொழுது ஒரு பெரும் படை பாகீரதி ஆற்றின் கிழக்குப் பக்கமிருந்து வந்தது.

கிளைவுக்கு நன்ருகத் தெரிந்தது அது மீர்ஜாபர் படைதா னென்று! ஆங்கிலேயருக்குச் சிறு சந்தேகம்...... ஆகவே அவர்கள் காட்டிய சைகைகளை நம்பவில்லை. இந்தத் துரோக நாடகத்தைக் கண்டுவிட்டாள் ஊர்மிளா. தான் ஆண் உடையில் நிற்கும்பொழுது—அதைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதுதான் சண்டாளன் சோணிசந்த் வஞ்சகமாகக் கொன்றுவிட்டான்! அந்தப் படை திரும்ப வும பழைய படையுடன் சேர்ந்துகொண்டது. கிளைவ் சிந்தித்தான். அவன் முகத்தில் ஒளி தெரியலாயிற்று.

மீர்ஜாபர் தான் போரின் சர்வாதிகாரி யாக்கப்பட்ட பிறகு கிளைவுக்குக் கடிதம் தீட்டினன் அதில் பரிதாபத் திற்குரிய சுபேதாரின் வேண்டுகோளைக் குறிப்பிட்டிருந் தான். மேலும் விடியற்காலை மூன்று மணிக்கே போர் தொடங்கவேண்டும் என்று கேட்டிருந்தான்...... ஆனல் அதனை யெடுத்துச் சென்ற ஆள் எங்கே பீரங்கிகள் கக்கும் அனல் குழம்பில் அகப்பட்டுத் தவிப்பானே என்ற அச்சம்! ஆனல் வெள்ளை யதிகாரிகளோ அவனைக் கண்டு பேசினர். துரோகத்திற்கு 'மெச்சித் தட்டிக் கொடுத் தனர்! தாயத்தாரைக் காட்டிக் கொடுக்கும் அவனது 'வீரத்தைப் பாராட்டினர்! இராணுவ மரியாதை காட்டினர். பிறகு அவனைக் கிளைவிடம் அழைத்துச் சென் றனர். அச்சத்துடனேயே சென்ருன் ஆனல் கிளைவோ வணக்கம் செலுத்தினன்.

"மீர்ஜாபர் அவர்களே, சுபேதார் இனி நீங்கள்"

"தங்கள் எண்ணம் ஈடேறட்டும்"

"நடத்தி வைக்க நாங்களிருக்கப் பயமேன் ?"

'பயமில்லை—மனச்சாட்சி மறுக்கிறது!"

"ஏன் ?"

"துரோகி என்ற பெயர் மாறுமா ? அத்தோடு மட்டு மல்லவே, துரோகம் பெரிய தொத்து நோயல்லவா ?"

"அதனால்........."

"இன்று என்னைப் பிடித்தது. ஸ்வராஜ் நாதியற்ற பிணமானான். நாளையே வேறொருவருக்குப் பிடித்து விட்டால்......?"

"வியாதிக்கு ஏற்ற மருந்து எங்களிடம் உண்டு"

"நன்றி—என் இதயத்தின் ஆழத்திலிருந்து எடுத்துச் சமர்ப்பிக்கிறேன்."

"சரி. மகிழவேண்டிய நேரத்தில் மனக்கலக்கம் ஏன்?"

பிரிந்தனர்.

ஒப்புக்கு, நாட்டவரின் கண்களில் மண்ணைத் தூவச் சண்டை யிடுவது போல நடித்தான். தோற்றான். அந்தோ, பிளாசி வீழ்ந்தது!...இனி அடிமை வாழ்வு தொடக்க அத்தியாயம்...நம்மவருக்கு மயனகாண்டம்! ஐயோ பிளாசி, போனாயே...எங்கள் உரிமை வாழ்வைப் பறித்தாயே!

முடிசூட்டு விழா

படை ஆரவாரத்துடன் கிளம்பிற்று. ஏக ஆடம்பர மான வரவேற்பு அளித்தனர் தலை நகரிலுள்ள பிரபுக் கள். மூர்ஷிடாபாத்திலிருந்த எக்களிப்புக்கு அளவில்லை. வருத்தங் கொண்டவர் இல்லாமல் போகவில்லை. இருந்தும் என்ன செய்வது? அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவ ராயிற்றே. 'மீர்ஜாபர் வாழ்க' என்று முழங்கிய படை யின் நடையில் தங்கு தடையில்லை. விருந்துண்டனர். நாட்டியம் பார்த்தனர்.

முடிசூட்டு விழா—பட்டமளிப்பு—பரங்கி பாராண்ட முகலாயனுக்கு முடி தருகிறான்!

பார்க்க வேண்டுமா? ஒரே 'கண்ணருவி'யாய்த்தா னிருக்கும்! அகிலத்தையும் அடக்கிடும் வல்லமை பெற்ற

இனம் நாடோடிகளின் தயவால் வாழ வேண்டிய கோரக் காட்சியின் படப்பிடிப்பு அல்லாவா அந்த விழா!

கிளைவ் முடி தந்தான்.

"இனி மீர்ஜாபர்தான் வங்க, பீஹார், ஓரிஸா பகுதிக்கு நவாப், சுபேதார்...... வாழ்க மீர்ஜாபர்" என்று முழங்கினன். ஆனல் அதன் உள் அர்த்தம் என்ன? இனி வெள்ளையர்கள் ஆள்வார்கள், இவன் .சுரண்டும் எங்க ளவருக்குத் தலையாட்டிடும் உருட்டுப் பொம்மை...... பொம்மையைவிட இதற்கு இரண்டொரு குணங்கள் அதிகம்! உயிரிருக்கும், நடக்கும், பேசும், அதுவும் எங்கள் நலத்திற்காகத்தான்! வங்கத்தில் வித்திட்டு விட்டோம்; இனி எங்கெங்கும் எங்கள் வெற்றிச் சிரிப்பு எதிரொலிக் கும்! எங்கள் ஆட்சி தொடங்குகிறது திரை மறைவில்! நாளை நாங்கள் ஆளப்போகிறோம். ஏமாளிகளே, ஏற்றுக் கொள்ளுங்கள் இந்த விபீடணுழ்வாரை. குலக்கோடரி உங்களுக்குக் காவல் பூபதி, கண்ணியமிக்க நவாப்! மதி கெட்டவரே, உங்கள் கதிகெட்டதும், வாழ்வு பட்டதும் உரிமை விடுபட்டதும் அறியாமல் அகமகிழ்கிறீர்கள். கருப்பர்களுக்குப் புத்தி கட்டையென்பது எங்கள் அபிப்பிராயம். அதற்கு இந்தக் காட்சி ஒரு சாட்சி...... மண்டியிட்டீர்கள். மரமண்டைகளே! நாளை உங்கள் உயிர், பொருள், உரிமை எல்லாம் எங்கள் கையில்! இருட்டறையில் தள்ளினன் எங்களை. உங்கள் நாட் டையே இருளடையச் செய்கிறோம் இருங்கள்... இருந்து பாருங்கள்... இப்படித்தான் கிளைவின் மனத்தில் பட்டிருக் கும். அதைச் சுருக்கமான வார்த்தைகளிலே வாழ்க... என்று முடித்துவிட்டான். சோணகிரி சுபேதார் வாழ வாழ அவர்களுக்கு ஆனந்தந்தானே! அந்தோ...... குடி யேறிற்று, பிடிபோயிற்றே!

அடுத்தபடியாகத் துரோகி அமீன்சந்த் வாழ்த்தினன். வாழ்த்துதலா அது, அவனது வஞ்சகச் செயல்களின் கூட்டுக் குழம்பல்லவா அந்தப் பட்டமளிப்பு விழா! அங்கே தன்னைத்தானே புகழ்ந்துகொண்டான்!

"வங்கத்தின் தங்கச் சிங்காதனம் இதுவரை சிறு எலியைத் தாங்கி வந்தது. இப்பொழுது புலி வந்துவிட்டது பூரணப் பொலிவு பெறுகிறது. நீங்கள் இக்காட்சியைக் காணக் காத்துக் கிடந்தீர்கள். கண்டீர்கள்...... உங்கள் கண்கள் விருந்துண்டன. நாடும் நலமடையும். இதற்குப் பாடுபட்ட பலருக்கும் ஒய்வு கிடைக்கும். வாழ்க வங்க நவாப் !" என்று முடித்தான். ஒரே கைதட்டலாரவாரம் !

ஆம். மீர்ஜாபர் முடிசூட்டினுன். கிளைவ் முடி தந்தான். அமீன்சர்த் வாழ்த்தினுன் மக்கள் கண்டனர் ......இந்த நிகழ்ச்சி சரித்திரத்திலேலே மறக்கவோ மறைக்கவோ முடியாத ஒன்று. எண்ணவும் மனம் நடுங்கும்படியான கொடுமைக் காட்சி நாட்டின் வீழ்ச்சிக்கு நச்சுப் போக்கினர் அடிகோலியதின் சாட்சி, வஞ்சகத்தின் மாட்சி, துரோகத்தின் ஆட்சி, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடிப்படை போடப்பட்டது என்பதின் அத்தாட்சி ! இந்தியா தோற்றது என்பதின் வெளி வடிவம், மாட்சியிழந்து விட்டது இந்த உபகண்டம் என்பதின் எடுத்துக்காட்டு, உரிமை சரிந்தது, அடிமை பிறந்தது என்பதை உலகுக்குச் சொல்லிய தூதுவன் கோலம் அது !

பேராசை முடிசூட்டி விட்டது; துரோகம் அரியாசனம் ஏறிற்று. தந்திரம் வாழ்த்திற்று; இளித்தவாய்த்தனம் வேடிக்கை பார்த்தது !

மாலைப்பொழுது !

பிளாசியிலிருந்து திரும்பிய சுபேதார் ஸுராஜ் படை பரிவாரங்களுடன் வரவில்லை. தன்னந் தனியாகவே வந்தான். வரும் பொழுது பக்கிரி வேடமிட்டுக் கொண்டு வந்தான். கடைசியில் தனது அரண்மனையை அடைந்தான். அவனை வெறுப்புத்தான் வரவேற்றது. உற்றார், உறவினர் ஒருவரும் உதவி செய்ய முன் வரவில்லை.

ஆகவே அந்த இடத்தை விட்டு ஓடி விடுவது என்று திட்டமிட்டான்.

அப்பொழுது வெளியில் ஒரு குதூகல ஊர்வலம். உப்பரிகையிலிருந்து உற்றுப் பார்த்தான். மீர்ஜாபர் திரும்பி வந்துகொண்டிருந்தான். சிறிது நேரத்திற்குள் நிலைமை புரிந்து விட்டது. வெள்ளையர்களின் கைப்பாவையாகவே அவன் வருகிறன் என்பதை விளங்கிக் கொண்டவுடன் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

மீர்ஜாபர் முடி சூடிக் கொண்டான். ஸூராஜ் கோட்டைச் சுரங்க வழியாக ஓடினுன். முடி சூட்டு விழா முடிந்தவுமே ஜாபர் ஸூராஜூவைக் கைதி செய்ய வீரர்களை அனுப்பி விட்டான்

தன்னைப் பின் தொடர்ந்து ஆட்கள் வருகிருர்கள் என்பதை யறிந்தவுடன் ஸூராஜ் எங்கேயாவது தங்கி விடுவது என்று எண்ணி ஒரு வீட்டினுள் நுழைந்தான். அங்கு ஒரு கிழவன் எதிர்கொண்டு அழைத்தான். அவனைக் கண்டதும் ஸூராஜூவைத் திக்கென்று பயம் பிடித்துக்கொண்டது! ஏன்? டில்லியில் இரஜினியாக இருந்த அரங்கமாலா—அந்த அபலைப் பெண்ணின் உறவினன். அவளைத் துன்பத்திலாழ்த்திய பொழுது நேரடியாக எதிர்த்தவன். அந்தக் கிழவன் அவனை அடையாளம் புரிந்து கொண்டானு? அவனைக் காட்டிக் கொடுத்து விடுவானு?......... அட்டா, துன்பம் அங்குமா துரத்தி வர வேண்டும்! வேறு வீட்டிலே நுழைந்திருக்கக் கூடாதா? அவனது பழைய நாள் விரோதியின் இல்லத்திலேயே சிக்கிக் கொண்டான். இதுதான் விதியென்று பிதற்றுகிருர்களே அதன் விளையாட்டா? அல்லது சமயம் செய்த சதியா, அவசரம் செய்த அநியாயமா?

"ஐயா..........." என்றுன் நடுங்கும் குரலில்.

"அச்சம்வேண்டாம். ஆபத்து இங்கு ஏதும் வராது!" என்றுன் தீர்மானமாகக் கிழவன்.

"இன்று இரவு இங்கு தங்கிப் போக அனுமதி தருவீர்களா......?"

"தாராளமாக!"

பிறகு இரவுணவு கொடுத்தான் கிழவன். உண்டான். நன்ருக நிம்மதியாகத் தூங்கினுன். கிழவன் தூங்கவில்லை. எப்படித் தூக்கம் வரும்? அவனுக்குத் தனது எதிரி தன்னிடம் சிக்கி விட்டான் என்று தெரிந்து விட்டது. அவனைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று முடிவு கட்டி விட்டான். ஆகவே இரவே கதவைப் பூட்டிக் கொண்டு வெளியேறினுன். காலையிலே இரண்டு வீரர்களுடன் வீட்டினுள் நுழைந்தான். அப்பொழுதும் ஸுராஜ் தூங்கிக் கொண்டிருந்தான்.

"தம்பி, உன்னைத் தேடி வந்திருக்கிருர்கள் இருவர். வாப்பா........" என்ருன் கிழவன் கிண்டலாக!

திடுக்கிட்டு எழுந்தான். சிறைப்படுத்தினர் வீரர்கள். ஸுராஜ் தலை கவிழ்த்தான். கிழவன் வெறிச் சிறப்பை வீசினுன்! காலைப்பொழுதில் செய்த வினைக்கு மாலைப் பொழுதில் அறுவடை உண்டு என்று மறை வகுத்தவர் சொல்லிச் சென்றது அவ்வளவும் உண்மையல்லவா!

கொள்ளை, கொள்ளை

மீர்ஜாபர் முடி சூடினுன். சூட்டி விட்டவர்கள் கூலி கேட்டனர். கூலியா—பரிசில்கள் வழங்க வேண்டும் என்று வலுவில் வந்துவிட்டனர் பரிசளிப்பு விழா ஏற்பாடு செய்யும் முன்பே!

கஜாஞவின் கதவு விரிக்கப் பரக்கத் திறந்து கிடந்தது. அது முன்னரே காலியாக்கப் பட்டுவிட்டது. எஞ்சியிருப்பதையும் வெள்ளையர் கொண்டு போகத் துடியாய்த் துடித்தனர்.

"ஒப்பந்தப்படி பாதித்தொகையை உடனே செலுத்தி

விடவேண்டும். எஞ்சியதை இரண்டாண்டுகளில் கொடுத்து விடவேண்டும்'' என்றனர் கிளைவ் பரம்பரையினர். எதிர்த்துப் பேசவா போகிருன் ஜாபர்? அவர்கள் பிடித்து வைத்த பிள்ளையார்தானே அவன்! எதிர்த்தால் வழித் தெறிந்து விடமாட்டார்களா? பிறகு களிமண் தான்!

அதனுல்தான் எதைச் சொன்னுலும் தலையாட்டினுன்.

ஆம். அவர்கள் கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்கள்—இத்தகைய வெற்றியடையப் போகிறோம் என்று! வெற்றி மட்டுமல்ல, பெருந்தொகை காணிக்கையாக—அதுவும் இவ்வளவு எளிதில், அதிகாரப் பிச்சையாக!—கிடைத்தால் யாருக்குத்தான் மனமகிழ்ச்சி யிருக்காது! கட்டலை பிறப்பிக்க ஏன் கூசுவார்கள்? ஏழு பைகளிலே நிரப்பி, நூறு படகுகள் புடைசூழ, வாத்தியங்கள் இசை வழங்க, மத்தளங்கள் முழங்க, கொடிகள் வானளாவப் பறக்க ஊர்வலமாகக் கிளம்பினர்.

கல்கத்தாவில் துன்பப்பட்டவர்கள் மகிழ்ந்தனர்...... ......ஈடு கிடைக்கும் என்ற எண்ணம் அவர்களுக்கு! படையிலிருந்தவர்கள் பரிசில்களை எதிர்பார்த்து நாவைக் கொட்டிக் கொண்டனர். சூதுக்காரக் கும்பல்—'ஜே ராம்சந்த்' கோஷ்டியினர்—தொகைக்கு வாது செய்ய ஏது பார்த்துக் கொண்டிருந்தனர்.

பெச்சர் என்பவன் போர்க் குழுவுக்காகப் பரிந்து பேசினுன். அந்தக் குழுவினர் இல்லாவிட்டால் இந்த வசீகர வெற்றி கிடைத்திருக்காது என்று பெருமையோடு கூறினுன். ஆகவே போர்க் குழு உறுப்பினர்களுக்கு ஏராளமாகப் பணம் கிடைத்தது. இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் கிளைவுக்குக் கிடைத்தது. டிரேக்குக்கும் அதே தொகை! மற்ற உறுப்பினர்களும் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் பெற்றனர்.

போரில் பெரும் பங்கு கொண்ட பெரு மக்களுக்குத் தனியான கவனிப்புகள் வேறு.......மீண்டும் கிளைவுக்கு 16 இலட்சம்! வாட் எட்டு இலட்சம் அதிகத் தொகை

பெற்ருன்—போர் உறுப்பினர் தொகை யில்லாமல்! கில் பெட்ரிக் மூன்று இலட்சம் அதிகத் தொகை வாங்கினுன். சமாதான முறைக்குப் பாடுபட்ட வால்ஷூம் ஐந்து இலட்சம், ஸ்கிராப்டனும் இரண்டு இலட்சம் பெற்றனர்! மற்றவர்கள் தகுதிக்கும், வாய்ப்புக்கும் தக்கபடி சுருட்டிக் கொண்டனர்...பொன்னும் மணியும் குவியல் குவியலாகக் கொட்டிக் கிடந்த கஜாஞ குப்பை மேடாயிற்று. சோற்றுத் துருத்திகள் அகப்பட்டதை மடக்கிக் கொண்டனர். செல்வ மிக்க மூர்ஷிடாபாத் செல்லரிக்கப்பட்ட சிதைந்த சித்திரமாக மாறிவிட்டது. அதன் சிறப்பு செத்தது, சிறுமை வளர்ந்தது! முகலாயரின் செல்வம் கொள்ளை கொள்ளையாகக் கொண்டு போகப்பட்டது வெள்ளையரால்—உள்நாட்டில் 'ஜெ ராம்சந்த்' கூட்டம் கொள்ளையடிக்கவும் பயப்படவில்லை! கருவூலம் வற்றி விட்டது!

தப்பினுன்

கொலு மண்டபத்திலே ஜாபர் அமர்ந்திருந்தான். அவனது பிரபுக்கள் கூட்டமும் இருந்தது. அப்பொழுது ஸூராஜூவைக் கைதி செய்து இழுத்து வந்தனர். தான் பரிவாரங்களுடன் பலமுறை பவனி வந்த தன் தலைநகரான மூர்ஷிடாபாத்திலே கைதியாக நுழைந்தான். தன் மண்டபத்திலே தனது தளபதியின் முன்னுல் கையில் விலங்குகள் துலங்க நின்ருன்!

"இவனைச் சிறையில் தள்ளுங்கள். சிரம் வாங்க மனம் வரவில்லை. இவனிடம் இரக்கம் காட்ட அல்ல இந்த ஏற்பாடு—இவனைக்கொன்ருல் என் மனம் வெடித்து விடும். ஏன்? அன்பு மகனின் உருவச்சாயல் இவனுக்கு அல்லாவின் அருளால் கிடைத்துவிட்டது. இவனை நான் வாட்டுவது என் மகனை வாட்டுவது போன்ற உணர்ச்சியைத் தருகிறது." என்ருன் ஜாபர்.

"போதுமடா துரோகி......என்னை ஏன் வாட்டுகிருய்? கொன்று விடு. அரைக்கணத்தில் துரோகத்தின்

கோர நாட்டியத்தைப் பார்க்காமல் செத்து மடிவேன். சிறையிலிட்டு என்னை ஏன் சித்திரவதை செய்கிருய் ?" என்று கூறினுன் ஸுராஜ்.

" இழுத்துச் செல்லுங்கள் "

அடுத்த கட்டளை—அவ்வளவுதான்! இதற்குமேல் ஸுராஜ் அங்கு நிறுத்தப்படவில்லை.

சிறையில் கிடந்தான் மாஜி சுபேதார். அவனுக்குக் காவலிருந்த சிப்பாய் அடிக்கடி அவனை உற்றுப் பார்ப்பதும் பிறகு திரும்பிக் கொள்வதுமாகவே இருந்தான். ஸுராஜுவுக்கு அவனைப் பார்த்த நினைவிருந்தது. அவன் உண்மையில் மாற்றுடையில் வாழ்கிருன் என்பது மட்டும் புரிந்தது. சுபேதாரும் பக்கிரி வேடங் களைய வில்லை.

"சுபேதார்ஜீ, என்னைத் தெரிகிறதா ? நான்தான் அஜிஸ்கான். என்னைப் பிளாசியிலிருந்து வந்ததும் சிறையிட்டு விட்டனர். ஆனுல் காவலிருந்த சிப்பாயைத் தந்திரமாக உள்ளுக்கு இழுத்துக் கொன்றுவிட்டு அவன் உடையில் நானிருக்கிறேன்."

"ஆ! அஜிஸ்...உண்மையான ஒரு ஊழியன் ஒருவனை இப்பொழுதுதான் மீண்டும் சந்திக்கிறேன். மூடன் இறந்தான். என் வாழ்வும் முடிந்துவிட்டது"

அஜிஸ் உண்மையில் அழுதுவிட்டான். சுபேதாரைப் பார்த்துப் பார்த்துத் தேம்பினுன். ஸுராஜ் அவனைத் தேற்றினுன். பிறகு அந்த நள்ளிரவில் தப்பிவிடுவது என்று தீர்மானித்தனர். அப்படியே அஜிஸ் தன்னிடமிருந்த சாவியினுல் சிறைக் கதவைத் திறந்துவிட்டான். பிறகு இருவரும் மெதுவாக வெளியேறி விட்டனர். 'ஐயோ கைதி தப்பிவிட்டான்' என்று இரண்டு மணிக்குப் பிறகு ஒரு காவலாளி கூவினுன். அதற்குள் அவர்கள் நகர எல்லையைக் கடந்துவிட்டனர்.

சோணியும் நளினியும்

முடீஃனக் கொன்றுவிட்டு ஓடிய சோணி கூடாரத்தி லிருந்த அமீன்சந்த்திடம் இழவு சேதியைச் சொல்லிவிட்டு நேராகத் தன் இன்பக் காதலி நளினியிடம் சென்றுன். போர்க் குழப்பத்தில் நாடே முழுகியிருக்கும்பொழுது அவள் அவஃன இன்பக் குழப்பத்திற்கு இழுத்துச் சென்றுள்.

"நளினி, இனி எந்தவிதத் தடங்கலும் இல்ஃல. இது வரை நீ ஆடிய ஆட்டத்திற் கெல்லாம் அறுவடை செய்ய வேண்டிய நாள் நெருங்கிவிட்டது. அவர் வர இன்னும் நாட்கள் பலவாகும். ஆகவே இரும்புப் பெட்டிகஃளத் திருட்டுச் சாவியிஞல் திறந்து வேண்டியவரை எடுத்துக் கொண்டு வெளியேறுவோம்."

"கண்ணுளா, என் மனத்தில் உள்ளதை அப்படியே சொல்லிவிட்டீரே! இதோ அரைநொடியில்..."

பிறகு இருவருமாக எல்லா வகையான பொருள்கஃள யும் சுருட்டிக் கொண்டனர்.

சோணி தோட்டத்துப் பக்கம் ஓடிஞன். மண்வெட்டி யால் ஒரு இடத்தைத் தோண்டிஞன். அங்கு...... அப்பாடா... எவ்வளவு வைரங்கள்... ஓரே கதிரவனின் கிரணங்களின் சிறைவாசம்போல! அவைகஃள வாரிக் கட்டிஞன்.

"அன்பரே, இவைகஃள எப்படிச் சேர்த்தீர்?"

"அமீன்சந்த் காளி சிஃலயின் அடியில் ஒளித்திருந்த தைச் சமயங் கிடைக்கிற பொழுதெல்லாம் கொண்டுவந்து புதைத்தேன்."

இருவரும் சிரித்தனர். அந்த ஜோடிப் புருக்கள் பிறகு கடற்கரைப் பக்கம் பறந்து சென்றன.

தூரத்தில் வந்துகொண்டிருந்த இரண்டு பக்கிரிகஃள யும் ஒரு பெண்ஃணயும் கண்டு அவர்கள் முதலில் பயந்

தார்கள். பிறகு ஒளிந்து கொண்டார்கள். ஆனால் அவர்களைக் கண்ட பக்கிரிகளில் ஒருவன் மட்டும் சந்தேகித்து விட்டான்.

"சுபேதார் இந்தக் கடற்கரைச் சோலையிலே தங்கியிருங்கள் .. இதோ சில பொழுதில் திரும்பி விடுகிறேன்." என்று அஜிஸ் நழுவினான். ஒளிந்து சென்ற இருவரையும் பின் தொடர்ந்தான் சற்று அருகில் நெருங்கிப் பார்த்தான். ஆ...... அலிவர்திகானுக்கு நஞ்சூட்டிய நேரத்தில் தன்னைக் காட்டிக்கொடுத்த அதே நளினி, மற்றவன் அமீன்சந்த்தின் கையாள்! அவர்கள் எங்கே செல்கிறார்கள்? ஏன் அப்படி ஒளிகிறார்கள்? அவன் அவர்கள் பின்னாலேயே சென்றான்.

அவர்களுக்கென்று ஒரு கலம் காத்திருந்தது. இருவரும் ஏறிக்கொண்டனர். அஜிஸ் கடற்கரையில் நின்றபடியே பார்த்தான். கொஞ்ச நேரத்தில் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டுவிட்டது. அதுமட்டுமா? கடும் புயல் வீசத் தொடங்கிவிட்டது. அந்தக் கலம் இப்படி அப்படி அலையும்பொழுது அதிலிருந்தவர்கள் அடிவயிறெல்லாங் கலங்கியது! சோணி நளினியைத் தழுவிக்கொண்டான். அவர்கள் கொண்டுவந்த செல்வ மூட்டைகள் கவனிப்பாரற்றுக் கிடந்தன. புயல் ஓயவில்லை. கலத்திற்கு முடிவு காலம் நெருங்கிவிட்டது. அருகிலிருந்த பாறையில் மோதிவிட்டது! துரோகம் தன் முடிவை அடைந்துவிட்டது! அதைப் பார்த்த அஜிஸ் சிரித்தான் தன் ஆத்திரம் அடங்கும் வரை!

துரோக பேரம்

அந்தக் கடற்கரைச் சோலையில் யாரோ இருவர் பேசிக் கொண்டிருப்பது, பண்டார உருவிலிருக்கும் ஸூராஜூவுக்குக் கேட்டது. ஆகவே தன் மனைவியை ஒரு மண்டபத்தில் விடுத்தான். அவன் அருகிலிருந்த பூஞ்செடிப் புதரில் ஒளிந்து கொண்டான்.

அமீன்சந்த் உழைத்தலுத்த உழவனைப் போல இப்பொழுது அறுவடையை எதிர் பார்த்தான். ஆனால் முடிவு குடி கெடுத்தவர்களைக் கோடீஸ்வரர்களாக்கிற்று! அவன் நாவில் நீர் ஊறிற்று. ஆகவேதான் வாட் துரையைத் தனியாக அழைத்துச் சென்று பேரத்தை ஆரம்பித்தான்.

"வாட் துரையே, காரியம் முடிந்து விட்டது. இனிக் கவனமிருக்குமா?"

"அமீன்சந்த், நீர் இன்னும் சரியாக நிலைமையைப் புரிந்து கொள்ளவில்லை"

"நிலைமை எனக்கு நன்றாகப் புரிகிறது. வழிகாட்டினேன் நான். அடித்தீர்கள் கொள்ளை"

"ஆத்திரம் வேண்டாம்—"

"கல்கத்தாவில் காலடி வைக்கவும் அஞ்சினீர்கள். இதோ இந்தக் கரங்கள் அழைத்தன. அணைத்தன. அவைகளை மறந்தீர்கள்"

"மறக்கவில்லை. இன்னும் போர் ஆரவாரமே முடியவில்லையே!"

"அலிவர்திகானை எதிர்க்கச் சொன்னேன். எதிர்த்தீர்கள். அவன் பெயரையே என் நளினி தனது இன்ப வாளால் சரித்திரத்திலிருந்தே நறுக்கியெறிந்தாள். எனது முயற்சியில் வைத்தியர் வரப்பிரசாதர் வந்து நஞ்சை மாமலை தந்த மூலிகையென்று ஊட்டினார். அதையும் மறந்தீர்கள்"

"உமது கோபம் எல்லைக் கோட்டையும் தாண்டியோடுகிறது—உமது வார்த்தைகள் வளருகின்றன. உமது விருப்பம் எதுவானாலும் சொல்லலாம்"

"ஆத்திரமோ, கோபமோ கொண்டு கூத்தாடவில்லை நான். பழைய கதையை அதற்குள் மறந்து விட்டீர்களே, அதனை நினைவுபடுத்தினேன். இன்னும் சொல்கிறேன். கேளுங்கள். கேட்ட பிறகு சொல்லுங்கள்.

லூஸியைக் கொண்டு வந்தேன். உங்கள் கோழைத்தனத்தால் 'இருட்டறை' நடக்கிற அளவு பணிந்தீர்கள். சென்னைக்குச் செய்தி யனுப்பினேன். மோனிசந்த் விரண்டோட வழி காட்டினேன். தங்கள் தூதுவர்களைக் காப்பாற்றினேன். முடீனின் வாழ்வை முடித்தேன். மீர்ஜாபரை என் நளினி இழுத்து வந்தாள்!"

"யாவற்றையும் ஒப்புக் கொள்கிறேன். உமக்கு வேண்டுவது யாது?"

"இனி நடக்கும் உங்கள் ஆட்சியில் மதத்தைத் தொடக்கூடாது. தெரியுமா? இது பொதுக் கோரிக்கை"

"இந்தக் கோரிக்கை நியாயமானது. எப்பாடு பட்டாவது முடித்து வைப்பேன். இன்னும் ஏதேனும் உண்டோ?"

"சுபேதாரின் கருவூலத்தில் இருபதில் ஒரு பங்கு இது—என் சொந்தக் கோரிக்கை"

"ஆ, அது எப்படி முடியும்?"

"முடியாவிட்டால்—என்னால் முடியும், உரக்க உரக்கக் கூவ என் தொண்டையால் முடியும். உங்கள் ரகசிய ஏற்பாடுகள் அத்தனையும் மக்களுக்கு எடுத்துச்சொல்ல முடியும்—முடியாதாம்!—ஹி ஹி ஹி—!"

"அமீன்சந்த், கோபம் வேண்டாம். இருவருக்கும் பொதுவான தொகையொன்று சொல்கிறேன். முப்பது இலட்சம் வாங்கித் தருகிறேன். பெற்றுக்கொள்ளும்"

"உங்களுக்குச் பாடுபட்டு என் வீட்டை, வணிகத் தொழிலை, பொன்னைப் பொருளை—அத்தனையும் இழந்தேன். இதுதான் தரச் சம்மதமோ?"

"இனி உம் விருப்பம். அதற்குமேல் என்னால் முடியாது"

"சரி. ஹி ஹி ஹி—"

இப்படிப் பேசிக்கொண்டார்கள். ஸ்வராஜ் இதைக் கேட்டுத் திடுக்கிட்டான். "அந்தோ இத்தனைக்கும் இந்த நச்சுப் புழுதானு காரணம்?"—அவன் மனம் இடித்துக் கேட்டது. அவன் சிந்தனை சுழல ஆரம்பித்தது. தன் மண்டையை எங்காவது மோதி உடைத்துக் கொண்டால் கூட நிம்மதியாகச் சாகலாம் என்று எண்ணினுன். அஜிஸ் வரும் வரைகூட அங்கு நிற்க முடியவில்லை. அவன் நடந்தான். நடந்துகொண்டே இருந்தான். எங்கு போகிருன்? யாருக்குத் தெரியும்—கால் விட்ட வழியே போய்க் கொண்டே இருந்தான்.

ஏமாற்றம்

அமீன்சந்த் கேட்டதொகை கிளைவுக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. அதனைப் பகற் கொள்ளை யென்றே கருதினுன். ஆனுல் மறுக்கவோ முடியவில்லை. போர்க்குழுவாரைக் கேட்டான். இது பெருந் தொகை, அநியாயமாகக் கேட்கப்படுகிறது, இதைக் கொடுக்க முடியாது, கூடாது—என்று கைவிரித்து விட்டனர்.

கிளைவ் ஒரு தந்திரம் செய்தான். அமீன்சந்த்தை அடியோடு ஏமாற்றி விடுவது என்று முடிவு செய்து கொண்டான். இரண்டு தாள்களில் உடன்படிக்கை எழுதப்பட்டது. ஒன்று வெள்ளை—அதில் அமீன்சந்த் என்ற பெயரே எழுதப்படவில்லை. இன்னென்று சிவப்பு நிறத்தாளில் வரையப்பட்டது. இதைத்தான் அமீன்சந்திடம் கொடுப்பது என்று திட்டமிட்டான். போர்க்குழுவார் இரண்டிலும் கையொப்பமிட இசைந்தனர்.

ஆனுல் அட்மிரல் வாட்சன் வெள்ளைத்தாளில் கையெழுத்திட்டான். அவசரத்தில் கிளைவ் வாட்சனின் கையெழுத்தைத் தானே போட்டுவிட்டான். அமீன்சந்த்தும் ஒப்புக்கொண்டான். அந்த உடன்படிக்கை ஏற்பாட்டை—விபரந்தெரியாமல்!

நாட்கள் சென்றன. அமீன்சந்த் இறுமாந்து போயிருந்தான். இந்தத் தொகையைப் பெறும்வரை தனது வீட்டை நோக்கிச் செல்வதில்லையென்று சபதம் எடுத்துக் கொண்டான். தான் பழைய செல்வாக்கை மீண்டும் அடைந்து விட்டதாக எண்ணிப் பூரித்தான். தன்னையே ஒருமுறை பார்த்துக் கொண்டான்—அவ்வளவு மகிழ்ச்சி வெள்ளம்! அவன் மனக்கோட்டை அடிப்படை யில்லாதது என்பது அவனுக்குத் தெரியாது.

தொகையைப் பெறத் துடித்தான். ஆகவே வழக்குத் தொடுத்து விட்டான். வெள்ளையர் கூட்டத்திடையே அமீன்சந்த் நின்று கொண்டிருந்தான்.

"தொகை உடனே தேவை" என்று கொக்கரித்தான்.

"ஏது தொகை?"—அவர்கள் விசித்திரக் கேள்வி இது.

"உடன்படிக்கை சொல்லுமே இதற்கு விடை!"—இறுமாப்போடு பேசினான்.

வெள்ளைத்தாள் உடன்படிக்கை வந்தது. படித்தனர். அதில் அமீன்சந்த் பெயரையே காணோம். பொதுப் படையாக எழுதியிருந்தது. அமீன்சந்த் விழித்தான். இது பெரிய சூதாக இருக்கிறது என்பது சடடென்று புலப்பட்டது.

"இது என்ன புரட்டுவேலை? என்னுடன் செய்து கொண்ட உடன்படிக்கை இதுவல்ல.........அது சிவப்பு நிறம்!"—ஆத்திரத் திருக்கூத்தாடினான்.

"அமீன்சந்த், நீர் பேசுவது விசித்திரமாக இருக்கிறது. நீர் ஏமாந்தீரா, அல்லது வழக்கம்போல எங்களையும் ஏமாற்ற முயற்சிக்கிறீரா என்று புரியவில்லை. ஆனால் உமது தோல்வி தொடங்குகிறது....." என்றான் அங்கிருந்த ஸ்கிராப்டன்.

"முடிவாக என் வழக்கின் தீர்ப்பு—?"

கோபத்தின் எல்லையில் நின்று கொண்டு கூவினான். ஆனால் சாந்தமாகக் கைவிரித்து விட்டனர் ஆங்கிலேயர்.

அமீன்சந்த் தள்ளாடித் தள்ளாடி நடந்து தன் வீட்டை நோக்கிப் பயணமானுன்.

அங்கும் ஒரு பெரிய ஏமாற்றம் அவனை வரவேற்றது! அவன் இல்லமே சுடுகாடுபோல இருந்தது. ஊர்மிளா தான் ஓடிவிட்டாள். என்ன ஆனுள் என்பது சில தினங்களுக்கு முன்புதான் தெளிவாகத் தெரிந்தது. சோணி சந்த் எங்கு போனுன்? நளினி எப்படி மறைந்தாள்? வீட்டின் ஒவ்வொரு இடமாகத் தேடினுன். இருப்புப் பெட்டிகள் திறந்து கிடந்தன. பொருள்கள் எல்லாம் கொள்ளைபோய்விட்டன. சோணி.. ...நளி...ஊர்மிளா ......ஹி ஹி ஹி......அமீன்சந்த் ஏமாற்றத்தால் வெறியனுனுன்.

கத்திக் குத்து

பல்டா நகருக்குஅருகில் உள்ள காடு—நமக்குப் பழக்கமான கொடிப்பாதை. அதன் முடிவில் உடைந்த காளி கோவில்......அதனுள்......?

ஹிஹிஹி......ஒரு 'பேய்ச்' சிரிப்பு!

"இதுவும் போச்சா?"—ஒரு சோகக் கேள்வி!

அங்கிருந்த சிலை உருண்டு கிடந்தது. அவன் அங்கு ஒளித்து வைத்திருந்த வைரக் குவியலையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான். அத்துடனும் விடவில்லை— அவனது ஜீவரத்தினம் நளினியையும் இழுத்துக்கொண்டு போய்விட்டான் சோணி. அமீன்சந்த் உண்மையிலேயே இப்பொழுதுதான் முழு வெறியனுனுன். ஏமாற்றம் அவன் மண்டையில் சம்மட்டியடியைப்போலத் தாக்கியது. ஆகவே மூளை குழம்பிவிட்டது துரோகியின் அந்திய காலம் இதுதான்!

அவன் வெளியில் ஓடிவந்தான.

"ஹிஹிஹி......ஸ்ராஜ் ஊர்மிளா கூப்பிடரு...... உன்னையில்லை. முடினை அனுப்பச் சொல்ரு......குரான்

படிக்கணுமா?......கிதையைக் கொளுத்து—மொட்டைக் குல்லாய் என்னை என்ன மிரட்டிறியா? ...நளினி பார்த்துக்கோ இந்தப் பயலே......சோணிசந்த் நீ இப்பொழுது டெல்லிக்குப் போகணும்......வரப்பிரசாதர் எங்கே நஞ்சு ......ஹிஹிஹி.........'' எதையெதையோ சம்பந்தமில்லாமல் உளறினான். அப்பொழுது அவ் வழியாகப் போய்க் கொண்டிருந்த ஒரு பக்கிரி இந்தக் குரலைக் கேட்டான். திடுக்கிட்டு நின்றான். பக்கத்தில் வந்த பெண்ணோ 'ஆ—' என்று கூவியேவிட்டாள்.

"ஆ அமீன்சந்த்!" என்றான் அவன்.

"ஹிஹிஹி......என் பெயரைச் சொல்ல நீ யாருடா—பெரிய நவாப்போ, சுபேதாரோ?......சுபேதாரெல்லாம் சுண்டைக்காய் எனக்கு......போடா போ, துலுக்கப் பிச்சைக்காரப்பயல்...ஐயோ மீர்ஜாபர்...எனக்குப் பயமாயிருக்கே...கொலை, கொலை...மூடன் கொலை......முப்பது இலட்சம்...அடே கிளைவ், எங்கேடா பத்திரம்...என்னடா முழிக்கிறே...வெள்ளைக்காரர்களைத் தூண்டி விட்டால் உன்னையும் சுட்டுத் தள்ளிவிடுவார்கள்......மதத்தைத் தொடாதே மடையா...ஹி ஹி ஹி..."

"அடே, சிரித்துச் சிரித்துக் குடி கெடுத்த கொலைகாரனே! நான்தான் உன்னால் உருத்தெரியாமல் அடிக்கப்பட்ட ஸுராஜ்" என்று உறுமினான்.

"நான் உன்னை ஒண்ணும் செய்யவில்லையே.........கிஷோனிதாசைக் கூப்பிட்டுக்கிட்டு போகவில்லையே.....என்னை ஒன்றும் செய்யாதே...வெள்ளைக்காரர்கள் என்னை ஏமாற்றி விட்டார்கள் என்று கேட்கிறாய்...செ, செ. அதிலே உனக்குப் பாதி பங்கு தாரேன்...இதோ வைரக் கற்கள்...சோணியும், நளினியும் எடுத்துண்டு ஓடிட்டார்கள்...வந்து விடுவார்கள். வந்து விடுவார்கள்...அதிலேயும் பங்கு உனக்கு...அடேய் விடுடா கையை. பெரிய சுபேதார் மாதிரி கையைப்பிடிக்கிறான்...ஏண்டா இப்படி விழிக்கிறே...சரிதான் நீ ஒரு பித்துக் குளி...போடா போ பெரிய பைத்தியம்டா இவன்..."

" அடேய் அமீன்சந்த், சுயநலத்திற்காக உன் பிறந்த நாட்டை, தாய் நாட்டை அந்த வெள்ளையரிடம் காட்டிக் கொடுத்தாய். துரோகி! மதத்தை வைத்து உரிமையைப் பறித்து விட்டாயே! என்னை நினைத்தா இந்தக் காரியம் செய்தாய்? உனது நாட்டை மறந்தாயே. உனக்கு என்ன இலாபம் கிடைத்தது? கடைசியில் வெறி பிடித்தது. அதுதான் கண்கண்ட பலன்! ஆனால் நீ உலகத்திற்கே ஒரு நவீனப்பிறவி! புதுவகை ஜீவன்! உன்னைக் கண்காட்சியில்தான் வைக்கவேண்டும். நாட்டவரே, ஏமாருதீர்கள். எந்த நாட்டிலும், எந்த நேரத்திலும் அமீன்சந்த் பிறப்பான். அமீன்சந்த் இனி உலகத்தில் வாழமுடியாது என்று விளம்பரப் படுத்தவேண்டும்.

" இனிவரும் சமுதாயம் உன்னை என்றென்றும் மறக்காது. உன்னை அறிமுகப் படுத்தாது போகாது. உன் இனத்தையே இழிவுபடுத்திப் பேசாமல் நிற்காது. ஆனால் உனது வாழ்க்கைவரலாற்றில் இதுவரை எத்தனையோ ஏடுகள் புரண்டிருக்கும். கடைசி ஏட்டைக் காளி கோயிலுடன் முடிக்கலாம் என்பது என் எண்ணம், இனி நீ வாழவேண்டாம். உலகத்திற்கு அமீன்சந்தர்களின் முடிவு இப்படித்தானுக வேண்டும் என்று காட்டவேண்டாமா? உனது வாழ்க்கைச் சரிதையின் கடைசி எழுத்துக்களை நான் எழுதி விடுகிறேன். அதுதான் சரியான கைம்மாறு—துரோகி நீ! தொலைந்து போ!"

ஸுராஜ் தனது இடையில் மறைத்து வைத்திருந்த வளைந்து ஒளிவிட்ட கொலை வாளை உருவினான். தகதக வென ஒளிவிட்டது. ஓங்கினான். அமீன்சந்த் கூவினான்.

" சதக், சதக்—"

ஐயோ! கத்திக் குத்து—இரத்தம்—கொலை என்று உளறினான். ஆம். வாளால் அவன் வாழ்க்கையின் கடைசி ஏட்டில் இரத்த மையால்...மடிந்தான் துரோகி... என்று எழுதி முடித்தான்.

"ஐயோ!" என்று அலறினான் அவன்.

ஹி ஹி ஹி—மறைந்து விட்டது!

காளி கோவிலுக்கு எதிரில் அமீன்சந்த்—அந்த விசித்திரமான துரோகி—பிணமாகக் கிடந்தான். ஸுராஜ்—உத்—தௌலா அவன் எதிரில் சிலைபோல நின்றான். பிணத்திலிருந்த பிச்சுவாவைப் பிடுங்கினான். அந்த வாள்...இரத்தக்கறை படிந்திருந்தது! அதன் இரத்தப்பசி இன்னும் அடங்கவில்லை. அடுத்துச் சுவைத்த இரத்தம் யாருடையது?———

பிறகு அவர்கள் அரண்மனை அந்தப்புரம் சென்றனர்.

ஸுராஜுவின் அன்பு மனைவி அவனைக் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி யழுதாள்.

தேற்றினான். அப்பொழுது தெளிவு பிறக்கவில்லை.

அவள், அவனுடன் புறப்படத் தயாரானாள்.

ஸுராஜ் தடுக்கவில்லை. அவள் தனக்குவேண்டிய பொருள்களை எடுத்துக் கொண்டு நள்ளிரவில் அவள் கணவனுடன் தப்பியோடினாள்.

சிறையிலிருந்து ஸுராஜ் தப்பித்துக் கொண்டதுடன், அந்தப்புரத்திலிருந்த அவன் மனைவியும் சென்றுவிட்டாள் என்ற சேதி கிடைத்தவுடன், சுபேதாரின் கட்டளையின் பேரில் மீர்காசீம் என்பான், தப்புயோடிடும் ஸுராஜுவைக் கண்டுபிடிக்க அனுப்பப்பட்டான். அவன் எங்கெங்கும் தேடிக் காணாது அலுத்து அவ்வழி வந்துகொண்டிருந்தான்.

தூரத்தில் வரும்பொழுது, கையில் இரத்தக் கறை படிந்த கத்தியுடன் ஸுராஜ் நிற்கிறான் என்பதைப் புரிந்துகொண்டான்.

அவன் பக்கிரி வேடத்திலிருந்தும் மிக எளிதில் காசீம் கண்டு கொண்டான்.

ஸுராஜுவுன் மனைவி அவனைப் பார்த்துவிட்டாள். அதனைத் தன் கணவனுக்குச் சொல்லி எச்சரிக்கை செய்த

43667

தற்குக் காசிம் ஒரு சொருகு வாளை வீசுனான். அது பறந்து வந்தது. தடுக்க முடியாத வேகத்தில்—ஓடினாள் அவள். தன் மார்பில் ஏந்தினாள்—வீர மனைவியாய் மாண்டாள்!

குதிரைமீது வந்த காசிம் ஓடிவிட்டான், வீழ்ந்தான் ஸூராஜ் என்றெண்ணிக் கொண்டு திரும்பிச்கூடப் பார்க்காமல்!

ஆம், வீரன் ஸூராஜூவின் இரத்தத்தை, எதிரியின் வாள் சுவைக்கவில்லை. அவன் வாளை சுவைத்தது! அப்பொழுதான் அவனைத் தேடியலைந்த அஜிஸ் அங்கு வந்தான். அவன் ஓடிவந்து தடுப்பதற்குள் வான்பாய்ந்து விட்டது. அஜிஸ் அவனைத் தாங்கிக்கொண்டான். தன்னைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்தான். இறந்து கிடந்த துரோகியைப் பார்த்தான். இரத்த வெள்ளத்தில் மிதந்த எழிலரசியைக் கண்டான். ஸூராஜூவையும் பார்த்தான்.

அவன் கண்களிலிருந்து இரண்டு கண்ணீர்த் துளிகள் விழுந்தன! துரோகத்திற்கு அவனது கடைசி பலி அதுதான் போலும்!

முற்றும்